ஓம்

# சைவநீதி

## SAIVANEETHI

B1 049

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM



ஈழத்துத் திருத்தலம்

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை
சித்திவிநாயகர் கோவில்

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

பொங்கல் விழா மலர்-2011




## காப்புறுதி உங்களுக்காகவும் உங்களின் அன்புக்குரியவர்களுக்காகவும்...

- **ஆயுட்காப்புறுதி**
  சேமிப்புடன் கூடியது, 10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்திமுடிக்கலாம்
- **மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி**
  வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்படவரும் இணைந்து கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  2 மில்லியன் வரை காப்புறுதித் தொகையாகப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம்**
  20 வீத அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.

**கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்**

# சிறீதரன் துரைராஜா

காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

LiLAND INSURANCE INC.

RBC Insurance

# வணக்கம். வருக! இதுவே நுழைவாயில்! சென்று பொருள் கொணர்க!
## பொருட் பதிவேடு


| பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|
| 1. பொருளடக்கம் | ...... | 1 |
| 2. பஞ்சபுராணம் | ...... | 3 |
| 3. தலைவர் செய்தி | திரு.தம்பையா சிறிபதி | 5 |
| 4. செயலாளர் செய்தி | திரு.வே.நந்தீஸ்வரர் | 7 |
| 5. மலராசிரியர் குரல் | திருமதி.மனோன்மணி தனபாலசிங்கம் | 9 |
| 6. புன்னாலைக்கட்டுவன் ஆயர்க்கடவை சித்திவிநாயகர் ஆலயம் | ..... | 11 |
| Punnalaikadduvan Aayakkadavai Chithivinayagar Aalayam | ..... | 13 |
| 7. சைவத் திருமுறைகளும் நம்மவர் செல்நெறியும் | திரு.ச.லலீசன் | 15 |
| 8. Inner Fulfillment of pilgrimage | Dr.Shanmugavadivel | 19 |
| 9. உலகமுடிவு 2012 இலா? | Dr.லம்போதரன் | 23 |
| 10. Sidhanta Concept of Karma in Thirukural | Dr K. Ganesalingam | 28 |
| 11. சாமியறை, சமையலறை, சயன அறை | ஈழத்துச் சிவானந்தன் | 31 |
| 12. பிறப்பு என்னும் பேதமை நீங்க | கோதை அமுதன் | 33 |
| 13. பொருள் பொதிந்த சமய நம்பிக்கை | திருமதி யோகேஸ்வரி | 35 |
| 14. Pilgrimage to Sabarimalai | திரு.குமார் புனிதவேல் | 37 |
| 15. இறைசக்தி | திருமதி இராஜேஸ்வரி கந்தையா | 41 |
| 16. கோயில் திருப்பதிகம் | ஆழ்கடலான் முருகவே பரமநாதன் | 43 |
| 17. அவன் மாதொரு பாகம் ஆனதேன்? | திரு.நம்பியாரூரன் | 47 |
| 18. இறைவன் இருப்பது எங்கே? | திரு.கனக மனோகரன் | 49 |
| 19. யார் கடவுள்? | திரு.கு.வி.கந்தசாமி | 53 |
| 20. குருவைத் தேடி | திருமதி கமலாம்பிகை பாலசுப்பிரமணியம் | 55 |
| 21. மகோற்சவம் | திருமதி அமிர்தி புவனேந்திரா | 57 |
| 22. கந்தன் காட்டிய வழி | திருமதி பூங்கோதை பன்னீர்ச்செல்வம் | 61 |
| 23. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் | திரு.குரு அரவிந்தன் | 63 |
| 24. மாணவர் கட்டுரைகள் | சங்கவி கிருஷ்ணகுமார், நிராகுலன் புவனேந்திரா, ஆஷா ஜெயநாதன், மாதங்கி ஷண், ஜனனி அன்பழகன், சாம்பவி கிருஷ்ணகுமார், அஸ்வினா சிறிஹரன், சாம்பவி ஷண், நர்த்தனன் ஸ்ரீமுருகதாசன், கணன் கௌரிபாலன், திவ்யா பிரபாகரன், சிறிராம் சிற்சபேசன், சாரங்கா சிற்சபேசன், தாரணி அன்பழகன், நிதர்ஷன் உதயகுமாரன், மதுஷா கௌரிபாலன், அபிஷேக் சுகுமாரன், நிராஜன் சக்திவேல். | 66 |
| 25. ஆழ்வார் பாடிய சிவ நடனம் | திரு.பாரதி சுராஜ் | 84 |
| 26. மதங்களின் தாய் இந்துமதம் | திரு.சு.ஹரிஹரன் | 87 |
| 27. தேரின் தத்துவம் | நன்றி: அருள் ஒளி | 91 |

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

* திருமணம்
* திருமணப் பதிவு
* கடைதிறப்பு வைபவம்
* புண்யாக வாசனம்
* பூப்புனித நீராட்டுவிழா
* பூமாலை
* ஆண்டாள் மாலை
* சடைநாகம்
* தலை நகை முழுவதும்



* முத்து மணவறை
* தலைப்பாகை
* பந்தல் அலங்காரம்
* கல்யாண பூசைப் பொருட்கள்
* முத்துச் சப்பரம்
* ஆலயத் திருவிழா
* ஆலய வைபவங்கள்

ஆகிய அனைத்துக்கும் எப்போதும் எம்முடன்
தொடர்புகொள்ளுங்கள் - **Tel: 416 266 3333**

**628 E Birchmount Road, Scarborough, Ontario. M1K 1P9**

ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய
தொலைபேசி இலக்கம் 416 291 8500



உ

# பஞ்ச புராணம்



## தேவாரம்

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
    நினையாதொரு போது மிருந்தறியேன்
வஞ்சமிது வொப்பது கண்டறியேன்
    வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
    நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர் அதிகைக் கெடில
    வீரட்டானத்துறை அம்மானே.

## திருவாசகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
    புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
    உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவ பெருமானே
    திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
    இன்பமே என்னுடை அன்பே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
    இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
    தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
    அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பின் பரந்துநின் றாயைத்
    தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

எந்தை யெந்தாய் சுற்றுமுற்று மெமக்கமுதா மெம்பிரானென் றென்றுமே
சிந்தைசெய் யுஞ்சிவன் சீரடி யாரடி நாயன் செப்புரை
அந்தமிலா தந்தச்சேந்த னெனப் புகுந்தாண்டு கொண்டே ருயிர் மேற்
பந்தம் பிரியப் பரிந்தவனே யென்று பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்.

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்னுற் றுனைநாளும் கண்டுகொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா தென்பரங் குன்றிற் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

## SRI GANESHA DURGA TEMPLE OF MISSISAUGA



தேவஸ்தானம் திறந்திருக்கும் நேரம் வாரத்தில் ஏழு நாட்களும்

காலை 9.00 மணிமுதல் பகல் 1.00 மணிவரை
மாலை 6.00 மணிமுதல் - 9.00 மணி வரை

**பூஜை நேரங்கள்**

காலை : 10.00 மணி
பகல் : 12.00 மணி
மாலை : 7.00 மணி

விசேட தினங்களில் பூஜை நேரம் மாற்றி அமைக்கப்படும்.

ஆலயத்தில் திருமணங்கள், கணபதி ஹோமம், நவக்கிரக சாந்தி, சர்ப்ப சாந்தி, பிதிர் தர்ப்பணம் என்பவற்றை நிறைவேற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும். மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர், சிவாகம கிரியா பூஷணம் சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள் (ராஜன் குருக்கள்)
(கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு, புங்குடுதீவு -10ம் வட்டாரம்)
(ஆலயப் பிரதம குரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர், அறங்காவலர் சபை)

**7220 Tranmere Drive, Mississauga, On., L5S 1L6**
Tel: 905 405 0011/ 905 501 0011
ganeshadurga@hotmail.com

**தலைவர் செய்தி**

# எனது பேரவா

மனிதன் இறைவனை உருவாக்கியிருந்தால் சமயம் என்ற ஒன்று இருப்பதில் அர்த்தமேயில்லை.

எனவே, சமய நம்பிக்கை எமக்கு இருக்குமானால் எமக்கு மேற்பட்ட ஒரு சக்தி இருந்தேயாகவேண்டும்; அந்தச் சக்தியே எம்மை உருவாக்கி இருக்கவேண்டும். எம்மைப் படைத்த இறைவனின் நோக்கத்தை அளக்க முடியாது. உலகில் அநாதியான சமயம் இந்து சமயம் என்பார்கள். எனவே, இந்து சமயம் அநாதியானது மட்டுமல்ல; அலாதியானதும்கூட.

இறைவன் எமக்கருளிய வேதங்கள், ஆகமங்கள், கீதை மற்றும் புராணங்கள் என்பன எம்மை நன்னெறிப்படுத்துவதற்காக தரப்பட்ட பொக்கிஷங்கள். இவை, எந்தவகையிலும் ஆடம்பரங்கள், அறிவுபூர்வமற்ற படாடோபமான விழாக்கள் பற்றிச்சொல்லவில்லை. எல்லாமே கருத்துடன், இல்வாழ்க்கைக்கு வேண்டிய இனிய நடைமுறைகளைக் கூறியுள்ளன. இதைத்தான் உண்மையான ஆன்மீகவாதிகள் காலத்துக்குக் காலம் சொல்லி, கடைப்பிடித்து வருகிறார்கள். ஆனால், பக்தர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நாங்களோ கண்கட்டி வித்தைகாட்டும் மந்திரவாதிகள் ஒருசிலரை கடவுளின் அவதாரம் என்று பூசிப்பதும், அதை எங்கள் குழந்தைகள் நம்பவேண்டுமென்று நினைப்பதும் நாங்கள் எங்கள் சமயச் சந்ததிகட்கு செய்யும் மாபெரும் நம்பிக்கைத் துரோகம் என்பதனை கனவிலும் மறந்துவிடக்கூடாது. இதைத்தான் சுவாமி விவேகானந்தர் "விழிமின் எழுமின்" என்று கூறினார்.

நாங்கள் இறைவனுக்குச் செய்கின்ற நித்ய, நைமித்திய வழிபாடுகள் மக்கள் அறிவுபூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமையவேண்டும். பக்தர்களைப் பலிக்கடாக்களாக்கி, அவர்கள் பணத்தையும், பொருளையும், காலத்தையும் வீண்விரயமாக்கும் வகையில் ஆலய நிர்வாகிகளோ, ஆன்மிகம் பற்றிப் பேசுகின்ற சமயப் பெரியார்களோ நடந்துகொள்வார்களேயானால் இவர்களைப்போலச் சமய சிந்தனையற்றவர்கள் யாரும் இருக்கமுடியாது.

ஆகவே, நாங்கள் அனுட்டிக்கும் "முறையான சமய வழிபாடே மனித மேம்பாட்டினை முன்னேற்றும்" என்பதனை மிகப் பணிவுடன் கூறிவைக்க விரும்புகிறேன்.

சுபம்.

தம்பையா ஸ்ரீபதி
தலைவர்,
கனடா இந்து மாமன்றம்.

# அனுபவம் ஆற்றல் மிக்க சட்டத்தரணி

## தம்பையா சிறிபதி

**கனடிய வழக்கறிஞர்,**

**பிரசித்த நொத்தாரிசு**

## Thampiah Siripathy

*Barrister - Solicitor & Notary Public*

* குடிவரவுச் சட்டம், அகதி மனுக்கள், ஸ்பொன்சர், மேன்முறையீடுகள்
* காணிகள், வீடுகள், வாங்குதல், விற்றல், ஈடுகள் பதிதல்
* வியாபார ஸ்தாபனங்கள் பதிவுசெய்தல், வாங்குதல்
* குடும்பச் சட்டம் சம்பந்தமான விடயங்கள், விவாகரத்து, பராமரிப்பு, பாதுகாவல்
* குற்றவியல் சட்டம் சம்பந்தமான விடயங்கள்
* தத்துவப் பத்திரங்கள், இறுதி விருப்பாவணங்கள், சத்தியப் பத்திரங்கள் தயாரித்தல்

**Tel: (416) 759 - 4500**

**Fax: (416) 759 - 4510**

(கென்னடி சப்வேக்கு அருகாமையில்
சங்கர் அன் கோ கட்டிட மேல் மாடியில்)

2425, Eglinton Ave. E., Suite # 211
Toronto, Ontario. M1K 5G8
(Eglinton & Kennedy)

## செயலாளர் செய்தி

இன்று ஈழத்தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் எமது தாயகத்தைவிட்டு வெளிநாடுகளில் குறிப்பாக கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழ்கிறார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் புலம்பெயர்ந்த மக்களை அவ்வந்நாட்டு அரசாங்கங்கள் தம் கலாச்சாரத்தோடு கரைந்துபோகும்படி சொல்லவில்லை. மாறாக, தத்தம் பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க உதவுகிறார்கள். கனேடிய அரசாங்கமும் இதைத்தான் விரும்புகிறது. இது இந்நாடுகளுக்குப் பெருமை என நினைக்கும் காலம். பண்பாட்டுப் பன்மைத்துவம் என்பது இந்த நாடுகளின் தாராள மனப்பான்மையை எடுத்துக் காட்டுகிறது.

ஆனால் நாமோ அப்படியில்லை. மாறாக, பெரும்பாலான வீடுகளில் பிள்ளைகளுடன் ஆங்கில மொழியில்தான் பேசப்படுகிறது. இது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும். நாம் எங்கள் பண்பாட்டை இந்த நாட்டில் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்பது எம்மவர் முன் உள்ள முக்கிய கடமையாகும். இதைச் செய்யத் தவறுவோமேயானால் எமது மூன்றாவது தலைமுறையை நாம் இழந்துவிடுவோமோ என்ற அச்சம் மட்டுமல்ல, தாயகத்துடன் உள்ள இணைப்பும் நிலைக்காது. எனவே, நாம் எமது பிள்ளைகளை, தமிழ், சைவ சமயம் என்பவற்றைக் கற்க வழிசெய்து அவர்களை மன்றங்களினால் நடாத்தப்படும் போட்டிகளில் பங்குகொள்ளச் செய்யவேண்டும்.

பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நோக்கத்திற்காக கனடா இந்து மாமன்றம் ஆரம்பிக்கப்பட்டு, ஆண்டுதோறும் இங்குள்ள இளம் சமுதாயத்தினர் எமது பண்பாட்டுடன் வாழ, நாம் சமயப் பேச்சுப் போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள், சமய அறிவுப் போட்டிகள் நடாத்தி பொங்கல் விழாவில் பரிசில்கள் வழங்கி பிள்ளைகளை உற்சாகப்படுத்திவருகிறோம். மேலும் கோடைகால பாசறை (Summer camp) கடந்த இரண்டு ஆண்டுகளாக நடாத்திவருகிறோம். இப்பாசறையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் யோகாசனம், தியானம், பண்ணிசை, சமயம், கைத்திறன், விளையாட்டு போன்றவை நடாத்தி பிள்ளைகளை உற்சாகப்படுத்தி வருகிறோம். இவ்வாண்டும் இந்நிகழ்வுகள் வழமைபோல் இடம்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகிறோம்.

எம் பிள்ளைகளுக்கு தமிழையும் சமயத்தையும் பெற்றோர்கள் சொல்லிக் கொடுக்கவேண்டும். இதன்மூலம் எமது கலை, கலாச்சாரம் இந்த நாட்டில் தழைத்தோங்கும். எமது தாயகத்துடனான இணைப்பு தொடர்ந்து இருக்கும். அதேவேளை தாயக மக்களுக்கு உதவிபுரியும் பெரும் சக்தியாக கனடாவாழ் தமிழ் மக்கள் இருக்க முடியும்.

இவ்வினிய பொங்கல் விழாவை சிறப்புடன் நடாத்த உதவிய அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வே.நந்தீஸ்வரர்
செயலாளர்,
கனடா இந்து மாமன்றம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



சர்க்கரைப் பொங்கல் இனிதே பொங்கட்டும்!

# யசோ சின்னத்துரை

கனடிய சட்டத்தரணி



2100 ELLSMERE ROAD, SUITE 202
(MARKHAM & ELLSMERE)
SCARBOROUGH,ON M1H 3B7

**Tel: 416 265 3456**
**Fax: 416 265 2770**

# மலராசிரியர் செய்தி

எல்லோருக்கும் கனடா இந்து மாமன்றத்தின் சார்பில் இதயபூர்வமான தைப்பொங்கல் வாழ்த்துக்களும் வணக்கங்களும். வருடந்தோறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் மலர்ந்திடும் சைவநீதி மலர் இம்முறையும் இதமான நறுமணத்துடன் பல அறிஞர்கள், ஆய்வாளர்களின் அனுபவமும், அறிவும் கலந்த சமய சம்பந்தமான கட்டுரைகளுடன் மலர்ந்திருக்கின்றது. இவை மக்களை அறியாமை என்னும் இருளிலிருந்து விலக்கி உண்மைப் பேரொளியான ஆன்மீக வாழ்விற்கு இட்டுச்செல்லும் என்பது எனது நம்பிக்கை.

உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களின் இரண்டு கண்கள் போன்று விளங்குவன தமிழும் சைவமுமாகும். இவையிரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையன. தமிழ் வளர்ச்சியடைந்தால் சமயம் வளரும்; சமயம் வளர்ச்சியடைந்தால் தமிழ் வளரும். சைவமும் தமிழும் தழைக்க உரமூட்டியவை திருமுறைகள், கந்தபுராணம், பெரியபுராணம், திருமந்திரம், திருக்குறள் போன்ற பல நூல்களாகும். இத்திருமுறைகளைத் தேனிலும் இனிய தமிழ்மொழியில் மனமுருகிப்பாடும்போது தமிழின் இனிமையையும் பெருமையையும் உணர்வதுடன் இறைவன்மீது பக்திப்பரவசமும் ஏற்படுகின்றது. தமிழ் மாணவர்கள் இளம் வயதிலிருந்தே சங்கீதம் கற்பதனால் போட்டிகளில் தேவாரங்களைப் பண்ணோடு இனிமையாகப் பாடுகிறார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்கது.

கனடாவில் பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. ஆனால், சமயக்கல்வி கற்பதற்கு வாய்ப்புகள் குறைவு. தமிழ்ச் சிறார்கள் தமிழையும் சமயத்தையும் கற்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பேச்சு, பண்ணிசை, சமய அறிவுப்போட்டிகளை எமது மன்றம் நடத்துகின்றது. இதில் இம்முறை நூற்றிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியுள்ளார்கள். போட்டிகள் நடாத்துவதற்கு வசதியான இடம் கிடைத்திருக்கிறது. ஆதலால் அதிகமான மாணவர்களை பங்குபற்ற வைப்பதற்கு பெற்றோர்கள் ஆர்வம் காட்டவேண்டும். பெற்றோர்கள்தான் முதல் ஆசிரியர்கள். அவர்களின் ஊக்கத்தினால் சிறு குழந்தைகள் பேச்சு, பண்ணிசைப் போட்டிகளில் கூடுதலாகப் பங்குபற்றுகிறார்கள். பேச்சுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விடயங்களை நல்ல தமிழில் இடைநிறுத்தாமல் ஒப்படைத்தார்கள்.

தமிழ் மொழியில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கவேண்டும். அவற்றை பெற்றோர் வாசித்துக் காட்டி மாணவர்களையும் வாசிக்க வழிகாட்டி, வினாக்களைக் கேட்டு விளங்காதவற்றை விளங்கவைக்க வேண்டும். தேவாரங்கள், பேச்சு, சமய அறிவுப்போட்டிகள் என்பவற்றை எடுத்துக் கூறும்போது அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் கதைகளைக் கூறினால் மனனம் செய்வதற்கு இலகுவாகவும் ஆர்வத்தோடு கற்கவும் விரும்புவார்கள். இவர்களின் இறைபக்தியையும், பண்புகளையும் மனித நேயத்தையும் ஒழுக்கத்தையும் வளர்க்கக்கூடிய சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

போட்டிகளில் சிறுபிள்ளைகள் கூடுதலாகப் பங்குபற்றுவதுபோல் வளர்ந்த பிள்ளைகள் பாடசாலைக் கல்வியின் வேலைப்பழுவினால் பங்குபற்றும் தொகை குறைவடைகிறது. ஆங்கிலத்தில் சரளமாக எழுத, வாசிக்க, பேசத் தெரிவதுபோல் எங்கள் தாய் மொழியான தமிழையும் தெரிந்திருக்கவேண்டும். ஆதலால் அவர்களையும் இந்நிகழ்வுகளில் பங்குபற்ற ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது பெற்றோரின் கடமையாகும். இல்லாவிடில், நாங்கள் தமிழர் என்ற அடையாளத்தை இழந்துவிடுவோம். இவ்வாறு பங்குபற்றும்போது அவர்களுக்கு தம்மால் எதையும் செய்ய முடியும் என்ற ஒரு மனத்தைரியம் ஏற்படுவதுடன் அவர்களின் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும்.

அறிவியலுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளது என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதுவே இறைசக்தியாகும். எல்லோரிடமும் அன்பாக இரு; தியானம் பண்ணு; சேவை செய்; இதனால் என்றுமே எங்களுக்கு ஏற்படக்கூடிய சோதனைகள், மனவேதனைகள், ஏமாற்றங்கள் யாவும் அடியோடு நீங்கிவிடும். நாம் செய்யவேண்டிய கடமைகளைத் தினமும் தவறாது செய்வதே நமக்கான தர்மம். தர்மம் தலைகாக்கும்.

சைவநீதி உலகெங்கும் பரவ ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்; வாரீர். சைவநீதி பொலிவுபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வினிய சர்க்கரைப் பொங்கல் விழாவில் எல்லோரும் ஒன்றுகூடி மகிழ்வோம்.

நன்றி. வணக்கம்.

திருமதி ம.தனபாலசிங்கம்
மலர் ஆசிரியை,
கனடா இந்து மாமன்றம்.

Worldwide money transfers
currency exchange cheque cashing

Cash Point®
The Buck Starts Here!

Tel: 416 284 7000
Fax : 416 284 4562

3852 Finch Ave. E. Unit - G03
Scarborough ON M1T 3T9

# புன்னாலைக்கட்டுவன் ஆயர்க்கடவை சித்தி விநாயகர் ஆலயம்

ஈழத்தின் வடபால் அமைந்துள்ள யாழ் தீபகற்பத்தில் யாழ் பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமமானது அறிஞர்களும், உழவர் பெருமக்களும், அந்தணர்களும் வாழ்ந்து வரும் ஓர் செழிப்பு மிக்க கிராமம் ஆகும். இக்கிராமத்தின் நடு நாயகமாக இருந்து நல்லாட்சி புரிபவர் ஆயக்கடவை சித்தி விநாயகர். இக்கிராம மக்கள் இவர்பால் அளவற்ற பக்தி கொண்டவர்கள். எங்கு வாழ்ந்தாலும் விநாயகரை மனதில் கொண்டே எக்காரியத்திலும் ஈடுபடும் பழக்கம் கொண்டவர்கள். ஈழத்தில் மிகப் பழமை வாய்ந்த ஆலயங்களில் இதுவும் ஒன்று. இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்த காரணத்தினால் இதன் ஆரம்ப காலப்பகுதி பற்றிய சரியான தகவல் இதுவரை அறியப்படவில்லை.

இவ் ஆலயம் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து வந்தமைக்கான சான்றுகள் யாழ் கச்சேரியில் உள்ளன. உதாரணமாக 1976ம் ஆண்டு பதிவேட்டில் பக்கம் 276 இல் இவ்வாலயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மண்ணினால் அமைக்கப்பட்ட சிறு ஆலயம் காலப்போக்கில் வளர்ச்சி பெற்றது. 1970களில் ஊர் மக்களின் முயற்சியினால் அழகிய சித்திர தேர் அமைக்கப்பட்டது. 1973 இல் அடியார் ஒருவரினால் அன்னதான மண்டபமும் 1977-80இல் அடியாரினால் இராச கோபுரமும் அமைக்கப்பட்டன. 1979-80இல் அடியார் ஒருவரினால் அழகிய சப்பரம் நிர்மாணிக்கப்பட்டது. தற்போது தீர்த்தக் கேணி அமைக்கும் திருப்பணி நடந்து வருகிறது. இவ்வாலயம் 1935, 1961, 1990களில் புனரமைக்கப்பட்டு கும்பாபிடேகம் நடந்தேறியது.

இவ்வாலயத்தில் மூன்று கால பூசைகளும் மிக சிறப்பாக நடைபெறும். மாதம் தோறும் சதுர்த்தி அபிஷேகமும் இதர விஷேட பூசைகளும் சிறப்பாக இடம்பெறும். ஆனி மாதம் அமாவாசையின் பின் வரும் ஆறாம் நாள் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி வேட்டைத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர்த் திருவிழா நடந்தேறி பதினோராம் நாள் தீர்த்தோற்சவம் இடம்பெறும். 12ஆம் நாள் பூங்காவனத்தில் எழுந்தருளி ஐங்கரன் அருட்காட்சி கொடுப்பார். உற்சவ காலத்தில் ஊர் மக்கள் மட்டுமன்றி அயலூர் மக்களும் விரதமிருந்து ஐங்கரனின் நல்லாசி பெறுவார்.

உற்சவ காலங்களில் சமய சொற்பொழிவுகளும், இசைக் கச்சேரிகளும் மிகச் சிறப்பாக இடம்பெறும். குறிப்பாக சீர்காழி கோவிந்தராஜன், மதுரை சோமு, திருமுருக கிருபானந்த வாரியார், கிட்டப்பா, முல்லை சகோதரிகள், போன்றோர் இவ்வாலயத்தில் பல்வேறு காலப்பகுதிகளில் சமய மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்தி உள்ளனர். விநாயகர்பால் பக்தி கொண்ட பல உள்ளூர் வெளி ஊர் அடியார்கள் பல பதிகங்கள், பாடல்களை விநாயகர்பால் இயற்றி உள்ளனர். பிரம்ம ஸ்ரீ கணேசையர் அவர்கள், தமிழ் அறிஞர் ஜெகநாதன், வீரமணி அய்யர், திருச்செந்தூர் ஈஸ்வர பாகவதர், கிருபானந்த வாரியார், கவிஞர் கந்தவனம், அதிபர் நடராஜா போன்றோர் இதில் குறிப்பிடத் தக்கவர்கள்.

மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற மூன்று அம்சங்களையும் கொண்டு வேண்டுவார் வேண்டுவன வழங்கும் ஆயக்கடவை விநாயகரை வணங்கி சிறப்புறுவோமாக.

இவ் ஆலயம் பற்றிய மேலதிக தகவல்கள் பின் வரும் இணைய முகவரியில் உள்ளது.

WWW .PUNNALAIKKADDUVAN .COM

# LAW OFFICE

## T. JEGATHEESAN

உங்கள் சட்டப் பிரச்சினைகள் எதுவாயினும்
தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட
நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

- REAL ESTATE - Purchase, Sale, Mortgage
  காணி, நிலம், வீடு வாங்குதல், விற்றல், அடமானம் வைத்தல்
- FAMILY LAW - Divorce, Seperation
  குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிரிவு
- BUSINESS - Purchase, Sale, Incorporation
  வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை
- IMMIGRATION - Refugee Matters, Sponsorship, Appeal
  குடிவரவு அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை, மேன்முறையீடு
- POWER OF ATTORNEY - Affidavits, Statutory Declarations, Last Will
  தத்துவப் பத்திரம் சத்தியக்கடுதாசி, உயில்

இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்கு
மேலாக அனுபவம் பெற்று கனடாவிலும் சட்ட வல்லுனராகப் பயிற்சி
பெற்று பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்

## தி. ஜெகதீசன்

Barrister, Solicitor and Notary Public (ONTARIO)

☎: Off: 416- 266 6154 Res: 416- 449 0358 Fax: 416- 266 4677
2620 Eglinton Ave. E., # 201 Scarborough, On., M1K 2S3

Aum

# Punnalaikattuvan Aayarkkadavai Chithivinayar Aalayam

On the road from Jaffna City to Pallali Airport is a village called Punnalaikattuavan which lies in the heart of Jaffna Peninsula. In this fertile village dwell great educationists, and farmers together with Brahmins. In the centre of this village resides Aayarkkadavai Chithivinayager who righteously overrules the destiny of the people of the village. The residents of this village love and venerate Him from the bottom of their hearts. Over the years it has become custom for the villagers to uphold Him in their hearts before they embark on any new activity.

This is a very ancient temple in Sri Lanka. Due to its antiquity, its origin and history has become very much blurry. There is evidence in the Jaffna secretariat to show that it is more than three hundred years old. For example on page 276 of the 1976 Land Registry records, it is mentioned that this temple was initially built by clay and in due course it grew big. In 1970 by the efforts of the villagers a beautiful chariot was made for the temple. In 1973 a devotee built a dining hall for charitable feeding. During the period from 1977 to 1980 by the efforts of the devotees a main turret *(Raja Gopuram)* was constructed. Following this between 1979 and 1980 by the benevolence of a devotee the tall chariot *(Chapparam)* was built. Presently the holy pond (Theethe kerny) is being constructed. The temple was renovated and consecrated in 1935, 1961, and 1990.

In this temple daily ceremonies are performed morning, noon, and evening. Monthly Chathurthi Anointing (Abisekam) and other special ceremonies are performed on a grand scale. The sixth day after the new moon (*Amavasai*) in the month of Aani (May/ June) the annual festival begins with great splendour. After the Vettai festival, Chappara festival, and Cart festival, on the eleventh day the people celebrate the Theetha festival. On the twelfth day will be the Poongavanam festival when the Lord will arise and bless the congregation. People from the adjoining villages attend this festival as well to gain the benevolence of the Lord.

During the festival times religious discourses and traditional musical recitals are performed for the benefit of the devotees. It is important to mention that Seerkali Govintharajan, Mathurai Somu, Thirumuruga kirupaananthavariyar, Kittappa and Mullai sisters have performed in these festivals. Local and foreign bards and poets have composed songs praising the Lord of the temple. Notable scholars such as Brahmasri Ganeshaiyar, Tamil Laurate Jeganathan, Veeramani Iyar, Thiruchchenthoor Easwarapagvathar, Kirupananthavaryar, Kavighar Kanthavanam and school principal Nadarajah have participated in the temple festivals.

Let us also worship the lord who gives benevolently to those who ask him and is consecrated in this temple which has the trinity of deity, location, and holy pond.

Further information about this temple can be obtained on the web site

www.punnalaikkadduvan.com




The Mortgage Centre

We work for **you**, not the lenders.

**Piranavan Nantheeswarar (Prabu)**

Mortgage Agent – Lic. M10001205

வீட்டு அடமானக் கடன் குறைந்த வட்டி வீதத்தில்
பெற்றிட உங்கள் நட்பான முகவர்

**பிரணவன் (பிரபு) 416 726 0822**

Unity Financial Mortgage Services Inc. Lic.10457

Email: mortgage@prabunanthee.com

Website:www.prabunanthee.com

- First Second Mortgage
- Refinancing
- Commercial, Residential Mortgage
- Home Equity Mortgage
- Low interest Rates

**Park Place Coporate Centre, 15 Wertheim Court, Suit 107, Richmond Hill, ON. L4B 3H7**
**Other Locations: Toronto, Richmond Hill, Bolton, New Market.**

**An Independent Member of the Mortgage Centre Network**

# சைவத் திருமுறைகளும் நம்மவர் செல்நெறியும்

சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச.லலீசன்,
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

**அறிமுகம்**

தமிழ் வேதம் எனப் போற்றப்பெறும் திருமுறைகள் இறையன்பை மேம்படுத்தவல்ல திருப்பாடல்களாக விளங்குகின்றன. திருமுறை என்பதற்குத் தெய்வத்தன்மை பொருந்திய நூல் எனப பொருள்கொள்ளலாம். (முறை-நூல்) பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழும் தேவாரம் என்னும் பெயரை உடையவை. தேவாரம் என்றால் தெய்வத்திற்கு மாலை எனப் பொருள் கொள்ளலாம். (தே - தெய்வத்தன்மை, ஆரம் - மாலை) தே என்பதைத் தெய்வத் தன்மை எனப் பொருள் கொண்டு, வாரம் என்பதற்கு அன்பு எனப் பொருள் கொண்டால் தெய்வ அன்புப் பாடல் எனப் பொருள் கொள்ளலாம். முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடல்களாகவும், அடுத்துவரும் மூன்றும் திருநாவுக்கரசர் பாடல்களாகவும், ஏழாம் திருமுறை சுந்தரர் பாடல்களாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், திருக்கோவையார் எனபன எட்டாம் திருமுறைப் பாடல்களாகவும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாம் திருமுறைப் பாடல்களாகவும், திருமந்திரம் பத்தாந் திருமுறையாகவும், காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் உள்ளிட்டோர் பாடிய பாடல்களின் தொகுதி பதினோராம் திருமுறையாகவும் சேக்கிழாரின் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் கொள்ளப்படுகிறது.

**திருமுறைத் தொகுப்பு**

முதலாம் இராசராச சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார் திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்தார் எனத் திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது. சோழர் காலத்தில் பாடப்பட்ட பெரியபுராணம் பின்னாள்களில் பன்னிரண்டாம் திருமுறையாகக் கொள்ளப்பட்டது.

**வடமொழி மந்திரங்களுக்கு ஈடானவை**

திருமுறைகள் வடமொழி வேத, ஆகம மந்திரங்களுக்கு ஈடான சக்தி படைத்தவை. இதனாலேயே தேவாரம், வேதசாரம் எனவும், திருவாசகம் உபநிடதசாரம் எனவும் திருமந்திரம் ஆகமசாரம் எனவும் குறிப்பிடுகின்றனர். திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பெற்ற கதவைத் திருநாவுக்கரசர் தேவாரம் பாடித் திறப்பித்தார் எனவும், திருஞானசம்பந்தர் மீண்டும் தேவாரம் பாடிக் கதவைப் பூட்டினார் எனவும் அறிகிறோம். வேதங்களால் பூட்டப்பட்ட கதவு தேவாரத்தால் திறக்கப்படுகின்றது என்றால் தேவாரங்கள் வடமொழி மந்திரங்களுக்கு ஈடானவை என்பதே பொருளாகும்.

**இறைவனுக்குப் பிடித்தவை**

திருமுறைப் பாடல்களில் இறைவன் மிக்க விருப்புடையவர். தன் வாயினாலேயே விருப்பத்தைத் தெரிவிக்கும் சந்தர்ப்பங்கள் பற்றி இலக்கிய ஆதாரங்கள் உள்ளன.

"..... நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொல் தமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்" (பெரிய புராணம் - 216)

எனச் சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட சிவபெருமான் பேசியதாகப் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. மேலும் சுந்தரருக்குப் பித்தா என்றும் சேக்கிழாருக்கு உலகெலாம் என்றும் இறைவனே அடியெடுத்துக் கொடுத்துள்ளார். திருவாசகப் பாடல்களை இறைவன் தன் கைப்பட எழுதியுள்ளார். இவ்வாறு பெருமை பெற்றுள்ள திருமுறைப் பாடல்கள் இன்று எத்தகைய நிலையை எதிர்கொள்கின்றன?

**திருமுறைகள் - இன்றைய நிலை**

இறைதன்மை பொருந்திய திருமுறைப் பாடல்கள் நம்மவர்களது அறியாமையாலும், அலட்சியப் போக்கினாலும் முக்கியத்துவம் குறைந்த நிலையை எய்திவிட்டன.

**(அ) பாடும்போது விடப்படும் தவறுகள்**

பாடசாலைகள், ஆலயங்கள் போன்ற பொது இடங்களில் திருமுறை பாராயணம் மேற்கொள்ளும் சிலர், தாம் ஓதும் பாடல்களில் பிழைகளை ஏற்படுத்திப் பாடும் நிலையை அவதானிக்க முடிகின்றது. பிழையான வார்த்தைப் பிரயோகங்கள் திருமுறைகளின் பெருமைக்குப் பங்கம் ஏற்படுத்துவதோடு, தீய பலன்கள் ஏற்படவும் காரணமாகிவிடுகின்றன. அன்றாட வாழ்வியலில் நாம் பிழைவிடும் பிரயோகங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

- அங்கமும் வேதமும் ஓதும் நாவர் என்ற பாடலில் **ஓதும் நாவர்** என்பதற்குப் பதிலாகச் சிலர் **ஓதும் நால்வர்** எனப் பாடுதல்.
- திருஞானசம்பந்தர் பாடிய **மங்கையர்க்கரசி** என்ற பாடலலை **மங்கயற்கரசி** எனப் பாடுதல்.
- இடரினும் தளரினும் என்ற தேவாரத்தில் "இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்றெமக்கில்லையே அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே" என்பதில் **இதுவோ… அதுவோ**.. என்பதை **இதுபோல்… அதுபோல்..** எனப் பாடுதல்.
- முத்திநெறி அறியாத என்ற மிகப் பிரபலமான திருவாசகப் பாடலில் "சித்தமலம் **அறுவித்துச்** சிவமாக்கி.." எனப் பாடுவதற்குப் பதிலாக "சித்தமலம் **அறிவித்துச்** சிவமாக்கி… எனப் பாடுதல்
- சிவபுராணத்தில் "கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க" என்ற அடியில் **குருமணிதன்** என்பதற்குப் பதிலாக **குருமனிதன்** எனப் பாடுதல்.
- பாலுக்குப் பாலகன் எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுப் பாடலில் "ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாக.." என்ற அடியில் **தில்லைச் சிற்றம்பலமே** இடமாக என – **தில்லை** என்ற சொல்லைச் சேர்த்துப் பாடுதல்.
- **கடையவனேனைக் கருணையினால்**.. எனத் தொடங்கும் திருவாசகப் பாடலில் **'கடையவனே எனைக் கருணையினால்'** எனப் பதம் பிரித்துப் பாடுதல்.

முதலிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடலாம். மேற்குறிப்பிட்டவை இக்கட்டுரையாளரின் அனுபவ ரீதியாகக் காணப்பட்ட பிழைகளாகும். இன்னும் பல சந்தர்ப்பங்கள் இருக்கலாம்.

**(ஆ) பிழைகள் ஏற்படக் காரணமானவர் யார்?**

இவ்வாறான பிழைகள் ஏற்படக்காரணம் யாது? அல்லது காரணமானவர் யார் என்பதில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. "இளமையில் கல்வி சிலையில் எழுத்து", கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தான்" முதலிய வாசகங்களை இங்கு நாம் நினைத்துப் பார்க்க முடியும். நாம் அறிந்து வைத்திருக்கின்ற திருமுறைப் பாடல்களில் பெரும்பாலானவை நமது இளமைக் காலத்தில் எம்மால் அறியப்பட்டவை. இங்கு அறிதல் முறையில் ஏற்பட்ட தவறே பிரதானமானது. ஒரு விடயத்தை எவ்வாறு மனனஞ் செய்கின்றோம் என்றால் செவிவழியாகப் புகுந்த செய்தியை மூளையில் பதித்து வைக்கின்றோம். அல்லது கண்களால் புகுந்த செய்தியை மூளையில் பதித்து வைக்கின்றோம். பெரும்பாலும் செவிவழியாகக் கேட்பவையே எமக்குரிய அனுபவங்களாகும். பெரும்பாலான சினிமாப் பாடல்களையும் இவ் அனுபவத்தினூடாகவே நாம் ஞாபகத்தில் வைத்திருக்கின்றோம். செவிகளில் சேரும் வடிவம் பிழையாயின் பின்னர் வாய்மூலம் பாடப்படும்போது பிழையான வெளிப்படுத்துகையே பெறப்படும். கேள்வி ஞானத்தால் பாடும் பழக்கம், 'பற்றித் தொடரும் பிழைகளை' ஏற்படுத்திவிடுகின்றது.

பாடல்களைப் பொருளுணர்ந்து பாடும்போது இத்தகைய பிழைகள் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. நூல்களின் துணையுடன் பாடல்களைப் பாராயணம் செய்தால் இவ்வாறான பிழைகள் ஏற்படுவதைக் கணிசமான அளவு குறைக்கலாம். இவைபற்றிய விடயங்களில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களும் கவனம் செலுத்தவேண்டும்.

**(இ) கிரியைகளில் திருமுறைகள்**

பஞ்சபுராணம் என்ற வகையில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய பாடல்கள் பாடப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும். ஆயினும் பல ஆலயங்களில் தேவாரம், புராணம் என இரு பாடல்களுடன் திராவிட வேதகானம் பாடுதல் நிறைவு பெற்றுவிடுவதை அவதானிக்க முடிகிறது.

கோவிற் பூசகர்களின் அவசரமும், நேரமின்மை என்ற குற்றச்சாட்டும் இவ்வாறு இரு பாடல்களுடன் பஞ்சபுராணம் நிறைவுபெறக் காரணமாக அமைகின்றது.

கோவிற் பூசகர்கள் திருமுறைகளை அலட்சியப்படுத்துகின்றார்களோ எனவும் எண்ண வைக்கின்றது. பூசைக் கிரமங்களில் வேத பாராயணம், திருமுறைப் பாராயணம், ஆசீர்வாதம் என்ற ஒழுங்கைச் சிலர் கைக்கொள்கின்றனர். பலர் வேத பாராயணத்தை அடுத்து ஆசீர்வாதத்தை மேற்கொண்டபின் திருமுறை பாடுமாறு கிரியை செய்கின்றனர். பூசைகள் யாவும் நிறைவுபெற்று ஆசீர்வாதமும் இடம்பெற்ற பின்னர் திருமுறை பாடுவதற்கு இடம் வழங்கப்படுதல் திருமுறைகளை அலட்சியப்படுத்துவதாகவே நோக்கப்பட வேண்டியது.

இதைவிடத் திருமுறை பாடும் நேரத்தில் தாமும் சேர்ந்து வழிபாடாற்றுவதை விட்டுவிட்டு அதனை ஒரு இடைவேளை நேரமாகக் கருதும் பூசகர்மார் பலர் உள்ளனர். இதனால் கூடியிருக்கும் அடியவர்களும் திருமுறைகளுக்கு உரிய மதிப்பு வழங்கத் தவறிவிடுகின்றனர். பெரியபுராணம் பாடப்பட வேண்டிய வேளையில் வேறு புராணப் பாடல்களைப் பாடும் நிலையையும் இங்கு தவறுகளுள் ஒன்றாகச் சுட்டிக்காட்ட முடியும். இவ்வாறு பெரியபுராணம் என்ற போர்வையில் நாம் பாடும் வேறு புராணப் பாடல்கள் சில வருமாறு:

- பரமனை மதித்திடாப் பங்கயாசனன் ... (கந்தபுராணம்)
- வான்முகில் வழாது பெய்க... (கந்தபுராணம்)
- ஆறிரு தடந்தோள் வாழ்க... (கந்தபுராணம்)
- அருவமும் உருவமாகி .. (கந்தபுராணம்)
- திருவாக்கும் செய்கருமம் (11ம் திருமுறை)

எமது ஆலயங்களில் வீற்றிருந்து அருளாட்சி நல்கும் இறை மூர்த்தங்கள் யாவற்றினதும் அடிப்படை, சிவாம்சமாக உள்ளமையால் எத்தெய்வத்தின் முன்னும் திருமுறைப் பாடல்களை ஓதுவதில் தவறில்லை.

திருமுறைகளைப் பண்ணுடன் (இராகத்துடன்) பாடுவோர் தொகையும் அருகிவருகிறது. இவ்வாறு இராகமின்றி ஜனரஞ்சகமற்ற முறையில் பாடுவதும், திருமுறை பாடும்போது மற்றவர்கள் உரிய மரியாதை கொடுக்கத் தவறுவதற்குக் காரணமாக அமைகின்றது. சில ஆலயங்களில் குறிப்பிட்ட ஒரு சிலர் தாமே 'வாணாள் ஓதுவார்கள்' எனக் கருதி மற்றவர்கள் பாடுவதற்குரிய சந்தர்ப்பங்களை மடக்கித் தாமே எப்போதும் பாடிக்கொள்வர். இளையவர்களை வளர்த்துவிடும் மனோபாவம் இத்தகையவர்களிடம் இல்லையாதலால், இவர்களுடைய காலத்துடன் திருமுறைகளைச் சீராகப் பாடக்கூடியவர்கள் அருகிவிடுகின்றனர்.

**(ஈ) பொது நிகழ்வுகளில் திருமுறைகள்**

பொது நிகழ்வுகளில் திருமுறைகள் படும்பாடு பற்றிச்சொல்ல வேண்டியதில்லை. விழாக்கள், கூட்டங்கள் போன்ற பொது நிகழ்வுகள் திருமுறைப் பாராயணத்துடன் ஆரம்பமாவது வழமை. இதன்போது எழுந்துநின்று மரியாதை கொடுக்கும் வழக்கம் காணப்படுகின்றது. ஆனால் கைகூப்பி வணங்கும் வழக்கத்தைப் பலரிடம் காணமுடிவதில்லை.

மரணச் சடங்குகள் போன்ற நிகழ்வுகளில் சம்பளத்திற்குத் திருமுறைபாடும் ஓதுவார்மார் பலர் உளர். இவர்களில் பலர் உரத்துப் படிக்க வேண்டும் என்பதைக் காரணம் காட்டி மது அருந்திவிட்டுத் திருமுறைகளைப் பாடித் தொலைக்கின்றனர். புனிதமில்லா வாய்களால் புனிதமான பாடல்களைப் பாடுவதே பிழையான காரியம். சில விடயங்கள் தமக்குத் தெரியாதவை எனக் கூறிக்கொள்வதைப் பெருமையாகக் கருதும் வேடதாரிகளும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றனர். வேட்டி கட்டத் தெரியாது, சேலை உடுக்கத் தெரியாது என்ற வரிசையில் தேவாரம் பாடத் தெரியாது என்பதும் அவர்கள் நினைக்கும் கௌரவமாக உள்ளது.

**(உ) புலம் பெயர் நாடுகளில் திருமுறைகள்**

புலம்பெயர் நாடுகளில் உள்ள சைவர்கள் திருமுறைப் பாடல்களை தமது வாரிசுகளிடம் கையளிக்கும்போது ஆங்கில மொழி வடிவத்திலேயே கையளிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். நேரடியாக தேவாரத்தை ஆங்கில வார்த்தைகளில் உச்சரித்துப் பாடும்போது உரிய சொற்களுக்கான சரியான உச்சரிப்பு அமைகின்றதா என வழிப்படுத்தவேண்டிய தேவை உள்ளது. இதேவேளை திருமுறைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்து பரப்ப வேண்டிய தேவையும் உள்ளது.

**திருமுறைகளின் எண்ணிக்கை தொடரப்பட வேண்டுமா?**

திருமுறைகளின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பி தனது காலத்தில் பதினொன்று என்றே வகுத்தார். பின்னர் பெரியபுராணம் பன்னிரண்டாவது திருமுறையாகச்

சேர்க்கப்பட்டது. எனவே, சோழர் காலத்தில் திருமுறைகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தியமையால் தற்காலத்திலும் இவ்வெண்ணிக்கையை அதிகரிக்கலாமேயென அறிஞர்கள் சிலர் வாதிடுகின்றனர்.

பஞ்சபுராணம் பாட வேண்டிய சந்தர்ப்பங்களில் ஆறு, ஏழு பாடல்களைப் பாடும் வழக்கத்தையும் சிலர் கொண்டுள்ளனர். திருமுறைக்குள் அடங்காத திருப்புகழ், அபிராமி அந்தாதி, வள்ளலார் பாடல் போன்றவற்றைப் பாடும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றோம். எனவே, திருமுறைகள் தொடரப்படுவதில் தப்பில்லை. ஆனால், இதனை நடைமுறைப்படுத்தும் தகுதி யாரிடம் உள்ளது என்பதே இங்கு தொக்கு நிற்கின்ற வினாவாக அமைந்திருக்கின்றது. பஞ்சபுராணம் என்ற ஒழுங்கிலும் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. ஈழத்தில் பிரபலமான தெல்லிப்பழைத் துர்க்கையம்மன் கோவிலில் தேவாரம், பெரியபுராணம், அபிராமி அந்தாதி ஆகிய மூன்று பாடல்களையே திராவிட பாராயணம் என்ற நிலையில் பாடும் வழக்கம் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி காலத்திலிருந்து உள்ளது. இவ்வாறான மீளாய்வுகள் மேலும் அலசி ஆராயப்பட வேண்டியனவாக உள்ளன.

**பண்ணிசைப் பயிலகங்கள் தேவை**

திருமுறைகள் பெருமை பெறுவதற்குப் பண்ணிசைப் பயில்நெறி வளர்க்கப்பட வேண்டும். பண்ணிசை பாடவல்லவர்களைக் கௌரவித்தல், பண்ணிசைப் போட்டிகளை நடாத்துதல், வகுப்புக்களை நடாத்துதல் போன்ற செயன்முறைகள் திருமுறைகள் வளர்வதற்கு ஆதரவாக அமையும்.

கோவில்களில் இசைத்தட்டுக்கள் மூலம் பக்திப் பாடல்களை ஒலிபரப்புவதற்குப் பதிலாகத் திருமுறைப் பாடல்களை ஒலிபரப்புவதும் சாலச் சிறந்தது.

**நிறைவுரை**

திருமுறைகள் நமக்கு அளிக்கப்பட்ட அரும்பெருஞ் செல்வங்களாகும். அவற்றை போற்றுவதும் பாதுகாப்பதும் நம்மவர் கடனன்றி வேறில்லை. கோவில்களின் கருவறை வரை செல்லத்தக்க திருமுறைகளை நம் உயிராகக் கருதிச் செயற்படுவோம்.

## சிவபெருமானிடத்து நந்திதேவர் வேண்டிய பதினாறு பேறுகள்


**திருச்சிற்றம்பலத்து உறையும் சிவக்கொழுந்தே**
**நின் பொன்னார் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம்!**

மறைகள் நிந்தனை சைவநிந்தனை பெறா மனமும்
தறுகண் ஐம்புலன்களுக்கு ஏவல் செய்யுறாச் சதுரும்
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோடு உறவும்
யாது நல்லன்பர் கேட்கினும் உதவும் இயல்பும்
மாதவத்தினர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுபதேச மெய் உறுதியும் அன்பர்
தீது செய்யினும் சிவச்செயல் எனக்கொளும் தெளிவும்
மனமும் வாக்கும் நின் அன்பால் ஒருப்படு செயலும்
கனவிலும் உனதன்பருக்கு அடிமையாம் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும்
தீமையாம் புறச் சமயங்கள் ஒழித்திடும் திறனும்
வாய்மையாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
ஏமுறும் பலதார நச்சிடா நன்னோன்பும்
தூய்மை நெஞ்சு யான் எனது எனும் செருக்குறாத் துறவும்
துறக்கமீது உறையினும் நரகிற் தோயினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பம் துய்க்கினும்
பிறைக்கொழுந்து அணிசடைப் பெருமை இவ்வரம்
மறுத்திடாது எனக்கு வணங்கல் வேண்டுமால்.

# Inner Fulfillment of Pilgrimage

Dr. Shan A Shanmugavadivel

In December 2010 a group of World Saiva Council members joined in a spiritual mission to North Sri Lanka. Yogananda Adikal, President of World Saiva Council and London Meikandar Adheenam and I arrived in Colombo by 10th of December. I took the train on the same evening to Vavuniya to attend a wedding. Adikal stayed in Colombo to receive the rest of the delegations arriving from India, and London. Devotion, service, family reunion and renewal of ties were all part of our travel.



Yogananda Adikal and other Saivite guests were invited for a commemorative Arumuganavalar's function by All Ceylon Hindu Congress and Elathu Thiruneri Tamil Manram on the 15th evening at Bambalapitiya Saraswathy Hall. Yogananda Adikal, Thavathiru Suntharamurthy Thambiran Swamikal of Thirupanandal Mutt and Murugu Ramalingam, Vice President, World Saiva Council (Chennai) spoke at the gathering.

In Vavuniya I had the opportunity of visiting the orphanages for boys and girls run by the Sivan Koyil at Koyil Kulam. I was very impressed by the noble work undertaken by the temple authorities. One early morning when I arrived at this temple for Thiruvembavai puja I was surprised to see the little boys and girls singing and participating actively.



On another morning my mother, sister who arrived from South Africa and few other family members drove to Thiruketheeswaram temple. It had been many years since I visited this historic temple. It took more than two hours to reach the temple due to bad roads and army check points on the way.

At the temple, inside roads, pavements and gardens were well-kept and we could sense the intensity of holiness of the place. After taking a dip in the holy Paalavi River we entered the temple and worshipped Ketheeswaranathar and Gowriammai. There was only a small crowd for the 12.00 noon puja. Then we joined the devotees for lunch at Thiruvasaga Madam. Lunch was served daily during Thiruvembavai festivity. People around the neighbourhood who have resettled also joined the almsgiving.

Leaving Colombo on the 16th morning Yogananda Adikal and team were in Vavuniya by afternoon for lunch at the Cultural Centre of Chinthamany Vinayagar Temple. At that time I also joined in. The Temple president and a few others welcomed the delegation and took them to the temple before the lunch. The Cultural and almsgiving centre was a large complex. We were told that the All Ceylon Hindu Congress gave a substantial amount towards the cost of the building. Having thanked the temple officials the journey continued on A9 to Jaffna. Driving on this route was very challenging due to poor road conditions with a lot of potholes, and with stretches completely eroded down.



During our stay in Jaffna we found accommodations at Sivapoomi Elders Home, Chulipuram. We also had our meals when we were there. We are very thankful to Mr. Aru Thirumurugan, president of the board of directors of this home. He is a great soul. He has a regular job as the Principal of Skandavarodaya College. He is a

devout Saivite serving God and downtrodden people. There are about sixty fortunate elder men & women who receive high quality care.



Most of the funding for this home comes from donors living abroad. Many of the residents were happy to interact with us and share their stories. I too seized the opportunity to gather them and educate on oral hygiene, brushing technique, dental care and nutrition. Driving by paddy fields and grooves of palmyra we used to arrive in the evenings at the Sivan Temple for the vizha. Soldiers carrying guns and standing on the road sides and speaking in Sinhalese made everyone depressed.

London Meikandar Adheenam celebrated its Silver Jubilee by collaborating with Karainagar Manivasagar Sabai in their annual Thiruvasaga Vizha at Elaththu Sithamparam Temple from Dec 17 – 21, last year.

His Holiness Suntharamurthy Thambiran Swamikal was the Guest of Honour on all five days. He spoke very eloquently on Saiva religion and related topics. There were several local speakers including members of Manivasagar Sabai. On the last day Sivasri Ravanasitha Arumugabaskara Kurukkal, chief priest, Sri Karmadchi Amman Temple, Germany also spoke. Yogananda Adikal, Mr. M. Ramalingam, Mr. T. Visuvalingam and I also spoke on different days. There were kids' pannisai, speeches and a few other children programs. Though we had a busy schedule we didn't miss the Casuarina beach and sea bath when we were there.



On the 22nd morning Lord Nadarajah and other deities were placed on their decorated colourful chariots and pulled around the temple by the devotees. There was a very large crowd for the 'Ther' festival in spite it was a rainy day. As penance devotees were carrying kavadi and few men rolled on the ground. Several nadaswarams and tavil drums were played. Lunch was served for all the attendees in two locations.

Next day in the morning we visited Nallur Kanthasamy temple near Jaffna city. We saw several Sinhala devotees inside the temple. We were there on time for the 10.00 o' clock service. They are building a huge kopuram on the south side of the temple.




Our second stop was Sivathondan Centre on KKS road, Jaffna. It was very tranquil and permeated with holiness. We sat down and meditated for few minutes in the upper floor hall. We purchased a few books at the Centre from Murale, a young devotee presently taking care of the Sivathondan Nilayam. We also paid homage to Yogaswami's Samathi at Colombuthuri. I could sense the holiness, & purity of the place. Sage Yogaswami was a guru to Tamil people in Sri Lanka for over fifty years. How many of us have taken the effort to grasp the mystical meaning of Swami's "Mahavakiams"?


On December 24th around 3.00pm we arrived at Thurkkai Amman Temple at Thellipallai. Major construction work was going on at the temple getting ready for Kumbabisekam. We were first taken inside the temple and a briefing was given on the construction work in the temple. Later we participated at a gathering of all kids and workers and volunteers of the orphanage. The president of the Temple complex, Mr. Aru Thirumurugan introduced us and thanked us for visiting them. After the recital of Abirami Anthathy we went

around the complex. We spoke to a girl who grew up there, now has graduated from the university and teaching other kids. They have erected a beautiful statue for late Sivathamil Selvi Thangammah Appakutti in the temple area for her service to the temple, orphanage children and Saivism in general.

From Thellipallai we reached a famous Murugan temple, Selvasannethy at Thondaimannaaru. Pujas are different from traditional Saivite temple in this place. After worshipping at the Selvasannethy we proceeded late in the evening to Vallipura Aalvaar Vishnu Temple in the southern part of Vadamaradchi. This is a big and beautiful temple with two ornated kopurams and surrounding madams in quiet and sandy environs largely untouched. The last leg of our program in the Northern Sri Lanka was on December 25th at Nallai Adheenam, Saiva monastery adjacent to Nallur Murugan and Sivan Temples. We conducted Thiruvasaga Muttothal from morning till early afternoon. It was followed by lunch for all participants and later in the afternoon kids' cultural programs. We thanked the Head of Nallai Adheenam, Srila Sri Somasundara Thesika Gnanasampantha Paramasariya Swamikal for arrangements of the day's events.



Around 4.00 o'clock in the evening we started our journey back to Colombo in our van. On our way we stayed for night at Arthi Sankarar Ashram at Manipuram, Vavuniya. The hospitality of the priest family at the Ashram was admirable. In the morning after the breakfast we left Vavuniya and reached a historically famous ancient temple at the west coast named Munnaswaram at Chilaw in Puttalam district. This area was inhabited by a large number of Tamils several years ago. This Sivan temple in considered to be the oldest of all the Eswarams in Sri Lanka. There were a very large number of devotees inside the temple; most of them were Sinhala devotees.




I spent two days in Colombo before returning to our adopted lands. Our Indian invitees left to Chennai on the next day morning. One evening, Yogananda Adikal, Mr. G. Jeyaraj, treasurer, W.S.C. (lives in London), and I visited the Swami at Ramakrishna Mission at Wellawatte.

Ramakrishna Mission is a worldwide spiritual movement that engages in relief and rehabilitation work. Swami Sarvarupananda spoke in length about the internally displaced Tamils. He has been visiting them regularly from the beginning providing them food, clothing and medical facilities. But he said the help they offered was only a drop in the ocean. I understand an estimate of US$ 225,000.00 has been spent by them for relief work. The needs are enormous! He remarked that he could notice in the recent time a little brightness on their faces and marvelled their resilience. He urged the public and agencies to offer them assistance to these people who are in desperate situation.

In closing, I would recommend all others, whether religious, social or professional groups to travel, stay, live and share with our people. We have a lot of things that we can offer to the needy. We looked at our pilgrimage as a cherished time, educative and with a feeling of fulfillment.

# DILANI GUNARAJAH



**Barrister & Solicitor**

**Languages: Tamil, Sinhala & English**

## Real Estate
**(Residental & Commercial - Purchase, Sale, Mortgages)**
வீடு, வர்த்தக நிலையம் வாங்குதல், விற்றல், அடைமானம் வைத்தல்

## Family Law
**(Divorce, Custody, Agreements, Support)**
குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிள்ளைகள் பராமரிப்பு

## Business Law
**(Purchase, Sale, Incorporation)**
வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான விடயங்கள்

## Estate Law
**(Continuing Power of Attorney for Property/Personal Care, Wills, Estate Administration)**
உயில் தத்துவப் பத்திரம் சம்பந்தமான விடயங்கள்

## Immigration Law
**(Sponsorship, Independent, Refugee, Appeal, Humanitarian & Compassionate Applications)**

**Tel: 416 755 7777**

**Fax: 416 288 8633**

**2401, Eglinton Ave. E. Suite # 210,**

Toronto, ON M1K 2N8

Email: dilani@bellnet.ca

# உலக முடிவு 2012 இலா?

குருவடி பணிந்து
மருத்துவ கலாநிதி இ. லம்போதரன்
www.knowingourroots.com

**"அப்பெரும் புவிக்குத் தானோர் ஆயிரம் கோடி அண்டம்"** என்று அன்றே கந்தபுராணம் எமது பூமி சார்பாகவே ஆயிரங்கோடி அண்டத் தொகுதிகளுக்கு மேல் உள்ளன என்று கூறியுள்ளது. இன்று அண்டவியல் விஞ்ஞானமும் இதையே உறுதி செய்துள்ளது. இந்த அண்டத்தொகுதிகள் பெரு நாத வெடிப்பின் (Cataclysmic explosion of Big Bang) ஊடாக வெடித்து இன்றும் விரிந்து கொண்டிருக்கின்றன என்று இன்றைய அண்டவியல் கூறுகின்றது. இதையே **"அண்டப்பகுதியின் உண்டைப் பிறக் கம், அளப்பருந்தன்மை வளப்பெருங் காட்சி, ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின், நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"** என்று மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் இவ்வாறு விரிவடைகின்ற அண்டத்தொகுதியின் காட்சியை விளக்குகின்றார். இந்த அண்டத்தொகுதி அதன் தோற்றத்தில் இருந்து இன்னமும் விரிவடைந்து கொண்டிருக்கின்றது என்ற உண்மை ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை விஞ்ஞானத்துக்கும் பிடிபடாமல் இருந்த ஒன்றாகும். இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞானியாகிய **ஸ்ரீவன் ஹோக்கிங்ஸ்** தமது ஆய்வுகளினூடாக இதை விளக்கும்வரை மாணிக்கவாசகரின் **"நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"** என்ற வரிகளுக்கான சரியான விளக்கம் யாராலும் தரப்படவில்லை.

இவ்வாறு விரிவடைகின்ற அண்டத்தொகுதிகள் யாவும் அவற்றின் உள்ளிட்ட சடக்கோளங்களின் பிடி அதிகரிக்க, அதிகரிக்க அவற்றின் விரிவாக்க விசை குறைந்து ஈற்றில் ஒடுங்கத் தொடங்கும். இவ்வாறு எல்லா அண்டத்தொகுதிகளும் கோடிக்கணக்கான ஆண்டுகளினூடாக நெருங்கிவந்து, ஈற்றில் எங்கிருந்து முன்னர் வெளிப்பட்டுத் தோற்றியதோ அதே கருஞ்சுழியுள் (Black hole) சென்று ஒடுங்குகின்றன. இதையே சிவஞான போதம் முதலாவது சூத்திரம் **"தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்"** என்று கூறியுள்ளது. இவ்வாறு உலகம் யாவும் ஒடுங்குவதையே மகாசங்காரம் அல்லது பேரூழிக்காலம் என்று சைவம் கூறும். இதன்போது இப்போது நாம் காணுகின்ற பௌதிக, இரசாயன, உயிரியல் விதிகள் மற்றும் செயற்பாடுகளின் இருமைத்தன்மையும் இல்லாமல் போய் ஒருமையிலே யாவும் ஒடுங்குகின்றன. இதையே பேரூழிக்காலத்தில் சத்தியும் சிவத்தில் ஒடுங்குவதாகச் சைவம் கூறுகின்றது. **"இறுதியாம் காலந்தன்னில் ஒருவனே இருவருந் தம் உறுதியில் நின்றார் என்னில் இறுதிதான் உண்டாகாதாம் அறுதியில் அரனே எல்லாம்"** என்று இதை **சிவஞானசித்தியார்** கூறுகின்றது.

இவ்வாறு ஒடுங்கிய அண்டத்தொகுதிகள் மீண்டும் பல்லாயிரக் கணக்கான வருடங்களின் பின்னர் அதே இடத்தில் இருந்து மீண்டும் இன்னொரு பெருநாத வெடிப்பினூடாக வெளிப்படும் என்று அண்டவியல் விஞ்ஞானம் இன்று கூறுகின்றது. இதையே ஒடுங்கிய இடத்தில் இருந்து மீண்டும் தோற்றும் என்று **"அந்தமே ஆதி என்மானார் புலவர்"** என்ற **சிவஞானபோதம்** முதலாம் சூத்திர வரிகள் கூறுகின்றன.

இந்தப் பேரண்டத் தொகுதியினுள்ளும் சிறு அண்டத்தொகுதிகள் இவ்வாறான சிறிய பெருநாத வெடிப்புகளினூடாக இன்னமும் தோன்றிக்கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறே சிறிய அண்டத்தொகுதிகள் கருஞ்சுழியில் ஒடுங்கி மறைந்துகொண்டே இருக்கின்றன என்று கூறும் இன்றைய அண்டவியல் இவற்றில் சிலவற்றை அவதானித்தும், பதிவு செய்தும் உள்ளது. கடவுள் என்றோ ஒரு நாள் உலகத்தையும் அதிலுள்ள உயிரினங்கள் மற்றும் பொருட்களையும் இன்றுள்ளவாறே படைத்துவிட்டு ஓய்ந்திருக்கின்றான் என்று சைவம் சொல்லுவதில்லை. கடவுள் சதாகாலமும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்ச கிருத்தியங்களையும் தொடர்ந்து ஆற்றிக்கொண்டிருப்பதாகச் சைவசித்தாந்தம் கூறுவது இன்றைய விஞ்ஞானத்தின் அண்டவியல் தோற்ற, இருப்பு, ஒடுக்கக் கொள்கைகளுடனும் முரண்பாடுகள் ஏதுமின்றி நன்கு ஒத்திசைகின்றது.

கருஞ்சுழியுள் மறைந்த உலகத்துக்கு அங்கு என்ன நடக்கின்றது? அங்கே அது என்ன வடிவத்தில் இருக்கின்றது? என்று விஞ்ஞானத்தால் அறிய முடியவில்லை. ஆயினும் அங்கு ஒன்றுமே இல்லாமல் சூனியமாகப் போவதில்லை. கருஞ்சுழியுள் ஒடுங்குகின்ற அண்டத்தொகுதி அங்கு தூலமாக வெளிப்படையாக இல்லாமல் சூட்சுமமாக மறைந்துள்ளது என்று இன்றைய விஞ்ஞானம் விளக்கம் கொடுக்கின்றது. இந்த உலகத்தொகுதிக்கு வித்தாகிய மாயை ஒரு சூட்சுமமான உள்பொருள் என்றும், அதிலிருந்து தோன்றும் தூலமான இந்த உலகத்தொகுதிகள் யாவும் மீண்டும் அந்த சூட்சுமத்திலேயே ஒடுங்கியிருந்து, மீண்டும் படைப்புக்காலத்தில்

தூலமாக வெளிப்படுகின்றன என்றும் சைவம் கூறுகின்றது. **“நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்திற்கோர் வித்தாய் உள்ள மாயை”** என்று **சிவஞானசித்தியார்** கூறுகின்றது. இதனாலேயே எந்த ஒரு சமயமும் கடவுளுக்குக் கூறாத **மறைத்தல்** என்ற தொழிலை கடவுளுக்கு வைத்துக் கண்டது சைவம்.

இவ்வாறு உலகங்களின் தோற்றம், இருப்பு, அவற்றின் ஒடுக்கம், மீண்டும் அவைகளின் தோற்றம், இவற்றின் கால எல்லைகள் பற்றிய உண்மைகள் யாவும் எமது சைவத்தின் அடிப்படை நூல்களான நான்கு வேதங்களிலும், இருபத்தெட்டு ஆகமங்களிலும், இருநூற்றேழு உப ஆகமங்களிலும், நூற்று எட்டு உபநிடதங்களிலும், பதினெட்டு புராணங்களிலும், மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களிலும், தேவார, திருவாசகங்கள் உள்ளிட்ட பன்னிரு தமிழ்த் திருமுறைகளிலும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களிலும், இவற்றின் வழிவந்த திருப்புகழ், தாயுமானார் பாடல்கள், பண்டார சாத்திரங்கள் போன்ற பல சார்பு மற்றும் வழி நூல்களிலும் மீண்டும் மீண்டும் காலம் காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றன. இவற்றின் சுருக்கத்தை **யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும்** தமது **நான்காவது பாலபாடத்திலே** மீண்டும் வழங்கியிருக்கிறார். இருந்தும் நாம் இவைகளையெல்லாம் பழமைவாதிகளின் நூல்கள் என்றும், மூட நம்பிக்கைகளின் திணிப்பு என்றும், காலத்துக்கு உதவாத - ஒவ்வாத கற்பனைக் குப்பைகள் என்றும், பௌராணிகர்களின் புழுகு மூட்டைகள் என்றும், ஆரியர்களின் திணிப்பு என்றும் பலவாறாகப் புறக்கணித்தும், இகழ்ந்தும், ஒதுக்கியும் வருவது எமது அறியாமையோ, அகந்தையோ அன்றேல் எமது இனத்தின் அழிவுக்கான அடையாளமோ யாம் அறியோம்.

ஆயினும் சமீபத்தில் வெளிவந்த **2012** என்ற ஆங்கிலத் திரைப்படத்தின் பின்னர் உலக அழிவைப்பற்றி மாயன் நாகரிகத்தில் இருந்த அவர்களின் காலக்கணிப்பின் படி உலகம் 2012இல் அழியும் என்ற கருத்து பரவலாக கதைக்கப்படுகின்றது. இக்காலத்தில் இன்றைய விஞ்ஞானமே வியக்கும் அளவுக்கு இவ்வளவு அண்டவியல் உண்மைகளைத் தன்னுள் அடக்கியுள்ள எமது சைவம் இந்த உலக முடிவைப்பற்றி என்ன சொல்லியுள்ளது என்று சுருக்கமாகப் பார்ப்போம்.

உலக முடிவைப் பிரளயம் என்று சைவம் சொல்லுகின்றது. இவ்வாறு ஐந்து வகையான பிரளயங்களைப் பற்றியும் அவற்றின் காலங்களைப் பற்றியும் சைவம் விளக்கமாகவும், துல்லியமாகவும், அச்சொட்டாகவும் சொல்லுகின்றது.

1. **நைமித்திக பிரளயம்**: இது ஒவ்வொரு மன்வந்தரத்தின் முடிவிலும் நிகழ்வது. தற்போது நடப்பது **வைவஸ்வத மன்வந்தரம்**. ஒவ்வொரு மன்வந்தரமும் எழுபத்தொரு சதுர்யுகங்கள் கொண்டது. இவற்றுள் இப்போது நடப்பது இருபத்தெட்டாவது சதுர்யுகம். சதுர் என்றால் நான்கு. ஒவ்வொரு சதுர் யுகத்திலும் நாற்பத்து மூன்று இலட்சத்து இருபதாயிரம் வருடங்கள் உள்ளன. ஒவ்வொரு சதுர்யுகமும் கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் கொண்டது. இப்போது நடப்பது வைவஸ்வத மன்வந்தரத்தின் இருபத்தெட்டாவது சதுர் யுகத்தில் நான்காவது யுகமான கலியுகம். இது நான்கு இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் வருடங்கள் கொண்டது. இந்தக் கலியுகம் மகாபாரத யுத்தம் முடிந்து கிருஷ்ண பரமாத்மா இவ்வுலக வாழ்வை நீத்த பின்னர் **கி.மு. 3101 பெப்ரவரி மாதம் பதினேழாம் திகதி** தொடங்கியது. ஆகவே கலியுகம் முடிய இன்னமும் நான்கு இலட்சத்து இருபத்தாறாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது வருடங்கள் உள்ளன. இந்த கலியுகம் முடியும் தறுவாயில் விஷ்ணுவின் **கல்கி அவதாரம்** நிகழும். அவர் விஷ்ணுயசிரயன் (விஷ்ணுயசஸ்) என்னும் அந்தணனுக்கு மகனாக சாம்பலம் என்ற கிராமத்தில் பிறப்பார். மீண்டும் தர்மத்தை நிலை நிறுத்துவார். ஆனால் உலக முடிவு வராது. இந்த கலியுகம் முடிய இருபத்தொன்பதாவது சதுர்யுகத்தின் முதலாவது யுகமான கிருத யுகம் மீண்டும் தொடங்கும். இதையே ரஷ்யப் புரட்சி பற்றிப் பாடும்போது பாரதி **“கிருத யுகம் எழுக மாதோ”** என்று பாடினான்.

இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக எழுபத்தொரு சதுர்யுகங்களும் கழிந்த பின்னர், ஒரு பிரளய அழிவு உண்டாகும். அது எமது பூலோகத்துக்கு மட்டும் நிகழ்வது. பூலோகம் என்பது பூமி மட்டும் அல்ல. எமது சூரிய குடும்பம் உள்ளிட்ட இரண்டாயிரம் மில்லியனுக்குக் மேற்பட்ட சூரிய குடும்பங்களை உடைய எமது ஆகாய கங்கை என்னும் பால்வீதியில் உள்ள அத்தனை அண்டத்தொகுதிகளும் இந்தப் பிரளயத்தில் அழியும். இதுவே நாம் வாழும் எமது உலகின் முடிவுக்காலமாகும். இவை யாவும் ஒரு கிருத யுக காலம் அதாவது பதினேழு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் வருடங்கள் நீருள் அமிழ்ந்திருக்கும். இந்தப்பிரளயம் எப்படி இருக்கும் என்று சிந்திப்பவர்கள் 2012 திரைப்படத்தைப் பார்த்தால் பிரளயம் என்பது எப்படி இருக்கும் என்று புரிந்துகொள்ளலாம்.

ஆனால் பிரளயம், வருகின்ற 2012 இல் நிகழாது. நான்கு இலட்சத்து இருபத்தாறாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது வருடங்களில் வரப்போகின்ற பிரளயத்தில் இந்தப் பூமி மட்டுமல்ல; நமது ஆகாய கங்கை என்னும் பால்வீதியில் உள்ள அத்தனை அண்டத்தொகுதிகளும் அழியும். அப்போது பூலோகம் தவிர்ந்த ஏனைய உலகத்தொகுதிகள் யாவும் வழமைபோல இயங்கிக்கொண்டிருக்கும். பிரளய கால முடிவில் மீண்டும் இந்த

உலகங்கள் பிரம்மாவினால் படைக்கப்படும்.

இவ்வாறான பிரளய காலம் ஒன்றில் நீருள் அமிழாது அக்காலத்தில் உயர்ந்து நின்ற சிகரம் ஒன்றுதான் **திருஞானசம்பந்தர்** அவதரித்த **சீர்காழி**. இதேமாதிரியாக 2012 திரைப்படத்தில் எமது இன்றைய உலகின் உயர்ந்த சிகரமான எவரெஸ்டு ஒரு சிறு குன்றாக தண்ணீருக்கு மேல் நிற்பதையும், அதன்போது ஆபிரிக்காவில் வேறொரு மலை உருவாகி அதுவே அப்போதைய உலகின் உயர்ந்த சிகரம் என்றும் திரைப்படம் சொல்வது ஒப்பிடத்தக்கது. அம்மையப்பராகிய இறைவர் பிரளய காலத்தில் பிரணவத்தைத் தோணியாக்கி, சீர்காழியில் சுற்றி வந்ததாக சைவம் கூறுகின்றது. இதனாலேயே சீர்காழிக்கு **தோணிபுரம்** என்று பெயர். இது திரைப்படத்தில் கப்பலில் இடம் பிடித்து தப்பிப்பிழைப்பவர்கள் குன்றாகக் குறுகிப்போய் நிற்கும் எவரெஸ்டை தமது கப்பலில் பார்வையிட்டுச் சுற்றி வருவதோடு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

**2. நித்திய பிரளயம்**: இது ஆயிரம் சதுர் யுகங்களுக்கு ஒருமுறை நிகழ்வது. இது ஒரு கல்ப காலம் ஆகும். இப்போது நடப்பது சுவேதவராக கல்பமாகும். முன்னைய கல்ப முடிவில் அமிழ்ந்திருந்த உலகத்தை விஷ்ணுவானவர் வெள்ளைப் பன்றி வடிவெடுத்து மேலே கொண்டு வந்ததால் இதற்கு இந்தப்பெயர். சுவேதம் என்றால் வெள்ளை. வராகம் என்றால் பன்றி. இது விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்று. நித்திய பிரளயத்தில் எமது பூலோகம் என்னும் பால்வீதியில் உள்ள அனைத்து அண்டத் தொகுதிகளுடன் அதற்கும் அப்பாலும் உள்ள புவர் லோகம், சுவர் லோகம் என்னும் அண்டத் தொகுதிகளும் அழியும். இந்த மூவுலங்களைச் சார்ந்த அண்டங்கள் யாவும் இந்த நித்திய பிரளயத்தின் பின்னர் ஆயிரம் சதுர் யுக காலம் நீரினுள் அமிழ்ந்திருக்கும். இது பிரம்மாவுக்கு இரவுக்காலமாகும். இக்காலத்தில் இந்த மூவுலகங்கள் தவிர்ந்த ஏனைய உலகங்கள் வழமைபோல இயங்கிக்கொண்டிருக்கும். இதன் பின்னர் பிரம்மாவினுடைய பகல் தொடங்க அவர் இம்மூவுலகங்களையும் முன்போலப் படைப்பார்.

**3. அவாந்தர பிரளயம்**: நாம் வசிக்கும் பூமி உள்ளிட்ட பால்வீதி அண்டத்தொகுதிகள் யாவும் பூ லோகம் என்று பார்த்தோம். இதற்கு மேல் **புவர் லோகம், சுவர் லோகம், மஹலோகம், ஜன லோகம், தப லோகம், சத்திய லோகம், விஷ்ணு லோகம், சிவலோகம்** என்று ஏழு புவனங்கள் உள்ளன. இதேபோல கீழாக **அதளம் முதல் பாதாளம்** ஈறாக ஏழு உலகத்தொகுதிகள் உள்ளன. இவற்றையே **"புவனம் பதினான்கையும் பூத்தவளே"** என்று **அபிராமி அந்தாதி**யும் **"நின் கிங்கிணி ஓசை பதினான்குலகமும் கேட்டதுவே"** என்று கந்தரலங்காரமும் கூறுவது இந்தப் பதினான்கு உலகத் தொகுதிகளையே. இவற்றுள் எமது அண்டவியல் விஞ்ஞான அறிவு ஆராய்ச்சிகளுக்கு உட்படுவது பூலோகம் என்னும் பால்வீதி அண்டத்தொகுதியாகும். இதன் படங்களைப் பார்த்தால் ஒரு பாய்ச்சுருள் போல் இருக்கும். இதையே பாய்ச்சுருளான அண்டத்தொகுதி என்று **பாகவத புராணம்** கூறுகின்றது. இந்தப் பதினான்கு உலகங்களுக்கும் அப்பால் இன்னமும் அண்டத்தொகுதிகள் உள்ளன. இவை அனைத்தையும் சேர்த்து ஆறு அண்டங்களை உள்ளடக்கிய **பிரம்மாண்டம்** என்று கூறுவர். இந்தப் பிரம்மாண்டத்துக்குள் ஆறு பெரும் அண்டத்தொகுதிகள் அடங்குகின்றன. மானுட சிந்தனைக்கும் கற்பனைக்கும் எட்டக்கூடிய அதிகூடிய அண்டப் பரிமாணம் இதுவே. இந்த ஆறு அண்டத் தொகுதிகளுக்கும் மேலாக திசை ஒவ்வொன்றுக்கும் பத்து பத்தாக எட்டு திக்கு, மற்றும் மேல் கீழ் ஆகிய பத்துத் திசைகளிலும் மொத்தமாக நூறு அண்டத்தொகுதிகள் உள்ளன. இவை எல்லாவற்றுக்கும் உச்சியில் பத்திரகாளி புவனமும், வீரபத்திர புவனமும் உள்ளன. ஆக மொத்தமாக நூற்றெட்டு புவனங்கள் இந்த நிவிருத்தி கலா புவனங்களாக உள்ளன. நாம் நூற்றெட்டு நாமங்கள் சொல்லி வழிபடுவது எமது அயல் புவனங்களான இந்த நூற்றெட்டு புவனங்களில் உள்ள அனைத்து உயிர்களின் ஷேமத்துக்காகவே.

இந்த நூற்றெட்டு புவனங்களுக்கும் அப்பாலும் பிரதிட்டாகலை புவனங்கள் என்று ஐம்பத்தாறு அண்டத்தொகுதிகள் உள்ளன. முன்னர் சொன்ன நூற்றெட்டு புவனங்களுடன் இந்த ஐம்பத்தாறு புவனங்களுமாக உள்ள நூற்று அறுபத்து நான்கு புவனங்களும், அவற்றைப் படைத்துக் காத்து அழிக்கும் திரிமூர்த்திகளாகிய பிரம்ம, விஷ்ணு, உருத்திரர்களும், பல்லாயிரம் கோடி வருடங்களினூடாக இவற்றுக்கு அப்பாற்பட்டுள்ள வித்தியா தத்துவ புவனங்களில் வதியும் **சிறீகண்ட ருத்திரரிடம்** ஒடுங்குவது அவாந்தரப் பிரளயம் ஆகும். இங்கு கூறப்படுகின்ற பிரம்ம, விஷ்ணு, உருத்திரர்கள் இவ்வுலகங்களில் உள்ள மற்றைய உயிர்களைப்போல முக்குண தோஷங்களுக்கு உட்பட்டவர்களே. இவர்களை குணிப் பிரம்மா, குணி விஷ்ணு, குணி உருத்திரன் என்று சைவம் கூறுகின்றது. இவர்கள் பிறப்பு, இறப்புகளுக்கு அப்பாற்பட்ட இறையின் பரப்பிரம்மா. மகாவிஷ்ணு, பரமசிவன் ஆகிய தோற்றங்களில் இருந்து வேறுபட்டு நிற்பவர்கள். எப்பொழுதும் பர மற்றும் மகா என்னும் சிறப்புப். பதங்கள் ஒப்புயர்வற்ற ஒன்றேயான ஒரே இறையைக் குறிக்கும் பதங்களாம்.

**4. மத்திம பிரளயம்**: சிறீகண்ட உருத்திரரும் அவர் உள்ளிட்ட ஏனைய உயிர்களும் வதியும் குணதத்துவ புவனம் உள்ளிட்ட இருபத்தேழு வித்தியா தத்துவ புவனங்களும் பல்லாயிரக் கணக்கான கோடி வருடங்களினூடாக சுத்த வித்தியா தத்துவ புவனங்களில் வதியும் அனந்தேசுவரர் என்னும் சிவனிடம் ஒடுங்குகின்றன. இது மத்திம

பிரளயமாகும்.

**5. மகா பிரளயம் அல்லது மகா சங்காரம்:** மேற் சொன்ன அனந்தேசுவரர் உள்ளிட்ட உயிர்கள் வதியும் முப்பத்து மூன்று சுத்த வித்தை புவனங்களையும் ஒடுக்குவது, இந்த புவனங்களுக்கும் தத்துவங்களுக்கும் அப்பாலாய் நிற்கும் பரப்பிரம்மமாகிய பரமசிவன் ஆவார். இது **மகாப் பிரளயம்** அல்லது **பேருழிக்காலம்** எனப்படும். இவர் சக்தியே **பராசக்தி**. இவரது நவந்தரு பேதமென்னும் ஒன்பது வடிவங்களில் ஒரு பேதமே **மகாவிஷ்ணு**. இந்த மகாசிவனே **பஞ்ச கிருத்தியம்** என்னும் **படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்** தொழில்களுக்குரிய **சதாசிவர்.** இவரே **சத் சித் ஆனந்த சொருபி**யாகிய நடன சிவன் என்னும் **நடராசர்.** இவரது திருமேனியே சிவலிங்கத் திருமேனி ஆகும். **ஓம் ஸ்ரீ தத்துவாசனாயை நமஹா** என்று **ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம்** கூறுவது இவ்வாறு 228 அண்டத் தொகுதிகளுக்கும் மூலமான முப்பத்தாறு தத்துவங்களையும் ஆசனமாக அல்லது தளமாகக்கொண்டு இருக்கும் பராசத்தியையே. இந்த தத்துவ உலகங்களுக்கு அப்பாற்றபட்ட **மகா கைலாசம்** இங்கு உள்ளது. அந்த மகா கைலாசத்தில் நிலைகொண்டுள்ள சக்தியையே **மஹாகைலாச நிலயாயை நமஹா** என்று **ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம்** கூறுகின்றது. அம்மையப்பராகிய இறை அமரும் கைலாசம் இதுவே. நமது பூலோக கைலாசம் இதன் ஒரு சின்னமே ஆகும். இங்கு கூறப்பட்ட 224 அண்டத்தொகுதிகளும் எமது புவி சார்ந்த கோடிக்கணக்கான அண்டத்தொகுதிகளில் ஒன்றினது விவரணமேயாகும்.


இவ்வளவு காலமும் இறையின் பஞ்ச கிருத்தியங்களுக்கு காரணமாக இருந்த சக்தியும் மகாசங்காரத்தின் முடிவில் சிவத்தில் ஒடுங்கும். அப்போது உலகின் இருமை வயப்பட்ட உந்தல்கள் எல்லாம் ஒடுங்கி ஒன்றாகும். இதையே அண்டவியல் விஞ்ஞானம் **ஒருமைப்புள்ளி (point of singularity)** என்று கூறுகின்றது. இதுவே **ஸ்ரீ சக்கரத்தின்** முப்பரிமாணமாக அமைந்துள்ள **மகாமேருச் சக்கரத்தின்** உச்சியில் உள்ள முக்கோண வடிவத்தின் மேல் உள்ள புள்ளியாகிய பிந்து. நவ ஆவரணங்களாகவுள்ள **மகாமேருச்சக்கரம்** இவ்வாறு பல்வேறு படிநிலைகளில் உள்ள அண்டத்தொகுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக, ஒழுங்கு முறையில், ஒன்றில் ஒன்று ஒடுங்கி, ஈற்றில் யாவும் சக்தியில் ஒடுங்க, அறுதியாக சக்தியும் சிவத்தில் ஒடுங்குவதைக் காட்டும் இயந்திர வடிவமாகும். சிவலிங்கத்தில் உள்ள ஆவுடையார் இந்த **மகாமேருச்சக்கரத்தின்** முக்கோண வடிவு குறிக்கும் பராசக்தியே. இந்த ஆவுடையாரை ஊடறுத்து நிற்கும் லிங்கம் மகாமேருச்சக்கரத்தின் உச்சிப் புள்ளியான பிந்து ஆகும். சில சக்கர வடிவங்களில் இந்தப்புள்ளி நீட்டமாக இலிங்க வடிவிலேயே அமைந்திருப்பதைக் காணலாம். இது ஈற்றில் சக்தியும் சிவத்தில் ஒடுங்குவதைக் குறிக்கின்றது.

சக்தியை முழுமுதற் கடவுளாகக்கொள்ளும் சாக்த சம்பிரதாயத்தில், சிவமும் சக்தியில் ஒடுங்க ஈற்றில் சக்தியே நிலை பெற்றிருப்பதாகச் சொல்வார்கள். அவர்கள் மகாமேருச்சக்கரத்தின் முக்கோணத்தை சிவம் என்றும், அதன் மேல் உள்ள புள்ளியை சக்தி என்றும் கொள்வர். இது சிவனின் உடலின் மேல் அமர்ந்திருக்கும் சக்தியின் திருவுருவப் படங்களுக்கு ஒப்பானது. ஆயினும் இம்முறையில் சிவலிங்க வடிவில் உள்ள ஆவுடையாருக்கும், இலிங்கத்துக்கும் விளக்கம் தர முடிவதில்லை. சைவம் ஒன்றேதான், தான் உள்ளிட்ட கடந்த கால, நிகழ்கால, எதிர்கால மதங்கள், அவற்றின் கொள்கைகள், வடிவங்கள் யாவற்றையும் உள்ளடக்கக்கூடியதாகவும், விளக்கும் தன்மையதாகவும் அமைந்து, இவை எல்லாவற்றுக்கும் அப்பாலானதாய், இராஜாங்கத்து அமர்ந்து விளங்குகின்றது. சைவம் விளங்கினால் எல்லா சமயங்களும் விளங்கும். **"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்."**

இறுதியாங் காலந் தன்னில் ஒருவனே இருவ ருந்தம்
உறுதியின் நின்றா ரென்னின் இறுதிதான் உண்டாகாதாம்
அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் அவனால் இன்னும்
பெறதும்நாம் ஆக்க நோக்கம் பேரதி கரணத்தாலே

-சிவஞானசித்தியார் பாடல் 55

At the moment of the final dissolution of the universe there is only One,
If both of them are firm in their existence, then there wouldn't be an End, At last everything is Haran, as He is everlasting after dissolving all;
We get everything back with His great operations (of creation, sustenance, dissolution, obscuration and Bestowing grace). - ***Siva Jnana Siddhiyaar Song -55***



* சத்தியப் பத்திரம் தயாரித்திட

* ஸ்பொன்சர் படிவங்கள் நிரப்பிட

* பிரதிகள் அத்தாட்சிப்படுத்திட

# கனக மனோகரன்

## KANAHA MANOHARAN

(Lawyer - Sri Lanka)
(Commissioner - Canada)
சட்டத்தரணி (இலங்கை)
சத்தியப் பிரமாண ஆணையாளர் (கனடா)
Legal Assistant of John M.Guoba (Barrister & Solicitor)

**Tel: (416) 531 1650   Fax: 416 531 3466**

email: kanahamanoharan@gmail.com

**மாகாண குற்றவியல் மன்றுகளில் தோற்ற அங்கீகாரம் பெற்றவர்**

*அகதி வழக்குகள், வீடு வாங்குதல் விற்றல்
*குற்றவியல் வழக்குகள்
*உரிமையியல் பணமோசடி வழக்குகள்
*துரித விவாகரத்து, ஸ்பொன்சர் மேன்முறையீடுகள்

**ஆகிய பன்முகப்பட்ட துறைகளில் அனுபவம் நிறைந்த**
**முன்னணி சட்டத்தரணிகளின் சட்ட உதவியாளர்**

இரு இடங்களில் பணிமனை
ஏழு தினங்களிலும் வேலை - கூடியநேர சேவை

Kennedy/Eglinton & 14th Avenue/9th Line
**720 Kennedy Road (# 311), Toronto, Ontario M1K 2B7**

# Siddhanta Concept of Karma in Thirukkural

Siddhantaratnam Dr K. Ganesalingam
Adheenappulavar, London Meykandar Adheenam

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு'. – (Kural. 5)

***'Irulser iruvinaiyum sera iraivan
Porulser pukazhpurinthaar maaddu'.***

***'Twin deeds associated with darkness will not affect those who act in the glorious way of God'.***

Thiruvalluvar calls the results of good and evil deeds as 'twin deeds associated or afflicted with *irul* (darkness)'. The words '*vinai*' or '*karma*' denotes deed or action. In philosophical language they also denote the fruits of action.

The word '*irul*' is used in Thirukkural with different meanings, such as ignorance, confusion, fault, sorrow etc. The devotional and philosophical texts which came later also use this word with the same meanings.

**Explanatory Comments**

Parimelazhakar, the great commentator of Thirukkural, finds the meaning of *irul* as confusion. His explanation is as follows;

'*Those who desire the true glory of God would not be afflicted by the twin deeds, good and evil deeds, which come in association with confusion*'.

Other commentataors like Manakkudavar, Kalingar, Thamaththar, Nachchar, and Tharumar have written their commentaries giving the meaning of the word '*irul*' as ignorance. Scholars like Thiru Vi. Ka and Dr. Mu. Va. of recent times have also commented with the same meaning.

However some scholars of the Tamil land and the West have found different meanings. A scholar Veeraragavan finds the meaning of '*iruvinai*'as 'great sin' and writes of great sins arising from ignorance. Thevaneyappavanar writes as 'deed performed knowingly or unknowingly'. Mylai Sivamuththu writes as 'evil deeds performed in the previous birth and this birth'. Western scholar Ellis finds the meaning as 'false ideas of right and wrong'. The scholar Beschi explains as 'false understanding of bringing evil works mixed with good'. Such views do not give proper explanations to the said kural. They appear to be written without proper understanding of the contents of the kural.

Whether the meaning of '*irul*' is taken as ignorance or confusion or anything else, it is clear from the kural that the two fold deed comes in association with another entity which is faulty or of adverse quality. What is the nature of this entity? What is the reason for its association? Saiva Sidhanta provides the answers.

**Maya Creating Confusion**

Vinai or karma cannot be done by itself. It requires other things to do. The physical body, internal instruments of the doer, a place to do, things required to do and experience the deed etc., are required. These are called respectively as *dhanu, karana, bhuvana, boga* in the school of philosophy. According to Saiva Siddhanta they are produced and given from *mayai* by God. (Maya in Saiva Siddhanta is different from that in Vedanta). Hence the association of *mayai* is required for *vinai* or *karma*.

*Anavam*, *karma* and *mayai* are called triple *malams*. *Malam* means impurity or fault. The three malams form the fault of soul and bind it. Because they bind the soul, they are known as *pasam*, meaning bondage. In Tamil it is called *thalai* which again means bondage. *Pasam, kaddu, thalai* and *kayiru* are words of the same meaning. Soul, which is under bondage of *pasam,* is called *pasu*. The three entities of ***Pathi*** or God, ***pasu*** or soul, and ***pasam*** or thalai are, according Saiva Siddhanta, eternal. This is illustrated by the following verse of Kanthapuranam:

'சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றுள
ஆன்றதோர் தொல்பதி ஆரு யிர்த்தொகை
வான்றிகழ் தளை யென வகுப்பர் அன்னவே'.

Its meaning is as follows:

'***There are three entities deserved to be analysed by noble men. They are mentioned in all books of knowledge. They are classified as Pathi the eternal Reality, innumerable Souls and Thalai of much significance'.***

Like verdigris on copper, anavam binds the soul from time immemorial and forms its natural defect. Because of it, anavam is called *sahaya malam* (natural impurity). By obscuring the soul's capabilities of knowing, desiring and acting (*gnanam, ichai* and *kiriyai*) it makes the soul small. It reduces its nature of *viyapakam* (all pervading nature) and makes it small like an atom (*anu*). This is a reason for calling the soul as *anma*.

By his infinite love, God creates *dhanu, karana, bhuvana* and *boga* from *mayai* and provides to the soul for it to gain experience. On receiving them (the body and other equipments) the soul acts with their help, gains experience and through it knowledge. The knowledge thus obtained is similar to knowing with the help of a lantern in dense darkness. Gaining knowledge is thus made possible by mayai. By the knowledge obtained with the help of mayai, grip of anavam get reduced to some extent. However this knowledge is not a perfect knowledge. It is like the vision in the dark received by the dim light of a lantern. It is defective and often creates confusion causing to mistake an object for another. Because of it, the Saiva Siddhanta book Sivagnanasiddhiyar says, 'mayai also creates confusion' ('*mayai mayakkamum seyyumanre*').

The twin deeds (*iruvinai*) come to experience in connection with the products of mayai. As mayai which creates confusion is associated with these deeds, the meaning of '*irul*' as '*mayakkam*' (confusion) given by Parimelazhakar appears to be appropriate and correct.

Parimelazhakar who finds the meaning of 'irul' as confusion, in another couplet give the meaning of the word '*marul*' also as confusion.

'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளாணா மாணாப் பிறப்பு'. – (Kural 351)

***'Porulalla vatrai porulen runarum
Marulaanaa maanaap pirappu'.***

**'Inglorious births are seen by the confusion of considering those things to be real which are not real'**.

In his commentary he finds the meaning of '*marul*' as '*vipareetha unarvu*' ('misleading realisation') and explains that *vipareetha unarvu, mayakkam* (confusion), *avichai* and *marul* are words with the same meaning.

Birth is soul obtaining a physical body which is the product of mayai. As shown in this couplet and the earlier one, Parimelazhakar explains that objects born from mayai create confusion. It is to be noted that this is also a Saiva Siddhanta related explanation.

**Ignorance is Anavam**

Comparing anavam to darkness and considering it as source of ignorance is seen in the Siddhanta tradition. Thiruvarutpayan raises the question, 'if there is no darkness, why should there be sorrow?' ('*irul inrel thunpen?*'), and explains that the basic reason for the sorrow of souls is the darkness of anavam. The book Unmai Vilakkam explains stating, 'ignorance is anavam' ('*ariyaamai anavam*').

Soul which joined the body is performing deeds. The results of good and evil deeds form impressions of *punniyam* and *paavam* on *budhi tatva* and move with the soul to a new birth. By the grace of God, they come to experience of the soul at a particular time (*kalam*) and particular destined condition (*niyathi*) and the karmic results become exhausted. However for them to come to experience new deed or karma has to be done. For the results of this new karma to come to experience another birth has to be taken. Thus births are extending like the great sea and the soul with body struggles to swim through it. Soul can only swim through when it attains God's grace. Thiruvalluvar describes it as follows:

> பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவனடி சேரா தவர்.
>
> ***'piravip perungkadal neenthuvar neenthar***
> ***Iraivanadi seraatha var'***
>
> **'Except for those who are united to the feet of God, others cannot swim the great sea of births'.**

As explained, by performing deeds or karma, happy and sorrowful experiences emerge. By these experiences the soul gains knowledge, and ignorance diminishes to some extent, and the grip of anavam also get loosened. This process continues in every birth and ultimately soul is freed completely from the grip of anavam. When this happens, there will be no necessity for karma or vinai to exist, because anavam is the cause for the existence of karma. The Thirukkuraal phrase '*irul ser iruvinai*' ('twin deeds associated with darkness') explains this Siddhanta truth. Even the Thirukkural commentaries which find the meaning of 'irul' as 'ignorance' also reflect this view.

A question arises here. Evil deed may be caused by the association of anavam. But can this apply to good deed? When doing anything, it is human nature to think 'I am doing it' or 'it is my deed'. Here the arrogance and vanity of 'I'-ness and 'My'-ness exhibit as products of anavam and mix with the good deed. Hence even the good deed becomes a bondage to the doer, associated with anava malam. Because of this, Saiva Siddhanta compares good deed to a gold chain and evil deed to an iron caing.

As seen above, both good and evil karma, the twin deeds, help in removing the darkness of anavam. When the darkness of anavam dissipates, there will be no necessity for these karmas. The twin karma exists only in combination with anavam. Thiruvalluvar establishes this Siddhanta concept by stating '*irul ser iruvinai*' in the said kural.

# சாமியறை, சமையலறை, சயன அறை

புலவர் ஈழத்துச் சிவானந்தன்
நிறுவனர், ஆதி அருள்நெறி மன்றம், கனடா

தமிழர்களுடைய வீடுகளில் மூன்று அறைகள் முக்கியமாக அமைக்கப்படும். ஒன்று சாமியறை — வழிபாடு, வணக்கம் செலுத்துவதற்காக. இரண்டாவது சமையல் அறை — உணவு தயாரித்து உண்பதற்காக. மூன்றாவது சயன அறை என்னும் படுக்கை அறை. இந்த மூன்று அறைகளிலிருந்தும் புறப்படும் வீச்சு "vibration' அலைகள் அந்த வீட்டின் அமைதியான, ஆறுதலான திருப்திகரமான ஆரோக்கிய வாழ்க்கைக்கு வழிகோலுகிறது.

வழிபடும் சாமியறையில் கடவுளை வேண்டுதல் செய்வது வாழ்க்கை வழிகளில் துணைநின்றும், வழிகாட்டியும் அருளுவதற்காக. இந்த நிகழ்வில் மனத்தெளிவும் உறுதியும் உண்டாகும். தமக்குத் தோன்றாத் துணையாகவும், தோன்றும் துணையாகவும் இருக்க இறைவனை நம்பிக்கையோடு மனப்பூர்வமாகக் கேட்கும் உரிமை இந்த அறையிலேயே வேண்டுதலாக எழுகின்றது.

இறைவனான சிவன் நமக்கு உரிமைப் பொருள். நாம் இறைவனுக்கு உடமைப் பொருள். "எனை உடையாய் எம்பெருமான்" என்கின்றது திருவாசகம். "நீ எனது உரிமை" என்றும் கூறுவார் மாணிக்கவாசகர். தாயிடத்திலும், தந்தையிடத்திலும் பிள்ளை உரிமையோடு தனக்குத் தேவையானதைக் கேட்கும். பிள்ளைகள் தேவைகளை நிறைவேற்ற வேண்டியது பெற்றோரின் கடமை. "வேண்டப்படுவது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ" என்பதும் திருமுறையே.

பூசையில் அகப்பூசை, புறப்பூசை என இரண்டு வகை உண்டு. அகம் - மனம். புறம் - உடம்பு. மனத்தால் செய்வது தியானம் - தித்திப்பு. உடம்பால் செய்வது ஞானச்செயல்கள். இவை தொண்டு, உதவி முதலியன. அகப் பூசை வீட்டு வழிபாடு என்றும், புறப்பூசை ஆலய வழிபாடு என்றும் கொள்ளப்படும். திருக்கோவில்களில் பூசைசெய்யும் பிராமணர்கள் முதலிலே தமது வீட்டில் இருந்து ஆத்மார்த்த பூசை (அகம்) செய்யவேண்டுமென்றும், பின்பு அவர்கள் கோயிலுக்குச் சென்று பரார்த்த பூசை (புறம்) செய்யவேண்டுமென்றும் விதி இருக்கிறது. பரார்த்த பூசை என்பது பிறருக்குக்காகச் செய்வது. ஆத்மார்த்த பூசையில் பிறருக்காகப் பூசைசெய்யத் தன்னைச் சாந்தப்படுத்திப் புனிதப்படுத்துவது குறிக்கோளாகும். வீட்டில் செய்யும் பூசை அறை வழிபாட்டால் அந்த வீடு புனிதம் அடையும். வீட்டைச் சுற்றியுள்ள அசுத்த அலைகள், ஆவிகள் அனைத்தும் அகன்றுவிடும். வீட்டில் உள்ளோருக்கும் வீட்டிற்கு வருகிறவர்களுக்கும் சாமியறை வழிபாடு பலன்செய்யும். "குடிமுழுதும் ஆண்டு வாழ்வற வாழ்வித்த மருந்தே" என்கிறது திருவாசகம்.

சாமியறையில் மனம் அமைதியாகி ஆறுதலடைகிறது. வாழ்க்கை நீரோட்டத்தில் கலங்காது குழம்பாது, சோராது செல்வதற்கு சாமியறை வழிபாடு உதவுகிறது. இதுபோலவே, சமையலறையும் மனிதர்களுக்கு உதவுகிறது. சமையலறையால் வயிறு குளிர்கிறது. ஆறுதலடைகிறது. மனமும் கொதிக்கக்கூடாது; வயிறும் கொதிக்கக்கூடாது. மனக் கொதிப்பை சாமியறையும் வயிற்றுக் கொதிப்பை சமையலறையும் நீக்குகின்றன.

மனம் அமைதியடைந்து ஆரோக்கியமாக இருப்பதற்கு உடம்பின் ஆரோக்கியமும் உதவுகிறது. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்கிறார் திருமந்திரம் தந்த திருமூலர். உடம்பை வளர்க்க உணவு தேவை. உணவுக்குச் சமையலறை தேவை. சாமியறையில் கும்பிட்டுவிட்டு பின்பு குழம்புவதும் குழப்புவதும் கூடாது. இது தெளிவற்ற வழிபாடாகும். வழிபாடு வழிப்படுத்தாது போனால் வழுக்கிவிழ வேண்டிவரும். வழியில் வழுக்கலில் ஏன் சறுக்கி விழுகிறோம். கவனிப்பு அவதானம் இல்லாததால் வழுக்கலில் கால்வைத்து வழுக்கி விழுகிறோம். வழிபாட்டின் பயனும் பேறும் வாழ்க்கை நடைமுறைகளிலும் இருக்கவேண்டும். கடவுளுக்கு விருப்பமில்லாத காரியங்களை விலக்க வேண்டும். விட வேண்டும். விலக்காதுபோனால் வழுக்கல்தான்.

வழிபாட்டிற்குப் பின்பு அன்பு இருக்க வேண்டும். வன்பு இருக்கக்கூடாது. வன்பு என்பது கொடுமையாகும். வன்செயல் வன்முறை என்பதெல்லாம் கொடுமையின்பாற்பட்டடது. பிறரை இன்பப் படுத்துவது அன்பு. பிறரைத் துன்பப்படுத்துவது வன்பு. இன்று உலகெங்கும் வன்பும் வன்செயல்களும் பெருகிவிட்டன. நீதி நியாயத்திற்கு இடமில்லையோ என்கிற சந்தேகம் எழுகிறது. படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்ற பழமொழி ஏன் தோன்றியது. வழிபாடு செய்பவர்களும் வன்முறைகளில் ஈடுபட்டதால் தோன்றியது.

சமையலறைச் சாப்பாட்டால் உடம்பை வளர்த்தல் என்பது உடம்பின் உறுப்புகளை ஆரோக்கியமாய் வைத்திருத்தல் ஆகும். பசியே பல நோய்களுக்கும் தொல்லைகளுக்கும் காரணம். பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்பார்கள். அந்தப் பத்தில் மானம், கல்வி, அறிவுடமை, தானம், முயற்சி என்னும் ஐந்தும் அடிப்படையும் ஆதாரமானவையுமாகும். கோபப்படுபவர்களையும் குழம்புகிறவர்களையும் பார்த்து "நீ இன்னும் சாப்பிடவில்லையா?" என்று கேட்கும் வழக்கம் நம்மிடையே உண்டு. சாப்பாடு உடம்பைச் சமப்படுத்தும். பறந்து போன பத்தையும் திரும்பிப் பறந்து வரவைக்கும். ஆறுதல்படுத்தும். சாப்பாட்டிற்குப் பின் குழம்பினால் சாமி கும்பிட்டாயா, வழிபாடு செய்தாயா என்று கேட்கும் வழக்கம் இல்லையே. "திருப்பெருந்துறை உறை சிவனே! ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்று இல்லை; யார் உன்னை அறியகிற்பாரே?" என்றும் "மனத்திடை மன்னிய மன்னே" எனவும் வழிபாட்டினை அருட்டிவிடுகிறது திருவாசகம்.

சமைத்த சாப்பாடு இருக்க சாப்பிடாமல் பசியோடு இருப்பது ஆத்ம துரோகம். ஆன்மாவுக்குச் செய்கின்ற பாவம். பிறரைச் சாப்பிடாமல் செய்யும் வஞ்சகம் பஞ்சமா பாதகத்திலும் மேலான பெரும் பாதகம். சிலர் சாப்பாட்டைக் கோபித்துக்கொண்டு தூக்கி எறிவார்கள். கோபித்துக்கொண்டு சாப்பிடாமல் படுப்பார்கள். இது கடவுளின் கருணையை உதாசீனம் செய்யும் செயலாகும். உலகத்தில் எத்தனை உயிர்கள் சாப்பாடு கிடைக்காமல்

வருந்துகின்றன! பலர் சாப்பாடு இருந்தும், இருந்து சாப்பிட நேரம் இல்லாமலும், சாப்பாட்டினை வைத்துச்சாப்பிட இடமில்லாமலும் அவதிப்படுகிறார்கள். எண்ணிப் பாருங்கள்! எண்ணிப் பாருங்கள்! ஒரு கணமேனும் எண்ணிப் பாருங்கள்! சாப்பாடு இருந்தும் நேரம் இருந்தும் இடம், பொருள், ஏவல் இருந்தும் அவற்றை உதாசீனம் செய்பவர்கள் சாமியறையையும், பயன்படுத்தாத சமையலறையையும் அனுபவிக்காத அறிவீனர்கள். இவர்கள் சயன அறையான படுக்கை அறைக்கும் தகுதியற்றவர்கள்.

சயன அறை உடம்பைக் கிடத்தும் அறை. வளர்த்தும் அறை. உளத்திற்கும், உடலுக்கும் ஆறுதலையும், ஆரோக்கியத்தையும் வழங்கும் அறை நித்திரையை சர்வரோக நிவாரணி என்று சொல்லலாம். சகல நோய்களையும் தீர்க்கும் மருந்து. நித்திரைக்குச் சாமி அறை வழிபாடும் சமையலறைச் சாப்பாடும் உதவுகின்றன. மனித வாழ்க்கைக்கு வேண்டிய மூன்று முக்கிய தேவைகளையும் நிறைவு செய்யும் அறைகளையே நம்மவர்கள் வீடுகளில் அமைத்தார்கள்.

மனித வாழ்க்கையைச் சீராக்கவும் செழுமைப்படுத்தவும் இந்த மூன்று அறைகளும் பயன்படுகின்றன. இவற்றை முறையாகப் பயன்படுத்துவோர் வாழ்கிறார்கள். வாழ வைக்கிறார்கள். மற்றையோர்...? வாழ்தல் வேறு. வசித்தல் வேறு. மனிதர்கள் வீட்டில் வாழ்வார்கள். மிருகங்கள் காட்டில் வசிக்கும் என்று சின்ன வகுப்பில் உயர்திணை, அஃறிணை படித்தபோது சொல்லித் தந்த பாடபாடம் நினைவுக்கு வந்தால் போதும். வீடு வாழ்வதற்கே; வசித்தலுக்கல்ல. மனிதனுக்கு மிருக உணர்வுகள் இருப்பதாக மனோதத்துவ ஆய்வாளர்கள் கூறுவார்கள். மிருக உணர்வுகளே வீட்டைக் காடாக்கி வாழ்தலைச் சிக்கவைக்கிறது. இதனாலேயே சாமியறைகளும் சமையலறைகளும் சயன அறைகளும் தோன்றின. நேற்றச் சாப்பாடு சரியில்லை, நித்திரை சரியில்லை என்று சொல்லுவது போன்று நேற்றுச் சாமி கும்பிடவில்லையே என்று நினைத்து அதனைச் செயல்படுத்துவது குறையக்கூடாது.

இக்காலச் சூழ்நிலைகள் சரியாக அமையாத நேரங்களில் சமயத்திற்கு உசிதமான வழிகளில் மூன்று அறைகளின் காரியங்களையும் கவனிக்கலாம். சமயோசிதம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஒருவர் வழிபடுவதைக் குழப்புவது பாவம். ஒருவர் சாப்பிடுவதைக் குழப்புவது பாவம். ஒருவர் நித்திரை செய்வதைக் குழப்புவதும் பாவம். இவற்றைத் தெரிந்து செய்பவர்களும், தெரியாமல் செய்பவர்களும் உளர். இவர்களுக்கு அறிவுரை கூறுவது ஆன்மீகக் கடமை. கடவுளைக் கும்பிடுவது அவருக்காக அல்ல; நமக்காக. சாப்பிடுவதும் நமக்காக. நித்திரை கொள்வதும் நமக்காகவே. இதுதான் சுயநலம் என்பது. இச்சுயநலத்தைப் பேணினால் பொதுநலத்திற்கு உதவலாம்; ஒத்துழைக்கலாம். நாம் ஆறுதலாகி, அமைதியாகி, பிறருக்கு ஆறுதலையும் அமைதியையும் கொடுப்பதற்காகவே மூன்று அறைகளின் முறைமைகளும் வகுக்கப்பட்டன. இல்லறம் என்பது இந்த மூன்று அலைவரிசையை வைத்தே இசைவு ஆகிறது; இசையாகிறது; சங்கீதம் ஆகிறது. சம்சாரம் சங்கீதமே என்ற பாட்டு இதை ஒட்டியே எழுந்தது.

மாணிக்கவாசகர் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டவர். இல்லற ஞானியாக இருந்ததாலேயே அவருக்கு துறவற ஞானம் சித்தித்தது. இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வம் இம்மண் புகுந்து அருள்செய்யும். மாணிக்கவாசகர் வெளிப்படையானவர். எதையும் மறைக்காத திறந்த மனம் அவருடையது. திறந்த மனத்தினருடைய கருத்துக்களே பிறர் மனத்தையும் தொடும். திருவாசகம் நம்மைத் தொட்டு உணர்வூட்டி உருக்குவதற்குக் காரணம் மாணிக்கவாசகரின் திறந்த மனமே. திறந்த மனமே பிறர் மனதையும் திறக்கும். திருவாசகசம் மனித மனத்துக்குரிய திறவுகோல். திறவுகோலால் மனங்கள் திறக்கப்பட வேண்டும். அப்போது மன வாசனை மணம் பரப்பும்.

மனித வாழ்க்கையில் அளவு, பிரமாணம், கணக்குகள் என்பன உண்டு. அளவுக்கு அதிகமாக, கணக்குக்கு மேலாகச் செய்வதாலும் துன்பங்கள் உருவாகிவிடும். அதனாலேயே வழிபாட்டிற்கு மூன்று முறை, இருபத்தொரு முறை, நூற்று எட்டு முறை என்று வைத்தார்கள். "சரண கமலாலயத்தில் அரைநிமிட நேரமட்டில் தவமுறை தியானம் வைக்க" என்ற வரி எண்ணத்தக்கது. சாப்பாட்டிலும் அறுசுவையும், அளவும் வைத்தார்கள். நித்திரையும் குறைந்தது ஆறு மணித்தியாலங்களும் கூடியது எட்டு மணித்தியாலங்களும் என்று வகுத்தார்கள்.

அதிக உணவை உண்டு சாப்பாட்டு ராமன் ஆகக்கூடாது. அதிக நித்திரையால் கும்பகர்ணன் ஆகக்கூடாது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவா? வாழ்தல், வசித்தல் என்னும் கலையும், நிலையும் தொன்றுதொட்டே இந்தப் பூமியில் மனித மனங்களில் அரங்காடுகின்றன. வாழ்க்கைக் கலை குறித்த போராட்டங்களின் வெற்றிகள் கடவுள் நம்பிக்கை, இறையுணர்வு முதலியவற்றால் பெறப்படுகின்றன. கடவுள் உணர்வு இல்லாது வசித்தல் நிலையில் உள்ள மானுடம் தானும் குழம்பி, பிறரையும் குழப்புகிறது. அவலக் கடலில் வீழ்கிறது. பிறரையும் வீழ்த்துகிறது. வீடுகளிலும், நாடுகளிலும் நடைமுறை வாழ்வாய் இவை தோற்றங் காட்டுகின்றன.

கடவுள் நம்பிக்கையாலும் இறையுணர்வாலும் வாழ்க்கையை கலையாக்குபவர்களால் வீடு நிம்மதி பெறுகின்றது. நாடு நல்வழிப்பட்டு அமைதிகொள்கின்றது. வீடு என்பது விரும்பப்படுகிறது. நாடு என்பது நாடப்படுகிறது – போற்றப்படுகிறது. மாணிக்கவாசகர் தனது நெஞ்சையே பாடுபொருளாக்கி, பிறர்படும் பாடுகளையும் கேடுகளையும் அவலங்களையும் களைந்து எறிவதற்கு வழிகாட்டுகிறார். கேடு நீக்கி, ஆக்கம் கொடுக்கும் தாயான சிவபெருமானை நினைந்து உள்ளுருகி உருகி ஏற்றி வழிபடுபவர்கள் வல்வினை நீக்கி நல்வினை பெறுவார்கள். மகிழ்ந்தும் மகிழ்வித்தும் வாழ்வார்கள் என்ற எண்ணத்தில் வழிகாட்டுகிறார். அவ்வழியில் செல்பவர்கள் அவலம் நீக்குவர். அமுதை அள்ளுவர், அருந்துவர். ஆனந்தத் தேனைச் சுவைத்து இன்புறுவர். அன்பை விழைவர். அன்பை விதைப்பர். மனித வாழ்வை மலரச்செய்வர். வாழ்க்கையை கீழ்க்கை ஆக்காமல் உயர்த்துவர். மூன்று அறைகளின் இருள் போக்கும் ஒளி விளக்கே வழிபாடு. "இன்று எனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று" என்கிறது திருவாசகம்.

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் அவலக் கடலாய வெள்ளத்தே" (திருச்சதகம்)

# பிறப்பு என்னும் பேதைமை நீங்க

திருமதி கோதை அமுதன்

நீளவீடு கட்டுறீர் நெடுங்கதவு சாத்துறீர்
வாழவேண்டும் என்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரே
காலன்ஓலை வந்தபோது கையகன்று நிற்பீரே
ஆலமுண்ட கண்டர்பாதம் அம்மைபாதம் உண்மையே!

என்று "சிவவாக்கியச் சித்தர்" வாழ்க்கையைப் பற்றி மிக அழகாகச் சொல்கிறார். ஆசைவயப்பட்ட மனிதர்கள் நாங்கள். எல்லாவற்றையும் அனுபவித்துவிடவேண்டுமென்ற ஆசையினால் அதுவும், உடனடியாக அனுபவித்துவிட வேண்டுமென்ற ஆசையினால் பல இன்னல்களை விலைகொடுத்து வாங்கிக்கொள்கிறோம். வாழ்க்கையினுடைய முடிவு என்ன என்பதை ஒருகணம் சிந்தித்தால் நாங்கள் படும்பாடு எல்லாம் எத்தனை மடமைத்தனமானது என்பது புரியும். வீடு இருக்கிறது; கதவு இருக்கிறது; நல்ல பூட்டும் இருக்கிறது; யாரும் உள்ளே வரமுடியாது என்ற நம்பிக்கையோடு நாங்கள் இருக்க, யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் காற்றைப்போல காலன் நுழைகின்றான். யார் கண்ணிலும் படாமல் உயிரைக் கவர்ந்து உயரே செல்கின்றான். அந்த வேளையில் எதுவுமே செய்ய முடியாதவர்களாகக் கையாலாகாதவர்களாக நிற்கின்ற மனிதர்கள் நாங்கள். உண்மையான – நிரந்தரமான – ஆனந்தமான இடம் எதுவென்பதைப் புரிந்துகொண்டால் கவலைக்கே இடமில்லையே!

இந்த உண்மையைப் புரிந்து வாழ்வைச் சரியாக வாழ்ந்தவர்களுள் அக்கினிக் கவிஞன் பாரதியும் ஒருவன்.

"நீயே சரணம் நினதருளே சரணம் சரணம்

நாயேன் பல பிழைசெய்து களைத்துனை நாடிவந்தேன்" என்று சாதாரண மானிடனாய், "நான் செய்த தவறெல்லாம் பொறுத்துவிடு, உயிர் களைத்துவிட்டேன்" எனத் தன்னையே அந்த இறைவனிடம் கொடுத்துவிடுகிறான். அப்படித் தன்னை அவனிடம் அர்ப்பணித்த தைரியத்தில்தானே அவனால் இப்படிக்கூடப் பாடமுடிந்தது!

"காலா உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன் - என்றன்

காலருகே வாடா சற்றே உனை மிதிக்கிறேன்!"

இப்படிப் பாடியது மாத்திரமல்ல; அப்படியே வாழ்ந்தும் காட்டியவன். காலனை வென்று, காலத்தை வென்று இன்றுவரை வாழ்கிறானே, இது எப்படிச் சாத்தியம்? எங்களால் முடியக்கூடியதா - இல்லையென்றால் யாரால் இது முடியக்கூடும்? இதற்கு வள்ளுவன் வாய்மொழி ஒரு அருமையான பதிலைத் தந்துநிற்கும்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்க சிறப்பென்னும்

செம்பொருள் காண்பது அறிவு"

அறியாமையால் வருகின்ற பிறவித் துன்பம் நீங்க மெய்ப்பொருளை அறிந்து கொள்ளவேண்டும். அதை அறிந்தவருக்குத் துன்பமும் இல்லை; அழிவும் இல்லை. அந்த அழிவற்ற வாழ்வைத் தரும் அற்புத மருந்து அதிக தூரத்தில் இல்லை. எங்கள் அகத்திலேயே இருக்கிறது. அன்புகொண்டு அதனைப் பெற்று ஆனந்தமாய் வாழ்ந்திடுவோம்!



இந்துமாமன்றம்

இசைவுடன் நடாத்தும்

இனிய "சர்க்கரைப் பொங்கல்"

இனிதே நடைபெற

இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!



P.KAYILASANATHAN

B.A.(Cey) LL.B.(Cey)

Barrister & Solicitor

2401, EGLINTON AVENUE EAST, # 302

SCARBOROUGH, ON M1K 2M5



Tel: 416 752 9561

Fax: 416 752 7262



# பொருள்பொதிந்த சமய நம்பிக்கை

திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கம்,
அவுஸ்திரேலியா

**இன்று** உலகம் முழுவதும் தமிழ் மக்கள் பரவி வாழ்கின்றனர். நாம் மாணவர்களாக இருந்த காலத்தில் உலக வரைபடத்தில் மட்டுமே பார்த்துப் படித்த தேசங்களில் எல்லாம் இன்று தமிழர்கள் குடிபெயர்ந்து வாழ்கின்றார்கள். தமிழ் மொழி பேசி, தமிழ்க் கலாச்சாரத்துடன் வளர்ந்த எங்களுடைய பிள்ளைகளுக்கு இன்று தமிழ் பேசத் தெரியாது. தமிழ்க் கலாச்சாரம் என்றால் என்ன என்பது தெரியாது. அவர்கள் ஒரே குழப்பத்தில் வளர்கின்றார்கள். எமது தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கே இக்கதி என்றால் எமது சமயமாம் சைவ சமயத்தின் கதியை எப்படிக் கூறுவது? சுருக்கமாகக் கூறினால் தமிழ் மொழியும் சைவ சமயமும் இன்னும் எத்தனை ஆண்டுகள் உயிர் வாழக்கூடியன என்பதை நாம் சொல்ல முடியாது.

புலம் பெயர்ந்த தமிழர்கள் தாம் சென்ற இடங்களில் எல்லாம் கோவில்கள் கட்டிவிட்டார்கள். திருவிழாக்கள், பூசைகள் எல்லாம் ஒழுங்காகச் செய்கின்றார்கள். வெள்ளிக் கிழமைகளிலும், செவ்வாய்க் கிழமைகளிலும் கோயில்களுக்குக் கூட்டமாகச் செல்கின்றார்கள். இப்படி இருக்கும்போது சமயம் அழிந்துவிடுமென்று ஏன் பயம் கொள்ள வேண்டுமென எல்லோரும் எண்ணலாம். நாம் எல்லோரும் எங்கள் சொந்த ஊர்களில் பக்தியுடன் இஷ்ட தெய்வங்களை வழிபட்டோம். அப்படி வழிபட்ட தெய்வங்களுக்கு நாம் வாழும் தேசங்களில் கோயில்கள் கட்டி வழிபடுகிறோம். அதனால் மனதில் திருப்தியைப் பெறுகிறோம். நாங்கள் வழிபடச் செல்லும்போது எங்கள் குழந்தைகளையும் கூட்டிச் செல்கின்றோம். அவர்களும் எங்களுக்காகக் கோயில்களுக்கு வருகின்றார்கள். அவர்களுக்கு பூசைகள், விரதங்கள் பற்றிய அறிவு இல்லை. அதனை நாமும் வளர்ப்பதில்லை. நாங்களே அவசரம் அவசரமாகக் கோயில்களுக்குப் போகின்றோம். அப்படி இருக்கும்போது சமய அறிவை எப்படி ஊட்ட முடியுமென்று நீங்கள் கேட்கலாம். ஏன் விரதம் பிடிக்கின்றோம்? அந்த விரதத்திற்கு ஒரு கதை இருக்கின்றது என்பதனைச் சொல்லிக் கொடுக்காவிட்டால் இளைய தலைமுறையினர் காலப்போக்கில் சமய நம்பிக்கையை இழந்து விடுவார்கள். இக்கருத்துக்களைக் கோயில்களோ, சமய நிறுவனங்களோ இளைய தலைமுறையினருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

சைவ சமயம் தொன்மையான சமயம். அச்சமயத்திற்கு சமணர்களாலும், பௌத்தர்களாலும் பெரும் இன்னல்கள் ஏற்பட்டன. நாட்டை ஆண்ட மன்னர்களே இப்புறச் சமயங்களைத் தழுவினார்கள். இந்த நேரத்தில் சைவ சமயத்தைத் தூக்கி நிறுத்தியவர்கள் சைவ நாயன்மார்கள். இவர்கள் தங்கள் வாழ்க்கையை சமயத் தொண்டுக்காக அர்ப்பணம் செய்தனர். இறைதொண்டு செய்தனர். அப்போது அவர்கள் பாடிய பாடல்களே தேவார திருமுறைகள். இத் தேவாரங்கள் கூறும் உண்மைப் பொருளை எமது தலைமுறையினர் அறிய வேண்டும். கோயில்களில் எல்லோருமாகச் சேர்ந்து கூட்டு வழிபாடு இயற்றுகிறோம். அப்போது சில தேவாரங்களைத் தெரிவுசெய்து அவற்றைப் பண்ணோடு பாடப் பழக்கும்பொழுது அந்த தேவாரம் பற்றிய வரலாற்றைக் கூறவேண்டும். குறிப்பிட்ட அந்தப் பாடல் எப்போது பாடப்பட்டது, யாரால் பாடப்பட்டது, பாடியதால் என்ன பயன் ஏற்பட்டது என்பதை விளக்க வேண்டும். இப்படிச் செய்தோமென்றால் பிள்ளைகளுக்கு தேவாரங்களின் பொருள் விளங்கும். கூடவே, அவற்றின் நோக்கமும் புரிந்துவிடும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

என ஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றார். நமச்சிவாயப் பதிகம் என்ற இந்தப் பதிகத்தில் உள்ள தேவாரங்கள் அத்தனையும் நமச்சிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தின் பெருமையைக் கூறுகின்றன. இந்த மந்திரம் பற்றி அப்பர் சுவாமிகளும் பாடியுள்ளார். அப்பர் சுவாமிகளுக்கு சமணர்கள் இன்னல்கள் செய்தார்கள் - கல்லிலே கட்டிக் கடலிலே போட்டனர். அப்போது -

கற்றுணைப் பூட்டி ஓர் கடலினிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே

என்று பாடினார். தனக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்டு கலங்காது, நமச்சிவாய மந்திரம் தன்னைக் காப்பாற்றும் என்று நினைத்தார். அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை. அப்பர் சுவாமிகளுக்கு ஏற்பட்ட துன்பங்கள் எல்லாவற்றையும் இறைவன் களைந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனுடன் தோழமை கொண்டவர் அவர்.

நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சி வாயவே.

என்று பாடுகின்றார். "உன்னை நான் மறந்தாலும் என் நா நமச்சிவாயத்தை மறக்காது" என்று கூறுகின்றார். இன்றைய சந்ததியினருக்கு நமச்சிவாயத்தின் பெருமையை எடுத்துக் கூறவேண்டும். அவர்கள் அதனை விளங்கிக் கொண்டால் அவர்கள் நாவில் இம்மந்திரம் இயல்பாகவே வந்துவிடும்.

சைவர்கள் பக்தியுடன் அணியும் புனிதமான சிவ சின்னம் விபூதி. இதை திருநீறு என்றும் சொல்லுவோம். திருநீற்றின் பெருமையை விளக்கும் கதைகள் பல உள்ளன. திருஞானசம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகமே எங்கள் எல்லோருக்கும் தெரிந்த பதிகமாகும். இப்பதிகத்தை எல்லோரும் பண்ணோடும் பாட வேண்டும். திருநீறு பூசி அடியவர்கள் பெற்ற நன்மைகளை விளக்க வேண்டும்.

நாயன்மார் வரலாற்றினை நாங்கள் சொல்லும்போது அவர்களுக்குச் சில சந்தேகங்கள் எழுதல் இயல்பே. சில கதைகளில் வரும் சம்பவங்கள் எப்படிச் சாத்தியமாகும்? இவற்றை நம்ப முடியவில்லையே என எங்களால் பதில் சொல்ல முடியாதவாறு அவர்கள் கேள்விகள் கேட்பார்கள். இன்றைய உலகில் இவை நடக்கமுடியாதன என்று நாங்களுமே ஒத்துக்கொள்ளுவோம். ஆனால் கடவுள்மீது அசைக்க முடியாத நம்பிக்கையும் நம்பிக்கை கலந்த பக்தியும் இருக்கவேண்டும். அவற்றையே இக்கதைகள் விளங்கவைக்கின்றன என்பதனை சிறுவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுமாறு விளக்க வேண்டும். விபரம் தெரியாத வயதில் சிறுவர்கள் கேள்வி கேட்பது குறைவு. அப்படிக் கேள்வி கேட்டாலும் நாங்கள் கூறும் விளக்கங்களை ஏற்றுக்கொள்ளுவார்கள். சிறு வயது முதலே சமய அறிவை ஊட்டினால், அச்சிறுவர்கள் இளைஞர்களாகும்போது அவர்களுக்கு சந்தேகங்கள் குறைவாக ஏற்படும்.

இன்றைய உலகில் எங்களுடைய சமயத்திற்கு பெரும் சவாலாக இருப்பது புதுப்புது வழிபாடுகளும், புற்றீசல்போலத் தோன்றும் சாமிமார் வருகையுமே. படித்தவர்கள், கோயில் வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் என்று பாரபட்சம் இல்லாமல் பலர் சாமிமார்களால் ஈர்க்கப்பட்டுவிட்டனர். தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியவர்கள் அவர்களே என்று மக்கள் நம்புகின்றார்கள். சாமிமார் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு வரும்போதெல்லாம் கூட்டம் கூட்டமாக அவர்களைத் தரிசித்துத் தமது கோரிக்கைகளை முன்வைக்கின்றார்கள். சாமிமார்களால் நமது பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட்டுவிடும் என்று நம்புகிறார்கள். இப்போக்கு ஏன் ஏற்பட்டது என்பதனை நாம சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்புபோல் இல்லாமல் இன்றைய சமுதாயத்தில் மக்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. புலம்பெயர்ந்து வாழும்போது ஏற்படும் பிரச்சினைகள் பலவற்றை நாம் எமது ஊர்களில் சந்திக்கவில்லை. அங்கெல்லாம் வாழ்க்கை இயல்பாகச் சென்றது. பள்ளிப் படிப்போ குடும்ப வாழ்க்கையோ பெற்றோர், குழந்தைகள் உறவோ ஒன்றுமே பிரச்சினையாகப் படவில்லை. ஆனால் இப்போது வாழும் தேசங்களில் கணவன், மனைவி பிரச்சினை, பிள்ளைகள் பெரியவர்களை மதியாது பிரச்சினை தருதல், அளவுக்கு அதிகமாகச் செலவு செய்ததால் ஏற்பட்ட கடன் பிரச்சினை என்ற பிரச்சினைகள் பல தோன்றிவிட்டன. இப்பிரச்சினைகள் ஒவ்வொருவருக்கும். உள்ளது. இவற்றை எப்படித் தீர்ப்பது என்று தெரியாது பெற்றோர் தத்தளிக்கிறார்கள். யாராவது இவற்றைத் தீர்த்துவிட்டால் போதுமென்ற நம்பிக்கையில் இவ்விதமாகச் சாமிமார் பின்னே செல்கின்றார்கள்.

மக்கள் எங்கள் சமயத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொள்ள வேண்டும். எங்கள் தெய்வங்கள் ஆற்றல் உள்ளவர்கள் என நாம் நம்பவேண்டும். தேவாரங்களைப் பாடும்போது எவற்றைப் பாடுவது என்று தெரியாது மக்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள். இக்குழப்பத்தை நீக்குவதற்கு வழிகாட்டியாகப் "பயன்தரும் பதிகங்கள்" எனச் சில பதிகங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். அவற்றை நம்பிக்கை வைத்துப் பாடவேண்டும். முன்பெல்லாம் 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பதனை நாம் நம்பி வாழ்ந்தோம். இந்த நம்பிக்கை இப்போது படிப்படியாக அருகிச் செல்கின்றது. இறை நம்பிக்கையை நாம் வளர்க்க வேண்டும்.

மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் கருங்கல் மனதையும் கரையச் செய்யும் ஆற்றல் உடையது. இந்நூலின் முதற் பாடல் சிவபுராணம். சிவபுராணத்தை அன்பர்கள் பக்தி சிரத்தையுடன் ஓதுவதால் குழப்பங்கள், மனக் கவலைகள் யாவும் ஒழிந்து, அமைதியும் ஆனந்தமும் உண்டாகும். இது பலர் அனுபவத்தால் கண்ட உண்மை. கிரக தோஷங்கள் நீங்க வேண்டுமாயின் பணத்தைச் செலவுசெய்து சாந்திகள் செய்வது வழக்கமாகிவிட்டது. சிவனடியே சிந்திக்கும் அவனடியார்களை நாளும் கோளும் யாது செய்யும்? என்ற கூறி சம்பந்தப் பெருமான் பாடிய பதிகமே கோளறு பதிகம். இப்பதிகத்தை நாங்கள் பாராயணம் செய்தால் துன்பங்கள் நீங்கும். எமக்கு கிரகங்கள் சரியில்லை. அதனால்தான இத்தனை கஷ்டங்களும் வருகின்றன என்று நம்பும் மக்கள் கோளறு பதிகத்தைப் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்தல் நன்று.

இவ்விதமாகவே மனக் கவலை தீருவதற்கு, பொருள் பெறுவதற்கு எடுக்கின்ற வேலைகள் இனிதே முடிவதற்கு தீராத வயிற்றுவலி தீர்வதற்கு, குழந்தைச் செல்வம் பெறுவதற்கு, சுகப் பிரசவத்திற்கு என்று எத்தனையோ பதிகங்கள் உள்ளன. பாடினால் பயன் கிடைக்குமா? என்று அலட்சியம் செய்யாது முழு நம்பிக்கையுடன் இறை வழிபாட்டில் ஈடுபடவேண்டும். கோயில்களும், சமய நிறுவனங்களும் இவற்றை மக்களுக்கு உணர்த்த வேண்டும். சமயக் கருத்துக்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு சிலராவது முன்வந்து இத்தொண்டில் ஈடுபட வேண்டும். அப்படிச் செய்தால்தான் காலப்போக்கில் சைவசமயத்தின் பெருமையை மக்கள் உணருவார்கள். சைவ சமயமும் காப்பாற்றப்படும்.

# Pilgrimage to Sabarimalai

**Kumar Punithavel**
kumarpunithavel@yahoo.com



Pilgrimage to Sabarimali or more commonly known among us as Sabari *yathirai* is to a mountain in the western coast of South India in Kerala State. The patron Lord of this mountain Sri Aiyappa is considered the third son of Lord Shiva younger to Lord Ganesha and Lord Muruga. The Lord Aiyappa has a unique place in Hindu iconography, especially to those hails from Kerala.

It is indeed an interesting legendary birth story of Lord Ayappan is found in *puranas*. According to the *purana* after Goddess Durga killed the demon king Mahishaurar, his sister, Mahishi, set out to avenge her brother. She first obtained the most improbable boon from Lord Brahma the creator deity that only child born of Lord Vishnu and Lord Shiva could kill her.

As the *purana* goes Lord Shiva was enamoured by the divine beauty of `Mohini` in which form Lord Vishnu appeared at the time of churning the mythical Ocean of milk in order to allure the asuras. Lord Shiva succumbed to the beauty of Mohini and Hariharaputra – son of Lord Vishnu (Hari) and Lord Shiva (Hara) – was born out of the union.

Lord Aiyappa is also commonly known as Lord Manikandan. The legend behind this is his divine parents tied a golden bell (*mani)* around his neck (*kandam)* soon after his birth and abandoned the baby on the banks of Pamba river. The childless King of Pandalam, Rajashekaram, found the new born Baby and accepted him as a boon for his prayers. Of course because the baby had a golden bell around his neck he was called Manikandan.

Little after the adaptation the king was blessed with another son whom he named as Rajarajan. Both children were brought up in a princely manner. Manikandan excelled in both martial arts and various scriptures. When he was to be graduated from his learning according to the custom of the day he wanted to give his guru (teacher) *guruthatchana* or fee to his tutor. The Guru who was aware of his pupil's divine powers asked as his fees to restore speech and vision to his mute and blind son. Manikandan placed his hand on the head of the boy and by miracle speech and sight was restored.

Manikandan performed many miracles. The subjects were very happy to have such prince who would be their next king. He once defeated an Arab pirate who had come to enslave the people. After defeating the pirate he made him realize it was a wrong deed to do and befriended the pirate. The name of the pirate is Vavar.

When the time came to select the heir to the throne King favoured Manikandan to succeed. How ever the queen wanted her son Rajarajan to be named as crown prince. She with the help of the minister and the crown physician connived to kill prince Manikandan.

Feigning illness, the queen made the royal physician to prescribe lactating tigress milk. When everyone was worried how to get it Manikandan volunteered to venture the task in spite of his father's objections. With reluctance the King gave him a coconut with three eyes symbolically representing three eyed Lord Siva. As he wandered deeper and deeper into the jungle it he came to the domain of Mahishi who lived in that forest of Erumeli. Mahishi attacked Manikandan. They had a fierce fight on the banks of River Azutha.

Lord Shiva came down to earth on his Ox and tied it in near a tree near Azutha now known as Kalaketi. From there he witnessed his son fighting the evil Mahishi. A fierce Battle ensued. Manikandan got hold of the horns of the Demon Mahishi and threw her across the banks of the river

Azutha on Azutha Malai. She fell dead. Manikandan picked a stone from the river and placed it on her body. From the Body of Mahishi came a beautiful lady. The Lady was actually cursed to become Mahishi. She thanked Manaikandan for relieve her from the curse. Her name was Mallikaipurathamma Devi.

She asked Manikandan to marry her. For which Maikandan replied that he is a *Brahmachari* and will be so forever. But Mallikaipurathamma Devi persisted. Manikadan told her that a temple will be build for him. She will also have a place near by him. And the year when no new pilgrimage comes to the temple that year he will marry her.

As Manikandan continued in search of Tigress, Lord Indra the King of Devas appeared before him. He took the form of a tigress and asked Manikandan to mount on him to the city. Manikandan did as he was told. The Devas who had accompanied Indra also turned themselves into tigress and followed into the city. As Manikandan rode into the city on his terrifying mount followed by an equally terrifying retinue the people were in utter disbelief.

The news spread to King Rajashekharam, The King rushed out to see this unusual sight was stunned. He remembered the Sanyasi telling him the day Manikandan turned twelve he heard a divine voice which told him that Manikandan was none other that God Shree Dhramashstha himself. King Rajashekharam ran forward and fell at Manikandan's feet. He asked Maikandan to send the Tigresses away as his people were terror stricken. Manikandan smiled and the Tigresses vanished. King Rajashekharam told Manikandan that as soon as he had left the queen recovered. He also came to know of Minister's plan and was ready to punish all of them.

On this Manikdandan asked them to be spared as they were the reason which led to his mission of slaying of Mahishi, the purpose of his incarnation. Saying this Manikandan said he would hence forth lead a life of a *Sanyasi*. King Rajashekharam wanted to build a temple for him. Manikandan took an arrow from his quill and shot it. He asked a temple to be built on the exact location the arrow had fallen. He gave the king special powers to see the arrow. The arrow fell at the summit of the Sabari Hills. He also said the Temple should have eighteen steps at the eastern side. Saying this Manikandan Vanished.

The King began to trek to the top of the mountain and somehow managed to reach the top exactly where the arrow had fallen with great difficulties. The King thought he would never be able to achieve to build the temple at such a height. As he stood dazed, Vishwakarma, the divine architect came to his help. Under the guidance of Vishwakarma the magnificent temple was soon completed. King Rajashekhara was thinking about the befitting idol for the temple. Then Lord Vishnu sent Parashurama to the King to carve and install the Idol for Manikandan. Parasurama on the day of Makra Sankaranti installed the Idol in Sabarimala Temple. And thus it was that image Ayyappa as Manikandan carved by the Parusarama in yogamudra with chinmudra on his hands came to be popularly known was sanctified.

Meanwhile the wicked minister was afflicted by an incurable disease. He once prayed to Lord Ayyappa for forgiveness. He had a dream in which Lord Ayyappa asked him to come to his temple on Sabarimala but entering the shrine only after being cleansing in River Pamba. River Pamba is said to be enlivened by the sprit of Shabari, the devotee of lord Rama. The minister wastd no time the next morning, he set out for Sabarimala on way the river Pamba. He took a dip in the river and as soon as he came out he was back to his normal health. Bath in the River Pamba had cured him. He rushed to the shrine to Sabrimala temple chanting Ayyappa, Ayyappa. When he reached the sanctum sanctorum overcome by emotion he fell at the feet of the Idol he burst crying Swamiye Sarnam Ayyappa. And to this day as Pilgrims make their way to the temple of Ayyappa they call out Swamiye Sarnam Ayyappa. Thus Lord Aiyappa was born.

It is said Lord Aiyappa Himself has laid strict religious adherences to receive his blessing. The devotees as penance are supposed to refrain from all pleasures and lead celibate life the preceding forty-one days starting with the `*Malatharan*` ceremony, when the prospective pilgrim adorns a garland of `*tulasi*`(Holy Basil) or `*rudraksha*` beads. A pilgrim is supposed to maintain austerity of mind, body and speech. He spends his time visiting temples, praying and attending religious discourses. During the *Mandalam* period, mid November to the end of December, the devotees dress in blue, black or ochre and do not shave. The devotees lead a life of an ascetic and

consume only vegetable food. They abstain from alcohol and other intoxicating drugs. The only restriction to entry to the temple is for ladies who have attained womanhood.

The pilgrimage is said to start with the *Kettunira* ceremony, the filling of the sacred bundle called *Irumudi*. This can be conducted in ones home or in a temple. *Irumudi* is a cloth bag of two compartments, front portion is meant for *pooja* articles and offerings and the rear portion for storing personal articles for the journey. The main offering to the Lord is the ghee-filled coconut and the *Irumudi* is balanced on the head.

There are three routes to the top, one of which takes tracking of more than sixty kilometres winding across three hills. The second route is about 12.8 kilometres and the third which is across the holy Pamba River where Lord Manikandan was abanded by Lord Shiva and Lord Vishnu is only eight kilometres of tracking.

There are up to fifty million pilgrims throng this temple annually, and being the summit of a hill the crowd is bound to be intense. With all the devotees chanting "Swamiye Saranam Iyappa" (Lord Aiyappa our refuge) in unison the noise rises to a very high crescendo. One beholds the stunning 'Pathinettampadi', 18 golden steps that leads pilgrims to the sanctum sanctorum of the Dharma *sasta* (teacher). These steps are five to six feet long and eight inches wide.

Here too the number eighteen is of great significance. The first five steps signify the five indriyas or five senses (Eye, ears, nose, tongue and skin) the next eight ragas: the next three represent the three *gunas* (*satwa, rajas and thamas*) the last two steps denote *jnanam* (knowledge) and *anjanam* (ignorance). By scaling the eighteen steps one takes the path of self realization which if the goal of human birth.

The majestic gold flag staff towers over the sanctum sanctorum of the srikoil. The srikoil has a copper plated roof with four golden finials or 'thazhikakkudam' shining at the top. Standing on the eighteenth step one is front of srikoil and straight ahead the idol of Lord Aiyappa in all his glory.

The beautiful idol of Lord Aiyappa is made of Panchaloka an alloy of five metals. It is about one and a half feet tall. Lord Aiyappa is seated in his meditative pose, with a band around his folded legs and his right hand in *chinmudra* (with the forefinger touching the thumb) indicating Vedic punch line "Thou art that". Lord Aiyappa grants refuge to hids devotees and protects them from all evils and sufferings.

To the south of the sanctum sanctorum is Lord Ganesha and to the left is that of Lord Subramaniya and Goddess Mala. The shrine of the Mallikaipurathamma Devi is one hundred meters away from the shrine. One will not miss the shrine of St. Vavar, the Islamic confident of Lord Aiyappa.

On his return after the pilgrimage the devotee before entering the house, breaks a coconut and lies prostrate before the family deity and takes down the garland, thus breaking continence. The whole pilgrimage has much more than what is seen visually. In the process of observing this pilgrimage the devotee is transformed to a better being. Getting closer of transforming the *jivatma* to *paramatham* is the life's journey.

**யோகர் சுவாமிகளின் அருள்மொழிகள்**

உனது சமயத்திற்குப் புறம்பே செல்லாதே. அதனுள் எல்லாம் உண்டு.

மற்றவர்களை ஏமாற்றலாம்.. தன்னை ஏமாற்ற முடியாது. மனசாட்சியின்படி நடந்துகொண்டு போக எல்லாம் வலிய வரும்.

ஒருவனைக் கூடாதவன் என்று நினைக்கும் நினைவே நினைப்பவனுக்கு நஞ்சாகும்.

கைவிரல்களைப் போலத் தனித்து இருந்துகொள்ளல் வேண்டும். தேவையான நேரம் கூடிக்கொள்ளலாம்.

மற்றவர்களுக்கு உதவவேண்டின் இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய். உன்னால் வேறு என்ன செய்யமுடியும்? யாவும் அவன் செயல். இதுவே உத்தமமான உண்மை.

## மனுவல் யேசுதாசன்

கனடிய சட்டத்தரணி

# Manual Jesudasan

**Barrister, Solicitor & Notary Public**
**Solicitor (England Wales), Attorney at Law (Sri Lanka)**
**Former Senior State Counsel (Seychelles)**

| | |
|---|---|
| **Real Estate Law** | - வீடு கொள்வனவு, விற்பனவு செய்தல் |
| **Immigration & Refugee Law** | - குடிவரவு அகதிச் சட்டம் |
| **Criminal Law** | - குற்றவியல் சட்டம் |
| **Family Law** | - குடும்பச்சட்டம் |
| **Business Law** | - வியாபார, வர்த்தகச் சட்டம் |
| **Power of Attorney** | - அதிகாரக் கையளிப்பு |
| **Civil Litigation** | - சிவில் வழக்குகள் |

**Legal Aid Certificate Accepted**

சட்ட உதவிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

**Tamil, English Translations undertaken**

தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புகள் செய்து கொடுக்கப்படும்.

**80, Corporate Drive Suite # 210**
**Scarborough, Ontario M1H 3G5**

**Tel: 416 444 8070**
**Fax: 416 444 9105**

**Web: mjlawyers.com**
**Email: mjesudasan@mjlawers.com**

இட்டமுடன் தமிழை இனிது வளர்ப்போம்
சட்டப் பிரச்சினையை சரிவர நாம் தீர்ப்போம்
சட்ட உதவிச் சான்றிதழ்கள் தரின் நாம் ஏற்போம்
குற்ற குடிவரவுப் பிரச்சினைகள் பொறுப்பேற்போம்.

# இறை சக்தி

திருமதி ராஜேஸ்வரி கந்தையா

இயற்கை என்பது இறையவள் சக்தி
உலகெலாம் புரக்கும் ஒருபெரும் சக்தி
உமையவள் மாதவன் பாதி
உயிரெலாம் காக்கும் கருணையின் வடிவம்
உண்மையின் வடிவமும் அவளே
அலைகடல் மலைகள் அண்டவான் வெளிகள்
அவனியில் அனைத்துமே யாகி
இருநிலமீதில் இயற்கை யென்றேத்தும்
இறையவள் சக்தியென் றுரைப்போம்

காலையின் தோற்றம் காற்றின் மெல்லசைவு
கடலலைக் கரங்களின் நளினம்
கூவிடும் புட்கள் குளிர்நிழல் தருக்கள்
குதித்திடும் அருவி நீ ரோடை
பாரிய வெளிகள் பசும்பொழில் வயல்கள்
பரந்த வான் கதிர்களின் வடிவம்
யாவுமாய் நின்று இயற்கை யென்றோம்பும்
இறையவள் சக்தி என்று உணர்வோம்.

கோவிலின் மணிகள் கோபுரக் கலசம்
குளிர்மலர்ப் பொய்கைகள் சோலை
தீபநற்றூபம் செழுமணி மாடம்
சிறந்திடு பசுக்களின் தொழுவம்
வேதியர் வேள்வி மாதவர் மறைகள்
விரும்பிடும் வாசனை மலர்கள்
பாவொடு பண்ணும் பரதமும் கலையும்
பாவையர் செய்யு நல்லறங்கள்
யாவுமாய் நின்று இயற்கை யென்றுரைக்கும்
உலகெலாம் இயக்கிடும் சக்தி
தேவியே நீயே இன்னருள் புரியும்
'சிவசக்தி' என்பது சிறப்பே.


உலகெலாம் புரக்கும் உமையவள் தாயே
உயர்வெலாம் அருளும் உறுதுணை நீயே
கருவிலே உயிர்க்கும் கருணையும் நீயே
காற்றிலே மிதக்கும் கலைகளும் நீயே
அலைகடல் ஒலிக்கும் அற்புதம் நீயே
அணுஉலை ஆலை அசைவுகள் நீயே
மறையெலாம் போற்றும் மலைமகள் நீயே
மானுடம் தன்னைக் காத்தருள் புரிவாய்!



வீடு, வியாபார நிலையங்கள்
வாங்க, விற்க...
Sutton group commitment realty ltd Brokerage
3 45 Woodbine Downs Blvd, Toronto, ON M9W 6N5
Office: (416) 746-9494
Fax: (416) 674-1682
email: jjeganathan@sutton.com
PLATINUM AWARDS
2000 2007
Buy & Sell Property
Residential & Commercial
FREE Market Evaluation
FREE Consultation
Full MLS Service
New Immigrant
Self-Employed
Bad Credit / Bankruptcy
Multiple Listing Service
And more...
Jeysuresh Jeganathan, Sales Rep.
Cell: (416) 616-4046, Office (416) 746-9494, Fax: (416) 674-1682
jejeganathan@trebnet.com
Sutton group commitment realty ltd
3 45 Woodbine Downs Blvd
Toronto, ON M9W 6N5

# "கோயில் திருப்பதிகம்", "கோயில் மூத்த திருப்பதிகம்", "மூத்த திருப்பதிகம்" – ஒரு தேடல்

ஆழ்கடலான் முருகவே பரமநாதன்



மணிமொழியார் பாடிய திருவாசகத்தில் இருந்தும், காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்திலிருந்தும் இத் தொடர்கள் தெரிவு செய்யப்பட்டன. இவற்றில் பதிவாகியுள்ள கோயில், திரு, பதிகம், மூத்த போன்ற பிரயோகங்கள் இதிலே ஆழங்காற் பட்டுள்ளன. ஆழங்காற்படல் என்றால் மிக்க ஈடுபாடு என்று பொருள். இ∴து வைணவ சம்பிரதாயச் சொற்றொடர். இப்பாவடிகளின் தீர்ந்த பொருள் என்ன? கருதுகோள், எடுகோள்(கள்) எவை? இவற்றைக் கூட்டாகவும், தனித்தனியாகவும் ஊடுருவிப்பார்த்து விடைகாண முயற்சிப்பதே இவ்வாக்கத்தின் இலக்கு. பதிகம் என்ற சொல்லின் உட்பொருள் என்ன, பல அர்த்தங்களிலே இவை பாவிக்கப்பட்டிருப்பதை ஆழ்ந்து பார்ப்போர் தெரிந்துகொள்வர்.

சமய நோக்கில் இதன் தாற்பரியத்தை முதல் நோட்டம் விடுதல் முக்கியமாம். சமையம் என்ற வேர்ச்சொல்லில் இருந்துதான் சமயம் வந்தது. "சமையம் மேல் ஆறுமாகி" எனப் பாடியுள்ளார் அப்பர் சுவாமிகள். நாம் எம் சமயம் சைவம் என்கின்றோம். மதம் என்ற சொல்லிலும் சமையம் உயர்ந்த பொருள் பொதிந்தது. சைவ சமையம் என்றால் வாழ்க்கை நெறி என்று பொருள். சமையல் பாகம் செய்வது; சமையம் நம்மைப் பக்குவப்படுத்துவது. சமையத்தில் இருந்து சமயம் வந்தது போல பதியம் என்ற வேர்ச்சொல்லில் இருந்து வந்ததுதான பதிகம். இதை உய்யக்கொண்டாரின் பாடல் ஒன்று விளக்குகிறது.

"அன்னவயற் புதுவை யாண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு"

விவசாயிகள் நாற்றுமேடையில் பதியம் போடுவர். அச்சகங்கள் எழுத்தைப் பதிவுசெய்து அச்சடிக்கின்றன. அதனால் அதை அழுத்தகம் என்பர். இப்போது அந்நிலை மாறிப் போனது. திருமுறைகளைத் தொகுத்த பெருமை நம்பியாண்டார் நம்பியையே சாரும். மூவர் தேவாரமே ஔவையார் போற்றிய மூவர் தமிழ். இவை மூன்றும் திருப்பதிகங்களாக வகுக்கப்பட்டுள்ளன. பத்துப் பாடல்களின் தொகுப்பே பதிகம். சில பதிகங்கள் பத்துப் பாசுரங்கட்குக் குறைந்தவையாயும் சில (11, 12, 13) கூடிய தொகை உடையனவாயும் அமைந்துள்ளன. இவ்வமைப்பைப் பின்பற்றிப் பன்னிரு ஆழ்வார்களின் பாசுரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால், ஒரு வித்தியாசம் வைணவ பக்தி இலக்கியமான திருநாலாயிரத்திலே நூறு திருப்பாசுரங்களின் தொகுப்பு அந்தந்த ஆழ்வார்களின் பெயரோடிணைந்த அருளிச்செயல்களாகவும் பெயர் பெற்றன. அவ்வழக்காறு வருமாறு:

பெரியாழ்வார் திருமொழி, நாச்சியார் திருமொழி (ஆண்டாள்), பெருமாள் திருமொழி (குலசேகரர்), பெரியதிருமொழி (திருமங்கை ஆழ்வார்), திருவாய்மொழி (நம்மாழ்வார்). திருவாய்மொழி மற்றைய வேதங்களிலும் சிறப்பாகப் போற்றப்பட்டது.

தேவாரத் திருமுறைகள் 7. அவற்றின் உட்பிரிவு பதிகம். ஒவ்வொரு பதிகங்கட்கும் பாசுரங்கள் இலக்கமிட்டுக் காட்டியிருக்கும். எனவே, உதாரணமாகப் பாவிக்கும் ஒழுங்கு இதுதான்.

உ-ம்: 7: 84.3

"மந்திரம் ஒன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயும் தொண்டன்எனை
அந்தர மால்விசும் பில்அழகான அருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான் மலையுத்தமனே" (சுந்தரர்)

7(ஏழு) ஏழாந் திருமுறை 84. எண்பத்து நாலாம் பதிகம், 3 மூன்றாம் பாடல்.

நொடித்தான்மலை - அழிக்குந் தன்மை கொண்டான் வாழும்மலை.

இதையடியொற்றி திருநாலாயிரத் திவ்வியப் பிரபந்த பாடல்களையும் வகைப்படுத்தியுள்ளனர்.

உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துரு
வியந்தவிந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலும் இறைநிலை
உணர்வரி துயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரியய
னரனென்னு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின்
மனப்பட்ட தொன்றே. (திருவாய்மொழி 1:3:6)

1 – முதற் பத்து. 3 – பதிகம் 6 – பாசுர எண் (பதிகம் - இது கோயில் திருவாய் மொழி)

திருக்குறள், பதிற்றுப்பத்து (எட்டுத்தொகை), திருக்கருவைப் பதிற்றுப் பத்து, அந்தாதி என்பன பத்துப் பத்துப் பாடல்கள் கொண்டவை. திருவாசகத்தில் வரும் திருச்சதகமும் இவ்வமைப்பைப் பின்பற்றக் காணலாம். இவ்வண்ணமே திரு என்ற வார்த்தை, பதிகத்தோடு இணைந்து திருப்பதிகம் எனவும், கோயிலோடு சேர்ந்து திருக்கோயில் எனவும் வழங்கப்படுவதும் இயல்பே. (சால, உறு, தவ, நனி, கழி, கூர்) என்ற உரிச்சொற்கள் ஒரு பதத்தின் (வார்த்தை) பொருளை உயர்த்துவதுபோல. திரு என்பதும் அடைமொழியாய்ப் பயன்படுகிறது. பதிகத்துடன் இணைந்து திருப்பதிகம் எனவும், கோயிலோடு சேர்ந்து திருக்கோயில் எனவும் வழங்குவதைக் காணலாம். "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்", "ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்" என அப்பர் பாடிய திறன் வியக்கத் தக்கது. சம்பந்தர், அப்பர் பாடிய திருச்சேத்திரக் கோவையிலும், சுந்தரரின் அருளிச் செயலிலும் அமைந்த ஊர்த் தொகையிலும் பேசப்படும் தலங்கள் முச்சிறப்பும் (மூர்த்தி, தலம், தீர்த்தம்) உடையன. கோயில் என்பதைக் கோவில் என்றும் எழுதலாம். பூங்கோயில், பொற்கோயில், தாமரைக் கோயில் என்ற வழக்காறுகளை அப்பர் ஓர் தாண்டகத்தில் வரிசைப்படுத்தியுள்ளார். இவை பாடல்பெற்ற தலங்கள் எனவும், வைப்புத் தலங்கள் எனவும் அழைக்கப்படும்.

திருச்சேத்திரக் கோவை என்பதை "கோயிற்றிறம்" என அழகு தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். கோயில், ஆலயம், நகர், தலம், சினகரம் ஒத்தபொருள் தருவன.

"பெருகாறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கோகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்து
மிளங்கோயில் மணிக்கோயி லாலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரு மன்றே" (அப்பர் தேவாரம்)

பொதுநோக்கிலே ஆலயங்கள் திருக்கோயிலென அழைக்கப்பட்டாலும் திரு என்ற அடைமொழியின்றி கோயிலென அழைக்கப்படுவன இரண்டே இரண்டு ஆலயங்கள். ஒன்று சைவ சமயிகள் போற்றும் சிதம்பரம். இது கோயிலென்றே அழைக்கப்படும். வைணவர் ஸ்ரீரங்கத்தைக் கோயிலெனப் போற்றுவர். இது பெரிய கோயில் எனவும் அழைக்கப்படும். நடராஜன் பஞ்சகிருத்திய நடனமாடும் சிதம்பரத்துக்கும் பெரும்பற்றப் புலியூர் என்றும் பெயர். தன்னைத் தரிசித்த ஆன்மாக்களுக்குத் தன்னிடத்தில் பெரும்பற்றை விளைவிக்கும் புலியூர் - பெரும்பற்றப் புலியூரென விளக்கம் சொன்னவர் நாவலர் பெருமான்.

கோயில் என்ற பாவனையை அடங்கன்முறைப் பதிப்பிலும் ஏனைய பதிப்புகளிலும் மட்டுமன்றி ஒன்பதாந் திருமுறைகளிலும் இடம்பெறக் காணலாம். மன்றிலே ஆடுபவன் மன்றாடியார். பாதம் சலியாமல் பதம் பிழையாமல் ஆடிக்கொண்டே இருக்கிறான் கூத்தப்பிரான்.

கூடிய இலயம் சதிபிழை யாமைக்
கொடியிடை உமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே
அங்கரை எங்குற்றாய் என்று
தேடிய வானோர் சேர்திரு முல்லை
வாயிலாய திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.
சதி – தாளக் கட்டு 7: 62 .1

திரு என்கின்ற சொற் பிரயோகங்கள் தரும் பொருளமைதியை இனி ஓர்ந்து பார்ப்போம்.

திருமகள், கண்டோர் விரும்பும் அழகு, செல்வம், மேன்மை எனப் பல பொருள்பட அது விரியும். திருக்கோயில், திருநீறு, திருவிழா, திருச்சிற்றம்பலம், திருவாய்மொழி, திருமால், திருக்குளம், திருக்குறள், திருவள்ளுவர், திருத்தக்க தேவர், திருமகள், திருவளர் செல்வி, திருவாரூர், திருவிளக்கு, திருவாளர் என்றெல்லாம் விரியும். இறைவனையே "திருவே என் செல்வமே, திருமணியைத் தித்திக்கும் பாலை"என அப்பர் பாடியுள்ளார். அடியார்களைக் 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்' எனச் சேக்கிழார் பெருமைப்படுத்துகிறார். இறைவனைச் சென்றடையாத திருவுடையானை எனச் சம்பந்தர் இறைவனைப் பாடியுள்ளார். சுந்தரர் திருநாவுக்கரசரை "திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட திருநாவுக்கரசர் தம் அடியார்க்கும் அடியேன்" எனப் போற்றுகின்றார்.

ஒட்டுமொத்தமாக பேராசிரியர் வெள்ளைவாரணனாரின் தொகுப்பை இங்கே தருகிறோம்.:

"திரு என்பது பொருளுடைமையையும், பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி, எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாகியதோர் உள்ள நிகழ்ச்சி; அது வினையுள்ளுடைமை எனவும்படும் என்றார் பேராசிரியர். எனவே, இன்பம் வந்தாலும், துன்பம் வந்தாலும் இரண்டையும் ஒப்பக்கருதும் மனச்செம்மையே இத்திரு என்னுஞ் சொல்லுக்குரிய பொருளென்பது பேராசிரியர் கருத்தாதல் நன்கு பெறப்படும். உலக வாழ்க்கையில் உளவாகும் ஆக்கங்களை எண்ணிக் களிப்படைதலும், கேடுகளை நினைந்து அவலம் உறாமலும் எல்லோரிடத்தும் பொதுவாகக் காணப்படும் மன இயல்பாகும். இவ்வாறு செல்வக் களிப்பால் மையல் உறாமலும், அல்லல் மிகுதியால் சோர்வடையாமலும் இன்ப துன்பம் இரண்டினையும் ஒப்பக் கருதும் நல்லறிவுடையவர்களே இத்தகவிற்றாகிய உள்ளம் உடையவர் ஆவர்.

(பன்னிரு திருமுறை வரலாறு முதற்பாகம் - பக்கம்1)

எனவே, "அருளொடு கூடிய சிவப்பரம்பொருளே திரு" என்ற ஆன்றோர் கருத்தை மனதிற்கொள்வோம். அடுத்து நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியது மூத்த திருப்பதிகம் என்ற பெயர்.

என் குருநாதன் திருவாசக சுவாமிகள் சிதம்பரம் பழைய மூத்த கோயில். எனவே, அத்தலத்தைப் பற்றிப்பாடிய பாடல்கள் மூத்த திருப்பதிகம் என வந்தது எனக் கூறுவார். காரைக்காலம்மையார் காலத்தால் முந்தியவர் (5ஆம் நூற்றாண்டு) ஆலங்காட்டு கூத்தனின் ஊர்த்துவ தாண்டவம் நாளும் பொழுதும் கண்டவர். இப்பழம்பதியை -

"நீடுவாழ் பழனமூதூர் நிலவிய ஆலங்காட்டில்
ஆடுமா நடமும் நீகண்டு ஆனந்தஞ் சேர்ந்தெப்போதும்
பாடுவாய் நம்மைஎன்றான் பரவுவார் பற்றாய்நின்றான்"

எனச் (61— காரைக்கால் அம்மையார் புராணம்) சேக்கிழார் பாடுகிறார். பக்தி இலக்கியத்தின் முன்னோடியான புனிதவதியார் பண்ணோடு கூடிய இசைப் பாட்டுக்குரிய யாப்பமைவோடு பதிகஞ் செய்தமையால் அவரின் பாசுரங்கள் மூத்த திருப்பதிகம் எனப் பெயர் பெற்றதாக ஆய்வாளர் கூறுவர்.

"தில்லை மூதூர் ஆடிய திருவடி" (கீர்த்தித் திரு அகவல்) என்பது வாதவூரர் வாக்கு. இந்த மூதூர் பழைய ஊர் எனப் பொருள்படும். தொன்மையான பதியிற் கோயில் கொண்டவன்மீது எழுந்தது கோயிற் திருப்பதிகம் எனவும் அமையும். இந்தக் கோயில் மூத்த திருப்பதிகம் பற்றி வித்துவான் வெள்ளைவாரணனார் எழுதிய பகுதியை இங்கு தருவது பொருத்தமே.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும்" எனத் தொடங்கும் இத்திருப்பதிகம், தில்லைச் சிற்றம்பலத்தில் அருட்கூத்து இயற்றும் இறைவனது தொன்மைவாய்ந்த பொருள்சேர் புகழ்த்திறத்தை விரித்துரைக்கும் பெருமையுடைய திருப்பதிகமாதலின் "கோயில் மூத்த திருப்பதிகம்" என வழங்கப் பெறுவதாயிற்று. காரைக்கால் அம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தினைப் போன்று, கோயில் சிறப்பிக்கப்பெறும். தில்லைச் சிற்றம்பலத்தைத் திருவாதவூர் அடிகள் பரவிப் போற்றிய இத்திருப்பதிகமும் பொருளால் முதன்மை உடையதாக அமைந்திருத்தலால் "கோயில் மூத்த திருப்பதிகம்" என்னும் பெயருடையதாயிற்று எனக் கருதுதல் பொருந்தும்." (பன்னிரு திருமுறை வரலாறு பாகம் 2, பக்கம் 155, 156)

எனவே, இவ்வாக்கத்தில் எடுகோளாய் அமைந்த சொற் பாவனைக்குப் பொருத்தமான விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தெளிவான பொருள் எனினும் சைவச் சான்றோர்களின் சிந்தனைக்கு விடப்படுகிறது.

ஆதாரம்:

1. பன்னிரு திருமுறை வரலாறு இரு பாகங்கள் - க.வெள்ளைவாரணனார்.
2. வேங்கடம் முதல் குமரி வரை, தொ.மு.பாஸ்கர தொண்டமான்.
3. திருநாலாயிரம், கமலக்கண்ணன் உரை.
4. பன்னிரு திருமுறை, சதுரா பதிப்பகம்.
5. திருவாசகம், கா.சுப்பிரமணியபிள்ளை உரை.



SureshAndTeam.com
"A trust-based partnership.
We will be with you all the way...."
RE/MAX
SURESH & TEAM
416-844-LOAN(5626)
We help you to unlock your dreams
RE/MAX®
Vision Realty Inc. Brokerage
Independently Owned and Operated
416-321-2228

# அவன் மாதொரு பாகன் ஆனதேன்?

திரு. சி.நம்பியாரூரன்



பிருங்கி மாமுனி விரைந்தனன் ஒருமுறை வண்டாய் உருவம் ஒன்றினை எடுத்தே
கைலாயம் தனிலே சிவனின் அருள்பெற இடைகளுக்கிடையே பறந்துசென்றே
வந்தே வலமும் இறைவனை மும்முறை ஈசனை மட்டும் வழிபடல் முறையே
பக்தனின் பாங்கிது சீர்தனை பெற்றிட முனிவர் கபடம் கண்ட கடவுளும்

அருள்தரு சாந்தனின் முன்றல் நண்ண நகைத்தே நகர்ந்தனர் இனிதே இறைவியும்
கண்டனன் காட்சி தயங்கினன் ஏனெனில் அவன் அரை அவள் அரை ஆகினர் காண்பீர்
சிவனார் இருந்தார் அருகே சக்தியும் பிந்தியே கண்டார் பிருங்கியும் செருக்கற
மடவாள் வணக்கம் தகுமோ தமக்கு அவன்அவள் ஒன்றே பலவாய் நிலையாய்

இறைவனும் இறைவியும் இணைந்து மாதொரு பாகன் ஆனார்கள். இந்தக் கதையை கவிதை வடிவில் எழுதினேன். சிவனும் சக்தியும் - ஆணும் பெண்ணும், ஒருவராகிய கருத்து இந்து மதப் பிரிவுகளுள் ஒன்றான சைவத்தில் மட்டுமே விக்கிரகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ராஜராஜ சோழன் சிவனை வழிபட திருவாரூர் போய் வருவதுண்டு. அவன் தஞ்சாவூரிலே சிவனை வழிபட விரும்பினான். அங்கு அவன் பிரமாண்டமான ஒரு ஆலயம் அமைத்தான். அதற்கு தக்ஷிண (தென் மேரு) என்று பொருந்த பெயரும் சூட்டினான். அங்கு மாதொரு பாகன் எனப்படும் அர்த்த நாரீஸ்வரர் என்ற புராணக் கற்பனைக்கு விக்கிரகமும் வடிப்பித்தான். ராஜராஜ சோழனின் மகன் முதலாம் ராஜேந்திர சோழனும் கங்கைகொண்ட சோழீஸ்வரம் என்று ஒரு ஆலயம் நிறுவினான். அங்கேயும் அர்த்த நாரீஸ்வரர் உருவத்தைக் காணலாம். சற்றே இடப வாகனத்தில் சாய்ந்தவண்ணம் சிவனும் பார்வதியும் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை ஆண் பாதி பெண் பாதியாகக் காட்சி கொடுக்கின்றனர்.

அர்த்தநாரீஸ்வரரின் அழகிய சிற்பத்தைப் பார்த்தார் அப்பர் என்று அழைக்கப்படும் நாயனார் திருநாவுக்கரசர். பக்திப் பரவசம் பெற்று உள்ளம் உருகினார். நாவுக்கரசர் என்ற பெயருக்கு இணங்க அவர் கவிஞனாயினார். இனிய தமிழில் தேவாரம் ஒன்றைப் பாடினார். உருவத்தின் எழிலை மெச்சி -

புதுவிரி பொன்செய் ஓலை ஒருகாது ஓர்காது
சுரிசங்கம் நின்று புரள
விதிவிதி வேதகீதம் ஒருபாடும் ஓத
ஒருபாடு மெள்ள நகுமால்
மதுவிரி கொன்றை ஒன்று சடைபாகம்
மாதர் குழல்பாக மாக வருவார்
இதுஇவர் வண்ண வண்ணம் இவர் வண்ண வண்ணம்
எழில்வண்ண வண்ணஇயல்பே.

ஒரு காதில் தங்கத் தோடு ஒளிர்கிறது. மறு காதில் சேறுபடிந்த சங்கு சுழல்கிறது. வாயின் ஒருபக்கம் வேத நாதம் எழுப்புகிறது. மறுபக்கம் புன்னகை வீசுகிறது. தலையின் ஒரு பக்கத்தில் சடை. சடையில் தேன் சிந்தும் கொன்றைப் பூக்கள். மறுபக்கத்திலே கருங்கூந்தல். இவரது அழகை எப்படிச் சொல்லலாம். இவரது அழகை எப்படிச் சொல்லலாம். இருவரின் அழகும் அழகே அழகு என்பது பொழிப்புரை. “குனித்த புருவமும்” என்ற பாடல் கேட்டும், அதற்கு ஆடிய பரதம் பார்த்தும் உருகாதவர் எவரும் இல்லை. அர்த்தநாரீஸ்வரர் கோலத்திற்கு அபிநய நடனம் அமைத்தால் எத்தனை சிறப்பாக இருக்கும் என்று எண்ணத் தோன்றும். “வேயுறுதோழி பங்கன்” என்ற மெட்டிற்கு மிகவே அமையும் பாடல் “புதுவிரி பொன் செய் ஓலை”.

அர்த்தநாரீஸ்வரர் கதை ஒரு புராணக் கதை. “புராணம்” என்பதற்கு “பழையது” என்பது கருத்து. புராணம் உண்மையானது என்று சொன்னால் புராணத்தின் சிறப்பு கெட்டுவிடும். புராணத்தில் உண்மைகள் இருந்தால் அவை அற்ப சொற்பம்தான். உண்மைக்குப் புறம்பானவை ஏராளமானவை. ஆனால் இவை இரண்டும் முக்கியமில்லை. புராணங்கள் வெளிப்படுத்தும் உண்மைகள் சிறந்தவை. ஆழமானவை. மனக்காட்சிகள் மூலம் உண்மைகளை உரைக்கும் வலிமை புராணங்களுக்கு உண்டு. கவிதைகள் போல பல மட்டங்களில்

கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. புராணக் கதைகளை அக்கு வேறு ஆணி வேறாக பிரித்துப் பார்க்கப்போனால் அவற்றின் வலிமையும் மகிமையும் போய்விடும்.

கடவுள் என்ற கருவூலம் வந்ததேன்? அக்கருவூலம் எப்படியெல்லாம் மாறியது! ஆதி மனிதனை அச்சுறுத்திய இயற்கையின் கோலங்கள் பல. இடிமுழக்கம், மின்னல், பல கொடிய மிருகங்கள் இவற்றுள் சில. இவை தன்னைத் தீண்டாமல் இருக்கவேண்டுமென்று மனிதன் மன்றாடினான். வழிபாடு இப்படித் தோன்றியது. வளத்தை வளர்த்த சூரியன், மழை ஆகியவற்றைத் தனக்கு உதவும்படியும் மனிதன் வேண்டினான்; வழிபட்டான். காலப்போக்கில் அவன் வழிபட்ட இயற்கைக் கோலங்களுக்கு மனித உருவம் கொடுத்தான். தன்னைப் பாதுகாக்கும் தெய்வங்களுக்கு தன்னைவிட அதிக வலிமை வேண்டுமல்லவா? தெய்வங்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட அவயவங்களையும் கொடுத்தான். தான் பாவித்த ஆயுதங்களுக்கு மேலதிக வலிமையைக் கொடுத்து அவற்றையும் தெய்வங்களின் கைகளில் கொடுத்தான்.

கடவுளை மனிதன் முதலில் ஆண் வடிவத்தில் அமைத்தான். ஆண் பெண்ணைவிட வலிமை உடையவன். அவன் குடும்பத்தைப் பாதுகாத்தான். தான்வாழும் குழுமத்தை எதிரிகளிடமிருந்து காப்பாற்றினான். தன்வாழ்வில் தனக்குப் பெண்துணை வேண்டுமென்றால் தான் படைத்த தெய்வங்களுக்கும் பெண் துணை வேண்டுமல்லவா? அவர்களுக்கும் வல்லமைகள் வேண்டுமல்லவா? மொத்தத்தில் தன் உருவத்தில் தன் தெய்வங்களை மேலதிக வல்லமைகள் உடையவர்களாகப் படைத்தான்.

ஒரு காலத்தில் பெண் தெய்வங்களுக்கு சக்தி என்று பெயரும் இட்டான். சிவன், பார்வதி. இவர்களில் பார்வதி சக்தியானாள். சக்தி இல்லாமல் சிவன் இயங்க மாட்டார் என்னும் ஒரு நிலைக்கு அவன் வந்தான். இந்தக் கட்டத்தில் மனிதன் மிகத் துல்லியமான உண்மையை அணுகினான். கடவுள் அவன் அல்ல; அவளும் அல்ல! கடவுள் என்பது 'அது" என்பதுதான் அது! இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாமே இயங்கியவண்ணமே உள்ளன. அசைவற்றுக் கிடக்கும் கல்லுக்குள்ளும் இயக்கம் நடந்துகொண்டே இருக்கிறது. இதற்குக் காரணம் சக்தி அல்லது இயற்கையின் ஆற்றல். சிவனும் சக்தியும் சமம் என்ற கருத்து அறிவு வளர்ச்சியின் மற்றொரு கட்டம். ஆணும் பெண்ணும் சமம் என்ற சிந்தனையில் தோன்றியது அர்த்தநாரீஸ்வரர் என்ற கருவூலம்.

நான்கு வேதங்களில் மிகப் பழைமையானது இருக்கு வேதம். இது 6000 ஆண்டுகளுக்கு முந்தியது. அதில் பலவகைக் கிரிகைகளுக்கும் வழிபாடுகளுக்கும் மந்திரங்கள் உள்ளன. நெருப்பு, காற்று போன்றவற்றிற்கு அந்நாட்களில் வழிபாடுகள் நடந்தன. ஆரோக்கியம், ஐஸ்வரியம், மக்கட்பேறு முதலியவற்றிற்கும் வழிபாடுகள் நடத்தப்பட்டன.

வேதத்திற்குப் பிந்திய காலம் உபநிடத காலம். தெய்வக் கொள்கைகளில் மாற்றங்கள் தோன்றின. உபநிடதக் கருத்துக்கள் சில:

"தன்னை எல்லா உயிர்களிலும் எல்லா உயிர்களையும் தன்னில் காண்பவனும் பயத்தில் இருந்து விலகுகிறான்."

"எல்லாமே பிரம்மம் - தானும் பிரமம்"

"அதற்கு இரண்டாவது இல்லாத அது – எல்லாம் ஆனது. அப்பால் எதற்கும் ஆனது."

முந்திய இருக்கு வேதத்திலும் இவ்வெண்ணங்கள் பிறந்துவிட்டன.

"உண்மை ஒன்றே. முனிவர்கள் அதற்குப் பல பெயர்கள் இடுவர்."

கடவுளை மனித அல்லது வேறொன்றான பிறிதொன்றான தனிப்பட்ட பொருள் எனக் கொள்ளல் தர்க்கவியலுக்கும், உன்னத சமய விளக்கத்திற்கும் தத்துவ இயலுக்கும் ஒவ்வாதது.

<u>அர்த்தநாரீஸ்வரர் தமிழ் கவிதையின் ஆங்கில வடிவம்.</u>

1. Bringi the grand old sage once sped to Mount Kailash for Shiva's grace tread three circles round the lord be blesses for this, his devotee mode
2. Ushered before his benign clam Bringi paused for there he found Shiva with Shakti wrapped in arm warship women was be bound
3. Bringi would turn a tiny bee to fly a course between their waists only the lord to circle do you see canny glees Shiva sawin sageseyes
4. Shiva smiled, edged and snuggled she lo they fused shiva half shakti half late it dawned on humble sage he said she are me, the Eternal.

# இறைவன் இருப்பது எங்கே?

கனக மனோகரன், துணை முதல்வர், கனடா இந்து மாமன்றம்

இறைவன் இருக்கின்றானா? என்ற வினாவினை எழுப்புகின்றவர்களும் இருக்கின்றார்கள். **ஆண்டவன் என்று ஒருவன் இல்லையா? அப்படியானால், அவனை இன்றே படைத்துவிடுங்கள்.** இது... இறைவன் இவ்வுலகிற்கு ஓர் இன்றியமையாத் தேவை என்பதை அறிவுறுத்தும் மேலைநாட்டறிஞர் 'கார்லைல்' என்பவரின் மேலான கூற்று. இறைவனின் இருப்பிடம் எது என்பது இந்த பரந்த உலகில் பரவலாகக் கேட்கப்படுகின்ற பிறிதொரு கேள்வி.

**ஈடிணையும் இலாதது; எதிர்பார்ப்புகளும் இலாதது**

இறைவனின் உறையுளை காணமுன்னர் இறைமையின் உறுபொருளை தெரிந்தும் தெளிந்தும் கொள்வது நல்லது. இறைசார் ஓர் உன்னத உணர்வு நிலை அல்லது உறவு முறைதான் ' 'இறைமை' எனலாம். ஐம்புலன்களைப் பயன்படுத்தி பார்த்தல், கேட்டல், நுகர்தல், உணர்தல், உண்ணல் என்னும் ஐந்து ஜீவாதார செயற்பாடுகளை நாம் புரிகின்றோம். ஆனால் இறைமையோ இந்த ஐம்புலன்களுக்கு ஆட்படாத - அப்பாற்பட்ட பேரானந்தத்தை நாம் பெற ஆவன செய்கின்றது என்பது ஆன்மீகஞானிகளின் அனுபவக்கூற்று.

**பத்து ஆசிரியர்கள் ஒரு குருவிற்குச் சமம்**
**நூறு குருக்கள் ஒரு தந்தைக்குச் சமம்**
**ஆயிரம் தந்தையர் ஒரு தாய்க்கு சமம்**

இது 'மனுநீதி' வகுத்த சமன்பாடு. தமிழ்த் தென்றல் வி.க. அவர்கள் தனது பெண்ணின் பெருமை என்ற நூலில் பெண்மை > தாய்மை > இறைமை என்ற ஓர் ஏறு வரிசையை ஏற்படுத்தி உள்ளார். தன்னலமற்ற தாய்மையின் தூய்மையை விஞ்சிடும் அதி பெற்றியை இறைமை பெற்றிருக்கின்றது. இறைமைக் கோட்பாடும் எதிர்ப்புகட்கு உள்ளாவதுண்டு. ஆயின், அது அறவே எதிர்பார்ப்புகள் இல்லாதது!

**மனிதருக்கு பிடித்த மதங்களும் மதம் பிடித்த மனிதர்களும்**

வருத்தத்திற்கு பத்தியம்; வழிபாட்டுக்கு சத்தியம் என்பர். Truth is God. இது உலகளாவிய வகையில் ஏற்கப்பட்ட உன்னத இறையியல் கோட்பாடு. ஆனால் God is Truth என்ற கோட்பாடுதான் சஞ்சலங்கள், சர்ச்சைகள், சச்சரவுகள், ஏன் சாவுகட்கும் காரணம் ஆகின்றது.

'God is Love' என்பது அனைத்துலகும் அத்தனை மதங்களும் அங்கீகரிக்கின்ற ஒப்பிலாத தத்துவம். Love is Blind. எனவே, God is Blind என்னும் தர்க்க வாதம் புரியும் குதர்க்கவாதிகளும் உள். எமக்குப் பிடித்த மதம் இருப்பது பிழையல்ல. எனில் மதம் எமக்கு பிடிப்பது சரியல்ல. மாற்றுக் கருத்துக்களையும் மாற்று மதக் கூற்றுக்களையும் மதிக்கும், குறைந்த பட்சம் சகிக்கும், பக்குவம் எமக்கு இருக்குமெனில் இன்றைய - சமகால அகில உலக சரித்திரமே ஒரு சமய வெறிச் சரித்திரமாக மாறும் அவலநிலை ஏற்பட்டிருக்க முடியுமா?

**குன்றக் குடியாரும் ஈ.வே.ரா பெரியாரும்**

தனது தெய்வீகத் திருப்பணிகளை முன்னெடுக்கவும் அவற்றை முன்னேற்றகரமான முறையில் செயற்படுத்தவும் தோதான சீடன் நரேந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட சுவாமி விவேகானந்தர் தான் என்ற உண்மையை தனது ஞான திருஷ்டியால் தெரிந்து கொண்ட சுவாமி பரமஹம்சர் ஒரு நாள் ஒரு காளிகோவில் கூரை மேல் ஏறி நின்று கொண்டு தன்னை மறந்த நிலையில் **"நரேந்திரா! நீ எங்கே இருக்கிறாய்? எப்போது என்னிடம் வரப்போகிறாய்?"** என்று கூவி அழைத்தாராம்.

சுவாமி விபுலானந்த அடிகளாரும் தனது தீர்க்க தரிசனத் திறத்தால் தனது அடியொற்றி எம் செம் மொழியையும் சிவனெறியையும் வளர்க்கவுள்ள ஓர் அடிகளாரை அடையாளம் கண்டிருந்தார். அன்னவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியப் பணிபுரிந்த காலையில் ஒருநாள் அவர் பல்கலைக்கழக வளாகத்தில் நின்றிருந்த தெய்வீகக் களை பொருந்திய ஒரு சிறுவனால் கவரப்பட்டாராம். அவனை அருகில் அழைத்து, அணைத்து "தமிழைப் படி, கடவுளை நம்பு" என்று கூறி ஆசீர்வதித்தாராம். அச்சிறுவன் பிந்நாளில் ஓர் ஆன்மீகஞானி ஆனான். ஆதீன முதல்வராகிய அதே அரங்கநாதன் பராதீனமடையும் சைவத்தமிழுக்கு பாதுகாப்பு அரன் ஆனான். நாத்திகர்களின் அறைகூவல்களை ஏற்று சொற்போர் அரங்கங்கள் கண்டும் அயராது உழைத்தும் சைவத்தமிழை சால்புற வளர்த்தான். குவலயமே அவரை குன்றக்குடி அடிகளார் என அழைத்தது. அடிகளாரின் முழுமுதல் கொள்கை வைரியாக அன்று இருந்த ஈ வே ரா பெரியார் ஒருநாள் இரவு அடிகளாரின் ஆச்சிரமத்தில் தங்கினாராம். மறுநாள் அதிகாலையில் குளித்தல் அறையால் அடியார் வெளியே வருகையில் பெரியார் திருநீற்றுத் தட்டத்தை அவருக்கு நீட்டினாராம். குன்றக்குடியார் குமிண் சிரிப்போடு "ஐயா, நீங்கள் எப்போது அணி மாறினீர்கள்?" என்று கேட்டாராம். பெரியாரின் பதிலில் மாற்றுக் கருத்தாளர்கள் மாட்டு அவர் கொண்டிருந்த மதிப்பு வெளிப்பட்டது. "இது எனக்காக அல்ல உங்களுக்காக." 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற பேரறிஞர் அண்ணாவின் அறிவுக்கூற்று பெரியார் பாசறையில் அவர் பெற்ற அனுபவக் கூற்றாக இருக்கலாம்!

**உருவ வழிபாடுகளும் உருவில் முரண்பாடுகளும்**

இறைமையை உருவகப்படுத்திய சமயவாதிகள் அதற்கு இறைவன் என்று நாமகரணம் செய்தனர். பரந்த இந்த உலகத்தில் இயக்கத்தில் இருக்கின்ற பற்பல சமயங்களுமே இந்த 'இறைவன்' எனும் கொள்கையை அங்கீகரித்து, அணைத்து, தம்மோடு இணைத்துக் கொண்டுள்ளன. 'Idol Worship' எனப்படும் உருவ வழிபாட்டுடன் உடன்படாத பிரதான மதங்கள் இஸ்லாமும் 'புரட்டஸ்டண்ட்' மதமும் எனலாம்.

கோட்பாட்டு நெறிகளிலும் வழிபாட்டு முறைமைகளிலும் நெகிழ்வுத் தன்மைகளை நிறையவே கொண்டிருப்பது எங்கள் இந்து மதம். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வழிகளில் நாம் விரும்பும் முறைமையை நாம் தேர்ந்திட முடியும். ஏன், நாயன்மார் நால்வருமே சன்மார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், தாசமார்க்கம் எனும் தனித்தனி வழிகளை தத்தம் நெறிகளாகக் கொள்ளவில்லையா? வகைமைப் பாட்டியலில் வல்ல எம் முன்னவர்கள் அருவம் உருவம், அருவுருவம் எனும் மூவேறு வழிபாட்டு முறைமைகளை வகுக்கவில்லையா?

'Polytheism' எனப்படும் பல தெய்வ வழிபாட்டு முறைதான் இந்துக்களின் இறைவழிபாட்டில் அடிநாதமாக அமைகின்றது! எமது தெய்வங்களை நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும், இருமுடி சுமந்தும் வழிபட முடிகின்றது.

ஆதியில் இந்துசமயத்தில் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் ஆறு உபபிரிவுகளும், உட்பகைகளும், உருவாகக் காரணர் ஆதிசங்கரர். ஒவ்வொரு மதத்திற்கும் தனிப்பெரும் தெய்வங்கள் அருட்காட்சி கொடுத்தார்கள்; அருட் பரிபாலனம் புரிந்தார்கள்.

இன்று இந்த மதங்களுக்கு இடையிலான உட்பூசல்கள் தணிந்துள்ளன. பல பொருட்களும் ஓரிடத்தில் கிடைக்கும் பல்பொருள் அங்காடிகள் போல் அனைத்து தெய்வங்களும் ஒரே இடத்தில் காட்சி தரும் அருங்காட்சியகங்களாக இந்துக்கோவில்கள் இன்று அமைந்திருப்பது ஏற்றகரமான ஒரு மாற்றம், அல்லது முன்னேற்றம்.!

இன்றோ, சக்தி வழிபாடு ஒரு சக்தி மிகு வழிபாடாக பரந்து விரியப் பார்க்கிறோம். முப்பெரும் தேவைகளைத் தீர்க்க முப்பெரும் தேவியர்கள். செல்வம் வேண்டுவார்க்கு இஷ்ட தெய்வமாக இலட்சுமி. இட்ட லஷ்மியை அட்ட லஷ்மிகள் ஆகவும் வழிபடுகிறோம். பரிகாரம் வேண்டிய நவக்கிரகங்களை பக்திப் பவ்வியத்தோடு பணிகின்றோம். நவக்கிரக நாயகி என்று தனியொரு துர்க்கை அம்மனைத் தொழுகின்றோம்.

இறைவியைக் கூட உருபியாக - சொரூபியாக - அரூபியாக ஏன் குரூபியாக கண்டு வழிபடுகின்றோம். அன்புருவான ஆண்டவனை ஒரு கோரத்தாண்டவன் நிலையில் நிறுத்தி வைத்து பயபக்தியுடன் கும்பிடுகின்றோம். சுகம் வேண்டிய அணையும் அத்தனை சுடலையில் ஆடும் பித்தனாக்கியும் பிச்சாண்டியாக்கியும் திருவிழா எடுக்கிறோம். நம் கல்யாணத்திற்கு நாம் இறைவனிடம் நேர்த்திகள் வைப்போம். பார்வதி-பரமசிவன் திருக்கல்யாணத்தை நாம் நடத்தி பார்த்துக் களிப்போம்.

இவை அனைத்திற்கும் இடந் தருகின்ற இறுக்கமான கோட்பாடுகள் இலாத இனிய மதம் எம் இந்துமதம்! தேவைக்கு ஏற்ப நெகிழ்வுகட்கும் பக்திச்சுவை சேர்க்கும் நிகழ்வுகட்கும் சம்மதம் தருகின்ற எம்மதம் தெய்வங்களையும் பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் காட்ட விளைகின்றது.

சைவ சமயிகளின் முழுமுதற் கடவுளான சிவன் பற்பல திருவுருவங்களில் அருட்காட்சி தருகிறார்.

**"யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி மாதொரு பாகனார் வருவார்."**
முத்தான இக்கருத்தை மொழிவது சிவஞானசித்தியார்.

### ஆலயங்களுக்கு அவசியங்கள் உளதாம்

உடல் நோயிற்கு மனித மருந்தகம், உளநோவிற்கு இறைவன் அருந்தலம் எனலாம். கடவுளே மனிதனைப் படைத்தான் என்கிறது ஆத்திக ஞானம். இல்லை, இல்லை; மனிதனே கடவுளைப் படைத்தான் என்பது நாத்திக வாதம்.

ஒரு சமயம் கலைஞர் கருணாநிதி "நான் தென்றலை தீண்டியது கிடையாது. தீயை தாண்டியிருக்கிறேன்'' என்று எழுதினார். கலைஞரின் எழுத்து நடையை ஓசைநடை என்று குறிப்பிடும் கவியரசு கண்ணதாசன், தனது தென்றல் இதழில் "தென்றல் தான் எம்மை தீண்டும். எம்மால் எப்படி தென்றலை தீண்ட முடியும்?' என்றெழுதி கலைஞரை சீண்டியிருந்தார். தென்றலாய் மகிழ்வு தரும் காற்று சண்டமாருதம் ஆகையில் அழிவு செய்யும். காற்றில்லாத இடங்கள் கனத்திலும் சரி புவனத்திலுஞ் சரி இருக்க இயலாது. ஞாலம் மட்டுமல்ல நம் காயமும் (உடம்பும்) காற்றினால் நிரப்பப்பட்டிருக்கின்றது. எனவேதான் சைவசித்தாந்திகள் ''காயமே இது பொய்யடா இது வெறும் காற்றடைத்த பையடா'' என்கிறார்கள். காற்றும் கடவுளைப் போல சர்வ வியாபகம் பெற்றிருந்தும் நாம் சுத்தமான-சுகந்தமான காற்றினைத் தேடி திறந்த வெளிகட்கோ திரைகடலின் கரைகட்கோ, நெடிந்த மலைகட்கோ போகின்றோம். சர்வேஸ்வரனும் சர்வ வியாபகம் பெற்றவன்தான். எங்கணும் காணினும் சக்தியடா ஏழ்கடல் அவனது வண்ணமடா எனப் பா வடித்தவன் பாவேந்தன். எம்மளவில் விண்ணின் மீனிலும் இறைவன்; கண்ணின் மணியிலும் இறைவன்; மண்ணில் மலையிலும் இறைவன்; பண்ணின் சுவையிலும் இறைவன்; எண்ணிலும் எழுத்திலும் இறைவன்; பொன்னிலும் புகழிலும் இறைவன்; மண்புழுவிலும் இறைவன். இருப்பினும் நாமெலாம் தெய்வதரிசனம் காண கோவில்களுக்கு போகின்றோம். அங்கு பக்திப் பரவசத்தை நாம் பெறுகின்றோம்.

**"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"**

அறிவுச்சுடர் ஔவையின் இந்த அமுதச் சொற்றொடர்களை நாம் புறந்தள்ளி விடுதற்கில்லை. பக்தி எமக்கு ஜீவமுக்தியை தருகிறதோ இல்லையோ அது மனப்பக்குவத்தை தருவது நிச்சயம். பத்தையும் பலதையும் சொல்கின்ற பாரதி பக்தியின் பலனைச் சொல்லலாமா?

பக்தியுடையார் காரியத்திற் பதறார்
மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்கும் தன்மை போல்
மெல்லச் செய்து பயனடைவார்

**"ஐம்புலத்தாரை ஓம்பல் தலை"** என்ற வள்ளுவப் பெருந்தகை தென்புலத்தாருக்கு (இறந்த எம்

மூதாதையருக்கு) முதலிடம் தருகின்றார். சித்திரைப் பௌர்ணமி தினத்தில் இறந்த தாயர்க்கும், ஆடி அமாவாசை தினத்தில் இறந்த தந்தையர்க்கும் நாம் ஆலயங்களுக்கு போய் மோட்ச அருச்சனைகள் செய்வது வழக்கம். எம் மூதாதையர் இறந்து 30, 40 ஆண்டுகளின் பின்னரும் அவர்கட்கு மோட்ச அருச்சினைகளை செய்வது ஓர் அர்த்தமற்ற செயற்பாடாகவே எனக்குப் படுகிறது. அவர்களின் மோட்ச லோக யாத்திரை அந்த அளவிற்கு நீண்டு நெடிந்த ஒன்றாக இருக்க முடியுமா? எனின், அவர்கட்காக வருடத்தில் ஒரு தினத்தையாவது ஒதுக்கி, அவர்கட்காக வழிபாடுகளில் ஈடுபட்டு அவர்கள் பற்றிய நினைவுகளை அசை மீட்கையில் நாம் பெறுகின்ற நிம்மதியும் மனநிறைவும் நிச்சயமான ஒரு நல்ல பலாபலன் எனலாம்!

சாதாரணர்களுக்கு ஆலயங்களும் அவற்றில் இடம்பெறும் அருச்சினைகளும், பஜனைகளும், சடங்குகளும் சமயஞ்சார் கலை, இசை நிகழ்வுகளும் இன்றியமையாத விடயங்களாக இருக்கவே செய்கின்றன. ஆனால் ஆன்மீகவாதிகள் ஆண்டவனைத் தேடி அலைபவர்கள் அல்ல, தம்முள் இறைவனைக் காண்பவர்கள், ஆத்மநேயவாதிகள் இறைவனின் தரத்திற்கே தரமுயர்த்தப்படுபவர்கள். பரமனே அவர்களைப் பணிவானாம்.

"பசி என்று வந்தவரை
புசி என்று தந்தவனை
பரமனும் பணிவானடா - கனிந்து
பக்கத்தில் வருவானடா"

திரையிசை இலக்கியம் வாழ்வாங்கு வாழ வகுத்த இலக்கணம் இஃது.

**"கோ' கள் இல்லா கோவில்கள் உளதாம்**

கோ + இல் எனில் இறைவனின் இல்லம் என்று பொருள். ஆனால் கோவில்கள் அனைத்துமே இறைவன் இருப்பிடங்கள் ஆகிட முடியுமா? கோவில்கள் கருங்கல்லாலும் களிமண்ணாலும் மட்டுமல்ல இரும்பாலும் விரிபசும் பொன்னாலும் கட்டப்படுவதும் உண்டு. **கண்ணிலே அன்பிருந்தால் கல்லிலே தெய்வம் வரும்** எனப் பாடியவனும் கண்ணதாசன். ஆயினும், இந்த ஆலயங்கள் அநாதரவானவர்களை அரவணைக்கும் அருளாலயங்களாக செயற்படாவிடத்து ஆங்கே அன்பின் வடிவமான இறைவன் இருப்பதோ அவனது அருட்கிருபை கிடைப்பதோ துர்லபமே! சுவாமி விவேகானந்தர் ஒருமுறை சொன்னார், ஷஇந்தியாவில் ஆன்மீகம் நிலைபெற்றிருப்பதால்தான் இந்த உலகம் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது". ஆனால் பாருக்குள்ளே நல்ல இந்த பாரத தேயத்தில் ஒரு பொற்கோவில் வன்முறையாளர்களின் கூடாரமாக மாறியதால் காந்தி தேச காவியத்தில் ஒரு கறைபடிந்த அத்தியாயம் இடம்பெற்றிருக்கிறது. கருணையை-கண்ணியத்தை-கட்டுப்பாட்டை வளர்க்க வேண்டிய கடப்பாட்டை கொண்டிருக்க வேண்டிய சில ஆலயங்களின் செயற்பாடுகளால் நொந்த உள்ளங்களுக்கு இதம் தரவேண்டிய மதம் இந்த உலகிற்கே எமனாக மாறி வரப் பார்க்கிறோம்.

**கோவில்கள் அல்லா 'கோ' இல்கள் உளதாம்**

ஆலயங்கள் மட்டுமா ஆண்டவனின் இருப்பிடங்களாக இருக்கமுடியும்? இல்லவே இல்லை. அவன் கோவில்கள் அல்லா இடங்களில் உள்ள கருங் கல்லிலும் இருப்பான். கனிவுடையார் இல்லிலும் இருப்பான்; இனிமையுள சொல்லிலும் இருப்பான்; புனிதமுளார் உள்ளிலும் இருப்பான். கடந்தும் உள்ளும் இருப்பதால் அவனுக்கு கடவுள் என்ற பேர். எனவே அவன் இவற்றை கடந்தும் இருப்பான்.

தெளிந்த நீரில்தான் எம் முகம் தெரியும். நெளிந்த மனங்களுக்கே தெய்வதரிசனமும் கிட்டும். 'கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்'. இது, பொருள் பொதிந்த ஒரு பொதுமொழி. கலைஞானி கல்லிலே நாயைக் கண்டான்; விஞ்ஞானி கல்லிலே கதிரியக்கம் கண்டான். மெய்ஞானி கல்லிலும் கடவுளைக் கண்டான்.

பொதுவில் வண்ணத்துப் பூச்சிகளைப் பிடிக்கின்ற சின்ன வயதுச் சிறுவன் அவன். அந்த ஒன்பது வயதுச் சின்னவனின் எண்ணப் பூங்காவில் எப்படியாவது இறைவனின் இருப்பிடத்தை கண்டு பிடித்துவிட வேண்டும் என்ற ஆவலே பூத்துப் பொலிந்து கிடக்கிறது. ஒரு நாள் ஒரு சத்திரத்தில் சோர்ந்திருந்த அந்த வங்கச் சிறுவனுக்கு இறைவனின் இருப்பிடம் தெரிய வருகிறது. அந்த பின்னாள் கவிப்பேரரசின் கன்னிக்கவிதை அன்றுதான் வெளியே வருகிறது. **"என் கண்ணில் கருமணியாய் நீயிருக்க உன்னை எங்கெல்லாமோ தேடி அலைந்திருக்கிறேன்".** அச்சிறியவன் பின்னர் பெரியவனும் ஆகிறான். நோபல் பரிசுக்கு உரியவனும் ஆகிறான். அந்த ரவீந்திரநாத் தாகூர் 'ஞானமாலிகா' என்ற தத்துவநூலில் இறைவன் கோவில்களில் குடியிருக்க முடியாது என்று ஆணித்தரமாக அறைந்த கருத்துகள் இதோ....

இறைவன் ஓர் இருண்ட அறையில் பூட்டப்பட்ட கதவுகளின் பின்னால் நாற்சுவர்களின் நடுவில் அடையுண்டு கிடப்பான் என்று நான் நம்பவில்லை. அவன் உண்மையான உழைப்பாளிகளிடத்தில் குடிகொண்டிருப்பான்.

ஓர் ஈழத்தமிழ் உணர்ச்சிக் கவிஞன் தனது அழகுத் தமிழ்க் கவிதை வரிகளால் உழுகின்ற உழவனை தொழுகின்ற இறைவன் ஆக்குகின்றான்.

பழனியில் இல்லை மதுரையில் இல்லை
படைத்த தலைவனடா - அவன்
கழனியில் நின்று வளர்பயிர் செய்வான்
கடவுள் உழவனடா

கண்ணதாசனின் இன்னோரன்ன கவிதைப் புதையல்.........

**உழைக்கும் கைகள் எங்கே? உண்மை இறைவன் அங்கே! அணைக்கும் கரங்கள் ஆரிடமோ ஆண்டவன் இருப்பது அவரிடமே!**

இக் கவியரசன் மேலும் பாடுகிறான்....

**என்கைக் கோலில் அவன் உள்ளான்**
**என்நா முழுதும் அவன் இல்லம்**
**என்மன மெல்லாம் அவன் கோவில்**
**என்னில் 'நா'னாய் அமர்ந்துள்ளான்**

இக்கட்டுரையை வரைய முற்பட்ட என்னில் கண்ணதாசன் இக்கவிதை உண்மையில் ஓர் உன்மத்தத்தையே ஏற்படுத்தியது. கண்ணதாசன் தள்ளாடும் போதையில் கவி பாடிய மாமேதை. அவன் குடித்து, புகைத்து தன்னைக் கெடுத்தவன். கூத்தியர் உறவில் களித்தவன். இவற்றை எல்லாம் நேர்மையுடன் ஒப்புக்கொண்ட நெஞ்சமுழுத்தக்காரன் அவன்!

பொன்னி நதி அவ்வளவு
போன இரத்தம் போனபின்னர்
கன்னியரை ஏசுதடி உள்ளம்-அது
காலிடறி யானைவிழும் பள்ளம் என்றும்
முத்தம் என்றும் மோகம் என்றும்
சத்தமிட்டு சத்தமிட்டு
புத்திகெட்டு போனதொரு காலம்
என் உடலில்
இரத்தமற்று போனபின் எனக்கு
வந்ததடி ஞானம்

என்றும் பாடி தன் திரைந்த - சிதைந்த வாழ்வை 'திறந்த புத்தகம்' ஆக்கிய நேர்மையாளன் கண்ணதாசன். தனது சுயசரிதையான வனவாசம் என்ற நூலில் தன்னை வாசகர் முன் 'நிர்வாணமாக' வைத்த உத்தமன்.

1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் கோலாகலமாய் ஆரம்பித்து கொலைக்களம் ஆன நிலையில் முடிவுற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் "தமிழில் தன் வரலாற்று இலக்கியங்கள்" என்ற தலைப்பில் சமர்ப்பித்த தனது அற்புதமான ஆய்வுக் கட்டுரையில் பேராசிரியை சாலினி இளந்திரையன், காந்தியின் சத்தியசோதனையை விடச் சிறந்தது கண்ணதாசனின் 'வனவாசம்' என்ற குறிப்பிட்டார்.

பின்னொரு சந்தர்ப்பத்தில் கண்ணதாசன் "தன் தவறுகளில் இருந்து தன்னைத் திருத்துபவன் முட்டாள். பிறர் தவறுகளில் இருந்து தன்னைத் திருத்துபவன் புத்திசாலி. நான் முட்டாளாகி விட்டேன். உங்களைப் புத்திசாலிகள் ஆக்கவிரும்புகின்றேன். நான் சொல்வதனை செய்யுங்கள்; நீங்கள் உருப்படுவீர்கள். நான் செய்வதனை செய்யாதீர்கள். நீங்கள் உருப்படவே மாட்டீர்கள்" என்று எழுதி இன்னொரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தையும் அவனே செய்கிறான்.

சிக்காகோ நகரில் தன் கால் பதித்த சுவாமி விவேகானந்தர் மேன்மை கொள் இந்து நீதியை இந்த மேதினி அறியச் செய்தார். அதே சிக்காகோ நகரில் தன் கதை முடித்த கண்ணதாசனோ **'அர்த்தமுள்ள இந்துமதம்'** என்ற மகுடத்துடன் பல பனுவல்களைப் படைத்து அதிகம் படியாதவர்க்கும் இந்து மத அர்த்தங்களை புரிய வைத்தான். பாரதி (கலைமகள்) கடாட்சம் கிடையாமலா பாரதி தன் பன்னிரண்டாம் அகவையில் பாரதி பட்டம் எடுத்தான்? கண்ணதாசனின் கைக்கோலில் கடவுள் இல்லை என்றால் பள்ளிப் படிப்பையே பாதியில் நிறுத்திய அவனால் எப்படி அறிஞப் பெருமக்களும் அங்கீகரிக்கின்ற தத்துவ முத்துகளை அள்ளி அள்ளிச் சொரிந்திருக்க முடியும்?

முடிவாக, இறைவன் இருப்பது எங்கே? அவன் வருவாய் கேட்டு கலையாமல் வருவார் பார்த்து அரவணைக்கும் புனித கோவில்களிலும் இருப்பான். மனிதப் புனிதர் இடத்திலும் அவன் குடி கொண்டிருப்பான். இனியவை அனைத்திலும் அவன் இருப்பான். இழிந்தவர், நலிந்தவர் எனில் அவன் துணை இருப்பான். நாமும்,

**தெய்வம் உண்டென்று பகருவோம்!**
**தெள்ளு தமிழையும் பயிலுவோம்!**

**காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியம்.**

**காமம் என்பது**: தனம், தான்யம், புத்திர பவுத்திராதிகளின் பேரில் அதிகப் பிரீதி வைத்தல். இதனாற் துயர் அடைந்தவர்கள் - நரகாசுரன், வாலி, சந்திரன் முதலியோர்.
**குரோதம் என்பது**: ஒருவருக்கு கெடுதி விளைவிக்கப் பிரயத்தனம் செய்ய இச்சைகொள்ளுதல். இதனால் துயரமடைந்தோர் பகாசுரன் முதலியோர்.
**லோபம் என்பது**: தனது சொத்திலிருந்து ஞானிகளுக்குக் கூட சிறிதேனும் கொடுக்கக்கூடாது என்னும் எண்ணமிருத்தல். இதற்குச் சான்று துரியோதனன்.
**மோகம் என்பது:** புத்திர களத்தினரின்மீது அதிகப் பிரீதி வைத்துத் தனக்கு உண்டாயிருக்கும் பொருள் போதாதென்றும், இன்னும் கொஞ்சம் அதிகமாய்ச் சம்பாதிக்க வேண்டுமென்னும் ஆசையை விருத்தி செய்தல். புத்திர சோகத்தால் மரணம் அடைந்தவன் தசரதன்.
**மதம் என்பது:** திரவியம் அதிகரிப்பதனால் இதரர்களை லட்சியம் செய்யாது பேசுதல். இதனால் துயரடைந்தவன் கார்த்தவீரியார்ச்சுனன்.
**மாற்சரியம் என்பது பொறாமை**: தன்னைப்போல் பிறரும் சுகம் அனுபவித்தலைச் சகியாமை. இதற்கு உதாரணம் சிசுபால தந்த வக்கிரன்.

# யார் கடவுள்?

**திரு கு.வி.கந்தசாமி**

நாம் புலம்பெயர்ந்து கனடியத் திருநாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மேற்படி கேள்விக்கு விடைதேடி, கனடியத் தமிழ் வானொலிகளில் விவாதங்கள் நடாத்துகின்றோம். விஞ்ஞான, மெய்ஞ்ஞான அறிவுமிக்க மேதையாகவுள்ள டாக்டர் ஆர்.இலம்போதரன் சிறந்த விளக்கமளிப்பதையும் அவதானிக்கலாம். இலங்கைத் தமிழர்கள் முப்பது ஆண்டுக்குள்ளாகவே கனடாவில் பெரிதாகக் குடியேறியவர்கள். கடவுள் நம்பிக்கை மிக்கவர்கள். குறுகிய காலத்தில் ஒன்ராறியோ மாநிலத்தில் அரசில் பதியப்பெற்றுள்ள அறுபதுக்கு மேலாக இந்து ஆலயங்கள் கட்டி எழுப்பப்பெற்றுள்ளன. இவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி அடைவதை அவதானிக்கலாம். இவை கடவுள் நம்பிக்கையின் காட்சிகளின் பிரதிபலிப்பு. இந்து சைவ ஆலயங்களின் நாளாந்த நடைமுறைகளைச் செயலாக்குவது அந்தணப் பெருமக்களேயாவர். அவர்களின் தனித்துவ சாதுரியத்தினால் பல்லாயிரம் பக்தர்கள் நாள்தோறும் கூடுவதும், நன்கொடைகளை வாரிவழங்குவதும் பூசை முறைகள் பெருகுவதும் நாம் காண்கின்ற காட்சிகளேயாகும்.

இப்படி இருக்க, மேற்படி கேள்விக்கு விடை தேடியபடி வானொலிகளில் ஆண்களும் பெண்களும் விவாதிப்பதும், தெளிவற்று பிதற்றுவதும் கண்கொள்ளாக் காட்சியாகும். அந்தணர்கள் இந்து ஆலயங்களின் அதிகார பூசகர்களாக ஆதிக்கம் பண்ணுவதன் இரகசியம் என்னவாகும்? இதற்கு விடை பகர எத்தனை அறிஞர் வந்தாலும் நாம் ஏற்பதற்கில்லை. வள்ளுவ நாயனார் தீர்ப்பை எவரும் மறுக்கமுடியாது. தீர்ப்புத்தான் என்ன?

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்”

இதற்கு உதாரண புருஷர்தான் அந்தணர் என்பவர்கள். இவர்கள் அறவோர். காரணம் - செந்தண்மை கொண்டு ஒழுகுவதாலாகும். உலகில் நடமாடும் சீவசெந்துக்களைக் கொல்லாமலும் அவற்றின் ஊன் உடம்பை, மாமிசத்தை உண்ணாமலும் இருப்பவர்களில் முதலானோர் அந்தணர்.

இந்து சமயத்தவர்களின் தெளிந்த அறிவை மறைத்திருப்பது அவரவர் செய்த பாவ புண்ணிய செய்கருமங்களின் விதிப்பயனாகும். கடவுள்=கட+உள். இதன் விளக்கம் எல்லாவற்றையும் கடந்தவர். ஆயினும் எல்லாவற்றுள்ளும் இரண்டறக் கலந்திருப்பவர். இந்த உண்மையை உணராதிருப்பதற்கான காரணம் அவரவர் செய்கைகள் வாயிலாகச் சேகரித்துள்ள “கர்ம” வினைப்பயனாகும்.

சைவ சமயத்தின் முப்பெருந்தத்துவங்கள்: 1. பதி =கடவுள் 2. பசு = ஆத்துமா/உயிர், பிராணன் 3. பாசம் = (அ) ஆணவம். இது பசுவோடு அனாதியாக அண்டியிருப்பது. (ஆ) கர்மம் = செய்வினைப் பயன். (இ) மாயை = மாய்வது – ஆவதும், அழிவதும். (ஐம்பெரும் பூதங்கள்) இவை நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம். ஒன்று வேறாக மாறும் தன்மையது. (விரித்துரைக்கப் புகுமிடத்து மிக மிக விரிவாகும்.)

திருவள்ளுவர் கூற்றின் இறுதியில் “கைகூப்பி எல்லா உயிரும் தொழும்” என்பதற்கு உதாரணம்: ஆலயங்களில் பூசாராதனை செய்கின்ற அந்தணர்களை (தெரிந்தோ மறந்தோ) மக்கள் (வழிபடுவோர்) கைகூப்பித் தொழுவதைக் காணமுடிகின்றது. நிற்க, மேலும் சைவத் தமிழ் மக்களின் முழுமுதல் கடவுள்

பற்றிய தெளிந்த அறிவும் அவசியமாகும். சிவனும் சக்தியும், ஆண் பாதி, பெண் பாதி. சிவன் இன்றி சக்தி இல்லை, சக்தி இன்றி சிவன் இல்லை. மறுபெயர்களில் மிகச்சில: உமாமகேஸ்வரர், பார்வதி பரமேஸ்வரர், அர்த்த நாரீஸ்வரர், ஆதியாய், அனாதி ஆகி அடிமுடி தெரியாச் சோதி போன்றவை. இறைசக்தி-சிவசக்தி, அண்ட சராசரங்களுக்கும் மேலானது.

1. சொரூபமற்றது 2. எங்கும் நிறைந்தது 3. எல்லாம் வல்லது. 4. எல்லாம் அறிவது 5. என்றுமுள்ளது. (விரிவாக விளக்கல் அரிது) அளப்பரிய அண்ட கோளங்களையும் அதன் ஐம்பெரும் பூதங்களையும் அதனுள் உயிருள்ள சீவராசிகளையும் உயிரற்ற பூதப் பொருள்களையும் நிறைபிறழாது இயக்கும் சிவசக்தி. நாம் இந்தப் பேருண்மைத் தத்துவத்தை இன்றைய விஞ்ஞான வளர்ச்சி மூலமோ, வேறு எந்த மெய்ஞ்ஞான மூலமோ அறிந்துகொண்டதல்ல. சைவத் தமிழினத்தின் பண்டைக்கால ஆதி திராவிடரில் சிலர், வாழ்வின் இரகசியத்தை அறிய மிக்க ஆவல் கொண்டனர். பாவ புண்ணியத்தைப் பகுத்துணர்ந்தனர். மாமிச உணவை வெறுத்தனர். இலை, குழை, தானியம், பழம், பருகச் சுனைநீர். இப்பாவனைகளோடு கற்குகைகளிலும், நதிதீர மரநிழல் பர்ணசாலைகளிலும் கடும் தவமியற்றியும், பிராணயாமம், யோகம் பயின்றும் உடல்நலம் பேணி, உள்ளொளி பெற்று, பேருண்மையை அறிந்து கண்டுகொண்ட சமயமாகும். “சைவம்” தவத்தினால் ஞானிகள், முனிவர்கள், யோகிகள், தபசிகள் சித்தர்களாகி, உள்ளொளி பெற்றுக்கண்ட “சிவசக்திக்கு” சொரூபமாக (உலகுய்யும் பொருட்டு) கண்டு தந்ததே சிவ+இலிங்க திருச் சொரூபமாகும். எத்தனை ஆழ்ந்த உண்மைத் தத்துவச் சின்னம் இ∴து! ‘சிவலிங்கம்’(ஆண்பாதி பெண்பாதி).

இந்தக் காலம் வளர்ந்துவரும் விஞ்ஞானம், இயற்கையோடியைந்த பூதப் பொருட்களைப் புடம் பண்ணியே அணுக்களை உடைத்து, நியூற்ரோன், புரோற்ரோன் எலக்ரோன்களையும் இவற்றின் இடைவிடாத சுற்றோட்டங்களைப் பாகுபடுத்தியும் காண்கின்ற வளர்ச்சி எமது அன்றாட ஆக்கங்களுக்குப் பெரிதும் உதவுவது உண்மை; ஆத்மீகத்திற்கு அமைவதாகக் கொள்வது விசனத்திற்குரியது.

விஞ்ஞானத்தை விடவும் ஆத்மீகம் அல்லது மெய்ஞ்ஞானம் என்பது ஐம்பெரும் பூதப் பொருட்களுக்கெல்லாம் அப்பாலுக்கு அப்பாலானது. இதனை விளக்கிய ஔவைப் பாட்டியின் ஞான ஒளியில் விளக்கப்பெற்ற பாடலில் “சத்தத்தின் உள்ளே சதா+சிவம் காட்டி, சித்தத்தின் உள்ளே சிவ+இலிங்கம் காட்டி. அணுவுக்கு உள்ளே அணுவாகி, அவற்றுக்கு எல்லாம் அப்பாலாகி”யவரே கடவுள் /பரம்பொருள். எண்ணுவதற்கு எட்டாத எழில் ஆர்ந்த ‘சிவம்’. விஞ்ஞானிகள் என்றோ தம் ஆய்வுகளினால் பதி அல்லது பசு, வினை/கர்மம் இவற்றின் மூல தத்துவ பிரவாகத்தை கண்டுகொள்வது இயலாத காரியம் என்பதை மறுக்கமாட்டார்கள். தலைசிறந்த விஞ்ஞானியாக விளங்கிய ஐன்ஸ்ரீன் தனது ஆய்வின் இறுதியில் “Theory of Relativity “மனித சக்திகளுக்கெல்லாம் அப்பாலான ஓர் சக்தி செயலாவது உண்மை” என உறுதிசெய்துள்ளார்.

அண்ட கோளங்களினதும் ஓட்டமும் ஆட்டமும் சிவசக்தி திருவிளையாடலே அன்றி வேறல்ல என்பதே அறுதி உறுதி உண்மைத் தத்துவமாகும். மனித சக்தியினால் கண்டுபிடிப்பன அனைத்தையும் “இறைசக்தி” ஆகாய மயமாக்கவும் அளப்பரிய உருப்பொருளாக்கவும் அருளவல்லவர்.

இவற்றிலிருந்து நாம் சைவசமயத்தின அளப்பரிய சிறப்பினை அறிந்துகொள்வது மிக இலகுவாகும். யார் கடவுள்? புரிந்ததா? “ஓம் சிவாயநம”

# குருவைத் தேடி....

திருமதி கமலாம்பிகை பாலசுப்பிரமணியம்

"குருவில்லா வித்தை பாழ்! இதனை எல்லோரும் அறிவர். அதுபோன்று நாம் இறைவனைக் காணவேண்டுமானால், எமக்கு ஒரு பூரண சற்குரு அவசியம். "நல்லதோர் வீணைசெய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ" என்று பாரதியார் பாடுகின்றார். மானிட உடம்பாகிய இந்த நல்ல வீணை நமக்கு எதற்காகத் தரப்பட்டது என்பதை அறியாமல் வீசிவிடுகின்றோம். நான் யார்? நான் எதற்காகப் படைக்கப்பட்டேன்? என்பதை உணர்ந்து இறைவனைத் தேடவேண்டும். இறைவனைக் காணவேண்டுமானால் எமக்கு ஒரு சற்குரு வேண்டும். சற்குரு இல்லாமல் நாம் காணமுடியாது. சாந்தியுடன் வாழமுடியாது.

புத்த பிரான், இயேசுபிரான், கிருஷ்ண பரமாத்மா, இராமன், இராமகிருஷ்ணர் போன்ற பலர் அடிக்கடி அவதரித்து இறைவன் உன்னுள்ளே உள்ளான், காண்பாய் என்று கூறினர். வள்ளலார், திருமூலர், தேவார முதலிகள், மாணிக்கவாசகர் போன்றோர் கண்டு அனுபவித்து தேவார, திருவாகசங்கள் மூலம் உணர்த்தினர். இறைவன் ஒளி வடிவினன், ஓசை வடிவினன். அவன்,

"விறகிற் தீயினன் பாலிற்படு நெய்போல் மறைய நின்றுளான்" எனவும்,

"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே, உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே" என்றும்,

"காக்குமென் காவலனே காண்பரிய பேரொளியே" என்றும்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்" என்றும்

இவ்வாறாக எந்தவொரு தேவார திருவாசகத்தை நோக்கினும் இறைவன் உன்னுள்ளே இருக்கின்றான், அவனைக் கண்டுகொள் என்றனர். எப்படிக் காண்பது? உணர்த்த ஒருவனில்லாமல் காணமுடியாது. எனவே, நாம் குருவைத் தேடி பிறந்த பயனை அடைய வேண்டும். 1+1=2 என ஆசிரியர் காட்டித் தருகின்றார். ஏற்றுக்கொள்கின்றோம். மாம்பழம் இனிமையானது என்றால் இனிமை எப்படி என்பது சுவைத்துப் பார்த்தால்தானே தெரியும்! அதுபோன்று குருவை நாடி, குரு சொற் கேட்டு, உள்ளத்தினுள்ளே சென்று ஆண்டவனைக் காண வேண்டும்; அனுபவிக்க வேண்டும்; ஆனந்தம் அடைய வேண்டும்.

"பார்வையென மாக்களைப் பற்றிப் பிடிப்பதற்கே
போர்வையெனக் காணார் புவி"

இறைவன் தன்னுடைய பக்கதர்களை ஆட்கொள்ள போர்வை போர்த்து வருகின்றார். அதுவே குருவடிவம். ஏனோ மனிதர் குருவை நாடாமல், அறியாமல் அழிந்துபோகும் மாயை உலகினில் கிடந்து மூழ்குகின்றார்கள். குருவை நாடினோர் பாக்கியசாலிகள். தண்ணீரிலுள்ள மீன் தண்ணீரைப் பருகாது தாகத்தால் வருந்துவது போன்று, மனிதர்களும் தமக்குள்ளே உள்ள படைத்தவனைக் காணாமல் அலைந்து திரிகின்றார்கள்; தேடுகின்றார்கள்.

மிருகங்களும் உண்ணுகின்றன; உறங்குகின்றன. மனிதனும் அவ்வாறு உண்ணவும், உறங்கவுமா படைக்கப்பட்டான்? அவனுக்கு அறிவு படைக்கப்பட்டுள்ளது. அவன் அந்த அறிவினால் குருவைத் தேடி ஞான அறிவைப் பெறவேண்டும். தனக்குள்ளேயே அமைதி, ஆனந்தம், சாந்தி இருக்கிறதைக் குரு காட்டிக்கொடுக்கின்றார். கொடுப்பதோடு மட்டுமல்லாமல் தனது குருவின் தொடர்பிலே பக்தர்களை வைத்திருக்க வழி அமைத்துக் கொடுக்கின்றார். அவரேதான் பூரண சற்குரு.

உலகத்தை உய்விக்கவே குரு அவதரிக்கின்றார். தேடினால் அவரைக் கண்டு கொள்ளலாம். குருவை அடைந்தவர்களை அவன் என்றென்றும் காப்பாற்றுவார். "உண்மைப் பொருளைக் காணவேண்டுமானால் குரு அவசியம். குருவை அடைந்தவர்கள் உயிரின் பெறுமதியை உணருகின்றனர்; தங்களின் படைப்பின் இரகசியத்தை அறிகின்றனர். "ஞானமென்னும் யானைமேல் ஏறித் தியானம் என்னும் ஆசனம் போட்டு அமர்ந்துகொள். நாய் போன்றது உலகம். நன்றாகக் குரைக்கட்டும். வேறு ஒன்றும் செய்யமுடியாது."

மனிதனே! பூரண சற்குருவை நாடு. அவர் காட்டித்தரும் விதத்தில் வாழப் பழகு. அமைதி அடைவாய்; ஆனந்தம் அடைவாய். கபீர்தாசர் கூறுகின்றார்: பூசை, சேவை, நியமம். விரதம் எல்லாம் வெறும் விளையாட்டுக்களே. ஆண்டவனை உள்ளத்தால் தொடவேண்டும். கடவுள் திருநாமத்தை நெஞ்சில் ஒரு வினாடி மனம் கசிந்து நினைந்தாலும் போதும்.

"குருவைத் தேடி நன்மை பெறுவீர்களாக."

கனடா இந்து மாமன்றம் வழங்கும்
சர்க்கரைப் பொங்கல் விழா
சிறப்புற

# தமிழர் செந்தாமரை

வாழ்த்துகிறது!

Tel: 905 471 0076
416 707 6262
416 839 0904
Fax: 905 470 7480

தமிழர் செந்தாமரை
ஆசிரியர்: கனக அரசரத்தினம்

# மகோற்சவம்

திருமதி அமிர்தி புவனேந்திரா

கோவில்களில் நடைபெறும் வருடாந்த மகோற்சவமானது கொடியேறி, தேர், தீர்த்தம் என்று விசேடமாய் நடாத்தப்படும் பூசைகளும் திருவிழாக்களுமாகும். மகோற்சவம் (மகா+உற்சவம்) மகா-பெரிய, உத்-உயர்வான, சவம்-சிருஷ்டி முதலிய காரியங்கள், எனவே உயர்ந்த மேலான ஐந்தொழில்களையும் கருதுவது என்றும் மேலான ஞானத்தையும், போக மோட்சங்களையும் கொடுக்க வல்லதுமாகும்.

கொடியேற்றிச் செய்யப்படும் மகோற்சவம் நடக்க வேண்டியதற்குப் பல காரணங்கள் உண்டு. அறிந்தும் அறியாமலும் மந்திரம் கிரியைகள் வழிபடுவோராலும் நிகழ்ந்த குற்றங்களைப் போக்குவதற்கு என்றும் மகோற்சவ காலங்களில் விசேடமாகக் கூடுதலான மந்திரம் கிரியைகள் பிரயோகிக்கப்படுவதால் மூர்த்திகரம் அதிகரிக்கும் என்றும், சுவாமி வெளிவீதி எழுந்தருளி வருவது ஆலய தரிசனம் கிட்டாதவர்களுக்கு அருள் பாலித்தற்பொருட்டுமாகும். மகோற்சவங்கள் யாதாயினும் ஒரு கால விசேடத்தை அடிப்படையாகக் கொண்டே அதன் முதலானது, முடிவானது, அல்லது இரண்டுமானதுவாக இருக்கும்.

குருக்கள் மகோற்சவதை ஆரம்பித்து நடத்த அனுமதி தந்து, காத்து அருள்பாலிக்குமாறு இறைவனை வேண்டி வீதியின் மேற்குப்புறத்தில் மண்டபம் அமைத்து வயிரவ மூர்த்தியையும் அவரது பரிவாரங்களையும் பூசை, பலி முதலியவைகளால் திருப்தி செய்து கிராமத்தைக் காக்குமாறு வேண்டுதல் செய்தபின் வாஸ்து சாந்தி செய்து புண்ணிய தீர்த்தக்கரை, நந்தவனம் போன்ற இடங்களை சுத்திகரிப்பு முதலிய கிரியைகள்செய்த பின் முளையிடுவதற்காக அவ்விடம் முறைப்படி மண் எடுத்து பாலிகையிட்டு தானியங்களை தூவி முளைக்கச் செய்தல் பயிரினங்கள் செழிப்பால் நன்மை தீமை அறிந்து தீமை செய்தால் நிவர்த்தி செய்வர். முறைப்படி மூர்த்தியில் ஆராவகித்து ஆசாரியர் தொடங்கிய கிரியையும் கருமமும் சித்தியாதற்பொருட்டு பந்தனம் செய்தல் (காப்புக்கட்டல்) எனபொருள்படும். கருவில் இருக்கும் சிசுவின் நோயைப்பபோக்க தாயானவள் மருந்துண்பது போல் ஆன்மாக்களின் மலப்பிணியை நீக்க மூர்த்திக்கு கட்டல் எனப்பொருள்படும்.

மேளத்திற்கு பூசை செய்து, எல்லா உயிரினங்களுக்கும் நன்மை உண்டாக வேண்டும் என்று குருக்களால் மேளம் அடித்து ஓசை எழுப்பப்படும். மூர்த்தி, சந்திரன் இவர்களுக்கு கும்பம் நிறுத்தி யாகேஸ்வரர், யாகேஸ்வரி, அஸ்திரதேவர் யாவருக்கும் பூசை நடாத்தப்படும். ஆலயத்தில் மூலமூர்த்தி எதுவோ அதன் ஆயுதமே அஸ்திரதேவராவர். யாகசாலை அக்கினியில் ஆகுதி செய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அனுபவத்திற்கு வரஒட்டாது சுத்தமாக்கும் பாவனையாகும். உமி நீக்கிய சுத்தமான நெற்பொரி, மலம் நீங்கிய ஆன்மாக்களை சிவத்தோடு சேர்க்கும் பாவனைக்கே ஆசாரியரால் சுவாமிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

பலிபீடத்தை பிரதிஷ்டை செய்து அதையும் அஸ்திரதேவரையும் கொண்டு அட்டதிக்குப் பாலகர்களுக்கு பூசை செய்தல் இது திரோதன சக்தியால் கர்மங்களைப் பரிபாகப்படுத்தல் எனப்பொருள்படும்.

கொடிச்சீலை வரைந்து அதாவது ரிஷபம், கும்பம், சங்கு, தீபம், அஸ்திரம், சூரியன், சந்திரன், மணி, திருவாத்தி போன்றன கொடிச்சீலையின் தலைப்பகுதியில் வரையப்படும். கொடித்தம்பம் பதியாகிய இறைவனையும் கொடிச்சீலையிலுள்ள மூர்த்தி(வாகனம்) பக்குவமடைந்த ஜீவான்மாவாகிய பசுவையும் குறிக்கும். இடையே காணப்பெறும் தற்பைக் கயிறு பாசமாகிய மும்மலங்களைக் குறிக்கும். ஆன்மாக்கள் ஆணவ மலத்தால்(அஞ்ஞானத்தால்) மறைப்புண்டு அறிவுச்செயலிழந்து நிற்பதை கருணை வள்ளலாகிய இறைவன் அறிந்து அவர்களுக்குள்ள மறைப்பை படைத்தலாகிய கிருத்தியங்களால் இறைவனாகிய தன்னையும், ஆன்மாக்களாகிய எம்மையும் உலகையுமறியச்செய்தார். இவ்வாறாக ஆணவ நிலையை அழிக்கும் நிலையே தேர்த்திருவிழாவாகும்.

மூலஸ்தானத்தில் சிவனை மூலமூர்த்தியாகக் கொண்ட கோவில்களில் தேர்த்திருவிழாவின் போது சோமஸ்கந்த மூர்த்தியே தேருக்கு எழுந்தருளப்படும். சர்வலோகங்களையும் தேராய் அமைத்து ஆரோகணித்து, முப்புரங்களையும் எரிக்கப் புறப்பட்ட கோலமே சோமஸ்கந்த வடிவமாகும். ஆன்மா இறைவனின் சக்தியாகிய பெருங்கருணை வசப்பட்டு இறவனையடைந்து ஒருபுறம் இறைவனும் மறுபுறம் இறைவியும் இருக்க வேறு எதனையும் காணாது தரிசித்து மறந்து நிற்கின்றது. தேரில் எழுந்தருளும் இறைவன் கோயிலின் எட்டுத்திக்குகளிலும் நின்று அடியவர்களுக்கு அருள்பாலிப்பார். தேர் இருப்பிடம் அடைந்தபின்னர் பச்சை சாத்தி இறைவனை பச்சை நிறத்தால் அலங்கரித்து கோவிலின் உட்புறத்திற்கு எடுத்துவரப்படும். உக்கிரமூர்த்தியாக அழித்தல் தொழில் முடிந்து வரும் இறைவனை குளிர்விக்கும் பாவனையே பச்சை சாத்தும் வழக்கமாகும்.

அடுத்த நாள் உற்சவமானது அருளலைக் குறிக்கும் (சூர்ணோற்சவம்) தீர்த்தோற்சவமாகும். சூர்ணம் என்பது பொன்னிறமான பொடி எனப்பொருள்படும். கோவிலின் முன்றலிலோ அல்லது

உட்பிரகாரத்திலோ அமைந்துள்ள நீர்நிலைகளில் தீர்த்தோற்சவம் நடைபெறும். தீர்த்தம் ஆட சுவாமி எழுந்தருள முன், மஞ்சள் முதலிய பொருட்களை உரலில் இடித்து எடுத்துச் சாத்தப்படும். இது நான், எனது என்னும் செருக்குகளை இடித்து சூரணமாக்கி சிவனிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனும் கருத்துடையது. தீர்த்தம் என்று கூறும் போது அது பாவங்களை நீக்கி புண்ணியத்தன்மையைக் கொடுக்கும். இதனாலன்றோ இறைவனுக்கு "தீர்த்தன்" என்று பெயரும் உளது.

மனம் கடினம், கசிவு எனும் இரு தன்மைகளையுடையது. கசிவுத்தன்மையிருந்தால் இரக்கம், ஈரம், அன்பு, அருள் எனும் பண்புகள் கொண்டிருக்கும். கடின மனத்திற்கு இப்பண்புகளில்லை. அன்பு நீர் போல நெகிழ்வுடையது. கடவுள் "அன்பே வடிவானவர் என்பது சைவமறை." "கருணைக்கடலே போற்றி", "சச்சிதானந்தக் கடல் அருள் வெள்ள மீதிலே" என்பன அருட்பெரியார்கள் மூழ்கி அனுபவித்த அருள் வாக்கியங்களாகும். ஆன்மாக்களை ஆட்கொள்ளும் பொருட்டாகக் கொண்ட பல வடிவங்களில் "கருணை வடிவான தீர்த்தமும் நானே, எனது கருணை வெள்ளத்தில் நீங்கள் மூழ்கி இன்புற்றிருப்பதே உங்கள் கடைசி நிலை" என்று தீர்த்தமாடுதல் விளக்குகின்றது, தீர்த்தோற்சவத்தின் அன்று இரவு கொடியிறக்கல் வைபவம் நடைபெறும். சர்வ சங்கார காலத்தில் யாவும் ஒடுங்கிவிடுதல் அதாவது தூய பஞ்சகிருத்தியமின்றி நிற்றல். ஐந்தொழில் முடிவில் ஆன்மாக்கள் பேரானந்த முற்றுப் பிறவா நிலை அடைதலை இது குறிக்கின்றது.

மகோற்சவ காலங்களில் அறிந்தும் அறியாமலும் நிகழ்ந்த ஆசாரம், மந்திரம், கிரியை திரவியம் பக்தியீனம் இவற்றால் ஏற்பட்ட பிழைகளுக்கு நிவர்த்தியாக சாந்தி செய்தல் பிராயச்சித்தம் எனப்படும்.

இறுதியாக சண்டேசுவரப் பெருமானை அபிடேகம் செய்து வஸ்திரம், ஆபரணம், கந்தம், மாலை முதலியன அலங்கரித்து வீதியில் எழுந்தருளப்பண்ணி அவரது ஸ்தானத்தில் இருத்திப் பின் உற்சவ பலனைத் தரும்படி பிரார்த்திக்க வேண்டும். இறுதி நிகழ்வாக உற்சவம் நடாத்திய ஆசாரியாருக்கு ஆசாரி உற்சவம் நிகழ்த்தி பலனை அடைவர்.

நாம் வாழும் இவ்வுலகத்தையும் அண்டசராசரங்களையும் எங்கள் ஊனக் கண்களுக்குத் தெரியாத ஒரு வலிமையான சக்தி படைத்தது. அதையே - அந்த சக்தியையே மனிதர்கள் இறைவன், கடவுள் என்று கூறி வணங்குகிறார்கள்.

ஆதிகாலத்தில் உலகம் இப்போது உள்ளதுபோல் பல கண்டங்களாக, வெவ்வேறு தேசங்களாக இல்லாது ஒன்றாக இருந்தது. இக்கருத்தை பலர் ஏற்றுக்கொள்ளத் தயங்குவர். ஆனால், "இந்து மதம்" மேற்சொன்ன கருத்தை உறுதியாகச் சொல்கிறது. மனித இனம் உலகில் தோன்றி பல இடங்களில் கூட்டமாக வாழும்போது கட்டுப்பாடு இல்லாததால் தான்தோன்றித் தனமாக வாழ்ந்தனர். ஒழுக்கம், பண்பாடு எதுவுமே இல்லாது இருந்தது.

எங்குமே குழப்பம் - வாழ்வியல் நடைமுறை இல்லை. வழிகாட்டிகள் இல்லை. இப்படியான நிலையில் உலகையும், மனித ஜீவராசிகளையும் படைத்த அந்த மகாசக்தி மனித இனத்திற்கு ஓர் ஒழுங்கான வாழ்வியல் முறையை, தான் தேர்ந்து எடுத்த சிலர் மூலம் (அவர்களை நாம் தீர்க்கதரிசிகள், ஞானிகள் என்ற கூறுகிறோம்.) மானிட குலத்திற்கு போதித்தது. அந்த மகாசக்தியை இனி இறைசக்தி - இறைவன் என்று கூறுவோம்.

அந்த வாழ்வியல் முறையே இந்து மதம். இந்து மதமே உலகில் முதலும் ஆதியான மதமுமாகும். இந்து மதத்தில் உலக வாழ்வியலுக்கான சகலமும் பொதிந்துள்ளது. மதம் என்பது வெறுமனே இறை வழிபாடு மட்டுமல்ல. மதத்தில் கலை, பண்பாடு, அரசியல், மருத்துவம், ஜனநாயகம் மற்றும் குடும்ப வாழ்வு சகலதும் அடங்கும்.

உலகம் பிளவுபடாது ஒன்றாக இருந்த மிகப் பழைய காலத்தில் முழு உலகிலும் மக்கள் இந்து மதத்தையே கடைப்பிடித்தனர். இந்து மதத்தின் பிரதான வழிபடு தெய்வரூபம் சிவலிங்க உருவம். மற்றும் நெருப்புமாகும். உலகம் தோன்றியது முதல் இன்றுவரை எத்தனையோ பிரளயங்கள் (சுனாமி) தோன்றியுள்ளது. இப்படி வந்த பிரளயங்களால் உலகம் பிளவுபட்டது. நாடுகள் கண்டங்களாக பிரிந்து போனது. சூழலும் பருவ நிலைகளும் தேசத்திற்குத் தேசம் மாறியது. இப்படி மாறிய சூழலில் பிரிந்துபோன மக்கள் கூட்டம் தாங்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப உடைகள், மொழி, வழிபாட்டு முறைகளை மாற்றிக் கொண்டார்கள். இப்படித் தோன்றியதே இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம், ஜைனம், பார்சி மதங்களும், இன்று நாம் பார்க்கும் புதிய, புதிய வழிபாட்டு முறைகளும். (உ-ம்: தியானம், யோகா, பஜன் போன்றவை)

இந்து மதத்தில் இருந்து பிரிந்து புதிய வழிபாட்டு முறைகளை புகுத்தி உருவாக்கப்பட்டதே பிற மதங்கள். (இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம்) இப்படி எழுதுவதால் நான் ஒரு இந்து தீவிரவாதி அல்ல. எல்லா மதங்களும் அடிப்படையில் இந்து மதக் கொள்கையைப் பிரதானமாகக் கொண்டுள்ளன.

உ

# ஒன்ராறியோ
# இந்து சமயப் பேரவை
# திருமுறை விழா - 2012

இடம்:

கனடா அருள்மிகு கந்தசுவாமி கோயில் மண்டபம்
733 Birchmount Road, Scarborough

காலம்:

16.09.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல்
மாலை 9.30 மணிவரை

**முதன்மை விருந்தினர்:**
சைவசித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கம்

**சிறப்பு விருந்தினர்:**
திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்

நிகழ்வொழுங்காளர்: டாக்டர் கதிர் துரைசிங்கம்



# நிகழ்ச்சி நிரல்

முற்பகல் நிகழ்ச்சிகள்
9.00 - 1.00மணி

**தலைமை : ஆசிரியர் திரு. செ. சோமசுந்தரம்**
பொருளாளர்: இந்து சமயப் பேரவை

பூசையும் திருமுறைகளுடனும் சமயகுரவர் படங்களுடனும் கோயில் வீதிவலம் வருதலும்

திருமுறை ஓதுதல்: இந்துசமயப் பேரவைத் திருக்கூட்டம்

திருமுறைகளுக்கு மலர் வணக்கம் (திருக்கூட்ட அடியார்கள்)

1. **தேவாரம்:** திரு. க. வித்தியானந்தன்
2. **அமைதி வணக்கம்**
3. **வரவேற்புரை**: திரு. இ. லோகேஸ்வரன் - துணைச்செயலாளர்: இந்து சமயப் பேரவை
4. **ஆசியுரை:** சிவாகமகிரியா பூஷணம் சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள் தாபகர், பிரதமகுரு அருள்மிகு கணேஷ துர்க்கா ஆலயம், மிசிசாகா
5. **தலைமையுரை**
6. **இந்து சமயப்பேரவையின் பணிகள்** திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம், செயலாளர், இந்து சமயப் பேரவை
7. **சிறப்புரை:** திரு. நா. கணபதிப்பிள்ளை கவிஞர், பேச்சாளர், மொன்றியல்

9. நூல் வெளியீடு: ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின்

**உலக ஒழுக்கம்**

வெளியீட்டுரை: ஊடக வித்தகர் திரு. ஆ. சிவநேச்செல்வன், வீரகேசரி, தினக்குரல் இதழ்களின் முன்னாள் ஆசிரியர்.

10.. **திருமுறை மனனப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர் திருமுறை ஓதுதல்**

(1) பாலர் பிரிவு (2) கீழ்ப் பிரிவு (3)மத்திய பிரிவு (4) மேற் பிரிவு

11. **நடனம்:** நர்த்தன வித்தகி திருமதி ஜெயபத்மினி ஆனந்த் அவர்களின் மாணவிகள்

12. **மதிய போசனம்**

## பிற்பகல் நிகழ்ச்சிகள்
## 2.30 - 5.30 மணி

**தலைமை: சைவதுரந்தரர் வி. கந்தவனம்**
தலைவர்: இந்து சமயப் பேரவை

**வாழ்த்துரை:**

சட்டத்தரணி திரு. மனுவல் யேசுதாசன்

நட்பின் நாயகன் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம்

1. **தலைமையுரை**
2. **சொற்பொழிவு:** முதன்மை விருந்தினர் சைவசித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கம
3. **தேவாரப் பண்ணிசை:** திருமதி மைதிலி தயாநிதி
4. **நடனம்:** நர்த்தன வித்தகி திருமதி ஜெயபத்மினி ஆனந்த் அவர்களின் மாணவிகள்
5. **திருமுறை பற்றிய கவிதை**
   ஆசிரியர் த. சிவபாலு
6. **திருமுறை முற்றோதிய திருக்கூட்டத்தினருக்குச் சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்குதல்.**
7. பரிசளித்தல்: திருமுறை மனனப் போட்டியிற் பரிசுபெற்றவர்கள், பங்குபற்றியவர்கள்
   வழங்குபவர்: திரு. க. மகேசன் தம்பதிகள்:
   முருகன் புத்தகசாலை உரிமையாளர்

## மாலை நிகழ்ச்சிகள்
## 5.30 - 9.30 மணி

**தலைமை: டாக்டர் இ. இலம்போதரன்**
இந்து சமயப் பேரவைக் காப்பாளர்

1. **ஆசியுரை:** சிவாகமக் கலாநிதி
   சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
   தாபகர், பிரதம குருக்கள், வரசித்தி விநாயகர் ஆலயம்
2. **தலைமைச் சொற்பொழிவு:** டாக்டர் இ. இலம்போதரன் அவர்கள்
3. **சொற்பொழிவு:**
   சிறப்பு விருந்தினர் திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
   பொருள்: **திருமுறையின் பெருமை**
4. **நடனம்:** செல்வி ஐஸ்வரியா சந்துரு
   கலைமன்ற அதிபர் திருமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களின் மாணவி.
5. **சொற்பொழிவு:** கலாநிதி இ. பாலசுந்தரம்,
   முன்னாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
   பொருள்: **ஞானசம்பந்தப் பெருமானின் தமிழ்த்தொண்டு**
6. **பண்ணிசை:** செல்வி மீனுஜா விஸ்வதாசன்
   வயலின்: செல்வன் மிதுரன் மனோகரன்
   மிருதங்கம் செல்வன்: கிருஷ்ணா ருத்ரா
7. **நன்றியுரை:** திரு. வ. மனோகாந்தன், பேரவை உறுப்பினர்
8. **தேவாரம்:** திரு. ருக்மணி காந்தன் பேரவை உறுப்பினர்.

# அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**தொடர்புகளுக்கு:**
**416-724-6240, 905-944-9021, 416-264-6303**

# பிரபாகரன் மீது டில்லிக்கு ஏன் கோபம்? அன்று நடந்த ஒரு மிரட்டல் கதை இப்போது தெரிய வருகின்றது

'காலை இந்திய ராணுவத்துடன இலங்கை ராணுவம் நேரடியாக மோதும் இரு நாடுகளுக்கும் இடையில் யுத்தம் நாளை வெடிக்கும்" இந்தியாவுக்கு இப்படி ஒரு மிரட்டல் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியால் விடுக்கப் பட்டது என்ற தகவல் தற்போது வெளி யாகியுள்ளது.

அதற்கு இந்திய தரப்பில் இருந்து "உங்களுக்கு யுத்தம் தான் தேவை என் றால் நாம் அதற்கும் தயார்" என்ற பதி லடி கொடுக்கப்பட்ட விபரமும் இப் போது தெரிய வந்துள்ளது.

புதுடில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் இதுவரை வெளியாகாத இந்த விபரங்களை வெளியிட்டுள்ளார் லக்ஹன் லால் மெஹ்ரோத்ரா. இந்திய அமைதிப் படை இலங்கையில் விடுதலைப் புலி களுக்கு எதிராக மோதிய நாட்களில் கொழும்பில் இந்திய தூதராக பணிபுரிந்த வர் இந்த எல்.எல்.மெஹ்ரோத்ரா.



- மெஹ்ரோத்ரா -
(முன்னாள் தூதரக அதிகாரி)

ஐ.ஐ.எஸ்.எஸ். (Indian Institute of Social Sciences) அமைப்பால் புது டில்லியில் ஒழுங்கு செய்யப்பட்ட கருத் தரங்கு ஒன்றிலேயே தற்போது ஓய்வு பெற்றுள்ள இந்திய ராஜதந்திரி மெஹ் ரோத்ரா இந்த ரகசியத்தை உடைத்தி ருக்கிறார்.

இராஜதந்திர முறுகலை ஏற்படுத்திய இந்த விவகாரம் மூன்று தரப்புகளுடன் தொடர்புடையது.

1) இலங்கைக்கு இந்திய அமைதிப் படையை அனுப்பிய அன்றைய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி. விடுதலைப் புலிகளுக்கு உதவ என்று ஆரம்பத்தில் அனுப்பி வைக்கப்பட்ட இந்திய அமை திப்படை விடுதலைப் புலிகளுடனேயே யுத்தம் புரிந்தது.

2) இந்திய அமைதிப்படையை முதல் தினத்தில் இருந்தே எதிர்த்த அன்றைய இலங்கை ஜனாதிபதி ரணசிங்கே பிரேம தாச. இந்தியர்களை வெளியேற்றுவதற் காக இவர் விடுதலைப் புலிகளுடன் டீல் வைத்துக் கொண்டார்.

3) புதுடில்லியில் ராஜிவ் காந்தியுடன் பேசி விட்டு இலங்கை திரும்பிய பின் இந்திய அமைதிப்படைக்கு எதிராக யுத்தம் துவங்கிய விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். தமது ஆரம்ப கால நண்பன் இந்தி யாவை இலங்கையில் இருந்து விரட்ட தமது ஆரம்பகால எதிரி பிரேமதாசவுடன் டீல் வைத்துக் கொண்டார் இவர்.

அன்றைய நிலையில் அப்படியிருந்த இந்த மூவரும் காலப்போக்கில் என்ன ஆனார்கள்?

மே 21, 1991-ல் ராஜிவ் காந்தி பிரபா கரனின் உத்தரவின் பேரில் ஸ்ரீபெரும் புதூர் பிரசார கூட்டத்தில் கொல்லப் பட்டார். மே 1- 1993-ல் பிரேமதாச பிரபாகரனின் உத்தரவின் பேரில் கொழு ம்பு வீதியில் கொல்லப்பட்டார். மே 18, 2009-ல்இலங்கை ராணுவத்தால் முல்லை த்தீவு நந்திக்கடல் கரையில் புலிகள் இயக்கம் முழுமையாகத் துடைத்தெறி யப்பட்டது.

இந்த மூவர் தொடர்பான பழைய கதை தான், தற்போது புதுடில்லியில் நடை







பெற்ற கருத்தரங்கில் மெஹ் ரோத்ராவால் வெளியிடப்பட்டுள்ளது. இதோ அவர் வெளியிட்ட விபரங்களை பாருங்கள்: இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த நேரத்தில் இந்திய பிரதமர் தமது தூதுவரை கொழும்புக்கு அனுப்பி யிருந்தார். ஜூலை 12, 1989-ல் ராஜிவ்காந்தியின் தூதராக பிரேம தாசவை சந்திக்க கொழும்பு சென்று இறங்கியவர், பி.ஜி.தேஷ்முக். ஜூலை 12, 13-ம் தேதி களில் இவர்களுக்கு இடை யிலான பேச்சுவார்த்தைகள் நடை பெற்றன.

வார்த்தைகள் தடித்த பேச்சுவார்த்தை அது. "இந்திய அமைதிப்படை இலங் கையில் இருந்து வெளியேற வேண் டும்" என்று தெரிவித்த பிரேமதாச புது டில்லி அதற்கு தெளிவான பதில் ஒன்றை தமக்கு கொடுக்க வேண்டும்" என நிர்ப் பந்தித்தார். புதுடில்லி அதை செய்யா விட்டால் இலங்கையில் தமது அரசியல் எதிர்காலமே அழிந்து விடும் என்றார் அவர்.

இந்த பேச்சுக்கள் காரசாரமாக நடை பெற்ற நிலையில் ஒருகட்டத்தில் உக்கிர மடைந்த பிரேமதாச "இந்திய ராணுவம் இங்கிருந்து வெளியேறா விட்டால் நான் தற்கொலை செய்வேன்" என்று மிரட்டல் விடுத்தார்

ஜூலை 29-ம் தேதி, இந்திய ராணுவம் இலங்கையில் இருந்து வெளியேற வேண்டும் என்பதே பிரேமதாசவின் நிர்ப்பந்தம். காரணம், அந்த தேதி தான் இந்திய அமைதிப்படை இலங்கையில் போய் இறங்க ஒப்பந்தம் செய்யப்பட்ட 2-வது ஆண்டு தினம்

பிரேமதாசவுக்கு இலங்கையின் தென் பகுதியில் சிங்கள ஆயுத அமைப்பாக இருந்த ஜே.வி.பி-யிடம் (ஜனதா விமு க்தி பெரமுன) இருந்து அச்சுறுத்தல் இருந்த காலம் அது. தெற்கே ஜே.வி.பி., வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகள் மேலும் இலங்கையில் நின்றிரு ந்த இந்திய அமைதிப் படை என்று மூன்று எதிரிகளை எதிர்நோக்க வேண் டிய நிலை பிரேமதாசவுக்கு.

இந்திய அமைதிப்படையை வெளியேற்ற விடுதலைப் புலிகளுடன் கூட்டு வைத் துக் கொண்டார் அவர். விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் பணம் ஆகிய வற்றை கொடுத்து இந்திய அமைதிப் படைப்பு எதிராக போர் புரிய வைத்த நாட்கள் அவை.

**"இந்திய அமைதிப்படை தாமாக வெளி யேறாவிட்டால் இலங்கை ராணுவமும், விடுதலைப்புலிகளும் ஒரே அணியில் நின்று இந்தியப் படைகளை விரட்டும் நிலை ஏற்படும்" என்றார் பிரேமதாச.**

"இந்திய அமைதிப்படையை வெளி யேற்ற புதுடில்லி சம்மதிக்கா விட்டால் இந்திய ராணுவம் இலங்கையின் விருப்பத்தை மீறி 'ஆக்கிரமிப்பு ராணு வமாக' தங்கியுள்ளது என நான் அறிவிக்க நேரிடும். அது, இந்தியாவின் புகழை குறைத்து விடும்" என்றார் பிரேமதாச.

அதுவரை அமைதியாக அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த தேஷ்முக், "இந்தியாவின் புகழை காப்பாற்றிக் கொள்ள எமக்கு தெரியும். நீங்கள் அது பற்றி கவலைப்பட வேண்டாம். இந்திய அமைதிப் படையை நீங்கள் சொல்வது போல உடனடியாக வெளியேற்ற முடி யாது. 1990-ம் ஆண்டு நடுப் பகுதியில் நாமே வெளியேறி விடுவோம்" என்றார்.

அதாவது பிரேமதாச நிர்ப்பந்தித்த தேதியில் இருந்து சரியாக 1 வருடத்தின் பின்னர் தான் வெளியேற முடியும் என்றார் அவர்.

அத்துடன் புதுடில்லி திரும்பிய தேஷ் முக் பிரேமதாசவால் மீண்டும் 'அவசர மாக கொழும்பு வரவும்' என்று அழை க்கப்பட்டார். ஜூலை 28-ம் தேதி கொழு ம்பு (30ம் பக்கம் பார்க்க)




FOR SALE
$536,000
1717 Kalmar Ave
Pickering (Brock & Steels)
4 Bed Rooms
3 Wash Rooms
Fully Brick Stone
Windows Covered by Blinds

Rental House
$1000 Per Month
553 Highglen Ave, Markham
(Middlifield & Highglen)
Close to School, Shopping
Near to Public Transportation
2 Bed Rooms
Basement Apartments with
Separate Entrance
Utilities are Included



வீடு வாங்க, விற்க அழையுங்கள்
647.390.9591



Senthil Paramsothy
Sales Representative

RED CARPET Royal Realty Ltd
Bus: 416-284-5555
Fax: 416-284-5727
E-Mail: senthivel@live.ca
880 Ellesmere Road,
Suite 204,
Toronto, ON
M1P 2W6

# கலைஞர் மத்திய அரசின் மிரட்டலுக்குப் பின் வாங்கினாரா?

இலங்கைத் தமிழர்களுக்கான முன்னெடுப்புகளை முதல் இயக்கமாகச் செய்ததும் அதை இப்போதுவரை தொடர்வதும திமு.க- தான். இலங்கைத் தமிழர்களை ஆதரித்துப் போராடியதற்காகவே தி.மு.க. இரண்டு முறை ஆட்சியை இழந்தது வரலாறு

**கேள்வி:** உங்கள் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்! டெசோ' அமைப்பு நடத்தும் மாநாடு கருணாநிதியின் அரசியல் கணக்கு தானே?

பதில்: இலங்கைத் தமிழர்களுக்கான முன்னெடுப்புகளை முதல் இயக்கமாகச் செய்ததும் அதை இப்போதுவரை தொடர்வதும் தி.மு.க-தான். இலங்கைத் தமிழர்களை ஆதரித்துப் போராடியதற்காகவே தி.மு.க. இரண்டு முறை ஆட்சியை இழந்தது வரலாறு.

ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு இலங்கை என்கிற வார்த்தையைச் சொல்லக்கூடப் பயந்து ஒளிஞ்சவங்க இப்போ தலைவர் கலைஞரை நோக்கி விரல் நீட்டிப் பேசுறாங்க.

இலங்கைத் தமிழர்கள் குறித்துப் பேசுவதற்கான களமும் தளமும் திரும்ப அமைந்தது தி.மு.க. ஆட்சியில் தான். தலைவர் கலைஞர் எது செய்தாலும் குற்றம் சாட்டுபவர்கள் நான் ஆட்சிக்கு வந்தால் தமிழ் ஈழத்தை உருவாக்கிக் காட்டுவேன்' என வாக்குறுதி கொடுத்தவர்களை ஏன் மறந்துட்டாங்க?



போர் என்றால் மக்கள் சாகத் தானே செய்வார்கள்'னு [illegible] சாட்சியே இல்லாமல் பேசினவங்களைக் கேள்வி கேட்க ஏன் ஆளே இல்லை? எல்லாப் பிரச்சனைகளுக்கும் தலைவரை மட்டும் விமர்சிப்பவர்கள் கிட்ட இப்போ ஆட்சியில் இருப்பது தலைவர் கலைஞர் இல்லைனு யாராவது எடுத்துச் சொன்னா நல்லா இருக்கும்.

**கேள்வி:** ஆனால் இலங்கைத் தமிழர்களின்நலனுக்காக தி.மு.க. இன்றைக்குக் காட்டும் அக்கறையை தமிழகத்தின் ஆட்சிப் பீடத்தில் இருந்தபோதே காட்டி இருக்கலாமே?

பதில்: ஆட்சியில் இருந்த போது தி.மு.க. என்னங்க செய்யலை? போர் நிறுத்தம் ஏற்படுவதற்கும் பேச்சுவார்த்தை ஏற்படுவதற்கும் தலைவர் எவ்வளவு பாடுபட்டார்னு அந்த முயற்சிகளைப் பாழாக்கின வங்களுக்கு நல்லாத் தெரியும்

தி.மு.க. மட்டுமே அத்தனை விமர்சனங்களுக்கும் பதில் சொல்லுதுங்கிற ஒரே காரணத்துக்காக குறை கூறுவதை மட்டுமே முழு நேர வேலையா சிலர் வெச்சிருக்காங்க. இன்னைக்கு யார் வேணும்னாலும் பிரபாகரன் என்கிட்ட அதைச் சொன்னார்– இதைச் சொன்னார்'னு கற்பனைகளைப் பரப்பலாம். அதை எல்லாம் ஏன் அவங்க அன்னைக்கே சொல்லலை?

போர் முடிந்த பிறகு அங்கு ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் மூலமாகத் தான் அங்கு இருக்கும் தமிழர்களுக்குக் குறைந்தபட்ச நன்மையைக் கூடச் செய்ய முடியும். அந்த நோக்கத்தில் அவர்களைச் சந்திக்கப் போனால் அதற்கும் அடுக்கடுக்காக விமர்சனங்கள்.

ஒரு வேளை எங்களை மட்டுமே விமர்சிக்கிறவங்களுக்கு ஜெயலலிதாவின் செயல்பாடுகள் திருப்தி அளிக்கின்றனவோ என்னவோ? இன்னைக்கும் இலங்கைத் தமிழர்கள் கஷ்டப்பட்டுட்டுத்தானே இருக்காங்க.

அவங்களுக்கு நல்ல வாழ்க்கைக்கான உத்தரவாதம் அளிக்க ஜெயலலிதா என்ன செஞ்சாங்க? குறைந்தபட்சம் இதைப் பற்றி மத்திய அரசிடம் பேசக்கூட இல்லை. எந்தச் சூழலிலும் எதற்காகவும் ஜெயலலிதாவை விமர்சித்து விடக் கூடாதுனு நினைக்கிறவங்கதான் தலைவர் கலைஞரை விமர்சிக்கிறாங்க.

காரணம் கலைஞரை விமர்சிச்சா பதில் வரும்– அம்மையாரை விமர்சிச்சா வழக்கு வரும். இலங்கைத் தமிழர்களின் துயரங்களை யார் அரசியலாக்கினாலும் அது அநாகரிகம். இங்கே இருக்கிற தமிழர்களைக் கைதட்ட வெச்சாலோ, உசுப்பேத்தினாலோ அங்கே இருக்கிற தமிழர்களுக்கு எந்த நல்லதும் நடக்காது!

**கேள்வி:** டெசோ அமைப்பு மாநாட்டில் தனி ஈழக் கோரிக்கையை வலியுறுத்தப்போவது இல்லை என கருணாநிதி அறிவித்ததற்கு மத்திய அரசின் மிரட்டல் தான் காரணம் என்று சொல்கிறார்களே?

பதில்: தனி ஈழக் கோரிக்கையைக் கைவிட்டுட்டதா கலைஞர் எப்பவுமே சொல்லலை. இலங்கைத் தமிழர்களுக்கான இப்போதைய தேவை– அடிப்படை உரிமைகளும் வாழ்வாதாரங்களும். அதுக்கு ஒரு தீர்வு கிடைச்ச பிறகே தனி ஈழக் கோரிக்கை சாத்தியம்.

எதை எப்போ வலியுறுத்தணும்னு கலைஞருக்குத் தெரியும். எனக்குத் தெரிஞ்சு டெசோ' மாநாடு குறித்து காங்கிரஸ் தலைவர்கள் யாருமே தி.மு.க- கிட்ட பேசலை. மிரட்டலுக்குப் பின்வாங்கியதா சொல்வது கற்பனை.


(டெசோ மாநாடு பற்றி பேசிய கனிமொழி விகடனுக்கு வழங்கிய பேட்டியில்)

ஸ்ரீதரன் (நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு) கருத்து இது: "நாங்கள் 60 வருட காலம் போராடிப் பார்த்து விட்டோம். இன்றைக்கு எங்கள் எதிர்காலம் சம்பந்தமாக எந்தவிதமான நம்பிக்கையும் அற்று இருக்கிறோம். இத்தகைய சூழலில் எமக்காகக் குரல் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடமை இந்தியத் தமிழர்களுக்கும் புலம் பெயர் தமிழர்களுக்கும் உண்டு. இப்போது உள்ள நிலையில் அவர்களால் மாத்திரம்தான் ஈழத் தமிழர்களின் மேலான அடக்குமுறையைச் சர்வதேசத்துக்குக் கொண்டு செல்ல முடியும்.

இப்படிப்பட்ட சூழலில் தி.மு.க. தலைவர் கருணாநிதி நடத்தும் மாநாட்டு அழைப்பை நாங்கள் எதிர் கொள்கிறோம். சொந்த விருப்பு வெறுப்புகளை விடுத்துப் பார்த்தால் அவர் இந்தியாவின் குறிப்பிடத்தக்க தலைவர். அவர் பின்னால் பெரும் தொண்டர் படையணி உள்ளது. அவரை நாங்கள் புறக்கணிக்க முடியாது. ஆனால் அவரிடம் உளச் சுத்தியான ஈழ ஆதரவு இருக்கும் என நம்பும் அளவு நான் முட்டாள் அல்ல. ஈழத் தமிழர்கள் அனைவருமே கருணாநிதியின் மேல் மிகப் பெரிய கோபத்திலும் வெறுப்பிலும் உள்ளார்கள். ஈழத்தில் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டபோது ஆட்சியில் இருந்தவர் அவர். ஈழப் போரை நிறுத்த வேண்டிய தார்மீகக் (34ம் பக்கம் பார்க்க)

சரியான ஆலோசனையும் சரியான காப்புறுதியும் சந்ததியின் நல் வாழ்விற்கு என்றுமே உறுதி

பத்தாண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன்
முழுநேர சேவை



| | |
|---|---|
| ஆயுட்காப்புறுதி | Life Insurance |
| கடும் நோய்களுக்கான காப்புறுதி | Critical Illness Insurance |
| இயலாமைக்கான காப்புறுதி | Disability |
| பிரயாண மற்றும் மருத்துவ செலவுகளுக்கான காப்புறுதி | Travel and Medical Insurance |
| சுப்பர் வீசா காப்புறுதி | Super Visa Insurance |
| மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி | Non-Medical Insurance |
| அந்திம தேவைகளுக்கான காப்புறுதி | Pre-Need (Final Expense) Insurance |
| குழந்தைகளுக்கான கல்விச் சேமிப்புத் திட்டம் | RESP |
| பதிவு செய்யப்பட்ட ஓய்வூதிய சேமிப்புத் திட்டம் | RRSP |

றோய் விக்னராஜா
காப்புறுதி முகவர்
(416)457-1633

MEGA Financial Group
4168 Finch Ave,E. Scarborough On. M1S 5H6

Assomption Vie Assumption Life
Equitable Life of Canada
RBC Insurance
Unity Life of Canada
Desjardins
UL Mutual
IA Industrial Alliance Insurance and Financial Services Inc.
Canada Life

# கேடு நினைத்துக் கெடுவானேன்?



ஒரு மனிதர் ஒரு முள்செடியை நட்டு அதற்கு நீர் பாய்ச்சி வளர்க்கிறார். முள்செடி செழிப்பாக வளர்கிறது. வேகமாக வீசும் காற்றில் அதன் முள்கள் [illegible] பயணிகள் வேதனைக்கு ஆளாகிறார்கள். கால்நடைகள் துன்பப்படுகின்றன. வேதனையால் ஒவ்வோர் உயிர் துடிக்கும் போதும் அந்த மரத்தை வளர்ப்பவரின் கணக்கில் ஒவ்வொரு பாவம் பதிவாகிறது. அவர் வளர்த்த முள் மரம் இருக்கும் வரை அவருடைய செயலேட்டில் பாவங்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகும்.

கடுமையான வெயிலில் பயணிகள் சிரமப்படுவதை ஒருவர் பார்க்கிறார். நிழல் தரும் மரம் சாலையில் இருந்தால் பயனுள்ளதாக இருக்குமே என யோசிக்கிறார். உடனே ஒரு மரத்தின் விதையை சாலையோரம் நட்டு வைத்து நீர் பாய்ச்சி வளர்க்கிறார். வளர்ந்த மரம் நிழல் பரப்புகிறது. அத்தோடு கண்கவர் பூக்களையும் சுவை நிறைந்த கனிகளையும் தருகிறது. அம்மர நிழலில் வழிப்போக்கர்கள் தங்குகின்றனர். இளைப்பாறுகின்றனர் பசிப்பிணியையும் உடற்பிணியையும் ஒருசேரப் போக்கி புதுத்தெம்புடன் பயணத்தைத் தொடர்கின்றனர். நலந்தரும் மரத்தைக் கொண்டு நற்பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக அந்த மரத்தை வளர்த்தவரின் கணக்கில் நன்மைகளும் அதிகரிக்கும்.

அந்த மரம் நிலைத்து நிற்கும் வரை அவருடைய செயலேட்டில் புண்ணியத்தின் நற்கூலிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். இந்த இரண்டும் தனிப்பட்ட முறையில் ஆனால் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும் செயல்கள். அதற்கேற்ப அவரவர்களுக்கு நன்மையோ தண்டனையோ கிடைக்கும். கூட்டாகச் செயல்பட்டாலும் இப்படித்தான். எடுத்துக் காட்டாக பத்து பேர் சேர்ந்து ஒரு சூதாட்ட விடுதியை ஆரம்பிக்கிறார்கள்.

வேறு ஒரு பத்துபேர் சேர்ந்து ஒரு கல்வி நிலையத்தைத் தொடங்குகிறார்கள். சூதாட்ட விடுதி மூலம் தீமை எத்தனை காலம் வரை பரவியிருக்குமோ அத்தனை காலத்துக்குரிய பாவங்களும் அந்த முதல் பத்து பேரையே சேரும். கல்வி நிலையத்தின் மூலம் எத்தனை காலத்துக்கு நன்மைகள் பரவுமோ அத்தனை காலத்துக்குரிய புண்ணியம் அனைத்தும் முதலில் அந்தக் கல்வி நிலையத்தை உருவாக்கிய பத்து பேரையே சேரும். அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள்: ''நல்வழியின் (ஹிதாயத்) பக்கம் அழைப்பு விடுக்கும் ஒருவருக்கு அவர் அழைப்பை ஏற்கும் மக்களுக்குக் கிடைக்கும் நற்கூலிக்குச் சமமான நற்கூலி கிடைக்கிறது. இதனால் அம்மக்களுடைய நற்கூலி சிறிதளவும் குறைந்து விடாது. தீய வழியின் பக்கம் அழைப்பு விடுக்கும் ஒருவருக்கு அவர் அழைப்பை ஏற்கத் தயாரான அனைத்து மக்களின் பாவங்களுக்குச் சமமான பாவம் உண்டாகிறது. இதனால் அம்மக்களின் பாவங்களில் சிறிதளவும் குறைந்து விடாது.''

# உறங்கி எழுந்ததும் உள்ளங்கையைப் பார்க்க வேண்டும் என்பது ஏன்?



நாம் நமது அன்றாடப் பணிகளைச் செய்வதற்கு கைகள் மிகவும் பயன்படுகின்றது. கைகளின் உதவியில்லாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. செயல்களுக்குரிய புலன்களில் கைகளுக்குத் தனி இடம் உண்டு. இறையுருவத்தை வணங்க புஷ்பத்தை அள்ளிச் சமர்ப்பணம் செய்ய கைகள் உதவும். இறையுருவங்கள் அபய வரத முத்திரைகளைத் தாங்கிய திருக்கரங்களுடன் காட்சி தரும் இறையுருவத்தின் பெருமையை கைகள் வெளிப்படுத்தும். கைகளை கடவுளுக்குச் சமானமாகச் சொல்கிறது வேதம். திருமணத்தை நிறைவு செய்வது பாணிக்ரஹணம். அதாவது, கை பிடித்தல் கன்னிகையின் கை பிடித்து வரனிடம் அளிக்க வேண்டும். அரசர்களையும் துறவிகளையும் கைத்தாங்கி பெருமைப்படுத்துவார்கள். மந்திர ஜபங்களில் கரன்யாசத்துக்குக் கைகள் வேண்டும். முதுமையில் ஊன்று கோலைப் பயன்படுத்த கை வேண்டும்.

கராக்ரே வஸதே லக்ஷ்மீ கரமத்யே ஸரஸ்வதி கரமூலேது கோவிந்த: ப்ரபாதே கரதர்சனம் என்ற ஸ்லோகத்தைக் கூற வேண்டும். கையைத் தலையணையாக வைத்து உறங்கும் நமக்கு விழித்ததும் அதைப் பார்ப்பது எளிது. நல்ல நடை முறைகளைப் பின்பற்றினால் நன்மைகள் பல உண்டு.

காலை வேளையில் கதிரவனை தரிசிப்பதும் வணங்குவதும் நன்று மாலை நேரத்தில் சூரியனைப் பார்ப்பதும் சூரிய ஒளியை உடலில் ஏற்பதும் அழகை அதிகரிப்பதற்கு உதவும். ஆனால் சூரியனைப் பார்க்கக்கூடாத நேரங்களும் உள்ளன. நீரில் பிரதிபலிக்கும் போதும் நடுபகலிலும் சூரியனைப் பார்க்கக் கூடாது. ஜொலித்து நிற்கும் சூரியனை வெறும் கண்களால் காண்பது தீங்கு விளைவிக்கும். நடுப்பகலில் சூரியனைப் பார்ப்பதால் பார்வைக் கோளாறுகள் ஏற்பட வழியுண்டு. விஞ்ஞானமும் இதனை ஒப்புகொள்கிறது. பழங்காலத்தில் நீரில் பிரதிபலிக்கும் சூரியனை மக்கள் பார்க்கக்கூடாது என்பதற்காக சூரியன் வருண பகவானுடன் இணைந்திருக்கும் காட்சியைக் காணக்கூடாது என்று கூறி விலக்கினர்.




**Sayi Shanmugarajah**
Sales Represetative
**Cell: 416-817-3484**
Sayihomelife@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future**
Realty Inc.Brokerage
Independetly Owned and Operated
205-7, Eastvale Dr, Markham ON,L3S4N8
Bus: 905-201-9977
Fax: 905-201-9229

**For all your Real Estate needs**




**Meadowvale/Sheppard** 3 Bedrooms+3 Washrooms




**Taunton/Audley 4+1** Bedrooms+**4**Washrooms




**Birchmount/Ellesmere 3+1**Bedrooms+**3** W rooms

# தமிழைப் புறக்கணிக்காத தமிழிசை அரங்கேற்றம்

**கனக மனோகரன்**

04.08.2012 அன்று மொன்றியல் நகரில் இடம்பெற்ற செல்விகள் பிந்துஜா சிவலிங்கம், கீர்த்தனா சிவலிங்கம் சகோதரிகளின் இன்னிசை அரங்கேற்றம் எனக்குத் தந்த இத. சுக அனுபவங்களை தமிழிசை ஆர்வலர்களுடன் பகிர்வதே இந்த எழுத்தின் இலக்கு

## முன்மாதிரி காட்டுகின்ற மொன்றியல்

பொதுவாக மொன்றியலில் இடம்பெறும் இசை,நடன அரங்கேற்றங்கள் பாரிய அரங்குகளில் இடம்பெறுவதில்லை இதற்குப் புறநடையான இந்த அரங்கப் பிரவேசம் கொன்கோடியா பல்கலைக் கழக அரங்கில் இடம்பெற்றது அங்கு இசை வெள்ளத்தில் குளிக்க, களிக்க மடை திறவா மழை வெள்ளமென மக்கள் திரண்டிருந்தனர்.




ஒப்பீட்டளவில் மொன்றியல் வாழ் தமிழ் அன்பர்கள் வெளிப்படுத்துகின்ற இசை ஆர்வமும் கலை நாட்டமும் மேலானவை. எங்கள் தமிழிசைக் கலாமன்றம் வருடாவருடம் இசை, நடன விழாக்களை ரொறன்ரோவில் 7, 8 தினங்களில் நடத்தி பதக்கங்கள், பட்டயங்கள், சான்றிதழ்களை வழங்குவது வழக்கம். மொன்றியலில் ஒரே தினத்தில் நடத்தியாக வேண்டிய நிர்ப்பந்த நிலைமை எனவே 7, 8 மணித்தியாலங்களுக்கு தொடர்ச்சியாக விழாவை நடத்தி விசேட, சிறப்பு சித்திகள் பெற்ற அனைத்து மாணாக்கர்களுக்கும் மேடை வாய்ப்புகளை வழங்குவோம் அவையோர் பொறுமை காப்பர். அங்கே எங்கள் பிள்ளையின் நிகழ்ச்சியை முதலில் முடித்து சான்றிதழையும் தந்து எங்களை அனுப்புங்கள் என்று சண்டையிட்ட பெற்றோர் கிடையாது. சின்னஞ் சிறார்களையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள்.

அங்கே, எங்கள் போற்று மொழி பெரும்பாலானவர்களின் வீட்டு மொழி ஆக இருப்பதால் இசை மாணவர்களின் சத்தத்தில் தமிழ்ச் சுத்தம் அதிகம் இருக்கும். ரொறன்ரோவில் இருந்து செல்கின்ற பரீட்சகர்கள் பலருமே இக்கூற்றைச் செய்வதுண்டு. அந்தப் பெற்றோர்கள் செலவுகள், சிரமங்களைப் பொருட்டாகக் கொள்வதில்லை. பிள்ளைகள் வெவ்வேறு நிகழ்வுகளில் வெவ்வேறு வண்ணச் சீருடைகளில் தோன்றி வண்ணத்துப் பூச்சிகள் போல் கண்ணைக் - கருத்தைக் கவர்வார்கள். எங்கள் ஒன்ராறியோ மன்ற கீதத்தை நிறைய பிள்ளைகள் ஒரே குரலில் ஓங்கி இசைக்கின்ற காட்சியை மொன்றியலில்த்தான் காணமுடியும்!

## மதுர கான மன்று உயர்வு கண்டது அன்று

அன்னைத் தமிழுக்கு அணி சேர்ப்பது மொன்றியல் என்ற கூற்றுக்கு ஒப்புறுதி சேர்த்திருக்கின்றது வாய்ப்பாக இடம்பெற்ற இந்த வாய்ப்பாட்டு அரங்கப் பிரவேசம்.

பிந்துஜா, கீர்த்தனா சோதரிகள் கூடல் நகர் மாமதுரை வளர்த்த தேமதுரத் தமிழிசையை கூதல் நகர் மொன்றியலில் வளர்த்திடும் **'மதுரகான மன்ற'** மாணவியர். அதன் இயக்குநர் இசைக் கலைமணி, இசைக்கலா வித்தகர் திருமதி செல்வமலர் மதுரநாயகம் இலங்கை தன்னில் புங்கை மண்ணில் இசைப் பாரம்பரிய பரம்பரையில் பூத்தவர். இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரி. எங்கள் தமிழிசைக் கலாமன்றம் மொன்றியலில் பரீட்சைகளை நடத்திட ஆரம்பித்த காலம் முதல் எம்முடன் நல்ல பரிச்சயத்தைக் கொண்டிருப்பவர். இவர்தம் ஆக்கம், ஊக்கம், உருவாக்கம் காரணமாக எம் சோதனைகளில் பங்கேற்ற இவரது மாணவர்கள் பலப்பலர். விசேட, உயர்தர சித்திகளைப் பெற்றவர்களும் பலர் உள்ளர்

இந்த இரு, இள, இணை விழா நாயகிகளின் சாதனைப் பட்டியல்கள் நீண்டவை என அறிவேன். அந்த சிவலிங்கமாம் சிவனவனின் முதலிரு கண்களில் ஒன்று கீதம்; இன்னொன்று நாதம் என்பர். இந்த சிவலிங்கத்தின் இரு கண்கள் அனைய இவ்விரு பெண்களும் வாய்ப்பாட்டாம் கீதக் கலையையும் வயலின் நாதக் கலையையும் முறைபட பயின்றவர்கள். பிந்துஜா அரங்க நிகழ்வுகள் பலவற்றில் பங்கு கொண்டு அவற்றிற்கு அணி சேர்த்த ஆற்றல் மிகு இசைக் குயில். எங்கள் மன்ற ஆறு தரப் பரீட்சையிலும் பாராட்டுதலுக்குரிய பெறுபேறுகளைப் பெற்றவள். மேலும் திறமையின் அடிப்படையில் மொன்றியலில் நான்கும், தகைமையின் அடிப்படையில் ரொறன்ரோவில் ஒன்றுமாக 5 தங்கப் பதக்கங்களை தனதாக்கிய தகைமையள். அக்காளின் அடி தொடரும் தக்காளாம் கீர்த்தனா எங்கள் பரீட்சையில் முதல் ஐந்து தரங்களிலும் விசேட சித்திகளைப் பெற்றிருக்கின்றாள்

செவி நாடும் கீர்த்தனைக்கு தியாகர் இல்லை
தேசிய பாரதியின் திறனும் இல்லை

இதை நாமக்கல்லார் நமக்குச் சொன்னார். இந்த கீர்த்தனா தன் கீர்த்தனைத் திறத்தால் மொன்றியலில் இரண்டும் ரொறன்ரோவில் ஒன்றுமாக 3 தங்கப் பதக்கங்களைப் பெற்றவள். நெறி முறையான, நீண்ட கால 15 வருடப் பயிற்சி காரணமாக பிந்துஜா பாடுகையில் கலக்கமற்ற மன உறுதி வெளிப்பட்டது. கீர்த்தனாவில் சற்று பய உணர்வையும் பதற்றத்தையும் அவதானித்தேன். அதனை ஈடுகட்டியது அந்தச் சின்னக் குயிலின் இனிய குரல் வளம்.

இந்த தமிழன்னையின் தவச் செல்விகள் எங்கள் பரீட்சைகளில் தமிழில்த்தான் எழுதினார்கள். தங்கள் விழா முடிவில் தமிழில் மட்டுந்தான் மாறி மாறி நன்றி சொன்னார்கள். அண்மைக் கால ரொறன்ரோ தமிழ் அரங்கேற்றங்கள் பலவற்றிலும் இடம்பெறாத அபூர்வ நிகழ்வு இது!

## பக்க வாத்தியங்களாக பக்கா வாத்தியங்கள்

சாதம் சுவைக்க நல்ல கூட்டுக் கறிகள் அவசியம். கீதம் இனிக்க கூட்டு வாத்தியங்கள் அவசியம்.. எனவேதான் கவியரசன் கம்பனும்

"தைவர மகர வீணை தண்ணுமை
தழுவித் தூங்க" என்றனன். வீணை அங்கு இருந்திலது. வீணையின் மறு வார்ப்பான வயலின் இருந்தது. வயலில் நெல் மணிகள் குலுங்குவது போல் தன் வயிலின் இசையால் நம் மனங்கள் குலுங்கிட வைத்தவர் திருமதி அஞ்சனா ஸ்ரீநிவாசன். அந்த அற்புதக் கலைஞருடன் பேசினேன். அருத்தியலாம் வயலினில் மட்டுமல்ல மருத்தியலிலும் கனடாவில் தராதரம் பெற்ற வைத்திய கலாநிதி அவர்.

**அருந்தும் இசை மலரும் அரும்பாகும்**
**வருந்தும் உயிர்க்கு அது மருந்தாகும்**

வாலிபக் கவிஞர் வாலியின் வலிவும் வனப்பும் உள்ள கவிதை அடிகள் இவை. இசைவான மருந்தாலும் இனிதான இசையாலும் பிணி தீர்க்க வல்ல, இரட்டைத் தகைமைகள் பெற்ற இந்தத் தமிழக மருத்துவருக்கு நிகழ்ச்சி நிரலில் 'டாக்டர்' எனப் போடுவிக்காத தன்னடக்கம். கராத்தே கல்லூரி தரும் டாக்டர் பட்டங்களுடன் தருத்தோடும் செருக்கோடும் நடமாடும் நம்மவர் சிலருக்கு இவர் வழிவிட்டு விலகி நிற்கிறார் போலும்!

## அஞ்சன நயனமும் அஞ்சனா நயனியும்

கவிதை எனும் பொய்யழகு பெற்ற வைரமுத்து கண்ணுக்கு மை அழகு என்றார். அஞ்சனம் கருநிறத்தையும் குறிப்பது. கண்ணிலிடும் மையையும் குறிப்பது. அஞ்சனாவோ சிவப்பாக இருக்கிறார். இவர் அருகில் தம்புராவுடன் இருந்தவர் 'நயனி'. நயனம் விழியைச் சுட்டுவது. இந்த நயனி செல்வமலர் ஆசிரியையின் செல்வப் புத்திரி. ரொறன்ரோவில் எம் இசைக் கலாமன்றம் நடத்திடும் இன்னிசைப் போட்டியில் பாலர் பிரிவில் பங்கெடுத்து தங்கப் பதக்கத்தை தன்வசப் படுத்திய இப் பெதும்பைப் பருவத்தினளை பேதைப் பருவத்திலேயே நான் நன்கறிவேன். அஞ்சனவிழிகள் பெண்களுக்கு வனப்பைச் சேர்ப்பவை. அஞ்சனாவும் நயனியுங்கூட அன்றைய அரங்கேற்றத்திற்கு ஏற்றத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

## ஆனந்தம் பெருக்கிய ஆனந்த பிரசாத்

ஆனந்தம் தருகின்ற அற்புதக்கலை சங்கீதம் என்பார்கள். அன்றைய அரங்கப் பிரவேசம் மேலதிக மெருகைப் பெற - ஆனந்தம் தர காரணர் ஆனவர் மொன்றியலில் இலைமறை காய் போல் இருக்கின்ற தரமிக்க, மூத்த, புகழ் பூத்த இசை விற்பன்னர் ஆனந்த பிரசாத் அவர்கள். பக்க வாத்தியக் கலைஞராக இந்த மிருதங்க மேதையைப் பெற்றது பாட்டரங்கேற்றம் செய்தவர்கள் செய்த பாக்கியம் என நினைக்கிறேன்.

ரொறன்ரோவில் இசை, நடனம் பயில்கின்ற மாணவர்கட்கு உள்ள வசதிகள், வாய்ப்புகள் மொன்றியல் மாணவர்க்கு இருப்பதில்லை. நாம் கடந்த இரு வாரங்களாக தமிழக அரசிடம் கலைமாமணி பட்டம் பெற்றவரும் சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறை இயக்குநருமான டாக்டர் சுந்தர் அவர்களை அழைத்து இசைப் பயிற்சிப் பட்டறை ஒன்றை ரொறன்ரோவில் நடத்தினோம். 63 மாணவர்கள் கலந்துகொண்டு விரிந்த பயனைப் பெற்றார்கள். இலாப நோக்கற்ற எங்கள் மன்றம் கணிசமான தொகையை அன்னாருக்கு வழங்கியது.

டாக்டர் சுந்தர் அவர்களை ஓர் இன்னிசைக் கச்சேரியை நடத்த வோசிங்டன் DC க்கு அழைத்தார்கள். நிர்வாகிகள் அவருக்கு திறமையுள்ள பக்கவாத்தியக் கலைஞர்களை ஏற்பாடு செய்து தருவதாக உறுதி அளித்தார்களாம். சுந்தர் அவர்களோ "அங்கே ஏற்பாடு செய்ய வேண்டாம். சிறந்த கலைஞர்கள் ரொறன்ரோவில் உள்ளார்கள். நான் அழைத்து வருவேன்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார். அவருடன் இணைந்து தத்தம் வாத்தியக் கருவிகளுடன் எங்கள் ஓர் இளைஞர் குழுவினர் விமானம் ஏறி இருப்பது எமக்கு விம்மிதம் தந்திடும் விடயம்.

## இசை தொடர்வீர் வசை களைவீர்

"புவியனைத்தும் போற்றிடவான் புகழ் படைத்துத்
தமிழ் மொழியை புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ் நாட்டுக் கில்லை யெனும்
வசை என்னாற் கழிந்ததன்றோ"

என மார் தட்டியவன் பாரதி. ரொறன்ரோவில் நம் மன்றம் நடத்திடும் ஏழு தரப் பரீட்சைகளிலும் தேறி **'இசைக் கலா பாரதி', 'நடன கலா பாரதி'** பட்டங்கள் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 27. மொன்றியலில் உள்ளூர் உற்பத்திகளாக உருவாகிய இசை ஆசிரியர்கள் இதுவரை தனியொருவர் தானும் இல்லை எனும் வசை இந்த அரங்கேற்ற நாயகிகளால் கழியும் என்பது என் நிச்சயமான எண்ணம்; நியாயமான எதிர்பார்ப்பு.

சரியை, கிரியை, யோகம், ஞானம். இவையே இந்து மதத்தின் அடிப்படை. இந்த நான்கில் ஒவ்வொன்றை ஒவ்வொரு பிரிவினர் கைக்கொண்டு புதிய பெயரோடு புதிய மதங்களை உருவாக்கினர். இந்துக்கள் சிவன், பார்வதி, விநாயகர், முருகன் இப்படியாக பல உருவங்களில் இறைவனை வடிவமைத்து வழிபட்டனர். இஸ்லாமியர், கிறிஸ்தவர் மற்றும் பிறர் தங்களுக்குப் பிடித்த மாதிரி இறை வடிவங்களை அமைத்து, புதிய பெயர் சூட்டி வழிபட்டனர். அறிவு வளர வளர புதுமையான புராணக் கதைகளை உருவாக்கி, தங்கள் சமயங்களே சிறந்தது என வாதிட்டு, வீண் கலவரங்களை உண்டுபண்ணினர்.

இன்று உலகில் உள்ள மதங்களை எடுத்துக்கொள்வோம். இந்து மதத்தைவிட ஏனைய மதங்களைப் பார்த்தால் அவ்வவ் மதங்களைத் தோற்றுவித்தவர்கள், அந்த மதங்கள் தோற்றிய காலம் எங்களுக்குத் தெரியும். ஆனால் இந்து மதம் எப்போது தோன்றியது, யாரால் எங்கே, எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்பது இதுவரை எவருக்குமே தெரியாது. இதுவே இதன் பெருமை.

இந்து மதம் பல்வேறு பிரிவுகளாக உள்ளது. இந்துமதத்தில் எதுவித கட்டுப்பாடுகளும் இல்லை. நூற்றுக்கணக்கான இறை உருவங்கள் உண்டு. அவர் அவர் பிடித்த உருவை வைத்து வணங்கலாம். விரும்பினால் வணங்கலாம்; அல்லது விடலாம். ஏனைய மதங்களில் அப்படியல்ல. பிற மதங்கள் வழிபாட்டு முறையில் கண்டிப்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மத சுதந்திரம் இந்து மதத்தில் மட்டுமே உண்டு.

மத சுதந்திரம் வேண்டுமா, வேண்டாமா, இது விவாதம் செய்யவேண்டிய விஷயம். அது இப்போது இங்கு தேவையில்லை. நாம் முன்பு கூறியதுபோல் சகல மதங்களுமே மனித வாழ்வையும் உலக ஒழுங்கையும் ஒரு நேர்கோட்டில் செலுத்த உதவும் வழிகாட்டியே. இதை உதாசீனம் செய்து இந்த நியதிகளை மனிதன் தன் அறிவின் பலத்துடன் மீற முனையும்போதுதான் எதிர்பாராத அழிவுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்து மதமே உலகின்முதல் மதம் என்று கூறியதை எப்படி உண்மை என்று எடுத்துக்கொள்வது? அதற்கு சில உதாரணங்களைப் பார்ப்போம். ஆதியில் உலகம் ஒன்றாகவே இருந்தது. மக்களும் ஒன்றாகவே இருந்தனர். மதமும் ஒன்றே. இன்று நாம் பார்க்கும் பல நாடுகளில் புதைபொருள் ஆராய்ச்சி செய்யும்போது இந்து மத வழிபாட்டுக் சின்னங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா, ஜெர்மனி, மெக்சிக்கோ பொன்ற பல நாடுகளில் இவ்வகைக் கண்டுபிடிப்புகள் மேற்கூறிய கருத்தை உறுதிசெய்கிறது. மிகப் பழைய நாகரீகங்களான மாயா - இன்கா, சிந்துவெளி மக்கள் இந்து மதமே தங்கள் மதமாக கைக்கொண்டதை சரிர்திர வாயிலாக அறியமுடிகிறது. சகல நாடுகளிலும் புதைபொருள் ஆராய்ச்சியை (மத சம்பந்தமாக) தொடர்ந்து முன்னெடுததால் நிச்சயம் இந்து மத சின்னங்களைக் காணமுடியும். இது நடைமுறை சாத்தியமாகுமா? காலம் பதில் சொல்லட்டும்.

எப்போது, யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்று தெரியாத இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளே சைவம், சாக்தம், காணபத்தியம், சௌமாரம், வைஷ்ணவம், பார்ஸி போன்ற சமய கோட்பாடுகளாகும். இந்து மதம் ஒரு பெரிய ஆலமரம் பேன்றது. இன்று உலகிலுள்ள சகல மதங்களும் இந்து மதம் என்ற ஆலமரத்தின் கிளைகளே. இக்கருத்தை நடுவுநிலையோடு ஆராய்ந்தால் உண்மை தெரியும்.

சகல மதங்களும் மனித சக்தியைவிட மிகப் பெரும் சக்தி உண்டு என்பதை தெளிவாக ஒப்புக்கொள்கின்றன. அந்த சக்தியை இறைவன் என்பதுபோல் பல பெயர்கள் - அடையாளங்களால் வழிபடுகிறது.

இறுதியாக மனிதகுலம் அமைதியாக வாழ மதங்கள் சொன்ன நல்ல கருத்துகளை மட்டும் கடைப்பிடித்து வாழ்ந்தால் உலகம் அமைதியாகவும் அழகாகவும் இருக்கும்..

**- வாரியார் சுவாமிகள் மொழி -**


வாழ்க்கையென்பது தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மைக்கும், வெறுப்பிலிருந்து பரந்த அன்பிற்கும், மரணத்திலிருந்து அமர நிலைக்கும், குறைவில் இருந்து நிறைவிற்கும், அடிமைத்தனத்தில் இருந்து விடுதலைக்கும், வேற்றுமையிலிருந்து ஒற்றுமைக்கும், அறியாமையிலிருந்து நிரந்தரமான அறிவுக்கும், துன்பத்திலிருந்து நிரந்தரமான பேரின்பத்திற்கும், பலவீனத்திலிருந்து அளவு கடந்த ஆற்றலுக்கும் அழைத்துச் செல்கிறது.

# KESAVAN LAW OFFICE

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்

**கேசவன் சட்ட நிறுவனம்**

- **Real Estate** (Buying / Selling - Residential / Commercial Property & Mortgages)
- **Business Law** (Buying / Selling - Business; Commercial Leases; & Business Registration)
- **Immigration Law** (Sponsorship; Group Sponsorship; Visitor Visa; Work Permit)
- **Family Law** (Separation Agreement & Uncontested Divorce)
- **Last Wills & Power of Attorney**



THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி
நாட்களிலும் சந்திக்கலாம்.

**TORONTO OFFICE**

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)

Web: www.lawyers.com/kesavanlaw - E-Mail: kesavanlawoffice@bellnet.ca

# கந்தன் காட்டிய வழி

திருமதி பூங்கோதை பன்னீர்ச்செல்வம்



அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதி பிளம்பதோர் மேனியாகி
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய!

ஆம். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முருக வழிபாடு என்பது மிகப் புனிதமாகப் போற்றிப் பாதுகாக்கப்படுவதாக அமைந்துள்ளது. அழகிய குழந்தை வடிவமான இறைவனை குழந்தைகளும் விரும்பி வணங்கினர். குன்றிருக்கும் தோன்று குமரன் வாழ்வான் என்றும் கூறுவதுபோல் குறிஞ்சிக் கடவுளாக சங்க காலத்தில் வழிபாடு இயற்றிய "வேலன்" என்ற கடவுளே தமிழின் - தமிழரின் தெய்வம் என்று கூறுவர். தமிழ் என்றால் அழகு. அழகு என்றால் முருகு. முருகு என்றாலே அந்தக் குமரன் முருகனின் மொத்த திரு வடிவமாகும். தமிழின் முழு வடிவமாக உருவான முருகன் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதை உலகிற்கு அறியவைக்க நாரதர் மூலம் ஒரு மாம்பழத்தை வைத்து நாடகம் செய்தார். அதை ஔவையின் வாயிலாக அகிலமெல்லாம் அறியவைத்தார். அங்கு பண்பாடு பிறந்தது அன்று. கற்றவர் செயலில் அடக்கம் வேண்டும். அறிவு பெருகப் பெருக அடக்கமும் பணிவும் அமரர்களுக்கு ஈடாக மனிதனை ஆக்கிவிடும்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்" என்றார் வள்ளுவரும்.

ஔவையின் தமிழுக்கு அகிலமே தலைசாய்த்தது. மண்ணாளும் மன்னனும் மண்டியிட்டு வணங்கி நின்றார். அப்படிப்பட்ட ஆற்றல் பெற்ற ஔவைக்கு ஆணவம் வந்துவிடக்கூடாது என்பதற்காக ஆடு மேய்க்கும் இடைச்சிறுவனாக மாறி நாவல் மரத்தில் ஏறியிருந்து களைப்புடன் வந்த ஔவையிடம் "பாட்டி, சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?" எனக் கேட்டு சுட்ட பழத்திற்கு விளக்கம் கூறிய சுப்பன் அந்த ஔவைக்கே பாடம் சொன்னார்; தமிழ் வாழ அருளும் கொடுத்தார்.

"திகட சக்கர செம்முகம் ஐந்துளான்" எனத் தொடங்கி, கந்தபுராணத்தை கந்தன் அருள்பெற்று தன் திருக்கரங்களால் எழுதி, அவற்றை திருத்தம் செய்ய இறைவனையே வேண்டி, அந்நூலை அரங்கேற்றம் செய்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார். நூல் அரங்கேற்றம் என்றால் எப்படியிருக்க வேண்டுமென்பதை அங்கு கண்டோம். கற்றோர் சபையிலே சொற்குற்றம், பொருட் குற்றம், எக்குற்றமும் இல்லா நிலைமையிற்தான் அந்நூல் அரங்கேறி மக்கள் மத்தியில் வரமுடியும் என்ற உண்மை உணர்த்தப்பட்டது. காப்புச் செய்யுளில் இலக்கணப் பிழை சொல்லி அரங்கேற்றம் தடைப்பட்டபோது வயோதிப வடிவத்தில் வந்து இலக்கண நூல் காட்டி பொருள் கூறி, குறைகுடம் தளம்பும், நிறைகுடம் தளம்பாது என்பதை புலவர்களுக்கு அறியவைத்து, நூலை அரங்கேற்றம் செய்துவைத்தார் அன்று முருகப்பெருமான்.

கந்தனின் கரம்பட்ட கந்தபுராணம் தமிழர் உள்ளத்தை, பண்பாட்டைக் காக்கும் புராணமாக உருவாக்கப்பட்டது. சூரன், சிங்கன், தாரகன் என்ற மூன்று வல்லமை கொண்டவர்களையும் படைத்து, கல்வி கேள்விகளில் சிறக்கவைத்து, அட்டமா யோகங்களும் கைவரப்பெற்றவர்களாய், அகிலம் முழுதும் கட்டியாளும் வல்லமை கொண்டவர்களாய் ஆக்கப்படுகின்றனர். எதுவும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகப் போய்விடும். அது அழிவைத் தந்துவிடும். எனவே, அது அழிக்கப்பட வேண்டும் அல்லது அடக்கப்பட வேண்டும் என்ற பாடத்தை உணர்த்த கந்தன் பிறப்பும் வரலாறும் வழிகாட்டியது.

சூரன், சிங்கன், தாரகன் என்ற மூன்று அசுரர்களும் மற்ற உயிர்களைத் துன்பப்படுத்துவதைப் பார்த்து, தேவர்களைக் காக்கும் பொருட்டு முருகன் தோற்றுவிக்கப்பட்டார். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு அன்னையின் அணைப்பிலே வளர்ந்து அப்பனுக்கே 'பிரணவ'ப் பொருள் உணர்த்திய சுப்பனாய் மாறி, பிரமனின் அறியாமையைப் போக்கி, அசுரர்களை அன்னை பராசக்தியின் ஞானவேல் கொண்டு சங்காரம்செய்து உலகில் உயிர்கள் நிம்மதியாக வாழ வழிவகுத்தார்.

இது உலகில் வல்லவன் கைகள் ஓங்கி நல்லவர்க்கு அழிவுவரும் போதெல்லாம் எல்லாம் வல்ல இறைவன் சங்காரம்செய்யத் தோன்றுவான் என்ற பாடத்தை மானிடத்துக்கு புரியவைத்தது. அதுமட்டுமன்றி, ஐம்பொறிகள் மூலம் வரும் உணர்வுகளை அடக்கி, ஆற்றுப்படுத்தி, ஆறறிவுள்ள மனிதனாகப் பிறக்கும் மானிடன் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் இறைசக்தி என்னும் ஞானசக்தி கொண்டு அவற்றை அழித்து பேரின்பமாகிய முக்தி இன்பத்தைப் பெறவேண்டுமென்ற தத்துவம் உணர்த்தப்பட்டது.

தாரகன் என்ற அசுரத் தன்மை மூலம் 'மாயை' என்ற மலம் உணர்த்தப்படுகின்றது. மாயை பொய்த் தோற்றம் கொண்டது. அறிவை அழித்து வெறும் பொய்யான நிலையற்ற பொருட்களை நிலையானவை என்று அறிவுக்கு உணர்த்துவது. இதனால் உயிர் மெய்ப்பொருளை அறியமுடியாது போய்விடுகின்றது.

மாயைத் தோற்றத்தால் ஆசையினால் உந்தப்பட்டு, உலகத்தில் தோன்றும் பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை என்ற பஞ்சமா பாதகங்களுக்கு அடிமையாக்கப்படுகிறது ஆன்மா என்னும் உயிர். கோயிலில் மூலமூர்த்தியைத் தரிசிக்கமுடியும். அதேபோல் உலகக் காட்சியெல்லாம் பொய்யானவை. "காயமே இது பொய்யடா" என்ற நிலை வரும்போதுதான் நாம் செய்கின்ற கன்மம் என்ன என்பது புரியவரும்.

கன்மம் என்பது நல்வினை, தீவினை இரண்டும் சேர்ந்தது. அதனால்தான் சிங்கமாசுரனின் தலை இரு தடவை வெட்டப்படுகின்றது. நல்வினை தீவினை எதைச்செய்தாலும் அவை பிறவிப் பெருங்கடலை எமக்குத் தந்து கொண்டேதான் இருக்கும். நல்வினை நற்பிறப்பையும், தீவினை தீய பிறவியையும் கொடுக்கவல்லது. "பிராரத்துவ கன்மம்" என்ற இப்பிறப்பு வினையையும், "ஆகாமியம்" கன்மம் என்ற புதிய வினைகளையும் "சஞ்சிதம்" என்ற பிறவி தோறும்நாம் செய்து சேமித்து வைத்துள்ள நல்வினை, தீவினை மூட்டைகளையும் களைந்தால்தான் இறையருள்பெற்று "சக்தி நிவாதம்" அடைய முடியும். எனவே, இதுவும் இறை சக்தியாற்தான் முடியும் என்பதால்தான் ஞானவேல் கொண்டு சிங்கமாசுரன் அழிக்கப்படுகிறான். கன்மம் (நல்வினை, தீவினை இரண்டு) அழியும் தன்மை கொண்டவை என்பதைக் காட்ட இருமுறை அவன் தலை கொய்யப்படுகின்றது. சிங்கமுகாசுரனின் சங்காரத்தினால் கன்மம் அழியும் தன்மை பெற்றது என்பதை விளக்கியுள்ளார் கச்சியப்பர்.

ஆணவம் என்பது 'நான்' என்ற அகங்காரத்தையும் 'எனது' என்ற மமகாரத்தையும் கொண்டதாகும். இதை இறைசக்தியால் அடக்க முடியுமேயன்றி அழிக்கமுடியாது. அதனாற்தான் ஆணவம் என்பது இருள்மயமானது; 'நான்' என்ற அகங்காரத்தையும் 'எனது' என்ற மமகாரத்தையும் கொண்டது. உண்மையை மறைப்பது. தன்னை மட்டும் காட்டிநிற்கும் கொடிய சக்தி. அது அறிவை மயக்கி, அழிவைத் தரக்கூடியது என்பதை விளக்க சூரனின் உருவத்தை விகாரமாக்கிக் காட்டி, ஆணவம் எந்த உருவத்திலும் எம்மை உண்மைப் பொருளான இறைவனை அடையத் தடையாக இருக்கும் என்பதால்தான் மழையாக, முகிலாக, மின்னலாக, மாமரமாக எல்லாம் காட்டி, இறுதியில் சேவலும் மயிலுமாக மாற்றப்பட்டு முருகனின் கீழ் அடக்கப்பட்டுள்ளமை காட்டப்படுகின்றது.

இறைவனின் அருள் கிடைக்கப்பெற்றால் ஆணவம் அடங்கி அந்த சோதி வடிவமாக ஆன்மா மிளிரும். அப்படிப்பட்ட ஆத்மாக்களிலும் இரண்டு வகை உண்டு. ஒன்று ஜீவமுக்தி அடையும் தன்மையுள்ள ஆன்மா. மற்றொன்று இறைவனின் சக்தியினால் ஆட்கொள்ளப்பட்ட ஆத்மா. இறைவனைத் தேடியலைந்து அலைந்து இறைசக்தியைப் பெற்று முத்திபெறும் ஆன்மா ஒன்று. அதுவே தெய்வயானை அம்மன் திருமணம் விளக்கும். (அப்பர் சுவாமிகள் 81 வயது வரையும் வாழ்ந்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட ஆத்மா) இரண்டாவதாக இறைவனே தேடிச்சென்று ஆட்கொள்ளும் ஜீவமுத்தியுள்ள ஆத்மா. அதுவே வள்ளி திருமணத் தத்துவம் எமக்கு உணர்த்துவதாகும். (மாணிக்கவாசகரை இறைவன் குருவாக வந்து குருந்தமர நிழலில் தடுத்தாட்கொண்டார்.)

ஆன்மாக்களின் மும்மலங்களும் நீக்கப்பட்டு, பேரின்ப முக்தியை அடையும் நிலையை ஞானசக்தியான வேலும், இச்சா சக்தி, கிரியா சக்தியெனும் வள்ளி தெய்வயானை எனும் இரு சக்திகளின் திருமணத்தின் மூலம் ஆன்மா இறைவனால் ஆட்கொள்ளப்படும் தத்துவமும் உணர்த்தப்படுகிறது. இதையே பாமரரும் அறியும் வகையில் கதையாகக் கூறி கந்தன் கருணை கந்தபுராணத்தின் மூலம் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. இதை இன்றைய சந்ததிக்கு எடுத்துக்கூறுவது எம் கடமையாகும். இதையறியாது கந்தனுக்கு இரண்டு வீடு. எனவே எனக்கும் இரண்டு வீடு வேண்டும். கடவுளே கட்டலாம், நான் கட்டக்கூடாதா என்ற விதண்டாவாதங்கள் எம்மத்தியிலே உண்டு.

பிள்ளைகளுக்கு சரியான விளக்கம் கொடுக்கப்படாமையால் அவர்கள் எம் மதக் கோட்பாட்டை, வழிபாட்டை வெறுக்கின்றனர். மனம் மாறி, மதமும் மாறி ஓடுகின்றனர். ஆலய வழிபாடு வெறும் புக்கைக்கும் கடலைக்கும் அன்னதானத்துக்கும் என நினைக்கின்றனர். ஆலய வழிபாட்டுக்கு வரும் அடியவர்களை இருத்தி, ஆராதனை காட்டமுன் அன்றைய வழிபாட்டின் தத்துவத்தை மக்களுக்கு விளக்குங்கள். ஆன்ம தத்துவத்தைக் கூறுங்கள். அமைதியற்ற வழிபாடுகளை நிறுத்தி, அமைதியான வழிபாட்டுக்கு வழிவகுத்து உண்மைத் தத்துவங்களை உரையுங்கள்.

உலகெலாம் தமிழோசை முழங்குவதுபோல் மேன்மைகொள் சைவநீதி விளங்கும் உலகமெலாம்.

# கோயில் இல்லா ஊரில் குடியிருக்கலாமா?

திரு. குரு அரவிந்தன்

தமிழர்கள் புகலிடம் தேடிச் சென்றபோது, தங்களுடன் தமது மதக் கோட்பாடுகளையும், விழுமியங்களையும் கையோடு கொண்டு சென்றார்கள். மொழி, மதம், பண்பாடு கலாச்சாரம் பாரம்பரியம் என்று தமது இனத்தின் தனித்துவத்தைப் பேணிக்காப்பதில் மிகவும் கவனமாக இருந்தார்கள். சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் கணிசமான அளவு தமிழர்கள் இன்று குடியிருக்கிறார்கள். அப்படிச் சென்று குடியேறியவர்களில் சிலர் காலப்போக்கில் தங்கள் மொழியை, மதத்தை, தனித்துவத்தை, பண்பாடு கலாச்சாரத்தை மறந்து அந்த நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொண்டார்கள். இந்த உண்மையைச் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், புலம் பெயர்ந்த சில நாடுகளில் உள்ள தமிழர்களின் கடந்தகாலச் சரித்திரம் அதற்குச் சிறந்த சான்று பகிர்ந்து கொண்டே இருக்கிறது.

தென் இந்தியாவில் இருந்து குறிப்பாக தமிழகத்தில் இருந்து வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்றவர்கள் அங்கே தங்களை நிலை நிறுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தினார்களே தவிர மொழி. மதம், பண்பாடு காலச்சாரம் போன்றவற்றில் அதிக அக்கறை காட்டவில்லை. காலப்போக்கில் அவர்கள் அந்த மண்ணின் கலாச்சார பண்பாடுகளில் மூழ்கிப் போனதால் பல நாடுகளில் தங்கள் தனித்துவத்தை இழந்து முகவரி அற்றவர்களாக ஆகிவிட்டார்கள். இதனால் தங்கள் மொழியையும், மதத்தையும் புறக்கணிக்கத் தொடங்கினர். இதுவே அந்த மண்ணில் ஒரு இனம் அழிவதற்கும் காரணமாயிற்று.

இத்தகைய சீரழிவு ஒரு காலத்தில் தங்களுக்கும் ஏற்படலாம் என்பதை ஈழத்தமிழர்கள் உணர்ந்தேயிருந்தனர். இந்தக் காலகட்டத்தில் சிறந்ததொரு கட்டமைப்பு தமிழ் ஈழத்தில் இருந்ததால் புகலிடம் தேடிச் சென்ற தமிழர்களும் அவர்களின் வழி நடத்தலின் துணையோடு பண்பாடு கலாச்சாரத்தைக் கவனமாகப் பேணிக் காத்து வந்தார்கள். புலம் பெயர்ந்த நாடுகளில் நடந்த கடந்தகாலச் சம்பவங்கள் பல, ஈழத் தமிழர்களுக்கு சிறந்த பாடங்களாக அமைந்து இருந்தன. அதனால்தான் அவர்களில் பலர் மொழியை மட்டுமல்ல, தங்கள் மதக்கோட்பாடுகளையும் கைவிடாமல் இன்றும் காப்பாற்றி வருகின்றார்கள்.

'களவும் கற்றுமற' என்று எமது பெரியோர் கூறியது போல, மதக் கோட்பாடுகளில் உள்ள நல்லவற்றைக் கற்றுக் கொள்ளப் பழகிக் கொண்டனர். அமைதி, ஒழுக்கம், கட்டுப்பாடு, பெரியோரைக் கணம் செய்தல், பிறருக்கு உதவுதல் போன்ற நல்ல பல விடையங்களை இந்துமதம் போதிப்பதால், தங்கள் அடுத்த தலைமுறையினருக்கும் மதகுருவானவர்களின் துணையோடு இவற்றைப் போதித்தார்கள். குழந்தைகள் வளரும்போது இது அவர்களை நல்ல வழியில் திசை திருப்பும் என்பதையும் யதார்த்த வாழ்வில் உணர்ந்து கொண்டிருந்தனர். புகலிடம் தேடிவந்த தமிழர்களில் **அனேகமான தமிழர்கள் இந்துக்களாக, சைவசமயத்தைக்** கடைப்பிடிப்பவர்களாக இருந்தார்கள். அவர்களின் ஆத்மீக தேவைகள் கருதி ஆங்காங்கே அவ்வப்போது இந்துக் கோயில்கள் கட்டி எழுப்பப்பட்டன. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகத் தமிழர்கள் மொழியை மறக்க முற்பட்டாலும் பலர் தங்கள் மதத்தைப் மறக்கவில்லை. குறிப்பாக தமிழகத்தில் இருந்து தொழில் நிமிர்த்தம் கயனா நாட்டிற்குப் புலம் பெயர்ந்தவர்கள் தங்கள் தாய் மொழியைக் காலப்போக்கில் மறந்து விட்டார்கள். ஆனால் தங்கள் மதமான இந்து மதத்தைத் புறக்கணியாமல் இன்றும் அவர்கள் காப்பாற்றி வருகின்றார்கள்.

தாய்மண்ணில் தங்கள் குலதெய்வம் என்று சொல்லித் தினமும் மக்கள் அருகே உள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவர். அதை நினைவில் கொண்டு கனடாவிலும் உயர்ந்த கோபுரங்களைக் கொண்ட ஆலயங்கள் பல அமைக்கப் பட்டிருக்கின்றன. இவை சிறந்த முறையில் பராமரிக்கப்படுவது மட்டுமல்ல, இங்கே தினப்பூசைகளும், திருவிழாக்களும் கிரமமாக நடைபெறுகின்றன. றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம், கனடா கந்தசுவாமி இந்து ஆலயம், கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயம், ஸ்ரீ துர்க்கா இந்து ஆலயம், ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம், ஜெயதுர்க்கா தேவஸ்தானம், ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம், ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம், ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், ஹரே கிருஷ்ணா ஆலயம், சிவன் கோயில், மஹா கணபதி ஆலயம், கனடா திருப்பதி வெங்கடாசலபதி தேவஸ்தானம், நல்லூர் கந்தசுவாமி கோயில், ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம், திருச்செந்தூர் முருகன் கோயில், சிவ விஷ்ணு தேவஸ்தானம், ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயம், பெரிய சிவன் ஆலயம், ஆதி பராசக்கி ஆலயம், ஸ்ரீ கணேச துர்க்கா தேவஸ்தானம், ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர சிவாலயம். செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், ஸ்ரீ புவனேஸ்வரி ஆலயம், கனடிய நயினாதீவு நாகம்பாள் ஆலயம், மேருபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், ஸ்ரீ மகாலட்சுமி மந்திர், திரு முருகன் ஆலயம், போன்ற பல இந்துக் கோயில்கள் ரொறன்ரோவில் இருக்கின்றன.

அதேபோல கியூபெக்கில் குறிப்பாக மொன்றியலிலும் அதன் சுற்றாடலிலும் அருள் மிகு ஸ்ரீ துர்க்கா கோயில், திரு முருகன் கோயில், வல்மொறின் சுப்ரமணியர் ஐயப்பன் கோயில், போன்ற பல பிரபலமான கோயில்கள் இருக்கின்றன. இதைவிட கனடாவின் தலைநகரமாகிய ஒட்டாவா, சஸ்கச்சுவான், அல்பேட்டா, பிரிட்டிஸ் கொலம்பியா, மினிட்ரோபா, நோவாஸ்கோசியா, நியூபவுன்ட்லன்ட் ஆகிய இடங்களிலும் இந்து வழிபாட்டு நிலையங்கள் பல இருக்கின்றன.

அருகே உள்ள அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் அடிக்கடி கனடாவில் இருந்து கனடிய எல்லையைக் கடந்து பக்தர்கள் செல்லும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பீடம், பிறஸ்பேர்க்கில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆலயம், போன்ற பிரசித்தி பெற்ற இந்துக் கோயில்கள் இருக்கின்றன. பலர் வார இறுதி நாட்களில் வேலைப் பளுவில் இருந்து விடுபடுவதற்காகக் குடும்பத்தோடு இத்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது வழக்கம். இதைவிட அலபாமா, அரிசோனா, கலிபோணியா, கொலறாடோ, கொனற்றிக்கட், புளோரிடா, ஜோஜியா, ஹாவாய், இல்லினோய்ஸ், கன்சாஸ், கென்ரக்கி, லூசியானா, மேரிலான்ட், மசெச்சுசெட், மிச்சிக்கன், மினிசோட்டா, மிசிசிப்பி, மிஸ்சோரி, நியூஜேசி, நியூஜோர்க், நோத் கரோலினா, ஒகியோ, பென்சில்வேனியா, சவுத்கரோலினா, ரெக்ஸாஸ், வேர்ஜீனியா, வாசிங்டன், போன்ற இடங்களிலும் பல இந்து வழிபாட்டு நிலைங்கள் இருக்கின்றன. இப்பகுதிகளில் வசிக்கும் அனேகமான கிழக்கு இந்தியர்கள் இந்துக்கள் ஆதலால் இந்த வழிபாட்டுத் தலங்கள் இங்கே அமைக்கப் பட்டிருக்கின்றன.

இதுவரை காலமும் கனடாவில் நடைமுறையில் இருந்து வந்த சிறந்த பல கட்டமைப்புக்கள் தமிழின விரோதிகளால் சிதைக்கப்பட்டு வருவதைப் புகலிடம் தேடிவந்த தமிழர்களால் நன்கு அவதானிக்க முடிகின்றது. எங்கள் பண்பாடு கலாச்சாரம் எல்லாம் மெல்லமெல்ல அழிக்கப்பட்டு வருவதற்குத் தெரிந்தோ தெரியாமலோ அவர்களுடன் சேர்ந்து நாமும் ஒருவிதத்தில் காரணமாக இருக்கின்றோம். இதுவரை காலமும் பெற்றோரோடு கோயிலுக்குச் சென்று வந்த சில பருவவயதினர் அங்கே செல்வதற்கு இன்று ஏனோ தயக்கம் காட்டுகிறார்கள். எமது இனத்துப் பருவவயதினர் ஒன்றுகூடி நல்ல பல செயற்றிட்டங்களை முன் எடுத்துச் செல்வதற்கு ஏற்ற வகையில் அவர்களை வழிநடத்த இந்து ஆலயங்களில் ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். ஒருசில ஆலயங்களில் இந்த வசதிகள் இருந்தாலும் அது போதுமானதாக இல்லை. இளம் வயதினருக்கு ஏற்ற வகையில் ஆலய வழிபாடுகள் சில ஆலயங்களில் இன்னும் ஒழுங்கமைக்கப்படாததும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஆலயத்திற்குச் சென்று வழிபட அவர்களுக்கு விருப்பம் இருந்தாலும், நீண்ட நேரம் பொறுமையோடு அங்கே காத்திருக்க அவர்கள் தயாராகவில்லை. இதையே காரணமாக வைத்து அவர்களை இரவுநேர களியாட்ட விடுதிகளுக்கு இழுத்துச் செல்வதற்கோ, அல்லது மதமாற்றம் செய்வதற்கோ இன்னுமொரு கூட்டம் தயாராக நிற்பதையும் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ‘இரவுநேரக்களியாட்ட விடுதி இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்று உயர்வகுப்புத் தமிழ் மாணவி ஒருத்தி ஒருநாள் வேடிக்கையாகக் குறிப்பிட்டது இன்றும் என் நினைவை உறுத்துகிறது. சுற்றம் சூழ்நிலை மாறும்போது எண்ணங்களும் மாறுபடுவதுண்டு. முள்ளிலேபட்ட ஆடையின் நிலையில் எமது அடுத்த தலைமுறையினர் இருக்கின்றார்கள். கவனமாக எடுப்பதும் விடுவதும் எமது சமுதாயத்தினதும், பெற்றோரினதும் சாதுரியத்தில் தான் தங்கி இருக்கின்றது. எமது அடுத்த தலைமுறையினரின் நலன் கருதி இவற்றை உடனடியாகக் கவனத்தில் கொண்டு செயற்படுவோமாக!

## சிவபெருமானிடத்து நந்திதேவர் வேண்டிய பதினாறு பேறுகள்

திருச்சிற்றம்பலத்து உறையும் சிவக்கொழுந்தே
நின் பொன்னார் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம்

மறைகள் நிந்தனை சைவநிந்தனை பெறா மனமும்
தறுகண் ஐம்புலன்களுக்கு ஏவல் செய்யுறாச் சதுரும்
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோடு உறவும்
யாது நல்லன்பர் கேட்கினும் உதவும் இயல்பும்
மாதவத்தினர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுபதேச மெய் உறுதியும் அன்பர்
தீது செய்யினும் சிவச்செயல் எனக்கொளும் தெளிவும்
மனமும் வாக்கும் நின் அன்பால் ஒருப்படு செயலும்
கனவிலும் உனதன்பருக்கு அடிமையாம் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும்
தீமையாம் புறச் சமயங்கள் ஒழித்திடும் திறனும்
வாய்மையாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
ஏமுறும் பலதார நச்சிடா நன்னோன்பும்
தூய்மை நெஞ்சு யான் எனது எனும் செருக்குறாத் துறவும்
துறக்கமீது உறையினும் நரகிற் றோயினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பம் துய்க்கினும்
பிறைக்கொழுந்து அணிசடைப் பெருமை இவ்வரம்
மறுத்திடாது எனக்கு வணங்கல் வேண்டுமால்.

# மாணவர் பகுதி

## விபூதி

சங்கவி கிருஷ்ணகுமார், 2ம் வகுப்பு

பசுவின் சாணத்தை எரிப்பதால் உண்டாவது திருநீறு. இது பிரச்சினைகள், தடைகள் எல்லாவற்றில் இருந்தும் காப்பாற்றி சந்தோஷத்தைக் கொடுக்கும். தீயவை எல்லாம் தீயில் அழிந்துபோன பின் எது அழியாது இருக்கின்றதோ அதுதான் சிவனுக்கேற்ற நல்ல சின்னம். அதுதான் திருநீறு. நாம் விபூதி அணிவதனால் தீய சிந்தனைகள் அகன்று நல்ல சிந்தனைகள் தோன்றும்.

## ஔவைப்பாட்டியும் முருகப்பெருமானும்

நிராகுலன் புவனேந்திரா
6ம் வகுப்பு



ஔவைப்பாட்டி ஒரு தமிழ்ப்பெண் புலவர். இவர் முருகப்பெருமானிடத்தில் மிகவும் அன்பு உள்ளவர். ஒரு நாள் இவர் காட்டு வழியாக நடந்து வந்தார். நடந்து வந்த களைப்பினால் ஓய்வு எடுக்க விரும்பினார். ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தார். அது ஒரு நாவல் மரம். அந்த மரத்தில் ஒரு சிறுவன் இருந்தான் அச்சிறுவனிடம் சில பழங்கள் பறித்துத் தருமாறு பாட்டி கேட்டார். அதற்கு அச்சிறுவன் " சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்ட்டான்.

'பழம் சுடுமா' என்று ஔவைப்பாட்டியார் எண்ணினார். "சரி தம்பி, சுட்ட பழம் போடு" என்றார். உடனே சிறுவன் மரத்தை நன்றாக உலுக்கினான். பழங்கள் சில நிலத்திலே விழுந்தன. பழங்களை எடுத்து மண் போகுமாறு ஊ... ஊ.. என்று ஊதினார் இதைப்பர்த்த சிறுவன் பழம் சுடுகிறதா பாட்டி என்று சிரித்தான். பாட்டி திகைத்து விட்டார். என்னை சோதித்த சிறுவனே நீ யார் என்று கேட்டார் .

உடனே சிறுவன் முருகப்பெருமானாக் மாறி நீல மயில் மீது காட்சி கொடுத்தார். ஔவைப்பாட்டி அன்புடன் வணங்கினார்.



HIGHER STANDARDS

BASKARAN SINNADURAI

416 880 8585

COMMERCIAL

INDUSTRIAL

INVESTMENT

HomeLife Real Estate Brokerage

# சைவமும் தமிழும்

ஆஷா ஜெயநாதன்

"நல்லை நகர் நாவலரின்றேல்

சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே?"

தமிழ் என்றால் இனிமை என்பது பொருள். தமிழர் என்றால் இனியவர் எனலாம்.

நாவலருடைய ஈடிணையற்ற புலமையும், நாவன்மையும், துறவும், அஞ்சாமையும், துணிவும், பொது நலத்தொண்டுகளும் சைவத்தையும், தமிழையும் வளர்ந்தோங்கச் செய்தன. அவர் தம் உடல், பொருள், உயிர் அனைத்தையும் தமிழுக்கும், சைவத்துக்குமே என வாழ்ந்தவர்.

முன்பு சைவர்கள் என்று சொல்லவே பயப்பட்ட ஒரு காலம். தாங்கள் சாப்பிட்ட வாழையிலைகளைக் கூட பயந்து சுரைக்குள் ஒழித்து வைத்த காலம். கோயில்கள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டு, சைவமும், தமிழும் அழிந்த நிலையிலே காணப்பட்ட காலம். இக்காலகட்டத்திலேதான் நாவன்மை படைத்த நாவலர் தோன்றினார். தன்னுடைய பிரசங்கத்தினாலும், நூல்கள் பல எழுதியும், சைவப் பாடசாலைகள் பல தோற்றுவித்தும், பிடி அரிசித் திட்டம் போன்ற திட்டங்களை ஏற்படுத்தியும், மீண்டும் தமிழையும் சைவத்தையும் எழுச்சிபெற வைத்தார். சைவசமயச் சபைகளிற் காணப்படும் ஊழல்களை அம்பலப்படுத்தி, சமயத்தொண்டு என்னும் போர்வையிற் சிலர் செய்துவந்த அட்டூழியங்களை எல்லாம் கண்டிக்க அவதரித்தவர் நாவலர் பெருமான்.

நாவலருக்குப் பின் நமக்கோர் காவலராக விளங்கியவர் இந்துபோட் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள். இன்றைய உலகில் சைவமும் தமிழும் நின்று நிலைபெறுவற்குக் காரணமானவர்களில் முதன்மையானவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். அவருக்கு நகற் பிரதியாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுபவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். பண்டிதமணியை அடியொற்றி வாழ்ந்த அடுத்த நாவலர் நகற் பிரதியாகத் திகழ்ந்தவர் பண்டிதர் ச.சிதம்பரப்பிள்ளை என்றால் அது மிகையாகாது.

ஊர்கள் தோறும் பாடசாலைகள் நிறுவப்பட்டன. சைவச் சிறார்கள் சைவச் சூழலில் சைவ நெறிப்படி கல்வி பெறவேண்டும் என்னும் கொள்கையில் கடைசி வரையும் விடாப்பிடியாக நின்றவர் ஆறுமுகநாவலர், சைவக் கல்வி வளர்ச்சிக்கு தொண்டு நோக்குடன் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் (Hindu Board) சைவ பரிபாலன சபை என்னும் நிறுவனங்கள் உருவாயின. இந்நிறுவனங்களின் தாபக உறுப்பினராகவும் விளங்கிய பெருமை சேர்.வை.துரைச்சாமி அவர்களையே சாரும். இவருக்கு முன் சேர்.பொன் இராமநாதன் சைவாவிருத்திச் சங்கத்தின் தலைவராக விளங்கினார். வடமாகாணத்தின் பல பாகங்களில் சைவப் பாடசாலைகள், சைவாசிரிய கலாசாலைகள் தோன்றின.

புலம்பெயர்ந்த நாடுகளிலும் நமது அறிஞர்கள், புலவர்கள், பண்டிதர்கள், சமயப் பெரியார்கள் சைவத்தையும், தமிழையும் அழியவிடாது வளர்த்து வருகின்றனர். அமரர் சு.சீவரத்தினம் அவர்கள் சைவநெறி தழைத்தோங்க கனடாவில் இந்து கலாசார மன்றத்தின் வெளியீடான "சைவத் திருமுறை தோத்திரத் திரட்டு" என்னும் நூலை வெளியிட்டார். இவ்வாறாக புலம்பெயர்ந்த பலர் சைவத்தையும், தமிழையும் தமது இரு கண்களாகப் போற்றிப் பாதுகாத்து வளர்த்துவருவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

**வாழ்க தமிழ்! வளர்க சைவம்!**

# மாணிக்கவாசகர்

**மாதங்கி சண் - 6ஆம் வகுப்பு**

மாணிக்கவாசகர் பிறந்த இடம் திருவாதவூர். இவரின் தந்தை பெயர் சம்புபாதாசிரியர். தாயாரின் பெயர் சிவஞானவதி. இவர் சைவ சமயத்தில் பிரபலமான குருவர்களில் ஒருவர். இவர் பதினாறு வயதிலேயே சைவ சமயத்தில் புகழ்பெற்றவர். திருவாசக பாடலைப் பாடியபடியால் மாணிக்கவாசகர் என்று பெயர்பெற்றார்.

அரசன் திருவாதவூரரிடம் குதிரை வாங்கிவரும்படி பணம் கொடுத்து திருப்பெருந்துறைக்கு அனுப்பினான். போகும் வழியில் சந்தித்த குருவிடம் சீடராக விரும்பினார். இறைவனுக்குக் கோயில் கட்டுவதற்கு குதிரை வாங்கக் கொண்டுவந்த பணத்தைச் செலவழித்தார்.

பாண்டிய மன்னன் குதிரை வாங்கவில்லை என்று கோபம் அடைந்தான். இறைவனிடம் திருவாதவூரர் சொல்லி அழுதார். இறைவன் அரசனுக்கு குதிரைகள் அனுப்பினார். மறுநாள் குதிரைகள் நரிகளாயின. கோபமடைந்த அரசன் அவரைச் சிறையில் அடைத்தான். வைகை ஆறு பெருக்கெடுத்து ஓடியது. செம்மனச்செல்விக்கு உதவியாக மண் எடுத்துப் போடுவதற்கு கூலியாளாக இறைவனே வந்தார். அவர் வேலையை ஒழுங்காகச் செய்யாததால் அரசன் அவரை அடித்தான். அந்த அடி எல்லோர்மீதும் பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த மன்னன் மாணிக்கவாசகரிடம் மன்னிப்புக் கேட்டான்.

இவர் சைவ சமயத்தை வளர்க்கப் பாடுபட்டார். சிதம்பரத்தில் திருவாசகம், திருக்கோவையார் பாடினார். இவர் தனது முப்பத்திரண்டாவது வயதில் ஆனி மாதத்தில் இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

# அன்பின் பெருமை

**சாம்பவி கிருஷ்ணகுமார், 4ம் வகுப்பு**

அன்பு என்பது எல்லா உயிரினங்களிலும் உள்ளது. அது தாயன்பு, சகோதர அன்பு, காதல் அன்பு என்று பலவகை. ஆனால் ஆறறிவு படைத்த மனிதனிடத்தில்தான் இறைவனுடைய அன்பு பெரிய அளவில் உண்டு.

அன்பு பொருள் கொடுத்து வாங்கும் பொக்கிஷமன்று என சுவாமி விவேகானந்தர் அவர்கள் சொல்லி உள்ளார். அன்பை பணத்தினால் வாங்க முடியாது. ஆன்மாக்களிடத்தும், இறைவனிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதே சைவ சமயக் கொள்கை.

நாம் நம் பெற்ற தாய் தந்தையர்மேல் அன்பு காட்ட வேண்டும். நம் பெற்றோர் எங்கள் கண்கண்ட தெய்வங்கள். பெற்றோருக்கு அடுத்தபடி எங்கள் ஆசிரியர்கள். அவர்களிடத்தில் அன்பு வைத்தால் நாம் நன்கு கற்க முடியும். எனவே, அன்பினால் எதையும் விலைக்கு வாங்கமுடியும்; பணத்தினால் அல்ல.

# Lord Ganesh and the Mango

**Janani Anpalagan**

Long ago, Shiva, the lord of the universe was seated on Mount Kailash with his consort Umadevi. Shivaganas, the servants and armies of Lord Shiva, devotees and sages stood around them in worshipful respect. Little Lord Muruga and Little Lord Ganesh were playing some distance away.

The poet sage Naratha appeared on the scene singing sweetly, "Narayana…Mahadeva…"

He held a "Magathy Veena", a musical instrument in one hand and a beautiful mango fruit in the other. The sweet smell of the mango, which shone like gold, filled the whole of Kailash.



"Welcome, Naratha…Welcome…My Blessing to you", Lord Shiva blessed him. "Lord, this fruit that I have in my hand is a rare fruit with amazing powers. My father, Lord Brahma gave it to me. Rather than I eating it, it would be more appropriate that you, the Lord of the universe, eat it. So, I have come here to give this to you", Naratha said respectfully and placed the mango at the feet of the Lord.

Lord Shiva accepted the fruit with a smile and handed it over to Umadevi, his consort. "Devi, it is the sacred truth that is no Shivam without Sakthi, and that I cannot exist without you. So, you should eat the fruit" said Lord Shiva. Umadevi smiled kindly. "Lord, I have merged myself into you, forming one half of your being. I need no greater boon than this. So, let us give the fruit to the children" replies Umadevi. The children, who had all this while been playing, came running and stood before their parents.

"Father! Mother! Let me have the fruit!" said little Muruga, holding out his hands quickly. "Father! Mother! I am the eldest! So the fruit should be given to me!" claimed little Ganesh, reaching out with his trunk. "Lord, cut the fruit into two halves and let them share it" said Umadevi feeling sorry for them. The Lord laughed. "No, Devi. This is a rare fruit with special powers. It should not be shared. It must be given to one person only. I want to find out which one of our sons deserves this fruit. I am going to give them a test" said the Lord. Then he addressed his sons. "Sons, the one who goes around all the three worlds, heaven, nether world, and earth, and comes back first will get the fruit" he said. Both his sons bowed before him and said "Let it be so, father".

The younger little Muruga was very enterprising. Not wasting even second he got on his vehicle, the peacock. The beautiful peacock flew into the sky carrying him. Lord Ganesh's vehicle, the mouse, swished its tail getting ready for the ride. But, Lord Ganesh did not mount his vehicle; instead he was lost in deep thought. At the same time, Lord Muruga's vehicle, the peacock was carrying him around the three worlds. The devas, humans, and giants living in the three worlds worshipped him and showered him with flowers.

Meanwhile, Lord Ganesh who was thinking had an idea. "Lord Shiva is the ruler of the Universe. His consort Umadevi represents his power. All lives and all worlds originated from both of them, so, if I go around them, I would not only have gone around the three worlds but also the entire universe" he thought. Thinking along these lines and coming to a decision, he went around his mother Umadevi and father Lord Shiva and bowed before them.

Lord Shiva, pleased with his son's intelligence, respect and affection towards his parents, gave the precious mango to little Lord Ganesh and blessed him. Lord Ganesh bowed before his parents again and accepted the fruit happily.

# Proverb of the Day

**Asvena Sriharan**
**knowingourroots**

அடியற்றால் நுனி விழாமல் இருக்குமா?

***Adiyattaal nuni vizhamal irukkuma?*** **If the root fail, will not the top fall?**

- In all situations the foundation is important; the foundation must be strong in order to maintain a sturdy outcome.
- It does not only apply to materials but also to mankind.
- In the student life is the foundation years. We are laying foundation for our future life by means of our education, character build up and setting up the right attitude. As we are all supported, provided and protected by our parents and teachers this period is called Bramacharya in Hinduism.
- The goal of Brahmacharya life is learning.
- The Dharma of Brahmacharya is Worshiping our mother - ***Maatru devo bhava***
  Worshiping our father - ***Pitru devo bhava***
  Worshiping our teacher - ***Aachcharya devo bhava***

as they are the ones supporting, providing and protecting us during our student life. We are totally dependant on them for our existence, learning and guidance. Students are provided with protection, clothed and fed, where the duty in these foundation years is to study hard and behave well.If we fail in our duty of learning, if we fail in our dharma of respecting our mother, father and teachers then we are the parasites in our own home, in our own society. In this situation our dependence on our parents for your food, cloths and shelter considered as a dependency of a parasite. Then there is no obligation for our parents, teachers and society to support us.

# தைப்பொங்கல்

**சாம்பவி சண், 3ம் வகுப்பு**



**தை**ப்பொங்கல் தமிழர் திருநாளாகும். தை மாதத்தில் தைப்பொங்கல் கொண்டாடப்படும். உழவர் திருநாள் என்றும் இது அழைக்கப்படும். கதிரவனுக்கு முதல் நாளும், மாடுகளுக்கு மறுநாளும் பொங்கிப் படைப்பார்கள். சூரியன் வெயிலையும் மழையையும் ஒளியையும் உலகிற்கு அளிக்கிறது.

பொங்கல் தினத்தன்று காலையில் எழுந்து நீராடி முற்றத்தை மெழுகிக்கோலம் இட்டு விளக்கு ஏற்றுவார்கள். புதுப் பானையில் மா இலை கட்டி, அரிசி. சர்க்கரை, பால், நெய் இட்டு பொங்கல் பொங்கி, வாழைப்பழம், மாம்பழம், கரும்பு, இளநீர், வாழை இலையில் படைத்து பொங்கலோ பொங்கல் என்று கூறி சூரியனை வழிபடுவார்கள். புத்தாடை அணிந்து குடும்பத்தோடு கோயிலுக்குச் சென்று வழிபடுவார்கள். அதன்பின் உறவினர் நண்பர்களோடு ஒன்றுகூடி மகிழ்வார்கள். கனடாவில் வாழும் தமிழர்களாகிய நாம் நமது பண்பாட்டைப் பேணிக்காத்தல் எமது கடமையாகும்.

# Kural of the day

**Nirajan Sakthivel**
**knowingourroots**

விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றுஆங்கே
பசும்புல் தலைகாண்ப தரிது -திருக்குறள்-16

***Visumpin thuli veezhin allaal mattu aangae***
***pasum pul thalai kaanpu arithu*** **-** Thiru KuraL 16

**If no drop fall from the cloud, not a green blade of grass would grow**

Without rain there is no plant life.
Without plants there is no life as plants are the basis of the food chain.
Water is essentials for the agriculture.
Water is the basic necessary for the life even in for every cell.
Food chain and water cycle is interconnected
Basics of living

Rain is also looked upon as a second veichle or recervoir of the soul when it descends to earth to take human birth. Soul comes through five such veichles. They are explained in the sacred book **"Brahma Sutra"** as follows.

**Heavens**
**Rain**
**Earth/ Plants/ Food**
**Male/ Father for two months**
**Female/ Mother for ten months**

These five places are referred to as sacred fires. Realization of this sacred truth is called **"Panchaagni Vidya".** This is one of the secret of the sacred.


# Deva-Asura fight is the battle of evil versus good within us

**Abhishek Sukumaran- knowingourroots**

The significance of stories of *Durga- Mahisha Asura* fight and *Murugan - Sooran* fight etc are being passed on for centuries. *Asuras* are the evil tendencies and forces within us. The Gods fighting these *asuras* are the good tendencies and forces within us. There is constant battle between these two forces within us when we make our choices every day. The evil tends to be attractive and easier in giving quick results. The good choices seem to be harder and take longer time to give the desired results. But at the end the evil falls and fails in the long run. The righteousness and the good choices win over. This is the fact the stories are trying to show us.There is good and evil both within us and around us. The bad always seems to be the one, we tend tolean toward as it seems to be easier and attractive. The good on the other hand seems to be harder and challenging. However, in the long run, good always seems to conquer the bad.

# தஞ்சைப் பெரிய கோயிலின் ஆயிரம் ஆண்டு நிறைவு விழா

நர்த்தனன் சிறிமுருகதாசன்



தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் வகையில், 1010ம் ஆண்டில் இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில், இன்று, ஆயிரம் ஆண்டுகள் கடந்து வந்துள்ளது. 1010ம் ஆண்டில் இராஜராஜ சோழன், தமிழர் வரலாற்றில் முதல் முறையாக அவரது முடியிலிருந்த லோகத்தை ஆலயத்திற்கு கொடுத்து சிறப்பித்தார். சைவ ஆலயங்களில் சிறந்து ஓங்கும் இத் தஞ்சைப் பெரிய கோயிலை நம் தமிழ் மன்னன் கட்டியது பெருமை அல்லவா? சிவன், இக் கோயிலில் பிரகதீஸ்வரர் வடிவத்தில் வீற்றிருக்கிறார். இங்கிருக்கும் சிவலிங்கம் ஸ்தானத்திலும் பார்க்க பெரிதாகக் காணப்படுகிறது. இருநூற்றிப் பதினாறு அடியில் அமைந்திருக்கும் இதன் கோபுரம், இன்றும் சூரியனை எட்டிப் பார்க்கிறதாகக் காட்சியளிக்கிறது. அன்று தொடங்கி இன்று வரை, இத் தஞ்சைப் பெரிய கோயில் தமிழரின் இன, மத, மற்றும் கலாச்சார பண்புகளை எடுத்துக் காட்டுகிறது.

இக் கோயிலை இராஜராஜ சோழன் இராஜராஜேஸ்வரம் எனவும் அதிலுள்ள சிவலிங்கத்தை பெருவுடையார் எனவும் பெயர் சூட்டினார். பிற் காலத்தில், சமஸ்கிருத மொழி பெருகும் பொழுது, ஆலயம் பிரகதீஸ்வரம் எனவும் அதன் மூலவர் பிரகதீஸ்வரர் எனவும் பெயர் மாற்றப்பட்டது. இது போல், இக் கோயிலில் அமைந்திருக்கும் இரகசியங்கள் இன்றும் நமக்குத் தெரியவில்லை. விஞ்ஞானம் வளராத காலத்தில், கோபுர உச்சியிலுள்ள எண்பது தொன் கல் எப்படி அங்கு சென்றது என்பது அறிஞர்களிடம் இன்றும் வாதாடத்தக்கது. சரபல்லவம் என்னும் ஊரிலிருந்து பள்ளம் கட்டி யானைகளால் கொண்டு செல்லப்பட்டது என ஊர் மக்கள் சொல்வர். இக் கல்லிலுள்ள மகிமைகளை எண்ண முடியாது. வெப்ப காலத்தில் குளிராகவும் குளிர் காலத்தில் சூடாகவும் உணர்த்தும் தன்மை இக் கல்லுக்குண்டு. வேறு பொருட்கள் போல் இக் கோபுரத்திற்கு நிழல் இல்லை. சுண்ணாம்பு கல்லால் செய்யப்பட்ட இங்கிருக்கும் நந்தி மீது சூரிய ஒளிபட்டு, பின்னர் இருநூறு மீட்டர் தூரத்திலிருக்கும் லிங்கத்தை சென்றடையும். விளக்கு வெளிச்சம் இல்லாத ஸ்தானம், சிறந்து பிரதிபலிக்கும்.

கடந்த 2010ஆம் வருடம் செப்டம்பர் 22 முதல் 26 வரை, இத் தஞ்சைப் பெரிய கோயில், தனது ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. கோயிலையும் அதை சுற்றி இருக்கும் நிலமும் தமிழகம் பார்க்காத அளவில் சோடிக்கப்பட்டது. கோயில் வீதி முழுவதும் கடைகளால் நிரம்பியிருந்தது. நிகழ்ச்சிகளுக்கெனவே ஓர் அழகிய மண்டபங்களும் கட்டப்பட்டிருந்தன. தமிழரின் பாரம்பரிய கட்டிட மற்றும் ஓவியக் கலைகளையும் உணர்த்தும் பல சிற்பங்களும் இருந்தன. அழகாக சோடிக்கப்பட்டிருந்த மின் விளக்குகளால் இரவிலும் பளபளக்கிறது இப் புதிய தஞ்சாவூர். இந்த நான்கு தினங்களும் தமிழகத்தின் நவீன நகரமாக தஞ்சாவூர் திகழ்ந்தது.

வேறு கலை நிகழ்சிகள் போல் ஆடல்களும் பாடல்களும் நாடகங்களும் காண்பவர்களை

பிரமிக்கவைக்கவில்லை. நம் பாரம்பரிய கிராமிய நிகழ்ச்சிகள் தான் மக்களை மகிழ வைத்தது. இருபதாம் நூற்றாண்டில் வந்துள்ள தொலைக்காட்கள், கணனிகள் கொடுக்கும் நிகழ்ச்சிகளிலும் பார்க்க இந்நிகழ்ச்சிகள் சிறந்தவை என இளைஞர்களுக்குக் கூற இத் திருவிழா ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது. பொய்க்கால் குதிரையாட்டம், மாடு ஆட்டம், மயிலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம், தேவராட்டம், புலியாட்டம், ஒயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளை இன்று எங்கு காணமுடியும்? தஞ்சைப் பெரிய கோயிலின் சாதனையை மிகைப் படுத்த, உலகமெங்குமிருந்து 1000 ஆடகர் இணைந்து, திருவிசைப்பாவிலிருந்து ஒன்பது பாடல்களுக்கு ஆடினர்.

இன்று, தஞ்சைப் பெரிய கோயில் கட்டி ஆயிரம் வருடங்கள் கடந்துள்ளன. இவ் விழாவை நினைவு கூருவதற்காக இராஜராஜ சோழனின் சிலை வைத்த, மின்னொளி நிறைந்த, அழகிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அன்றும், இன்றும், என்றும் தமிழர் இதயங்களில் ஆழமாகப் பதிந்த முத்து போல் இத் தஞ்சைப் பெரிய கோயில் இருக்கும். பல மன்னர்கள் காவிரி மற்றும் கங்கை நதிக்கரைகளில் சிவனுக்காக கோயில்கள் கட்டியுள்ளனர். பல நாயன்மார்கள் சிவனைப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். ஆனால் பிரகதீஸ்வரர்க்கன ஒரு ஆலயம் தான் உண்டு. ஆயிரம் ஆண்டுகள் கடந்து வந்துள்ள ஆலயமும் ஒன்று தான் உண்டு. **அது தஞ்சைப் பெரிய கோயில். அது நம் வரலாறு.**

# Markandeyar

**Shiriraam Sitsabesan**

Hindu priest parents they were really good people they don't have a child so they go to the temple every day and pray to get a child. But un fortunately it took a really long time and they didn't get there baby. So they begged Sivaperuman can I have a child please. Then Sivaperuman came and said OK, you have a baby but you only have two choices you can have a baby that can live a hundred years but he is going to be really bad, naughty, steeling, troublemaker, drinks, beer and wine and fight people. Or would you get a boy that is only can live up to 16 years old and he is smart intelligent, organized, neet, never gets into troubles and nice polite person, his name is Markandeya. The parents thinking for a long time and then they said they want the one that can live up to 16 years old and then die. Each birthday party is so fun and they celebrate a lot and have a great time. But he when he turned to 16, his parents were crying the boy asked why you are crying mom and dad then the parents said you are going to die. Then the boy said don't worry. I pray god every day and believe god, god will save me. Then there were people to take him but he was behind the god and the person who was supposed to get him was scared of the god. Then Sivaperuman came and said that now and save him by telling him that he could only be 16 years old his entire life!

# Why reading is important to students?

*Ghanan Gowripalan*

Many kids think that reading is boring and has no use to pupils. Well they think wrong. Really reading can increase students' grades. Reading could increase their vocabulary. It can increase knowledge of things that they do not know or want to know more about. Reading can really make students a lot smarter than they are right now. Reading can also entertain and amaze them with the stories that the authors make. Thus reading is very important to students.

If no one read in their student life, they will have a very low chance of living an amazing life, the life of their dreams. The pupils that do read will have a very high chance of going to university and living the life of their dreams.

To tell the truth reading is the most important thing you can start when you are very young. It is a lot more important than watching TV. Most of the very smartest people became smart by reading.

Do you know reading is more important than any other skills? It helps you improve writing, speaking, listening and chatting. Let me tell you why because if you don't read you can't speak sensibly, if you don't read you can't write impressively, if you don't read you can't understand what the speakers are talking about. So you have to read first then you can automatically speak, write, and listen well.

People who like to read do it because reading does something good for them. Good books send chills down their spine, bring tears to their eyes, or turns on the light bulb in their brain. You need reading now for school, and you're going to need it even more later on, when you take on a job and other adult responsibilities. Good reading skills are a must. Ask any teacher. They would say reading is essential.

Reading means knowledge. Reading means creating your cultural background. Reading means getting an opinion about something. We should read what other people write about a topic even if we don't agree with their opinion. Only this way you can build a strong knowledge about that topic.

Reading is very important for language learning. Reading is a great way to gain new vocabulary, and to improve one's sense of the language. Obviously it is an advantage to read quickly. A person who reads at 100 words a minute will take twice as long to read something than a person who reads at 200 words a minute. The person who reads faster will probably enjoy reading more, and will be more likely to attempt longer reading material like novels.

I think reading is important because if you read it gives you knowledge of many different things. I think that reading is fun because you read different kinds of subjects that can help you in your future life.

The only thing I can say to a non-reader is to start reading because in your future it will help you out. I will tell the students that do and enjoy reading to continue.

# உயிரினும் மேல் எங்கள் தாய்மொழி

திவ்யா பிரபாகரன்
(அகவை 11)

உலகில் பல மொழிகள் உண்டு. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் பாரதியார். மூத்த மொழி எங்கள் தமிழ் மொழி. தமிழ் மொழி இனிமையான ஒரு மொழி. அதனால் தான் அதனை "அமுது" என்றழைப்பர். தமிழ் தமிழர்களாகிய எங்களின் தாய்மொழி. தமிழ் பேசும் தமிழர்கள் உலகில் பல நாடுகளில் உள்ளனர். எனினும் இந்தியாவில் தமிழகத்திலும் இலங்கையில் தமிழீழத்திலுமே அதிகமாக உள்ளனர்.

தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது. இதனால் தமிழை "முத்தமிழ்" என்றும் அழைப்பர். தீஞ்சுவை கொண்டதனால் அதனை "தீந்தமிழ்" என்பர். பசுமை நிறைந்ததனால் "பைந்தமிழ்" என்பர். என்றும் இளமையானது என்பதனால் அதனை "இளந்தமிழ்" என்றும் "கன்னித்தமிழ்" என்றும் அழைப்பர். இவ்வண்ணம் தமிழை பலவாறெல்லாம் போற்றுவர்.

தமிழ் ஒரு மூத்த மொழி. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கும் முன் தோன்றிய மொழி. பழைமையான எங்கள் தமிழில் பழைமையான நூல்கள் பல உள்ளன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, மலைபடுகடாம் போன்ற பல சிறப்பான நூல்கள் உள்ளன. ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பன தமிழ்த்தாயை அலங்கரிக்கும் அணிகலங்களாகத் திகழ்கின்றன. பொய்யா மொழியான திருக்குறளோ உலகப் பொதுமறையாக உலக மக்களால் பெரிதும் போற்றப்படுகின்றது. தமிழ் நூல்கள் உலகிற்கே வழிகாட்டியாக விளங்கி நல்ல கருத்துகள் பலவற்றை உலகமக்களுக்குச் சொல்கின்றன.

தமிழ் அழகிய பண்பாட்டுச் சிறப்புள்ள ஒரு மொழி. பல்லின மக்களும் விரும்பும் ஒரு அழகிய மொழி. இனிமையான தமிழை சொல்ல சொல்ல இனிமையாக இருக்கும். பல்லின மக்கள் வாழும் நாட்டில் வாழும் எம்மை தமிழர் என அடையாளம் காட்டுவது எங்கள் தமிழ் மொழியாம் தாய்மொழி.

தமிழில் 247 எழுத்துக்கள் உள்ளன. அவையாவன 12 உயிர் எழுத்துக்கள், 18 மெய் எழுத்துக்கள், 216 உயிர் மெய் எழுத்துக்கள் 1 ஆய்த எழுத்து என்பனவாகும். தமிழ் எழுத்துக்கள் வல்லினம் மெல்லினம் இடையினம் என ஒலிக்கேற்ப பிரிக்கப்படும். நீண்டு ஒலிக்கும் எழுத்துக்கள் நெட்டெழுத்தக்கள் என்றும் குறுகி ஒலிப்பவை குற்றெழுத்துக்கள் என்றும் பிரிக்கப்படும்.

தமிழில் இல்லாத சொற்களே இல்லை. வளமான எங்கள் தமிழிருக்க நாம் வேறு மொழி நாடலாமா? கனியிருப்பக் காய் விரும்பலாமா? அந்நிய மொழி மோகம் எம்மை ஆட்டிப் படைக்கலாமா? தமிழர் நாம் வீட்டில் ஆங்கிலத்தில் பேசலாமா? தமிழ்ச் சிறுவர் நாம் மற்றைய தமிழ்ச்சிறுவர்களுடன் வேற்றுமொழியில் கதைப்பது தவறல்லவா? வேற்றுமொழி தன்னில் பல வித்தை கற்றாலும் வீட்டுமொழி தமிழது என்று விரும்பிப் படிக்க வேண்டும்.

இங்கே பல தமிழ்ப் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு தமிழ் சொல்லிக்கொடுக்கவென்று தமிழ் பள்ளிகளுக்கு ஓடியோடி அனுப்புகின்றனர். வீட்டில் தம் பிள்ளைகளுடன் தமிழில் கதைக்காமல் பிள்ளைகள் தமிழ் பேசுகிறார்களில்லை என்று சொல்லி கவலைப்படுவது சரியா? வீட்டில் பெற்றோர் ஆங்கிலம் கதைத்தால் பிள்ளைகள் தமிழ் கதைக்க ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். முயற்சிக்கவும் மாட்டார்கள். தமிழை வளர்க்க வேண்டுமானால் முதலில் தமிழை வீட்டில் நாம் கதைக்க வேண்டும். நல்ல தமிழ்ப்பண்பாட்டை பின்பற்றி நல்ல தமிழராக வாழவேண்டும்.

தமிழிற்கும் தமிழராகிய எமக்கும் உள்ள உறவை எவரும் பிரிக்க முடியாது. தமிழை தாயை விட உயர்வாக போற்ற வேண்டும். தமிழை தமிழன்னையாகப் போற்றி வணங்கிக் காப்பாற்ற வேண்டும். எங்கள் அம்மாவிற்கு ஒரு துன்பம் வந்தால் நாங்கள் துடிப்பது போல் தமிழை யாரும் அவமதித்தால் நாங்கள் துடிக்க வேண்டும். கோபம் கொண்டு தட்டிக்கேட்க வேண்டும். எங்கள் மொழியைப் பழிக்க எவரையும் விடக் கூடாது.

தமிழின் பெருமை அதன் தொன்மையிலில்லை. அதன் தொடர்ச்சியில் மட்டுமே உள்ளது! தங்கத்தமிழும் தமிழீழ மண்ணும் தமிழர்களாகிய எங்கள் இரு விழிகள்! தமிழைப் போற்றுவோம்! நல்ல தமிழராய் வாழ்வோம்!

# தஞ்சை பெரியகோயில் பெருவிழா

**சாரங்கா சிற்சபேசன்**

தஞ்சையை ஆண்ட மாமன்னர் இராஜராஜ சோழனால் தஞ்சை பெரியகோயில் 1010ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தஞ்சைப் பெருங்கோயில் கட்டிடச் சிறப்பும், கலைச்சிறப்பும் பழமையும் இந்தியாவுக்குப் பெருமைதரக்கூடிய விடயமாகும். கோயில் கட்டிடம் முழுவதும் தனிக் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. மின்சாரமோ, இயந்திர வசதியோ இல்லாத காலத்தில் எப்படி கருங்கற்களை உயரத்திற்குக் கொண்டு சென்றார்கள் என்பதை நினைக்கும்போது மிகவும் பிரமிப்பாகவுள்ளது. விமானத்தினுள் பல உயிர் ஓவியங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மூலஸ்தானத்தில் இருக்கும் சிவலிங்கம் மிகமிகப் பெரியது. உலகிலேயே மிகப் பெரிய சிவலிங்கம் இதுவாகத்தான் இருக்கும். அதைவிட இன்னுமொரு சிறப்பு என்னவெனில் மிகமிகப் பெரிய நந்தி அங்கு தனிக் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கூட இக்கோயிலைக் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இவையெல்லாவற்றையும் பார்க்கும்போது வியப்பாகவும் ஆச்சரியமாகவும் உள்ளது.

இக்கோயிலின் ஆயிரம் (1000) ஆண்டு விழா 2010 இல் பெரிய விழாவாகக் கொண்டாடப்பட்டது இவ்விழா தமிழக அரசினால் பெருவிழாவாக புரட்டாதி 22ம் திகதி முதல் 26ஆந் திகதிவரை கொண்டாடப்பட்டது. இவ்வைந்து நாட்களும் பெருவிழாவாக தஞ்சையில் கொண்டாடப்பட்டது.

இவ்விழா சிறப்புற நடக்க ரூபா 25 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்நிதி நகரை அழகுபடுத்துதல், சிலைகள், கோபுரங்கள் பழுதுபார்த்தல், கலை நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்தல் போன்றவற்றுக்கு செலவழிக்கப்பட்டது.

இவ்விழாவின்போது சோழர்கால் கண்காட்சியை தமிழக துணைமுதல்வர் மு.க.ஸ்ராலின் திறந்துவைத்தார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் "இந்தியப் பெருமைக்கு தஞ்சையின் பங்கேற்பு" என்ற ஆய்வரங்கத்தை முதல்வர் கருணாநிதி ஆரம்பித்து வைத்து நூல்வெளியீடு செய்தார். பல கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பெருமைக்குரிய சிறப்பு நிகழ்ச்சியாக ஒரே மேடையில் ஒரே நாளில் பத்மா சுப்பிரமணியத்தின் 1000 பேர்கொண்ட குழுவினர் நடனமாடினர். இது தவிர, நூல்வெளியீடுகள், அஞ்சல் தலை வெளியீடுகள் போன்ற வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தஞ்சைப் பெருவிழாவின் பாதுகாப்பு மிகக் கவனமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 10,000 பேர்கொண்ட பொலிஸ்படை, மற்றும் பாதுகாப்புப் படைகள் இணைந்து செயல்பட்டன. இவற்றோடு அவசர மருத்துவப் பிரிவுகள், குண்டு கண்டுபிடிக்கும், அதை செயலிழக்கச் செய்யும் சாதனங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இப்படியாக தஞ்சை பெருங்கோயில் பெருவிழா இனிதே நடைபெற்றது.

தஞ்சைப் பெருங்கோயில் இந்தியாவின் வரலாற்றுக் கலைப் பொக்கிசமாகும். இதை நல்லமுறையில் பேணிப் பாதுகாப்பது இந்திய மத்திய, மாநில அரசுகளின் கடமையாகும்.

# Canada Hindu Maamantram Summer Camp 2010

Tharani Anpalagan

The Canada Hindu Maa Mantram summer camp was the most amazing experience we've ever had. We met many new people and learned many new things about our religion and culture.

Every morning at camp, we all sat in a circle and sang and learned many new thevarams and other devotional songs under the guidance of an excellent music teacher, Mrs. Kamala Shanmugalingam. After singing thevarams for about a half hour, a highly trained yoga teacher Miss Gayathiri Sivapragasam comes in and teaches us yoga. Yoga was very interesting to learn and to try the many different poses. We learned many mantras to chant while doing yoga. We also learnt numerous breathing exercises. Yoga helps us to control our mind, brain, and stay healthy at the same time. After yoga was over, we would all eat our snacks. At the camp we were provided with cookies and juice. Then we would get together and play various games.

We also had Saiva classes. Many knowledgeable teachers came in and talked to us about our religion and told us many stories about our Gods and Goddesses. They were all very interesting to hear and at the same time very educational. We all learnt so many new things about our religion that we never knew before. We were grateful to our teachers Pramasri Rajagopal Iyer, Dr. Lampotharan, Dr. Shanmugsvadivel, Mrs. Neela Nagulesapillai, Mr. Santhirasegaram and Mr. Kumar Punithavel.

After Saiva class, we would all eat our lunches, then go outside to play. After a while, we come back in and have art classes. In art class, Mrs. Jenany Sivalingam taught us how to do many crafts. While the younger kids painted, the older kids learnt how to do embroidery. We also put icing on cupcakes. Art classes were really enjoyable. Some days, we also had soccer classes. Mr. Selvaratnam, would come in and teach us how to play soccer properly. Every Friday, we went on excursions. We went to the temple, the Ontario Science Center and many more interesting places and learnt lot of things.

Finally we have to thank our Program coordinators Mr. Kumar Punithavel and Mr.S. Gowripalan and also volunteer Councilors Ganan Gowripalan, Janani Anpalagan, Mathusha Gowripalan, Ragena Pannerselvan. Without us even noticing, five weeks flew past us in a short amount of time and before we knew it, camp was over. We all met many new people, made many new friends, and we all have unforgettable memories that we'll remember forever!

# திருக்கார்த்திகை தீபம்

**நிதர்சன் உதயகுமாரன்**

கார்த்திகை மாத பௌர்ணமி தினத்தன்று இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. ஆதிகாலம் தொட்டே மக்கள் அக்கினியைத் தெய்வமாகக் கொண்டாடி வந்தனர். அந்த அடிப்படைக் காரணத்தால்தான் பெரும்பாலும் நம் பண்டிகைகளில் தீபங்களை ஏற்றிவைத்துக் கொண்டாடுகின்றோம். பஞ்சபூதங்களில் ஒன்றான அக்கினியைத் திருப்தி செய்வதுதான் இப்பண்டிகையின் நோக்கமாகும். அருட் பெரும் ஜோதியாம் ஆண்டவன் அருவமாகவும், உருவமாகவும் விளங்குவதுபோன்று அக்கினியும் பிரகாசிக்கின்றது. அக்கினியிலே பலவிதமான தீபங்கள் தோன்றுவதுபோல் 'சிவம்' என்ற நாமம் ஒன்றே பல தத்துவங்களைக் கடந்து பற்பல ஜோதி சொரூபமாகக் காட்சி தருகின்றது. அக்கினியின் சக்தியால் அழுக்கு களையப்படுகிறது. அக்கினிப் பிரவேசம் சீதா பிராட்டியை புனிதவதி எனக் காட்டியதாக இராமாயணம் உலகுக்கு உணர்த்தியது. ஹோமத்தில் எழுகின்ற அக்கினியின் வாயிலாக ஆண்டவனுக்கு அவிர்பாகம் அளிக்கின்றோம். கார்த்திகை மாதம் முதல் தேதி தொட்டு கடைசி நாள்வரை தினமும் மாலையில் வீடுகளிலும் ஆலயங்களிலும் விளக்கேற்றி வைத்துக் கொண்டாடுவர். தினமும் விளக்கேற்ற இயலாதவர்கள் துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று தினங்களிலாவது தவறாது எணிணெய் விளக்கேற்ற வேண்டும். காரத்திகை மாதம் 1, 28 ஆகிய இரு தேதிகளில் கார்த்திகை நட்சத்திரம் வருமாயின் 28ஆம் திகதி வரும் நட்சத்திரத்தில்தான் திருக்கார்த்திகைப் பண்டிகை கொண்டாடப்பட வேண்டும். திருவண்ணாமலையில் குன்றின் சிகரத்தில் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் ஜோதியானது உலகம் முழுதும் உள்ள அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞான ஒளியைப் பரப்பும் சிவஞான ஜோதியாகப் பிரகாசிக்கும் என்பது ஐதீகம்.

"உடம்பெனு மனையகத்து உள்ளமே தகழியாக
மடம்படும் உணர் நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்பட ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கிற்
கடம்பமர் காளைத் தாதை கழலடி காணலாமே"
"ஆடிப்பாடி அண்ணாமலை தொழ
ஓடிப்போம் நமதுள்ள வினைகளே" என்கின்றனர் அப்பர் சுவாமிகள்.

திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்படுவதற்கான புராண வரலாறு மிகவும் பிரசித்தமானது. அடி முடி காணமுடியாத அனற் பிழம்பாகத் திருவண்ணாமலையில் எம்பெருமான் எழுந்தருளியுள்ள தத்துவத்தை உலகிற்கு உணர்த்தவே திருமாலும் நான்முகனும் எம்பெருமானின் அடிமுடி தேடினர் என்று சொல்லப்படுகிறது. அனற்பிழம்பாக ஓங்கி உயர்ந்து நின்றார் எம்பெருமான். அன்னப் பறவை வடிவங் கொண்டு சதுர்முகப் பிரம்மன் அம்பலவாணரைத் தேடி விண்ணுலகம் சுற்றினார். திருமால், வராக அவதாரம் எடுத்து பாதாள லோகம் சென்று அடிமலரடியைத் தேடினார். அடிமுடி காணமுடியாத பரம்பொருளாக விளங்கினார் எம்பெருமான். ஒவ்வொரு சிவன் கோவிலின் பின்புற பிரகாரத்திலும் இந்த தத்துவத்தை விளக்கும் சிவனின் தோற்றத்தை சித்திர வடிவத்தில் காணலாம். ஜோதிலிங்கமாகக் காட்சிதரும் திருவண்ணாமலை ஓர் அக்கினித் தலமாக விளங்குகிறது. சிவபெருமான் கோயில் கொண்டுள்ள ஆயிரத்தெட்டு முக்கிய ஸ்தலங்களில் காசி, சிதம்பரம், திருவாரூர், திருவண்ணாமலை, காளகஸ்தி ஆகிய ஐந்து சேத்திரங்களும் பஞ்சமூர்த்தி ஸ்தலங்களாகக் கொண்டாடப்படுகின்றன. பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகியவை பிருத்வி பஞ்சமூர்த்தி தலங்களாகும். காந்த மலையிலே கலியுக தெய்வம் அருள்மிகு ஐயப்பனின் மகரஜோதி! திருவண்ணாமலையில் அவர்தம் ஐயனின் அண்ணாமலை ஜோதி! மலைமீது காணப்படும் பெரும் செப்புக் கொப்பரையில் இருபத்து நான்கு முழம் துணி திரியாகப் போடப்படும். ஒரு மணங்கு கற்பூரத் தூள் சேர்த்துத் திரி சுற்றப்பட்டிருக்கும். இருபது மணங்கு நெய்யூற்றி தீபத்தை ஏற்றுவார்கள். அந்த ஜோதியைக் காண்பதற்கு பஞ்சமூர்த்தியும் எழுந்தருளுவதாக ஐதீகம். அன்றைய தினம் பக்தகோடிகள் ஜோதியைக் கண்டு சேவிப்பதால் பஞ்சமூர்திகளின் அருட் கடாட்சத்தால்

பஞ்சேந்திரியங்களை அடக்கும் ஆற்றல் பெற்று, மெய்ஞான சிந்தையுடையவர்களாக விளங்குவர் என்பது உட்பொருள். இந்த ஜோதியின் காரணமாகத்தான் மற்ற இடங்களில் சொக்கப்பனை கொளுத்தும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. கோவிலுக்கு முன்னால் பனை மரத்தைத் தரையில் ஊன்றி அதனுள் பனை ஓலையையும் வெடிகளையும், வண்ண மத்தாப்புக்களையும் கட்டி வைத்துக் கொளுத்துவர். சிவபெருமானை ஜோதி வடிவாகக் காண்பதுதான் சொக்கப்பனை கொழுத்துவதின் முக்கியமான ஐதீகம். இந்த கார்த்திகைத் திருநாள் கார்த்திகேயனுக்கும் உகந்த நாள்.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய ஆறு அருட்சுடர் சரவணப் பொய்கையில் வந்து தங்கி ஆறு குழந்தைகளாக உருமாறி நிற்க, அக்குழந்தைகளைக் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டினர். சிவபெருமான் பிராட்டியாருடன் சரவணப் பொய்கைக்கு எழுந்தருளினார். உமாதேவியார் அக்குழந்தைகளை வாரி அணைக்க, ஆறு உருவங்களும் ஒருருவாய் ஆறுமுகக் குழந்தையாய் தேவியின் திருக்கரங்களில் பேரொளிப் பிரகாசமாய் எழுந்தருளியது. அவ்வமயம் கார்த்திகைப் பெண்டிர் சிவபெருமானைப் பணிந்து போற்றி நின்றனர். சிவபெருமான அவர்களை அருள் நோக்கி, "உங்களுக்கு மங்களம் உண்டாகுக! உங்களால் வளர்க்கப்பட்ட இப்பாலகனுக்கு கார்த்திகேயன் என்ற திருநாமத்தைச் சூட்டுகிறோம். உங்களுக்கு உகந்த இக்கார்த்திகை நன்னாளில் கந்தனைப் போற்றி வழிபடுவோருக்கு அனைத்து நலங்களும் கிட்டுவதாகுக!" என்று திருவாய் மலர்ந்தருளினார். இறைவனை விளக்கேற்றி வழிபடுவது தொன்றுதொட்டு வந்த பழக்கமாயினும் அது என்றென்றும் நலம் தரும் வழிபாடாகவும் கருதப்படுகிறது.

வைஷ்ணவ ஆலயங்களிலும் விளக்கொளிப் பெருமாள் என்று ஒரு பெருமானைக் கொண்டாடுகின்றனர். அகல், எண்ணெய், திரி, சுடரொளி ஆகிய நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற தத்துவங்களை உணர்த்துவது போலாகும். பலி மகராஜன் தனது உடம்பிலே தோன்றிய வெப்பத்தை கார்த்திகை விரதமிருந்து தீர்த்துக்கொண்டார் என்று புராணம் கூறுகிறது. எம்பெருமான் தன்மீது திருவடி சாத்தி ஆட்கொண்டபோது, தனது மறைவு நாளை தீபங்களை ஏற்றி உலகோர் அனைவரும் கொண்டாடவேண்டுமென்று அனந்தனைப் பணிந்து கேட்டான். திருஞானசம்பந்தர், மயிலையில் அங்கம் பூம்பாவைக்கு புத்துயிர் அளிப்பதற்காய்ப் பாடிய திருப்பதிகத்தில் "கார்த்திகை விளக்கீடு காணாதே போதியோ" என்று பாடியுள்ளார்.

ஒருமுறை அம்பிகை மகிஷாசுரனுடன் போர்புரியும்போது தவறுதலாக சிவலிங்கமொன்றை உடைத்துவிட்டார் என்றும் அதனால் ஏற்பட்ட தோஷத்தை நிவர்த்தி செய்துகொள்வதற்குக் கார்த்திகை தினத்தன்று தீபம் ஏற்றி விரதமிருந்து பெருமானின் பேரருளால் தோஷ நிவர்த்தி கிடைத்ததாக தேவிபுராணம் கூறுகிறது.

இவ்வாறு பெருமையும் மேன்மையும் கொண்ட கார்த்திகைத் திருநாளை திருச்செங்கோடு, வேதாரண்யம், பழனி, திருச்செந்தூர் முதலிய கோயில்களில் திருவண்ணாமலைக் கோயிலைப்போன்றே கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர். சில ஊர்களில் மந்தாரை இலையில் தீபம் ஏற்றுகிறார்கள். வடநாட்டில் தீபத்தை தீப ஓடங்களில் ஏற்றி நீரில் விடுவது உடன்பிறப்புக்கு நன்மை பயக்கும் என்று கருதுகிறார்கள். கார்த்திகைத் தீபங்கள் ஏற்றும்போது கூறப்படும் மந்திரத்தைச் சொல்லி விளக்கேற்றி வழிபட்டால் இம்மையில் அனைத்து சுபீட்சங்களுடன் வாழ்ந்து எம்பெருமானின் பேரருளால் பிறவாப் பெருவாழ்வு பெறலாம். தீபத்தின் ஒளி காணும் இடத்தில் ஸ்ரீதேவி மங்களம் பொங்க வாசம் புரிவாள். இக்கார்த்திகை தினத்தன்று நெற்பொரி வைத்து நிவேதனம் செய்வர். கார்த்திகை விரதத்தை பன்னிரண்டு ஆண்டுகள் கடைப்பிடித்து நாரத மகரிஷி சப்தரிஷிகளுக்கும் மேலான பதவியை அடைந்தார். திரிசங்கு மன்னன், பகீரதன் ஆகியோர் கிருத்திகை விரதத்தின் பயனாக பேரரசனானார்கள்.

# Canada Hindu Maamantram Summer Camp

**Mathushah Gowripalan**

The two camps which were held on year 2009 and 2010 by the Canada Hindu Maamantram were an experience that I could never forget. The skills, knowledge, and morals taught at the camp are and always will be in my mind whenever I need to use any of them. Some skills that I have learned in the first year that I participated in include making flower garlands, painting, sewing, and creating kolums. At first I had no idea to do any of the listed skills which I might have needed to know about in the future but then there were many volunteers and teachers like Mrs.Jannani Sivalingam who were there to help out everyone whenever they needed the extra hand. Knowledge was a big issue at the camp because they expected us to know at least the basics of our mother language Tamil and also about Siva knowledge which is a study about the gods and goddesses of our religion. We would learn about these stories and tales once in the morning and once in the afternoon everyday. Not only did we learn Siva knowledge, we also learned many theevarams because as young children we should be able to sing at least one or two theevarams by heart and that was taught by Mrs. Kamala Shanmugalingam, Music Teacher every morning after yoga.

Speaking of yoga, the first thing that all of the children and volunteers would participate in is yoga by a professional yoga teacher named Miss.Gayathrie Sivapragasam. The reason why we would do such exercises in the morning is because we need to release stiffness and hard ache after waking up every morning. Since we needed more exercise throughout the day, we would have time to go outside to run around and to play on the playground and on the fields. We also played many sports inside in the gym like basketball and soccer, plus we would create a game on our own like obstacle courses. On the very last day of our camp, we had a talent show to show everyone what we have learned and to express some inner talent like comedy, dancing, and singing.

Now that was the experience of being in the camp as a camper, but the next year I was a volunteer who did many amazing things with the children at the camp. The camp that was held in 2010, we would all go to a field trip every Friday of the week which everyone enjoyed. Some of the places that we all went to are Kids Town Park, the Science Center, Varasithi Vinaayagar Temple, Swami Narayan Temple which is a landmark of Hinduism, Cineplex to watch a movie, and also to McDonalds to eat. Every single camper and volunteer had an amazing time in every trip that we had all went to. Being a volunteer for this camp was a thrilling experience because I got the chance to meet many new volunteers, children, and also some members of Canada Hindu Maamantram. As you can see the camp of Canada Hindu Maamantram is something which is a privilege to attend to and many people will and have enjoyed every second being in the camp.

# கோடைகாலப் பாசறை







# கோடைகாலப் பாசறை






# Middle Finch Medical Office

**Dr.Shriharan Sinnadurai, MD, CCFP**

**Dr.Thushiyanthy Shriharan MD, CCFP**

**Family Physicians**

கனடா இந்து மாமன்றத்தின்

சர்க்கரைப் பொங்கல் விழா
இனிதே சிறப்புற வாழ்த்துகிறோம்!

**TEL: 416 412 7350**

**5215 Finch Ave. E.**
**Unit 208 – 210**
**Scarborough, ON M1S 0C2**

# ஆழ்வார் பாடிய சிவநடனம்

பாரதி சுராஜ்

ஆன்மீகத்திற்குப் பேராபத்து விளைந்த காலத்தில் தமிழகத்தில் தோன்றிப் பக்திப் பயிர் விளைத்தார்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும்.

ஒன்றேயான பரம்பொருளைத் திருமாலாகக் கண்டு போற்றி வணங்கி, வழிபட்டுப் பாடிப் பரப்பினார்கள் ஆழ்வார்கள். அவ்வாறே தென்னாடுடைய சிவனையே எந்நாட்டார்க்கும் இறைவனாகப் போற்றிப் பாடி வழிபட்டார்கள் நாயன்மார்கள். காலப்போக்கில் இந்த இருநெறிகளுக்குள் பூசலும் பகைமையும்கூட விளைந்ததுண்டு. இவற்றை மீறிப் பரம்பொருட் பேருண்மையைத் தம் பாடல்களால் ஆழ்வார்களும் நாயன்மார்களும் அங்கங்கே விளக்கிப் போந்தார்கள்.

"மறந்தும் புறந் தொழாதவர்கள்" என்று கூறப்படும் ஆழ்வார்களின் திருவாக்குகளில் சிவபெருமானைப் புகழ்ந்து பேசும் பாடல்கள் வரிகள் பல உண்டு. இவற்றில் சிறப்பாக. ஆழ்வார்களினால் கடைக்குட்டியான திருமங்கை ஆழ்வார், நாலு கவிப்பெருமாள் என்று பெயர்பெற்றவர். அவரது பாடல்கள் உணர்ச்சி மிக்கவை. உவமை, உருவகம், இயற்கை அழகு, கவிதைச் சிறப்பு ஒன்றையொன்று விஞ்சி நிற்பவை. 'மடல்' என்ற ஒருவகைப் பிரபந்தம். காதலுற்ற ஆண் தலைவன், காதல் தோல்வியால் வருந்தி, பனைமடல் ஏறிநின்று ஊரறியத் தன் காதலைப் பறைசாற்றுவான். பெண்கள் மடல் ஏறுவதில்லை. அது தமிழ் மரபில் விலக்கப்பட்ட ஒன்று. பிற்கால மடல்கள், தூது போன்றவை வெறும் காமச் சுவை மிக்கவையாயிருந்து கவிதை விமர்சகர்களால் உயர்வாக மதிக்கப்படுவதில்லை. கலியன் என்ற இந்த திருமங்கை ஆழ்வார் ஒன்றுக்கு இரண்டாக சிறிய திருமடல், பெரிய திருமடல் என்று இரு மடல்கள் பாடியிருக்கிறார்!



பக்திச்சுவையும், கவிச்சுவையும் சொட்டச் சொட்ட மாயை மீறிக் காதலி, காதலனான திருமாலைப் பாடுவதுபோல (ஆழ்வார்தான் காதலி! மடலேறுவேன் என்று எச்சரிப்பதுபோல) இந்த இரு பிரபந்தங்களும் அமைந்துள்ளன. இவற்றில் பெரிய திருமடல் 148 பாடல்களாக(2 வரிகள்)க் கணக்கிடப்பட்டுள்ளது. 65 முதல் 71 வரை பாடல்களில் 13 வரிகளில் உமையன்னையின் தவம், சிவ தாண்டவம், அன்னை உமை சிவனை மணமுடித்தல் கூறுப்பட்டுள்ளன.

முன் காலத்தில் எத்தனையோ பெண்கள் தங்கள் காதலனை அடையத் தாங்களாகவே முற்பட்டு, பாடுபட்டு வெற்றி பெற்றுள்ளனரே! நானும் ஏன் அவர்கள் பாதையைப் பின்பற்றித் தலைவனை அடைய முடியாது என்று கேட்பதுபோல் அமைந்த பிரபந்தம் அது. உமையன்னையின் தவம் வருணிக்கப்படுகிறது. உமையின் அழகு எப்படிப்பட்டது? அவள் உடல் தவம் செய்யவா பிறந்தது?

அவளது உதட்டில் மணிமுறுவல் நிலாப்போல் மின்னுமே! அவளது உதடுகள் சிவந்தவை! அன்ன நடையணங்கல்லவா அவள்! மெல்லிய இடையுடைய அவள் அத்தனை அழகையும் விடுத்துத் தன் உள்ளம் கவர்ந்த தலைவன் சிவபெருமானுக்காக தலையில் சடாபாரம் தரித்து, செய்வதற்கரிய தவத்தையல்லவா மேற்கொண்டாள்! அவள் இதயம் கவர்ந்த தலைவன் யார்? அவனது சிறப்பு என்ன?

அவன் கூத்தன்! ஆடல் வல்லவன். மேனியெல்லாம் திருநீறாகிய வெண்பொடி பூசியவன். மூவிலை வேலாகிய, பகைவரைக் கொல்லும் தன்மையுடைய மூவிலைபோல அமைந்த சூலத்தைக் கையில்

கொண்டவன். சிவநடனம் பலரைக் கொள்ளை கொண்டது! உலகின் இயக்கத்தையே அந்த நடனம் குறிப்பிடுவது (Cosmic Dance) என்று கொண்டாடுவார்கள்! நடராஜ சிற்ப வடிவம் இன்றும் உலகளாவிய புகழ்பெற்றது.

சிவபிரானுக்கு நான்கு கரங்கள் தானா? அவன் ஆடும்போது ஆயிரம் தோள்களல்லவா தெரிகின்றன?

"ஆயிரந்தோள் மன்னு கரதலங்கள் மட்டித்து..."

கால்களை நீட்டியும், மடக்கியும், உயர்த்தியும் ஆடும்போது தினசரிகளிலெல்லாம் மின்னல் எரி வீசுகிறது! அவனது தூக்கிய திருவடி – கழலணிந்த திருவடி தேவருலகையுமல்லவா எட்டி, கழல ஒலிக்கிறது!

"மின்னி எறிவீச மேலெடுத்த சூழ்கழற்கால்

பொன்னுலகமேழும் கடந்து உம்பர் மேல் சிலம்ப..."

மேலேழு உலகங்களையும் கடந்து தேவர்களது திருமுடிகள் மேலுமல்லவலா சென்று ஒலி ஒழுப்புகிறது! சிவபெருமானின் தாண்டவத்தில் அவன் மட்டுமா ஆடுகிறான்! அவனுடன் ஏழு குலவரைகள் - மலைகள் நிலைகுலைந்து ஆடுகின்றன. வானத்து நட்சத்திரங்கள் குலுங்குகின்றன. அவனுடன் சேர்ந்து அவையும் சுழல்கின்றது!

அப்படிச் சுழன்று சுழன்று ஆடுகின்றானே அந்த ஆனந்தக் கூத்தன்! ஆடல்வல்லான்!

அந்தக் கூத்தன் மீது காதலுற்று, அது நிறைவேறச் சடை முடி தரித்துத் தவம் செய்து அவனது அழகிய மார்பகத்தைத் தழுவ (அவள் உடல் பாதியாகவே ஆகி) உமை, சிவனை மணந்து சிறக்கவில்லையா? என்று கூறி மேலும் வேறு வரலாறுகள் தொடருகின்றன.

சிவநடனத்தை உமையன்னையின் தவத்தை, திருமங்கை ஆழ்வாரின் திருவாக்கால் நினைவுகூர்ந்து மகிழ்வோம்! திருமாலடியாரான ஆழ்வார் பாடிய சிவநடனத்தைக் காண்போம்:

"வான் நிலா மின்னு மணிமுறுவல் செவ்வாய்
உமை என்னும் உள்ள நடைய வணங்கு நுடங்கிடைசேர்
பொன்றுடம்பு வாடப் புலனைந்தும் நொந்த கலத்
தன்னுடைய கூழைச் சடாபாரம் தான் தரித்து – துங்கு
அன்ன கடுந்தவத்தின் ஊடுருபோய் - ஆயிரந் தோள்
மன்று காதலங்கள் மட்டித்து – மாதிரங்கள்
மின்னி எரிவீச மேல் எடுத்த சூழ்கழற்கால்
பொன்னுலகம் ஏழும் கடந்து உம்பர் மேல் சிலும்ப
மன்னு குலவரையும் மாருதமும் தாரகையும்
தன்னின் உடனே சுழலச் சுழன்றாடும்
கொல்நவிலும் மூவிலைவேல் கூத்தன் பொடியாடி
அன்னவன் தன் பொன்னகலம் சென்றாங்கு அணைந்திவளே!"


No One Beat Us!
On high with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
PRO MAR
Awards & Promotions Ltd.
www.promarawards.com
One stop for all your promotional Ideas...
Trophies
Cop.Awards
Plaques, Medals
Laser Engraving
Sand carving
Screen Printing
416-291 2344
Fax: 416-291 1231
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

# மதங்களின் தாய் இந்து மதம்

திரு. சு.ஹரிஹரன், நல்லூர்.

நாம் வாழும் இவ்வுலகத்தையும் அண்டசராசரங்களையும் எங்கள் ஊனக் கண்களுக்குத் தெரியாத ஒரு வலிமையான சக்தி படைத்தது. அதையே - அந்த சக்தியையே மனிதர்கள் இறைவன், கடவுள் என்று கூறி வணங்குகிறார்கள்.

ஆதிகாலத்தில் உலகம் இப்போது உள்ளதுபோல் பல கண்டங்களாக, வெவ்வேறு தேசங்களாக இல்லாது ஒன்றாக இருந்தது. இக்கருத்தை பலர் ஏற்றுக்கொள்ளத் தயங்குவர். ஆனால், "இந்து மதம்" மேற்சொன்ன கருத்தை உறுதியாகச் சொல்கிறது. மனித இனம் உலகில் தோன்றி பல இடங்களில் கூட்டமாக வாழும்போது கட்டுப்பாடு இல்லாததால் தான்தோன்றித் தனமாக வாழ்ந்தனர். ஒழுக்கம், பண்பாடு எதுவுமே இல்லாது இருந்தது.

எங்குமே குழப்பம் - வாழ்வியல் நடைமுறை இல்லை. வழிகாட்டிகள் இல்லை. இப்படியான நிலையில் உலகையும், மனித ஜீவராசிகளையும் படைத்த அந்த மகாசக்தி மனித இனத்திற்கு ஓர் ஒழுங்கான வாழ்வியல் முறையை, தான் தேர்ந்து எடுத்த சிலர் மூலம் (அவர்களை நாம் தீர்க்கதரிசிகள், ஞானிகள் என்ற கூறுகிறோம்.) மானிட குலத்திற்கு போதித்தது. அந்த மகாசக்தியை இனி இறைசக்தி - இறைவன் என்று கூறுவோம்.

அந்த வாழ்வியல் முறையே இந்து மதம். இந்து மதமே உலகில் முதலும் ஆதியான மதமுமாகும். இந்து மதத்தில் உலக வாழ்வியலுக்கான சகலமும் பொதிந்துள்ளது. மதம் என்பது வெறுமனே இறை வழிபாடு மட்டுமல்ல. மதத்தில் கலை, பண்பாடு, அரசியல், மருத்துவம், ஜனநாயகம் மற்றும் குடும்ப வாழ்வு சகலதும் அடங்கும்.

உலகம் பிளவு படாது ஒன்றாக இருந்த மிகப் பழைய காலத்தில் முழு உலகிலும் மக்கள் இந்து மதத்தையே கடைப்பிடித்தனர். இந்து மதத்தின் பிரதான வழிபடு தெய்வரூபம் சிவலிங்க உருவம். மற்றும் நெருப்புமாகும். உலகம் தோன்றியது முதல் இன்றுவரை எத்தனையோ பிரளயங்கள் (சுனாமி) தோன்றியுள்ளது. இப்படி வந்த பிரளயங்களால் உலகம் பிளவுபட்டது. நாடுகள் கண்டங்களாக பிரிந்து போனது. சூழலும் பருவ நிலைகளும் தேசத்திற்குத் தேசம் மாறியது. இப்படி மாறிய சூழலில் பிரிந்துபோன மக்கள் கூட்டம் தாங்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப உடைகள், மொழி, வழிபாட்டு முறைகளை மாற்றிக் கொண்டார்கள். இப்படித் தோன்றியதே இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம், ஜைனம், பார்சி மதங்களும், இன்று நாம் பார்க்கும் புதிய புதிய வழிபாட்டு முறைகளும். (உ-ம்: தியானம், யோகா, பஜன் போன்றவை)

இந்து மதத்தில் இருந்து பிரிந்து புதிய வழிபாட்டு முறைகளை புகுத்தி உருவாக்கப்பட்டதே பிற மதங்கள். (இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம்) இப்படி எழுதுவதால் நான் ஒரு இந்து தீவிரவாதி அல்ல. எல்லா மதங்களும் அடிப்படையில் இந்து மதக் கொள்கையைப் பிரதானமாகக் கொண்டுள்ளன.

சரியை, கிரியை, யோகம், ஞானம். இவையே இந்து மதத்தின் அடிப்படை. இந்த நான்கில் ஒவ்வொன்றை ஒவ்வொரு பிரிவினர் கைக்கொண்டு புதிய பெயரோடு புதிய மதங்களை உருவாக்கினர். இந்துக்கள் சிவன், பார்வதி, விநாயகர், முருகன் இப்படியாக பல உருவங்களில் இறைவனை வடிவமைத்து வழிபட்டனர். இஸ்லாமியர், கிறிஸ்தவர் மற்றும் பிறர் தங்களுக்குப் பிடித்த மாதிரி இறை

வடிவங்களை அமைத்து, புதிய பெயர் சூட்டி வழிபட்டனர். அறிவு வளர வளர புதுமையான புராணக் கதைகளை உருவாக்கி, தங்கள் சமயங்களே சிறந்தது என வாதிட்டு, வீண் கலவரங்களை உண்டுபண்ணினர்.

இன்று உலகில் உள்ள மதங்களை எடுத்துக்கொள்வோம். இந்து மதத்தைவிட ஏனைய மதங்களைப் பார்த்தால் அவ்வவ் மதங்களைத் தோற்றுவித்தவர்கள், அந்த மதங்கள் தோற்றிய காலம் எங்களுக்குத் தெரியும். ஆனால் இந்து மதம் எப்போது தோன்றியது, யாரால் எங்கே, எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்பது இதுவரை எவருக்குமே தெரியாது. இதுவே இதன் பெருமை.

இந்து மதம் பல்வேறு பிரிவுகளாக உள்ளது. இந்துமதத்தில் எதுவித கட்டுப்பாடுகளும் இல்லை. நூற்றுக்கணக்கான இறை உருவங்கள் உண்டு. அவர் அவர் பிடித்த உருவை வைத்து வணங்கலாம். விரும்பினால் வணங்கலாம்; அல்லது விடலாம். ஏனைய மதங்களில் அப்படியல்ல. பிற மதங்கள் வழிபாட்டு முறையில் கண்டிப்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மத சுதந்திரம் இந்து மதத்தில் மட்டுமே உண்டு.

மத சுதந்திரம் வேண்டுமா, வேண்டாமா, இது விவாதம் செய்யவேண்டிய விஷயம். அது இப்போது இங்கு தேவையில்லை. நாம் முன்பு கூறியதுபோல் சகல மதங்களுமே மனித வாழ்வையும் உலக ஒழுங்கையும் ஒரு நேர்கோட்டில் செலுத்த உதவும் வழிகாட்டியே. இதை உதாசீனம் செய்து இந்த நியதிகளை மனிதன் தன் அறிவின் பலத்துடன் மீற முனையும்போதுதான் எதிர்பாராத அழிவுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

'இந்து மதமே உலகின் முதல் மதம்' என்று கூறியதை எப்படி உண்மை என்று எடுத்துக்கொள்வது? அதற்கு சில உதாரணங்களைப் பார்ப்போம். ஆதியில் உலகம் ஒன்றாகவே இருந்தது. மக்களும் ஒன்றாகவே இருந்தனர். மதமும் ஒன்றே. இன்று நாம் பார்க்கும் பல நாடுகளில் புதைபொருள் ஆராய்ச்சி செய்யும்போது இந்து மத வழிபாட்டுச் சின்னங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா, ஜெர்மனி, மெக்சிக்கோ போன்ற பல நாடுகளில் இவ்வகைக் கண்டுபிடிப்புகள் மேற்கூறிய கருத்தை உறுதிசெய்கிறது. மிகப் பழைய நாகரீகங்களான மாயா - இன்கா, சிந்துவெளி மக்கள் இந்து மதமே தங்கள் மதமாக கைக்கொண்டதை சரித்திர வாயிலாக அறியமுடிகிறது. சகல நாடுகளிலும் புதைபொருள் ஆராய்ச்சியை (மத சம்பந்தமாக) தொடர்ந்து முன்னெடுத்தால் நிச்சயம் இந்து மத சின்னங்களைக் காணமுடியும். இது நடைமுறைச் சாத்தியமாகுமா? காலம் பதில் சொல்லட்டும்.

இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளே சைவம், சாக்தம், காணபத்தியம், சௌமாரம், வைஷ்ணவம், பார்ஸி போன்ற சமய கோட்பாடுகளாகும். இந்து மதம் ஒரு பெரிய ஆலமரம் பேன்றது. இன்று உலகிலுள்ள சகல மதங்களும் இந்து மதம் என்ற ஆலமரத்தின் கிளைகளே. இக்கருத்தை நடுவுநிலையோடு ஆராய்ந்தால் உண்மை தெரியும்.

சகல மதங்களும் மனித சக்தியைவிட மிகப் பெரும் சக்தி உண்டு என்பதை தெளிவாக ஒப்புக்கொள்கின்றன. அந்த சக்தியை இறைவன் என்பதுபோல் பல பெயர்கள் - அடையாளங்களால் வழிபடுகிறது.

இறுதியாக மனிதகுலம் அமைதியாக வாழ மதங்கள் சொன்ன நல்ல கருத்துகளை மட்டும் கடைப்பிடித்து வாழ்ந்தால் உலகம் அமைதியாகவும் அழகாகவும் இருக்கும்.



புதியதொரு வீட்டுக்கான
நகர்வு...
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
Fax: 905.471.7441
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

# THARANI LAW OFFICE

## தாரணி தர்மலிங்கம் LL.B., Barrister, Solicitor and Notary Public

| | |
|---|---|
| Real Estate Law | வீடு, காணி உரிமைச் சட்டம் |
| Family Law | குடும்பச் சட்டம் |
| Wills and Estate Law | இறுதி விருப்பாவணம், மரணச் சொத்துச் சட்டம் |
| Power of Attorney and Affidavit | தத்துவ பத்திரமும் சத்தியக் கடுதாசியும் |
| Immigration Law | குடிவரவுச் சட்டம் |

சட்டத்துறையில் **20** வருடங்களுக்கு மேலான அனுபவம்

45 நிமிட இலவச ஆரம்ப ஆலோசனை



**GTA Square**
213-5215 Finch Ave. East
Toronto, ON
M1S 0C2

Tel: **416-291-4900**
Fax: 416-291-4901

E-Mail: contact@tharanilawoffice.com

# தேரின் தத்துவம்


அருள் ஒளி – ஆனி 2009

**தேவாலயம்:**

"தேவாலயமாவது எங்கும் வியாபகராய் மறைந்திருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும்பொருட்டுச் சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம்" என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நான்காம் பாலபாடத்தில் விளக்கியுள்ளார்கள். கடவுளது திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம் அல்லது ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் என்ற பொருள் கோடலுமொன்று. ஆலயங்கள் நித்தியம், நித்தியாங்கம், நைமித்திகம், நைமித்தியாங்கம், காமிகம், காமிகாங்கம் என்னும் ஆறு உறுப்புக்களானும் நடத்தப்படும். நைமிகத்துள் ஒன்றுதான் மகோஹாற்சவம்.[1]

**உற்சவம்:**

"உற்சவம் என்னும் சொல்லுக்குப் பலகருத்துக்கள் உண்டு. (உத்-மேலான, சவம்-ஐந்தொழில், உத்-ஞானம், சவம்-போக மோட்சம்) மேலான ஞானத்தையும், போக மோட்சத்தையும் கொடுப்பதென்பது ஒரு கருத்து. சிவபெருமான் ஐந்தொழில்களையுஞ் செய்து உயிர்களைக் காக்கும் முறையை திருவிழாக்கள் வெளியிடுகின்றன. இவற்றுள் கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தம் அருளலையும் குறிக்கும்.



எவ்வாறெனில், முதல்நாள் சரீரத்தை உண்டாக்குதலையும், இரண்டா நாள் நல்வினை, தீவினையைப் பயன்படுத்தலையும், மூன்றா நாள் முக்குணங்களை எழுப்புதலையும், நாலாநாள் உட்கருவிகளை முயற்பித்தலையும், ஐந்தாநாள் ஞானேந்திரியங்களை வசப்படுத்துதலையும், ஆறாநாள் ஆசை முதலியவைகளைக் கெடுத்தலையும், ஏழாநாள் எழுவகை மந்திரங்களைப் பதித்தலையும், எட்டாநாள் பாசஞானம் நீங்குதலையும், ஒன்பதாநாள் மும்மலங்களையும் கெடுத்தலையும், பத்தாநாள் சிவானந்தத்தைக் கொடுத்தலையுங் குறிக்குமென்பர். பத்து நாட்களுக்கு மேற்பட்ட திருவிழாக் காலத்தையும், அதில் குறைந்த காலத்தையும், இத்தொழில்கள் அமையத்தக்கதாக வகுத்துக் கொள்ளலாம்".[2]

இனி, உற்சவங்களின் உட்கருத்தை நாவலர் ஐயா அவர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்: "மகோற்சவ நாள் பத்தினுள், முதனாள் விழாத் தூலநீக்குதற் பொருட்டும், இரண்டாநாள் விழாத் தூலசூக்கும நீக்குதற் பொருட்டும், மூன்றாநாள் விழா மூவினையும், முப்புத்தியம், முக்குணமும் மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீக்குதற் பொருட்டும், நாலாநாள் விழா நாற்கரணமும், நால்வகைத் தோற்றமும் நீக்குதற் பொருட்டும் ஐந்தாநாள் விழா ஐம்பொறியும், ஐந்தவத்தையும் ஐந்து மலமும் நீக்குதற்பொருட்டும், ஆறாநாள் விழா காமாதியாறும், கலையாதியாறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும் நீக்குதற் பொருட்டும், ஏழாநாள் விழா எழுவகைப் பிறப்பும் கலாதிகளேழும், மாயாமல குணமேழும் நீக்குதற் பொருட்டும், எட்டாநாள் விழா எண் குணமும் விளக்குதற் பொருட்டும், ஒன்பதா நாள்

விழா மூன்றுருவும், முத்தொழிலும் மூன்றிடத்துரைத்தலும், இலையெனற் பொருட்டும், பத்தாநாள் விழா பரானந்தமாக் கடலில் அழுத்தற் பொருட்டுஞ் செயற்படுதலால், சிவோற்சவ காலத்தில் படிக்கலாகாதென்றார். இவையெல்லலாம் விம்ப தந்திரத்திற் சிவோற்சவ படலத்திற் காண்க.[3]

**இரதோற்சவம்**

தேவாலயங்களில் நடைபெறும் இரதோற்சவத்தில் உபயோகிக்கப்படும் தேரின் தத்துவங்கள் யாவை என்பதைச் சதாவதானம் நா.கதிரவேற்பிள்ளை அவர்கள் அழகாக விளக்கியுள்ளார்கள்.

**ஏழாநாள் விழா: (இரதாருட திருக்காட்சி)**

ஏழாநாளிலே இரதாரோகண திருக்காட்சியுண்டாம். இது சில ஆலயங்களில் ஒன்பதாம் நாளினுஞ் செய்யப்படும். இதனுண்மையை விவரணம் பண்ணுங்கால், ஆதிகாலத்திலே தடங்கருணைப் பெருங்கடலெந்தையாகிய சிவபெருமான், மந்தரகேசரி மலைகள் அச்சாகவும், சூரிய, சந்திரர்கள் சக்கரமாகவும், ஆறிருதுக்கள் சந்தியாகவும், பதினான்கு லோகமும் பதினான்கு தட்டுகளாகவும், ஆகாயம் ஆசனமாகவும், உதயாத்த மலைகள் கூவிரமாகவும், நதிகளும், நதங்களும் கொடிளாகவும், நட்சத்திரங்கள் விதானமாகவும், மோட்சலோகம் மேல் விரிவாகவும், யாகங்கள் சட்டங்களாகவும், நாள் முதலியன இடுக்கு மரமாகவும், அட்டமலைகள் தூண்களாகவும், அட்டயானைகள் தாங்குவனவாகவும், சத்த சமுத்திரங்கள் திரைச் சீலைகளாகவும், கன்ம ஞானேந்திரியங்கள் கலன்களாகவும், கலைகள் முளைகளாகவும், வேதாங்க உபாங்க மனுசாஸ்திரங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும், நான்கு வேதங்கள் பூட்டப்படும் குதிரைகளாகவும் அமைக்கப்பட்ட இரதத்திலே எழுந்தருளி, கங்கை முதலிய தேவமாதர்கள் சாமரமிரட்டவும், ஊர்வசி முதலிய கணிகை மகளிர் நடனஞ் செய்யவும், மகாமேரு மலையை வில்லாகவும், சரசுவதியை வில்லிற் கட்டிய மணியாகவும், வாசுகியை நாணாகவும், விஷ்ணுவைப் பாணமாகவும், அக்கினி தேவனை அவ்வம்பின் கூர்வாயாகவும், வாயுதேவனை அம்பிற்காகவும் கொண்டருளி, பிரமனாகிய சாரதி பிரணவமாகிய தூண்டுகோல் கொண்டு செலுத்த, திரிபுர அவுணர்களைத் தந்திரப் புன்னகையக்கினியால் நீறாக்கியருளினார், என்னும் வரலாற்றுண்மையைக் காட்டுவதே இவ்விரத சேவைக் காட்சி என அநுமிக்கப்பட்டு, விஸ்வரூபியாகவும், விஸ்வகாரணராயும், விஸ்வசேவியராயும், விஸ்வாந்தரியாமியாயும் இருப்பவர் சிவபெருமானே என்பதும், முப்புரமென்பது, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல காரியங்கள் எனவும் அத்திரிபுரங்களையும் நீறாக்கி, தாரகாட்சன், கமலாட்சன், வித்துன்மாலி என்னும் மூவர்களையும் தேவர்களையும் அடிமையாகக் கொண்டு அவர்கட்குத் தம் பதம் அருளி இன்பம் கொடுத்தமை, மும்மல காரியங்களையும் கெடுத்து, விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களையும் அடிமையாகக் கொண்டு திருவடி முத்திகொடுக்கும் உண்மையெனவும் அறிய நின்றதனால் எல்லாமாய், அவைகட்குக் காரணமுமாய் நிற்கும் பரமபதியாகிய சிவபெருமானே ஆன்மாக்கட்கு மும்மலபந்த வாதனைகளைக் கெடுத்து திருவடிப் பேறாகிய பேரானந்தப் பெருவாழ்வளிப்பர் என்பதும் உணரப்படும்.

**திருமந்திரம்**

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரிய
மப்புர மெய்தமை யாரறிவாரே.

இங்ஙனமன்றி, தேரிலே விளங்கும் ஏக உச்சிக்குடை பிரமரந்திரமாகவும், கலசம் சோடசாந்தத் தானமாகவும், மேலுள்ள முதலாம் அடுக்கு துலாதசாந்தத் தானமாகவும், இரண்டாமடுக்கு மஸ்தக ஆதித்தானமாகவும். மூன்றாம் அடுக்கு மத்தியத்தானமாகவும், நாலாம் அடுக்கு மஸ்தகாந்தத் தானமாகவும்,

ஐந்தாம் அடுக்கு லலாட மத்தியமாகவும், ஆறாம் அடுக்கு புருவ மத்தியமாகவும், நடுவுள்ள ஏழாம் அடுக்கான முப்பத்திரண்டு குத்துக்கால்கள் முப்பத்திரண்டு தத்துவங்களாகவும், முற்றுறைகளே கண்களாகவும், பிற்றுறைகள் சிகைகளாகவும், பக்கத்துறைகளே இரு செவிகளாகவுமம், பீட முற்பகுதி வாயாகவும், இடப்பக்கத்துள்ள இரு குதிரை வடிவங்கள் இடப்பாக சூரிய சந்திர கலாவாசிகளாகவும், வலப்பக்கத்துள்ள இரு குதிரை வடிவங்கள் வலப்பாக சூரிய, சந்திர கலாவாசிகளாகவும், சாரதி வடிவம் மும்மல ரூபம், நாசி என்பவாகவும், எட்டாம் அடுக்கிடப் பகுதி அந்தக்கரண சொரூபம், கண்டத்தானம் என்பனவாகவும், அதன் கீழிடப்பகுதி ஐந்தவத்தை, ஐங்கோசம், இராகாதி பதின் முக்குணம் என்பவற்றின் ரூபமாகவும், இருதயத்தானமாகவும், அதின் கீழ்ப்பகுதி தசேந்திரியம், நாபித்தானம் ஆகவும், அதன் கீழுள்ள அச்சு பஞ்சபூதம், குண்டலி சத்தித்தானம் ஆகவும், சக்கரங்கள் தசவாயுக்களாகவும், இரு கால்களாகவுங் கொண்டு, சரீர சொரூபத்தை விளக்கி, பின்னர் சக்கரங்களான தச வாயுக்களையும் நிறுத்த, அசைதன் முதலிய வினைகள் ஒழியுமெனவும், அவ்வாறுள்ள சீவன் தன் மன தத்துவத்தை, முறையே மேலாக விளங்கும் உந்திக் குண்டலியிலிருந்து நாபிக்கும், அங்கிருந்து முறையே இருதய கண்டத் தானங்களுக்கும் ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து மேலாக விளங்கும் வாய் நாசி என்பவைகளுக்கும் ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து இரு கண்கள் வழியாகவும், மேனோக்கி, ஆறாம் அடுக்காகிய புருவ மத்தியத்திற்கும் அங்கிருந்து ஐந்தாம் அடுக்காகிய லலாட மத்தியத்துக்கும், அங்கிருந்து மற்றையடுக்குகளாகிய மஸ்தக அந்தத் தானம், மத்தியத்தானம், ஆதித்தானம், துவாத சாந்தத் தானம் என்பவைகளுக்கும் அங்கிருந்து மேல் உச்சிக்குடையாகிய பிரமரந்திற்கும் ஏற்றி லயப்படுத்தி, அங்ஙனம் சும்மா இருந்தபடி இருக்கும் நித்திய நிரசதியானந்த ரூபியாயிருக்க வேண்டும் என்பவும் உணரப்படும்.

இன்னும் தேர்வடிவம் சரீரமாகவும், அதில் காணப்படும் நான்கு சிங்கவடிவங்கள் ஆன்மாவின் சர்வவித சீவகாருணியமில்லா லோபகுரூரம், சர்வவித ஆசைப் பெருக்க சங்கற்ப விருத்தி, சர்வவித அபிமான கோலாகல விபரீதம், சர்வவித அகங்கார கோபதாப விகாரம் என்னும் இந்நான்குவித கர்ம விருத்திகளாகவும், எட்டு யாளி உருவங்கள் ஆன்மாவினது அஞ்ஞானம், அபிமானம், ராகாதிகுணம், துக்கம், விடயவாசனை, நானாவித கன்மம், உபாதி, அவஸ்தை என்னும் எட்டுவித அனுபவங்களாகவும், கொடிகளெல்லாம் தத்துவ கூட்டங்களாகவும், மணிகளெல்லாம் பீச மந்திர பிரணவாதி சத்தங்களாகவும், குஞ்சலங்கள் எல்லாஞ் சீவர்கள் மனோசலனத்தால் எண்பத்து நான்கு லக்க யோனி பேதங்களாக மாறி மாறித் தோன்றியடையும் மரணாவத்தையாகவும் கொண்டு, சீவர்கள் சிங்கங்களையொத்த கர்ம விருத்திகளையும், யாழிகளைப் போன்ற தத்துவக் குழாங்களையும், மணிகளைப் போன்ற லாக்கொலிகளையும், குஞ்சங்களைப் போன்ற மன சலன தோற்றங்களையும், இல்லையென்னும்படி செய்து சித்திர தீபம் போல நின்ற மோன சாட்சாத்கார கோலநிலையில் நிற்க வேண்டுமென்பதும் இந்த லயக்கிரம திதிக் கோலத்தால் அறிவார் நுண்ணுணர்வோர்.[4]

**பல்வகைத் தேர்:**

தேர்கள் பலவகைப்பட்டனவாயினும், அவற்றின் உருவ அமைப்பில் அதிக உருவ வேற்றுமை காணப்படவில்லை. "தேர்கள்: மரத்தேர், வெள்ளித் தேர், தங்கத் தேர் முதலியவை உண்டு. தேர்களில் மிகச் சிறந்த சிற்பவேலை செய்து பதிக்கப்பெறும். உருளை நான்கு முதல் பத்து உருளை வரை இருப்பதுண்டு. திருவாரூரத் தேர் மிகப் புகழ்பெற்றது. ஸ்ரீவில்லிபுத்தூர்த் தேர் மிகப் பெரியதென்பர். தேர்

கனடா இந்து மாமன்றம்
சுவையுடன் படைத்திடும்

**சர்க்கரைப் பொங்கல் விழா**
**சிறப்புற வாழ்த்துக்கள்!**

# GUNA SELLAIAH

**Insurance Broker**
**416 371 7776**

ஓட்டுதல் ஒரு சிறந்த கலை. எல்லாராலும் முடியாது. புறப்பட்ட பிறகு நிலைக்குச் சேர்ப்பித்தல் மிகக் கடினம். ஆயிரக்கணக்கான மக்கள் அதனை இழுக்கவேண்டும். தெப்பத்தேர், நீர்மேல் மிதக்கும் தேர், இது இக்காலத்தில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, வெகு சிறப்பாகச் செய்யப்படுகிறது. வெள்ளித்தேர்கள் திருவண்ணாமலை, பழனி முதலிய இடங்களில் உண்டு. வாகனம், தேர் இவைகளைச் செய்யுந் தொழிலும் ஒரு சிறந்த தொழிலாகும்" என்று கூறுகிறார் இராவ் பகதூர் சீ.எம்.இராமச்சந்திர செட்டியார் அவர்கள்.

தேர்களைப் பெரும்பாலும் தாமரை மொட்டு வடிவிலேயே அமைத்தனர் என ஊகிக்க இடமுண்டு. மேலும், கொடுஞ்சி என்ற ஓர் உறுப்பும் தேர்களிலே அமைக்கப்பெற்றிருந்தமை நோக்கற்பாலது.

**கொடுஞ்சி:**

"கொடுஞ்சியென்பது தாமரைப் பூவாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது என நச்சினார்க்கினியர் மதுரைக் காஞ்சியுரையிற் குறிப்பிட்டிருக்கின்றார். இதனால் தமிழர்கள் தாமரைப் பூ வடிவமாகப் பொன்னாற் செய்ததுமன்றி, இப்பூ வடிவினதாக யானை மருப்பானும், மரத்தானும் பண்ணி, தேர் ஊர்பவர்கள் கையாற்பற்றி கோடற்பொருட்டு, இக்கொடுஞ்சியினைப் பயன்படுத்தி வந்தார்கள் என்பது தேற்றம்.

நெடுந்தேர்க் கொடுஞ்சி பற்றி நின்றோன் (அகம் - 110)

மணித்தேர்க் கொடுஞ்சி கையாற் பற்றி (மணிமேகலை 4-48)

எனும் அடிகள் இதனை வலியுறுத்தும். இன்னுங் கொடுஞ்சியென்பது தாமரைப்பூ வடிவாக மட்டுமன்றி, முகை வடிவாகவுஞ் செய்யப்பட்டதென்பது கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர் எனும் பொருநராற்றுப்படை யடிக்குப் பொருள் கூறுமிடத்து, "யானைக் கொம்பாற் செய்த தாமரை முகையினை உடைய நெடிய தேரிலே" என உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டிருத்தலால் அறியக்கிடக்கின்றது. இதனால் தாமரைப்பூ வடிவாகவும், முகை வடிவாகவும் செய்தல் பண்டைத் தமிழர் கொண்ட வழக்கென்பதறிக. பூவடிவினதாயின் இக்காலத் தாமியங்கி வண்டியினை - மோட்டார் வண்டியினை - விரும்பிய பக்கத்துக்குத் திருப்புதற்காகச் செலுத்துபவன் கையாளற் பொருட்டு நடுவண் அமைந்திருக்கும் சிறு சில்லினை ஒக்கும் போலும். இது ஆராயற்பாலது. இன்னும் இக்காலத் தேரை உற்று நோக்கின் தாமரை முகை வடிவினையொப்பக் கீழிற் சரிவாயும், நடுவிற் பருத்தும் பின்னர் மேற்சென்று குவிந்தும் இருப்பதைக் காணலாம். இதுவும் மிகப் பொருத்தமாகவே தெரிகின்றது. தாமரைப் பொகுட்டில் தெய்வம் வீற்றிருத்தல் போல நடுவண் பருத்திருக்குமிடத்திலுள்ள தட்டில் தெய்வங்களை அலங்கரித்து வைத்தல் மிக நயமுடைத்து. எங்கு நுழைந்து பார்ப்பினும் தமிழர்களுடைய அறிவுடைமையே சிறந்து விளங்குகின்றது. இன்னும் பூ வடிவாகவே செய்த தேர்களும் உண்டென்பர் சிலர். இக்காலத்திற்றான் இல்லையெனினும் அக்காலத்திலிருந்தமை, "தாமரைப் பூ வடிவாகச் செய்த வண்டில் அல்லது தேர் அக்காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது" என தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் பெரும் கதைப்படிப்பிற் குறிப்பிட்டிருத்தலால் பெறப்படுதல் காண்க.

தாமரைப்பூ வடிவினதாகிய எப்பொருளை நோக்கினு மப்பொருள் சிறந்தே விளங்கலைக் காணுந்தொறும் இம்மலரின் பெருமையை எம்மால் அளப்பரிது என்பது நன்கு புலப்படுகின்றது."

இனி, இத்தேரின் உறுப்புக்கள் யாவை என்பதைப் பொதுப்பட அறிந்திருத்தல் நன்றாதலின் அவற்றையும் ஈண்டெடுத்துக் காட்டுவாம்.

**தேரின் உறுப்புக்கள்**

**பூதப்பார்**: அச்சின் மேலுள்ள பாகத்தைப் பூதங்கள் தாங்குவது போன்ற அமைப்பு.

**கன்னிலப்பார்**: முதல் வரிசை விக்கிரகங்களின் அமைப்புக்கு ஆதாரமாயமைந்திருப்பது.

**கபோதப்பார்**: விக்கிரகங்களின் மேல் அமைப்பாகவிருப்பது. கன்னிலப்பாருக்கும், கபோதப் பாருக்குமிடையில் முதல் வரிசை விக்கிரகங்கள் உண்டு.

**ஆனைத்தொட்டிப்பார்**: விக்கிரக வரிசையிற் சில விக்கிரகங்கள் வெளியே நன்கு புலப்படக்கூடியனவாக வைக்கப்பட்டும், சில சிறிது உள்ளே தள்ளி வைக்கப்பட்டுமிருப்பதைக் காணலாம். இவ்வாறு விக்கிரகங்கள் அமைப்பதற்கு ஆதாரமாயிருப்பது ஆனைத்தொட்டிப்பார்.

**அச்சப்பார்**: இரதத்தின் பட்டங்களை அமைப்பதற்காக இருப்பது.

**அச்சப்பூத்தலைப்பார்**: பட்டங்களை அமைப்பதற்கு மேலாக ஆதாரமாயுள்ள பார்.

**பூத்தலைப்பார்**: மகரக்காய்கள் பூட்டிய பூத்தலைகளை உடையது.

**இரண்டாவது நிலம்**: முதலாவது வரிசை விக்கிரகங்களுக்குப் பின் இரண்டாவது வரிசை விக்கிரகங்கள் இதிலுண்டு. உட்பக்கம் ஆனைத்தொட்டிப்பார் சேர்த்து விக்கிரகங்கள் உள்ளும் புறமுமிருந்து புலப்படக்கூடியனவாய் அமைந்துள்ளன. இதற்கு அசுவதைப்பார் என்றும் பெயர்.

**சிம்மப்பூத்தலைப்பார்**: சிம்மத்தின் உருவத்தையும், பூத்தலையையும் கொண்டு இணைத்த அமைப்பு.

**மூன்றாவது நிலம்**: உட்பக்கக் கோணங்களையுடைய ஆனைத் தொட்டிப்பார் இணைத்து வெளித்தோற்றத்தில் விக்கிரகங்கள் அமைத்துச் செய்யப்பட்டது.

**நாகத்தலைப்பார்**: இது நாக பந்தம் மாதிரியுள்ள தலைப்புடன் கூடியது.

**விஸ்தாரப்பார்**: இரதத்தின் விஸ்தீரணத்தைக் குறிக்கின்றது. இந்தப் பாகத்துக்கு மானவாசனம் என்றும் பெயர்.

**தேவாசனம்**: தேவர்கள் அம்பாளை நின்று தரிசிக்கும் இடம் என்ற முறையில் அமைக்கப்பட்டது.

**சிம்மாசனம்**: தேவி வீற்றிருக்கும் ஆசனம்.

**கம்பங்கள்**: சித்திர வேலைப்பாடமைந்த குத்துக்கால்கள்

**பண்டிகை**: முதற் பண்டிகை, இரண்டாம் பண்டிகை, மூன்றாம் பண்டிகை.

**கரணக் குடம்**

**மணிமுடி**

மரத்திலே சித்திர வேலை செய்வதில் தமிழர் சிறந்து விளங்கினர் என்பதை ஸ்ரீமதி ஆர்.எஸ்.ருக்மணி மிக அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். அது பின்வருமாறு:

"பல நூற்றாண்டுகட்கு முன் நமது நாட்டினர் மனைகளையும் மாட மாளிகைகளையும் அரண்மனைகளையும் சுட்ட மண்ணாலும் மரத்தாலும் கட்டினர். அந்நாட்களில் தமிழகத்தின் பெரும்பாகமும் காடுகளாகவே இருந்தன. அக்காடுகளில் கருங்காலி, ஆச்சாதேக்கு முதலிய மரங்கள் செழித்தன. அம்மரங்கள் செதுக்கு வேலைக்குப் பொருத்தமானவை. வைரம் வாய்ந்தவை. உரமானவை. கட்டடங்களின் சுவர்களிற் காரையாற் சித்திர வேலைகளை வெகு அழகாகச் செய்தார்கள். அக்காலத்தில் வழக்கிலிருந்த கிளிஞ்சிற் சுண்ணாம்பு சித்திரப்பூ வேலைகளுக்கும், பல வகை உருவங்கள் சமைப்பதற்கும் வெகுவாகப் பொருந்தியது. அக்காலத்து மரத்தச்சர் பதுமைகளையும், மலர்களையும், சித்திரங்களையும் மரத்திற் செதுக்குவதிலே தேர்ந்திருந்தனர். உத்தரங்களிற் சிறந்த பூக்கோலங்கள் செதுக்குவதில் அவர் பெரிதும் திறமை வாய்ந்தவர். அத்தச்சர்கள் தூண்களிலும், சுவர்களிலும் வாயிற் கதவுகளிலும் கதவு நிலைகளிலும், விமானங்களிலும் உத்தரங்களிலும், தூண்களின் போதிகளிலும், குறுக்கு விட்டங்களிலும்

தம் சிற்பத் திறங்களைக் காட்டினர். அக்காலத்துக் கோயில்களுக்குச் சொந்தமாகப் பெரிதும் சிறிதுமான தேர்களும், யாளி, பரிமா, அன்னம், கரிமா, மயில் முதலிய ஊர்திகளும் இருக்கும். கோயிலுக்குரிய இத்தேர்களிலும், ஊர்திகளிலும் சிற்பிகள் தமது ஆற்றலும், வேலைப்பாடும் விளங்க எழிலொழுகும் எண்ணற்ற சிற்பங்களைப் படைத்துப் புகழ்பெற்றனர்.

மரத்தச்சர் காட்டிய சிற்பத் திறமைகளை எல்லாம் மகேந்திரவர்மனது காலமுதற் கற்றச்சரும் கல்லிலே காட்டத் தொடங்கிவிட்டனர். மூலத்தானத்திற்கு மேல் அமையும் விமானமும், கூரியதாய் எழுகின்ற கோபுரமும் அமைப்பது மிகப் பழைய மரபு. இம்மரபின்படியே பல்லவரது காலத்திலுந் தமிழகச் சிற்பிகள் ஒரே கல்லைச் செதுக்கிக் குடைந்து கோயில்களை அமைத்தனர். இவை மரத்தச்சர்கள் செய்த இரதங்களின் வடிவிலே இருந்தன.

**ஈழநாட்டில்:**

"நம்முடைய ஈழநாட்டிலும் பழைய தேர்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட சித்திரங்கள் நிறைந்த மரத்தேர்கள் பல காணப்படுகின்றன. மாவிட்டபுரம், பறாளை, சுதுமலை முதலிய இடங்களிலுள்ள தேர்களின் சித்திரங்கள் ஒத்த அழகும் அமைப்பும் பொருந்தியனவாய் விளங்குகின்றன." மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயிலில் உள்ள தேரும், பறாளையில் உள்ள தேரும் ஒரே காலத்தன என்றும், அவை சண்முகசேகர முதலியார் என்ற பிரதானி ஒருவராற் செய்யப்பட்டனவென்றும் என் நண்பர் ஒருவர் குறிப்பிட்டார். நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மருதடி விநாயகர் கோயில் முதலிய ஆலயங்களிலுஞ் சித்திர வேலைப்பாடமைந்த தேர்கள் உண்டு.

இத்தகைய கீர்த்திவாய்ந்த தேர் வரிசையில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் தேர் முக்கிய இடம் வகிக்கும் என்பதற்கையமில்லை. இந்த அழகிய தேரைப் பார்க்கவே பலர் நயினாதீவுக்கு யாத்திரை செய்வர் என்று அவுஸ்திரேலிய மரவேலை நிபுணர் திரு.ஹீவற் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தேர் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது கண்டு மகிழ்ந்த இவ்வறிஞர் இத்தொழிலாளரை மனமாரப் புகழ்ந்துள்ளார். அவர் அளித்த நற்சாட்சிப் பத்திரம் இது.

## சைவத் தமிழ் அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

அடுத்த வருடம் புத்தம் புது மலராய சைவநீதி மலர் வெளிவந்து, நறுமணம் வீசி பொலிவுடன் விளங்க சைவசமய சம்பந்தமானதும் பலதரப்பட்ட மக்களுக்கும் பயன்தரக்கூடிய வகையில் உள்ள ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்படி ஆக்கங்கள் சைவநீதி மலரில் ஏற்கனவே வெளிவராதவையாக இருப்பது அவசியம். இவை தமிழிலோ ஆங்கிலத்திலோ கட்டுரைகள் ஆகவும், கவிதைகள் ஆகவும் வினா விடைகளாகவும், அல்லது கதைகளாகவும் அமையலாம்.

ஆக்கங்கள் ஒவ்வொன்றும் தரமானதாகவும் மலரின் 2 பக்கங்களுக்குள் அடங்குவதாகவும் இருத்தல் வரவேற்கத்தக்கது. இவற்றை கணனி மூலம் அச்சிட்டோ திருத்தமான கையெழுத்துப் பிரதியாகவோ 01.10.2011 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும். மாணவர்களின் ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.

**விலாசம்:**

**114, Joycedale street,**
**Markham ON. L3S 3J2**
canadahindumaamantram@gmail.com

# நன்றிக் கலசம்

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்தும், வணக்கமும் உரித்தாகுக!

"நன்றி மறப்பது நன்றன்று" என்பது வள்ளுவர் வாக்கு.

* 2010 ஆம் ஆண்டு "சைவநீதி" புதுமையுடனும், பொலிவுடனும் மலர, தரமான ஆக்கங்கள் தந்துதவிய பெரியோர்களுக்கும், மாணவர்களுக்கும்;
* வருடாவருடம் புதிய புதிய அட்டைப் படங்களை அழகுற வடிவமைத்துத்தரும் சித்திரத்தில் கைதேர்ந்த எமது நிர்வாக உறுப்பினர் திரு.கண்ணன் அவர்களுக்கும்,
* மிகக் குறுகிய காலத்தில் அச்சுக் கோத்துத் தந்த திருமதி கௌரி சதானந்தன் அவர்கட்கும்,
* புத்தக வடிவில் உருப்பெற வைத்த விவேகா அச்சகத்தினருக்கும்,
* சைவநீதி மலரின் செலவினங்களுக்கு உதவிசெய்யும் முகமாக விளம்பரங்கள் தந்துதவிய அனைத்து உள்ளங்களுக்கும்;
* சைவநீதி மலர் வெளிவர பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிவரும் இந்துமாமன்ற உறுப்பினர்களுக்கும்,
* தாயகத்திலிருந்து பல சிரமங்களுக்கு மத்தியிலும் கட்டுரைகளை எழுதியும், சேகரித்தும் உரிய நேரத்தில் அனுப்பிவைத்தவர்களுக்கும்;
* சைவநீதியை வாங்கி, வாசித்து மகிழும் வாசகர்களுக்கும், வாசக வட்ட ஆய்வினருக்கும்,
* மற்றும் மன்ற வளர்ச்சி விரும்பும் அனைவருக்கும்.

**எங்கள் இதயம் நிறைந்த நன்றி உரித்தாகட்டும்!**

**"நவில்தொறும் நூல் நயம்போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"**

**வணக்கம்.**

# சைவநீதி
# கனடா இந்து மாமன்றம் 2011 தை

# கோடைகாலப் பாசறை






STAND OUT
WITH PRINT!
VIVEKA
Printers
With more attractive designs, better quality prints and innovative marketing strategies, you are sure to stand out from your competition with our services.
Let us help you come up with a brand new business identity, re-invigorate your existing print collateral or even show you the latest in printing and signage trends.
Come Check Out Our New Sales Office!
80PRINT
www.80print.ca - info@80print.ca
1911 Kennedy Road, Suite 100
Toronto, Ontario, M1P 2L9
Tel: 416.80.PRINT (77468)
Fax: 416.335.6468
E-Mail: info@viveka.com
Web: www.viveka.com




We're proud to support initiatives that help make our community a better, safer place for everyone.

Proud sponsor

the co-operators

A Better Place For You™

Home Auto Life Investments Group Business Farm Travel

C&C

Senthooran Punithavel
108-1265 Morningside Ave, Scarborough, ON M1B 3V9
(416) 396-0707

திசை தொறும் சைவநீதி தேசுற்று வாழ்க ! மேலும்
தீந்தமிழ் உலகமெங்கும் திருப்பொலிவுடனே வாழ்க !!
வாழிய ! வையகம்

# Rainbow Village Dental Office | Main Square Dental Office

## சகல பல் வைத்திய சேவைகளும் கிளிப்போடுதலும்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல்
பல் வைத்திய சிகிச்சையில்
அனுபவம் பெற்ற உங்கள் நம்பிக்கைகுரிய

## டாக்டர். அ. சண்முகவடிவேல்

குடும்ப பல் வைத்தியர்

## DR. A. Shan Shanmugavadivel

General Dentistry including

•ORTHODONTICS •IMPLANT DENTISTRY •ROOT CANAL THERAPY •WISDOM TOOTH EXTRACTIONS
•CEREC CROWNS & INLAYS



திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில்

**Tel: (416) 266-5161**

**Rainbow Village Dental Office**
2466 Eglinton Ave. East, Unit 7
Scarborough, Ontario M1K 5J8
(near Kennedy Subway)

**Tel: (416) 690-0121**

**Main Square Dental Office**
2575 Danforth Ave.
Toronto, Ontario M4C 1L5
(near Main Subway)

Printed by Viveka Printers